सत्यमेव जयते

# இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின்
# மாநில நிதிநிலை மீதான தணிக்கை அறிக்கை

## மார்ச் 2022-உடன் முடிந்த ஆண்டிற்கானது

SUPREME AUDIT INSTITUTION OF INDIA
लोकहितार्थ सत्यनिष्ठा
Dedicated to Truth in Public Interest

## தமிழ்நாடு அரசு
## அறிக்கை எண் 1 - 2023

# இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின்

# மாநில நிதிநிலை மீதான தணிக்கை அறிக்கை

மார்ச் 2022-உடன் முடிந்த ஆண்டிற்கானது

தமிழ்நாடு அரசு

அறிக்கை எண் 1 - 2023

## பொருளடக்கம்


| | பத்தி | பக்கம் |
|---|---|---|
| முகவுரை | | vii |
| தணிக்கை குறிப்புகளின் சுருக்கம் | | ix |
| அத்தியாயம் 1 - கண்ணோட்டம் | | |
| **தமிழ்நாடு மாநிலம் குறித்த விவரங்கள்** | **1.1** | 1 |
| மாநில மொத்த உற்பத்தி மதிப்பு | 1.1.1 | 1 |
| **மாநில நிதிநிலை மீதான தணிக்கை அறிக்கைக்கான அடிப்படையும் அணுகுமுறையும்** | **1.2** | 3 |
| **அறிக்கையின் கட்டமைப்பு** | **1.3** | 4 |
| **அரசு கணக்குகள் கட்டமைப்பு மற்றும் வரவு - செலவு திட்ட நடைமுறை பற்றிய கண்ணோட்டம்** | **1.4** | 4 |
| நிதிகள் பற்றிய ஒரு சுருக்கம் | 1.4.1 | 8 |
| அரசின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் பற்றிய ஒரு சுருக்கம் | 1.4.2 | 9 |
| **நிதி குறியீடுகள்** | **1.5** | 10 |
| நிதியின் போக்குகள் | 1.5.1 | 11 |
| **தணிக்கையின் ஆய்வுக்கு பின் பற்றாக்குறைகள் மற்றும் மொத்த கடன் தொகைகளின் அளவுகள்** | **1.6** | 14 |
| தணிக்கையின் ஆய்வுக்கு பிந்தைய பற்றாக்குறை இலக்கங்கள் | 1.6.1 | 14 |
| தணிக்கையின் ஆய்வுக்கு பிந்தைய கடன் நிலுவை இலக்கங்கள் | 1.6.2 | 15 |
| **முடிவுரை** | **1.7** | 16 |
| அத்தியாயம் 2 - மாநில அரசின் நிதிகள் | | |
| **2020-21 ஆண்டுடன் ஒப்பிட்ட வகையில் 2021-22 ஆண்டின் நிதி நடவடிக்கைகளின் சுருக்கம்** | **2.1** | 17 |
| **நிதி ஆதாரங்கள் மற்றும் செலவினங்கள்** | **2.2** | 20 |
| **மாநிலத்தின் நிதி ஆதாரங்கள்** | **2.3** | 20 |
| மாநிலத்தின் வரவுகள் | 2.3.1 | 21 |
| மாநிலத்தின் வருவாய் வகை வரவுகள் | 2.3.2 | 22 |
| *வருவாய் வகை வரவுகளின் போக்கும் வளர்ச்சியும்* | *2.3.2.1* | 23 |
| *மாநிலத்தின் சொந்த நிதி ஆதாரங்கள்* | *2.3.2.2* | 25 |
| *மத்திய அரசிடமிருந்து நிதி மாற்றம்* | *2.3.2.3* | 28 |

| | பத்தி | பக்கம் |
|---|---|---|
| மூலதன வகை வரவுகள் | 2.3.3 | 32 |
| நிதி திரட்டுவதில் மாநிலத்தின் செயல்பாடு | 2.3.4 | 33 |
| **நிதியை செலவிடுதல்** | **2.4** | 34 |
| செலவின் வளர்ச்சி மற்றும் கூறுகள் | 2.4.1 | 34 |
| வருவாய் வகை செலவு | 2.4.2 | 37 |
| *வருவாய் வகை செலவில் முக்கிய மாற்றங்கள்* | *2.4.2.1* | 38 |
| *தவிர்க்கவியலாத செலவு* | *2.4.2.2* | 39 |
| *தேசிய ஓய்வூதிய திட்டத்தின் கீழ் தவிர்த்திருக்கக்கூடிய செலவினம்* | *2.4.2.3* | 41 |
| *மானியங்கள்* | *2.4.2.4* | 43 |
| *சிறு தலைப்பு - 911'ன் கீழ் மிகையாக கொடுத்த தொகையை திருப்பி செலுத்துதல்* | *2.4.2.5* | 45 |
| மூலதன வகை செலவு | 2.4.3 | 47 |
| *மூலதன வகை செலவில் முக்கிய மாற்றங்கள்* | *2.4.3.1* | 48 |
| *மூலதன வகை செலவின் தரம்* | *2.4.3.2* | 48 |
| செலவு முன்னுரிமைகள் | 2.4.4 | 52 |
| குறுந்தலைப்பு வாரியான செலவு | 2.4.5 | 53 |
| **பொது கணக்கு** | **2.5** | 54 |
| பொது கணக்கு நிகர இருப்புகள் | 2.5.1 | 54 |
| சேம நிதிகள் | 2.5.2 | 55 |
| *தொகுக்கப்பட்ட கடன்தீர் நிதி* | *2.5.2.1* | 56 |
| *மாநில பேரிடர் நிவாரண நிதி* | *2.5.2.2* | 56 |
| *உத்தரவாத மீட்பு நிதி* | *2.5.2.3* | 58 |
| **கடன் மேலாண்மை** | **2.6** | 58 |
| வரவு - செலவு திட்டத்திற்கு அப்பாற்பட்ட கடன்களின் நிலுவை | 2.6.1 | 59 |
| கடன் நிலையின் கூறுகள் | 2.6.2 | 60 |
| கடன் விவரங்கள்: முதிர்வு மற்றும் மீள செலுத்துதல் | 2.6.3 | 65 |
| **கடன் தாங்கு தன்மை பற்றிய பகுப்பாய்வு** | **2.7** | 67 |
| வாங்கப்பட்ட கடனின் பயன்பாடு | 2.7.1 | 69 |
| உத்தரவாதங்களின் நிலை - எதிர்பாரா பொறுப்புகள் | 2.7.2 | 71 |
| ரொக்க இருப்பு மேலாண்மை | 2.7.3 | 72 |
| **முடிவுரை மற்றும் பரிந்துரைகள்** | **2.8** | 75 |

| | பத்தி | பக்கம் |
|---|---|---|
| அத்தியாயம் 3 - வரவு - செலவு திட்ட மேலாண்மை | | |
| **வரவு - செலவு திட்ட நடைமுறை** | **3.1** | 77 |
| 2021-22ல் மொத்த ஒதுக்கீடு, உள்ளபடியான செலவுகள் மற்றும் சேமிப்பு/மிகையின் சுருக்கம் | 3.1.1 | 78 |
| சாட்டிய மற்றும் அனுமதிக்கப்பட்ட செலவுகள் | 3.1.2 | 79 |
| **நிதியொதுக்க கணக்குகள்** | **3.2** | 79 |
| **வரவு - செலவு திட்டம் மற்றும் கணக்கு வைப்பு முறையின் நம்பகத்தன்மை** | **3.3** | 80 |
| சட்டப்படியான அதிகாரமில்லாமல் செய்யப்பட்ட செலவு | 3.3.1 | 80 |
| *இறுதி திருத்திய நிதியொதுக்கம் (FMA) இல்லாமல் செய்யப்பட்ட செலவு* | *3.3.1.1* | 80 |
| *மூல மற்றும் துணை ஒதுக்கீடு இல்லாமல் செய்யப்பட்ட செலவு* | *3.3.1.2* | 80 |
| வரவு - செலவு திட்ட மானியம் காலாவதியாகாமல் இருக்க நிதி வரைதல் | 3.3.2 | 81 |
| செலவை தவறாக வகைப்படுத்துதல் | 3.3.3 | 81 |
| *செலவை தவறாக கணக்கு வைத்தல்* | *3.3.3.1* | 81 |
| தேவையற்ற அல்லது மிகையான துணை மானியம் | 3.3.4 | 82 |
| *போதுமான அளவில் இல்லாத துணை ஒதுக்கீடுகள்* | *3.3.4.1* | 82 |
| தேவையற்ற/மிகையான/போதுமானதாக இல்லாத மறுநிதியொதுக்கங்கள் | 3.3.5 | 83 |
| செலவிடப்படாத தொகை, ஒப்படைக்கப்பட்ட நிதியொதுக்கங்கள் மற்றும்/அல்லது பெருமளவிலான சேமிப்புகள் / ஒப்படைப்புகள் | 3.3.6 | 84 |
| *சேமிப்புகள்* | *3.3.6.1* | 85 |
| *ஒப்படைப்புகள்* | *3.3.6.2* | 86 |
| *வரவு செலவுத் திட்ட பயன்பாடு* | *3.3.6.3* | 86 |
| *தொடர் சேமிப்புகள்* | *3.3.6.4* | 87 |
| மிகை செலவும் அதன் முறைப்படுத்துதலும் | 3.3.7 | 88 |
| *முறைப்படுத்தப்பட வேண்டிய நடப்பாண்டின் மிகை செலவு* | *3.3.7.1* | 88 |
| *முறைப்படுத்தப்பட வேண்டிய முந்தைய ஆண்டுகளின் மிகை செலவு* | *3.3.7.2* | 90 |
| **வரவு - செலவு திட்டம் மற்றும் கணக்குவைப்பு முறையின் செயல் திறன் குறித்த குறிப்புகள்** | **3.4** | 90 |
| வரவு - செலவு திட்ட மதிப்பீடு மற்றும் எதிர்பார்ப்பிற்கும் உள்ளபடியானவற்றுக்கும் இடையேயான இடைவெளி | 3.4.1 | 91 |

| | பத்தி | பக்கம் |
|---|---|---|
| விரைவுபடுத்தப்பட்ட செலவு | 3.4.2 | 92 |
| **எதிர்பாரா செலவு நிதியிலிருந்து முன்பணங்கள்** | **3.5** | 94 |
| **பாலின வரவு-செலவு திட்டம்** | **3.6** | 95 |
| **குறிப்பிட்ட மானியங்கள் மீதான சீராய்வு** | **3.7** | 96 |
| மானிய எண் 04 - ஆதி-திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை | 3.7.1 | 96 |
| *ஒதுக்கீடு மற்றும் செலவு* | *3.7.1.1* | 96 |
| *தொடர் சேமிப்புகள்* | *3.7.1.2* | 98 |
| *இறுதி திருத்திய மானியத்தை விட கூடுதல் சேமிப்புகள்* | *3.7.1.3* | 101 |
| *இறுதி திருத்திய மானியத்தைவிட அதிகமாக செலவுகள்* | *3.7.1.4* | 102 |
| *மறுநிதியொதுக்கம் மூலம் ஒதுக்கீடு முழுவதும் திரும்ப பெறப்பட்டமை* | *3.7.1.5* | 103 |
| *பழங்குடியினர் நலத்துறையின் கீழ் விரைவு செலவினம்* | *3.7.1.6* | 105 |
| மானிய எண் 13 - உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) | 3.7.2 | 106 |
| *ஒதுக்கீடு மற்றும் செலவு* | *3.7.2.1* | 106 |
| *தொடர் சேமிப்புகள்* | *3.7.2.2* | 107 |
| **முடிவுரை மற்றும் பரிந்துரைகள்** | **3.8** | 109 |
| **அத்தியாயம் 4 - கணக்குகள் மற்றும் நிதிநிலை அறிக்கை நடைமுறைகளின் தரம்** | | |
| **மாநிலத்தின் தொகுநிதி அல்லது பொது கணக்கிற்கு வெளியில் உள்ள நிதி** | **4.1** | 111 |
| தொகு நிதிக்கு வெளியே வைக்கப்பட்டிருந்த மின்சார வரி | 4.1.1 | 111 |
| **வட்டி பெறும் வைப்புத்தொகைகள் தொடர்பான வட்டி பொறுப்புகளை தீர்வு செய்யாமை** | **4.2** | 112 |
| **மாநில செயல்படுத்தும் முகமைகளுக்கு நேரடியாக நிதி விடுவிப்பு** | **4.3** | 113 |
| **பயன்பாட்டு சான்றிதழ்கள் வழங்குவதில் தாமதம்** | **4.4** | 114 |
| **மானிய உதவி பெறும் நிறுவனங்களை ‘மற்றவை’ என வகைப்படுத்தியமை** | **4.5** | 116 |
| **சரிக்கட்டப்படாத தற்காலிக முன்பணங்கள்** | **4.6** | 117 |
| **தன்வைப்பு கணக்குகள்** | **4.7** | 119 |
| **சிறுதலைப்பு ‘800’ன் வரைமுறையற்ற பயன்பாடு** | **4.8** | 119 |
| **அனாமத்து மற்றும் கடன்கள், வைப்புகள் மற்றும் செலுத்தங்கள் ஆகிய தலைப்புகளின் கீழ் இருந்த மீதங்கள்** | **4.9** | 121 |

| | பத்தி | பக்கம் |
|---|---|---|
| துறையின் கணக்குகள் ஒத்திசைவு செய்யப்படாமை | **4.10** | 122 |
| ரொக்க மீதங்கள் குறித்த ஒத்திசைவு | **4.11** | 123 |
| கணக்கு தரங்களுக்கு இணங்குதல் | **4.12** | 125 |
| **CAG**யின் **DPC** சட்டத்தின் பிரிவு **19(3)** மற்றும் **20(1)** இன் கீழ் குழுமங்கள்/ஆணைக்குழுக்களின் தணிக்கை - கோரிக்கை விடுத்தும் தணிக்கைக்கு ஒப்படைக்கப்படாமை | **4.13** | 125 |
| கணக்குகள் அளிக்கப்படாமை / அளிப்பதில் நேர்ந்த தாமதம் | **4.14** | 127 |
| துறை சார்ந்த வணிக நிறுவனங்கள்/ கழகங்கள் / கம்பெனிகள் | **4.15** | 128 |
| கையாடல்கள், இழப்புகள் மற்றும் களவுகள் | **4.16** | 129 |
| மாநில நிதிநிலை தணிக்கை அறிக்கை மீதான தொடர் நடவடிக்கை | **4.17** | 130 |
| முடிவுரை மற்றும் பரிந்துரைகள் | **4.18** | 130 |


## இணைப்புகள்


| இணைப்பு எண் | பொருள் | பார்வைக்கான பத்திகள் | பக்கம் |
|---|---|---|---|
| 1.1 | மாநிலம் பற்றிய விவரக்குறிப்புரை | 1.1 | 133 |
| 1.2 பிரிவு அ | அரசுக் கணக்குகளின் அமைப்பு மற்றும் முறை | 1.4 | 134 |
| பிரிவு ஆ | நிதிக் கணக்குகளின் அமைப்பு | 1.4 | 134 |
| 1.3 பிரிவு அ | நிதிநிலையை மதிப்பிடுவதற்கு கையாளப்பட்டுள்ள வழிமுறைகள் | 1.4 | 137 |
| பிரிவு ஆ | தமிழ்நாடு நிதிநிலைப் பொறுப்புடைமை சட்டம், 2003 | 1.4 | 137 |
| 2.1 | மாநில அரசின் நிதிநிலைமை பற்றிய ஒரு பல்வருடப் புள்ளி விவரம் | 2.1 | 138 |
| 2.2 | கோவிட்-19 தொற்று நோய்க்காக மாநில அரசால் செய்யப்பட்ட செலவினம் | 2.4.2.1 | 140 |
| 2.3 | சிறுதலைப்பு - 911ன் கீழ் ஒரு கோடி மற்றும் அதற்கு மேலுள்ள தொகைகளை திருப்பிச் செலுத்துதல் | 2.4.2.5 | 141 |
| 2.4 | 'அறிக்கை 16 மற்றும் 19'களில் உள்ள இருப்புகளில் வேறுபாடு | 2.4.3.2 | 143 |
| 3.1 | இறுதி திருத்திய நிதியொதுக்கம் இல்லாமல் செய்யப்பட்ட செலவினம் | 3.3.1.1 | 144 |
| 3.2 | துணை மானிய ஒதுக்கீடு (ஒவ்வொரு திட்டத்திலும் தலா ₹ 50 இலட்சம் மற்றும் அதற்கு மேலாக) தேவையற்றதாக ஆன நேர்வுகள் | 3.3.4 | 146 |

| இணைப்பு எண் | பொருள் | பார்வைக்கான பத்திகள் | பக்கம் |
|---|---|---|---|
| 3.3 | மிகையான / போதுமானதாக இல்லாத நிதிகளின் மறுநிதியொதுக்கம் | 3.3.5 | 149 |
| 3.4 | ஆராயாது செய்யப்பட்ட மறுநிதியொதுக்கம் - தேவையற்ற நிதியொதுக்கம் | 3.3.5 | 152 |
| 3.5 | தலா ₹ 100 கோடி தொகைக்கு மேலான ஒதுக்கீடுகள் மறுநிதியொதுக்கம் மூலம் மீளப்பெறப்பட்டமை மற்றும் செலவு செய்யப்படாமை | 3.3.5 | 153 |
| 3.6 | பெருந்தலைப்பு ‘8342’ன் கீழ் வட்டி பொறுப்புகளுக்கான ஒதுக்கீடு மீளப்பெறப்பட்டமை | 3.3.5 & 4.3 | 154 |
| 3.7 | ஆராயாது செய்யப்பட்ட மறுநிதியொதுக்கம் - மறுநிதியொதுக்கம் மூலம் தேவையில்லாத திரும்ப பெறுதல்கள் | 3.3.5 | 155 |
| 3.8 | ₹ 100 கோடி தொகைக்கும் மேலாக சேமிப்புகள் நிகழ்ந்த மானியங்கள் | 3.3.6.1 | 156 |
| 3.9 | 31 மார்ச் 2022 அன்று தலா ₹ 10 கோடி தொகைக்கு மேலாக ஒப்படைக்கப்பட்ட நேர்வுகள் | 3.3.6.2 | 158 |
| 3.10 | ₹ 1 கோடி மற்றும் அதற்கு மேலாக சேமிப்புகள் நிகழ்ந்து அவை திருப்பி ஒப்படைக்கப்படாத நேர்வுகள் | 3.3.6.2 | 161 |
| 3.11 | சேமிப்பு தொகையைவிட அதிகமாக ஒப்படைக்கப்பட்ட மானியங்கள்/நிதியொதுக்கங்கள் | 3.3.6.2 | 162 |
| 3.12 | 2017-2022 காலகட்டத்தில் தொடர் சேமிப்புகள் நிகழ்ந்த மானியங்களின் விவரங்கள் | 3.3.6.4 | 164 |
| 3.13 | விரைவுபடுத்தப்பட்ட செலவு | 3.4.2 | 166 |
| 4.1 | நிலுவையில் உள்ள பயன்பாட்டு சான்றிதழ்கள் | 4.4 | 172 |
| 4.2 | ‘800 - பிற செலவுகள்’ சிறு தலைப்பின் கீழ் கணக்கு வைக்கப்பட்ட செலவுகள் | 4.8 | 173 |
| 4.3 | ‘800 - பிற வரவுகள்’ சிறு தலைப்பின் கீழ் கணக்கு வைக்கப்பட்ட வரவுகள் | 4.8 | 174 |
| 4.4 | 2021-22 ஆண்டு முடிவில் கணக்குகள் பெறப்படாத அமைப்புகளின் பட்டியல் | 4.14 | 175 |
| 4.5 | களவு, இருப்பு குறைவு மற்றும் கையாடல் காரணமாக அரசுக்கு ஏற்பட்ட இழப்பு குறித்த துறை/வகைவாரியான விவரங்கள் | 4.16 | 183 |
| | **இவ்வறிக்கையில் பயன்படுத்தப்பட்டுள்ள சொற்கள் மற்றும் சொற்சுருக்கங்களுக்கான விளக்கம்** | - | 184 |

## முகவுரை

இத்தணிக்கை அறிக்கை, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 151வது பிரிவின் கீழ் விதிக்கப்பட்டுள்ளவாறு தமிழக ஆளுநருக்கு சமர்ப்பிப்பதற்காக தயாரிக்கப்பட்டுள்ளது.

அத்தியாயம்-1ல் இவ்வறிக்கைக்கான அடிப்படை மற்றும் அணுகுமுறையை விளக்குகிறது மற்றும் இதில் கூறப்பட்டுள்ள தகவல்கள், அரசு கணக்குகளின் கட்டமைப்பு, வரவு - செலவு திட்ட நடைமுறைகள், முக்கிய குறியீடுகள் மீதான பகுப்பாய்வு, 31 மார்ச் 2022-உடன் முடிந்த ஆண்டிற்கான பற்றாக்குறை/மிகை உட்பட மாநிலத்தின் நிதி நிலை ஆகியவை பற்றிய ஒரு கண்ணோட்டத்தையும் அளிக்கிறது.

அத்தியாயம்-2ல் மாநிலத்தின் நிதிகள் பற்றிய ஒரு பரந்த பார்வையை அளிக்கிறது; முந்தைய ஆண்டுடன் ஒப்பிட்ட வகையில் முக்கிய நிதி இலக்கங்களில் முக்கிய மாற்றங்கள், 2017-18 முதல் 2021-22 வரையிலான காலகட்டத்தில் ஒட்டுமொத்த அளவிலான போக்குகள், மாநிலத்தின் கடன் நிலைமை, பொது கணக்கின் கீழ் முக்கிய நிதி நடவடிக்கைகள், ஆகியவற்றை மாநிலத்திற்கான நிதி கணக்குகளின் அடிப்படையில் பகுப்பாய்வு செய்கிறது.

அத்தியாயம்-3ல் மாநிலத்தின் நிதியொதுக்க கணக்குகளின் அடிப்படையில் அமைந்தது; மாநில அரசின் நிதியொதுக்க முன்னுரிமைகளை சீராய்வு செய்து, வரவு - செலவு திட்ட மேலாண்மை தொடர்பான அரசியலமைப்பு சட்டத்தின் வழிவகைகளிலிருந்து தவறிய நேர்வுகள் குறித்து தெரிவிக்கிறது.

அத்தியாயம்-4ல் மாநில அரசின் பல்வேறு அதிகார அமைப்புகள் அளித்த கணக்குகளின் தரம் மற்றும் மாநில அரசின் பல்வேறு துறை அலுவலர்கள் உரிய நிதி விதிகள் மற்றும் ஒழுங்குமுறைமைகளை பின்பற்றாமை தொடர்பான குறிப்புகளை தெரிவிக்கிறது.

செயலாக்க தணிக்கையில் கண்டறிந்தவை மற்றும் பல்வேறு துறைகள் மீதான தணிக்கை பத்திகள் உள்ளடங்கிய அறிக்கை, சட்டப்படி அமைக்கப்பட்ட கழகங்கள், வாரியங்கள் மற்றும் அரசு நிறுவனங்கள் மீதான தணிக்கை குறிப்புகளை கொண்ட அறிக்கை மற்றும் வருவாய் வரவினங்களின் மீதான அறிக்கை ஆகியவை தனித்தனி அறிக்கைகளாக சமர்ப்பிக்கப்படுகின்றன.

தமிழில் தரப்பட்டுள்ள இவ்வறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ள தணிக்கை குறிப்புகள் ஆங்கிலத்தில் தயாரிக்கப்பட்டுள்ள அறிக்கையிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டவை. ஆங்கிலத்தில் தயாரிக்கப்பட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்துக் குறிப்புகளிலுமுள்ள உண்மைகளின் அர்த்தம் தமிழில் தரப்பட்டுள்ள அறிக்கையில் மாறுபடாமல் இருக்க எல்லாவித முயற்சியும் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது.

மொழிபெயர்க்கப்பட்ட இவ்வறிக்கையில் ஏதாவது சந்தேகம் எழுமானால், ஆங்கிலத்தில் தயாரிக்கப்பட்டுள்ள அறிக்கையையே அதிகாரபூர்வமானதாக எடுத்துக்கொள்ள வேண்டும்.

# தணிக்கை குறிப்புகளின் சுருக்கம்

# தணிக்கை குறிப்புகளின் சுருக்கம்

## நிதி நிலைமை

*மாநிலத்தின் நிதி நிலைமையானது, வருவாய் பற்றாக்குறை/மிகை, நிதி பற்றாக்குறை/மிகை மற்றும் கடன் நிலுவைக்கும் GSDPக்கும் இடையேயான விகிதம் ஆகிய மூன்று முக்கிய நிதி அளவுருக்களின் அடிப்படையில் மதிப்பிடப்படுகிறது.*

*வருவாய்வகை பற்றாக்குறை 2017-18ல் ₹ 21,594 கோடி என்ற அளவிலிருந்து 2020-21ல் ₹ 62,326 கோடி என்ற அளவிற்கு உயர்ந்து 2021-22ல் ₹ 46,538 கோடியாக குறைந்தது. வருவாய்வகை பற்றாக்குறை உயர்ந்துவரும் போக்கில் இருப்பதால், 2023-24 ஆண்டுடன் வருவாய் பற்றாக்குறையை நீக்குதல் என்ற TNFR சட்ட இலக்குகளை எய்துவது சாத்தியமில்லை.*

*2023-24ல் நிதிப் பற்றாக்குறைக்கும் GSDPக்குமான விகிதம் மூன்று விழுக்காடாக இருக்கும் என எதிர்நோக்கப்பட்டதற்கு எதிராக, நடப்பாண்டில் 3.96 விழுக்காடாக இருந்தது. கடந்தாண்டுடன் ஒப்பிடுகையில் 2020-21ல் ₹ 93,983 கோடியாக இருந்த நிதிப் பற்றாக்குறை 2021-22ல் ₹ 81,835 கோடியாக குறைந்தது.*

*2021-22 இறுதியில் மொத்த நிலுவையிலுள்ள கடனுக்கும் GSDPக்குமான விகிதம் 28.87 விழுக்காடாக இருந்தது. இது TNFR சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இலக்கான 28.70 விழுக்காட்டை விட சிறிதளவு கூடுதலாகும்.*

***(பத்திகள் 1.5 மற்றும் 1.6.2)***

## மாநிலத்தின் நிதிகள்

*வருவாய் வகை வரவுகள், முந்தைய ஆண்டுடன் (₹ 1,74,076 கோடி) ஒப்பிடுகையில் 2021-22 ஆண்டில் (₹ 2,07,492 கோடி) 19.20 விழுக்காடு அளவிலான உயர்வை மாநில அரசு பதிவு செய்தது.*

***(பத்தி 2.1)***

*2020-21ல் எதிர்மறையாகி (-) 1.22 விழுக்காடாக இருந்த சொந்த வரி வருவாயின் வளர்ச்சி விகிதம் 2021-22ல் 15.74 விழுக்காடாக உயர்ந்தது; 2021-22ம் ஆண்டில் GSDPல் சொந்த வரி வருவாய் 5.95 விழுக்காடாக இருந்தது.*

*மாநிலத்தின் வரியல்லாத வருவாய் முந்தைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2021-22ல் ₹1,695 கோடி உயர்ந்தது. மாநிலத்தின் சொந்த வருவாயில் பங்கு என்ற வகையில், 2020-21ல் 8.94 விழுக்காடு ஆக இருந்த வரியல்லாத வருவாய் 2021-22ல் 8.98 விழுக்காடாக சிறிதளவு உயர்ந்தது.*

***(பத்தி 2.3.2.2)***

*2021-22ல் செய்யப்பட்ட ₹ 2,94,682 கோடி மொத்த செலவில், வருவாய் வகை செலவு (₹ 2,54,030 கோடி), மூலதன வகை செலவு (₹ 37,011 கோடி) மற்றும் கடன்கள் மற்றும் முன்பணங்கள் (₹ 3,641 கோடி), முறையே 86.20 விழுக்காடு, 12.56 விழுக்காடு மற்றும் 1.24 விழுக்காடு அளவிற்கு இருந்தன.*

***(பத்தி 2.4.1)***

*2020-21ல் ₹ 1,18,061 கோடியாக இருந்த தவிர்க்கவியலாத செலவு 2021-22ல் ₹ 1,25,935 கோடியாக உயர்ந்தது. ஆனால், வருவாய் வகை வரவுகளில் 67.82 விழுக்காடாக இருந்த தவிர்க்கியலாத செலவு 2021-22ல் 60.70 விழுக்காடாக குறைந்தது.*

***(பத்தி 2.4.2.2)***

*PFRD சட்டத்திற்கிணங்க, தமிழ்நாடு அரசு தேசிய ஓய்வூதிய திட்டத்தில் சேரவில்லை மற்றும் நிதி மேலாளரை நியமிக்கவில்லை. LIC மற்றும் கருவூல பத்திரங்களில் முதலீடுகளிலிருந்து வரும் ஆதாயம் சந்தாதாரர்களுக்கு வருங்கால வைப்பு நிதிக்கு ஈடாக வழங்கிய வட்டி விழுக்காடைவிட மிக குறைவாக இருப்பதால் அரசுக்கு இந்த வட்டி செலுத்தங்களில் தவிர்த்திருக்கக்கூடிய செலவினம் ஏற்பட்டது. நடப்பாண்டில் தவிர்க்கக்கூடிய செலவினமாக இந்த வேறுபாட்டு வட்டி தொகையாக ₹ 670.36 கோடியை செலுத்தியது. மாநில அரசு தேசிய ஓய்வூதிய திட்டத்தில் சேர்ந்து நிதி மேலாளரை நியமித்திருந்தால், இந்த வட்டி செலுத்தத்தை தவிர்த்திருக்க முடியும். இன்னொரு வகையில், சந்தாதாரர்கள் தற்போது அரசு வழங்கும் GPF வட்டி விழுக்காடை விட கூடுதல் விழுக்காடு வட்டியை பெற்று பயனடைந்திருப்பார்கள்.*

***(பத்தி 2.4.2.3)***

*மாநிலத்தின் வருவாய் வகை வரவுகளில் மானியங்கள் 10.45 விழுக்காடு அளவிற்கு இருந்தன. 2020-21ல் ₹ 36,682 கோடி அளவில் இருந்த மானியங்கள் மீதான செலவு, 10.04 விழுக்காடு குறைந்து 2021-22ல் ₹ 32,998 கோடி ஆக ஆனது. நடப்பாண்டில் நேரடி மானியங்கள் 13.62 விழுக்காடு* (₹ 3,421 கோடி) குறைந்தது.

*திருமண உதவி, மகப்பேறு உதவி, இலவச மடிக்கணினி, சீருடை வழங்குதல் போன்ற மறைமுக மானியங்கள், முந்தைய ஆண்டைவிட 2021-22ம் ஆண்டில் ₹263 கோடி குறைந்தது. இச்செலவினம் மானியத்திற்கு பதிலாக மானிய உதவியாக தவறுதலாக வகைப்படுத்தப்பட்டது.*

***(பத்தி 2.4.2.4)***

*சட்டப்படியான நிறுவனங்கள், கூட்டாண்மை நிறுவனங்கள் மற்றும் கூட்டுறவு அமைப்புகளில் அரசு ₹ 42,167 கோடி (மார்ச் 2022 வரை) முதலீடு செய்திருந்தது.*

*முதலீட்டிலிருந்து பெற்ற சராசரி ஆதாயம் 2020-21ல் 0.42 விழுக்காடு என்பதிலிருந்து நடப்பாண்டில் 0.61 விழுக்காடாக சிறிதளவு உயர்ந்தது. முதலீட்டிலிருந்து பெற்ற ஆதாயம் நடப்பாண்டில் அரசு வாங்கிய கடன் மீதான சராசரி வட்டி விகிதமான 7.50 விழுக்காட்டுடன் ஒப்பிட்டால், மிக குறைவானது ஆகும்.*

***(பத்தி 2.4.3.2)***

*வட்டி செலுத்தும் சுமை (செலுத்தப்பட்ட வட்டி / வருவாய் வகை வரவுகள்) 2020-21ல் 20.97 விழுக்காடு என்ற அளவிலிருந்து 2021-22ல் 20.03 விழுக்காடு ஆக குறைந்தது.*

*வாங்கப்பட்ட மொத்த கடன் ₹1,04,485 கோடி தொகையில், அரசுக்கு கிடைத்த நிகர கடன் தொகை ₹41,132 கோடி மட்டுமே ஆகும். இதற்கு, ₹19,737 கோடி அளவிற்கு*

*கடன் திரும்ப செலுத்தப்பட்டதும், ₹ 35,221 கோடி வட்டி செலுத்தப்பட்டதும் காரணம் ஆகும்.*

***(பத்திகள் 2.7 மற்றும் 2.7.1)***

**வரவு - செலவு திட்ட மேலாண்மை**

*துணை மானியங்கள்/நிதியொதுக்கங்கள் போதிய காரணங்கள் இன்றி பெறப்பட்டன; வரவு - செலவு திட்டத்தில் ஒதுக்கீடு இன்றி, பெரும் தொகைகள் செலவிடப்பட்டன. கடந்த பல ஆண்டுகளில் ஒவ்வொரு ஆண்டும் இது சுட்டிக்காட்டப்பட்டாலும், இதனை சீர்படுத்தும் நடவடிக்கைகளை அரசு எடுக்க தவறிவிட்டது.*

*15 நேர்வுகளில் FMA இல்லாமல் ₹37.93 கோடி செலவு செய்யப்பட்டது. மூல அல்லது துணை ஒதுக்கீடு அல்லது மறுநிதியொதுக்க நிலைகளில் நிதி ஒதுக்கீடு எதுவும் செய்யப்படவில்லை. மூல அல்லது துணை மதிப்பீடுகளில் சட்டமன்றத்தால் நிதி ஒதுக்கப்படாமல், ஆறு நேர்வுகளில், மொத்தம் ₹2.26 கோடி செலவிடப்பட்டது.*

***(பத்திகள் 3.3.1.1 மற்றும் 3.3.1.2)***

*2021-22ம் ஆண்டில், மூல ஒதுக்கீடு முழுமையாக பயன்படுத்தப்படாத நிலையில், தலா ₹50 இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட தொகை கொண்ட 59 நேர்வுகளில் மொத்தம் ₹ 242.64 கோடி அளவிலான துணை மானியங்கள் தேவையற்றதாக ஆயின.*

***(பத்தி 3.3.4)***

*26 நேர்வுகளில் ₹ 1,366.36 கோடி (மூல மற்றும் துணை ஒதுக்கீடு) இருந்த போதிலும், மறுநிதியொதுக்கம் மூலம் தேவையில்லாமல் ₹ 53 கோடி கூடுதலாக அளிக்கப்பட்டது. இந்நேர்வுகளின் மொத்த செலவினம் ₹ 1,253.15 கோடி, முதலில் ஒதுக்கப்பட்ட ஒதுக்கத்தின் உள்ளேயே இருந்தது.*

***(பத்தி 3.3.5)***

*2021-22ல் ₹29,879.64 கோடி ஒப்படைப்பு செய்யப்பட்டன. 31 மார்ச் 2022 அன்று ஒப்படைக்கப்பட்ட ₹ 11,739.35 கோடி (நிகரம்) தொகையில், ₹ 12,387.29 கோடி மொத்த மதிப்புள்ள 92 நேர்வுகள் தலா ₹ 10 கோடி தொகைக்கு மேற்பட்ட மதிப்புடையவை ஆகும்; இது போதிய நிதி கட்டுப்பாடு இல்லாததை காட்டுகிறது.*

***(பத்தி 3.3.6.2)***

*கடந்த ஐந்தாண்டுகளில், 24 மானியங்கள்/நிதியொதுக்கங்களின் கீழ், அவற்றுக்கான மொத்த ஒதுக்கீட்டில் ஐந்து விழுக்காட்டுக்கு மேற்பட்ட சேமிப்புகள் தொடர்ந்து இருந்தன. மானிய எண் 16 - நிதி துறையின் மூலதன பிரிவின் கீழ் கடந்த ஐந்தாண்டு காலம் முழுவதும் தொடர்ச்சியாக 92 விழுக்காட்டிற்கு மேலான சேமிப்பு இருந்தது.*

***(பத்தி 3.3.6.4)***

*நடப்பாண்டில் மானியங்கள்/நிதியொதுக்கங்களில் ஒப்புதல் அளிக்கப்பட்ட தொகைகளைவிட ₹ 5.24 கோடி கூடுதலாக செலவிடப்பட்டது. இச்செலவு*

*முறைப்படுத்தப்பட வேண்டும். இது தவிர, 2014-21 தொடர்பான ₹2,848.83 கோடி மிகை செலவு இதுவரை முறைப்படுத்தப்படாமல் நிலுவையில் இருந்தது.*

***(பத்திகள் 3.3.7.1 மற்றும் 3.3.7.2)***

### கணக்குகள் மற்றும் நிதி நிலை அறிக்கை நடைமுறைகளின் தரம்

2018-22 காலகட்டத்தில் வசூலிக்கப்பட்ட வரியில் 70 விழுக்காடு அரசுக் கணக்குகளில் வரவு வைக்கப்படவில்லை மற்றும் TANGEDCOவிடமே வைக்கப்பட்டிருந்தது. தனது சொந்த செயல்பாட்டு செலவினங்களுக்காக இத்தொகையை செலவழித்திருக்க முடியும் என்ற சாத்தியக்கூறை நிராகரிக்க முடியாது. இவ்வாறு அரசுக் கணக்கில் பணம் செலுத்தாமல் இருப்பதும், வசூலிக்கபட்ட வரியை இவ்வளவு நீண்ட காலத்திற்குத் தக்கவைத்துக்கொள்வது என்பதும் தற்காலிகமாக தவறாக பயன்படுத்தப்படும் அபாயம் நிறைந்ததாக உள்ளது.

***(பத்தி 4.1)***

*வட்டியுடன் கூடிய வைப்புத்தொகைகளுக்கு அளிக்க வேண்டிய வட்டி தொகைக்கான ஒதுக்கீடுகளை (₹26.19 கோடி) முழுமையாக மீள பெறுவது என்பது, நிதி ஒதுக்கீடு குறித்த குறைவான கட்டுப்பாட்டை காட்டுவதோடு மட்டுமல்லாமல், வட்டி செலுத்தும் பொறுப்பை தீர்வு செய்யாதிருப்பது அப்பொறுப்பை எதிர்கால தலைமுறைகளின் மீது சுமத்துவதாகவும் ஆனது.*

***(பத்தி 4.2)***

*பயன்பாட்டு சான்றிதழ்களை (₹ 803.29 கோடி) அளிக்காதிருப்பது, பொறுப்புடைமையை உறுதி செய்யும் விதிகளை பின்பற்ற துறை அலுவலர்கள் தவறியதை காட்டுவது மட்டுமல்லாமல், மானிய உதவி வழங்கிய நோக்கத்தை முறியடிப்பதாகவும் உள்ளது. நிலுவையில் உள்ள பயன்பாட்டு சான்றிதழ்கள் மூலதன செலவிற்கான மானிய உதவி தொடர்பானதாக இருந்தால், இது மேலும் முக்கியத்துவம் பெறும்.*

***(பத்தி 4.4)***

*கணிசமான தொகை கொண்ட தற்காலிக முன்பணங்களை (₹ 317.81 கோடி கருவூலத்திலிருந்து பெறப்பட்டு பல ஆண்டுகளாக சரிக்கட்டப்படாமல் இருப்பது), சரிக்கட்டுவது தொடர்பான விதிமுறைகளை அமல்படுத்துவதில் துறை அலுவலர்களின் தரப்பில் இருந்த மெத்தனப்போக்கை காட்டியது.*

***(பத்தி 4.6)***

*2021-22 ஆண்டுக்கான முடிவு ரொக்க இருப்பு தொடர்பாக, மாநில கணக்காயரின் பதிவுருக்களின்படியான ரொக்க இருப்பிற்கும் இந்திய ரிசர்வ் வங்கி தெரிவித்தபடியான ரொக்க இருப்பிற்கும் இடையே கணிசமான நிகர வேறுபாடு (₹159.61 கோடி) இருந்தது.*

***(பத்தி 4.11)***

# அத்தியாயம் 1
# கண்ணோட்டம்

# அத்தியாயம் 1

## கண்ணோட்டம்

### 1.1 தமிழ்நாடு மாநிலம் குறித்த விவரங்கள்

இந்திய மாநிலங்களுள், தமிழ்நாடு 1,30,058 சதுர கி.மீ. பரப்புடன் கூடிய 11வது பெரிய மாநிலமாகும். இது 38 மாவட்டங்களையும், 313 தாலுக்காக்களையும் கொண்டது. 2011 மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி, மாநிலத்தின் மக்கள் தொகை 7.21 கோடியாகும். மக்கள் தொகைப்படி தமிழ்நாடு ஏழாவது பெரிய மாநிலமாகும். சமூக குறியீடுகள் அடிப்படையில் தமிழ்நாடு முக்கிய இடம் வகிக்கிறது. தமிழ்நாட்டின் உயர்கல்வியின் சேர்க்கை விகிதம் 51.4 விழுக்காடு, இது இந்திய விகிதமான 27.1 காட்டிலும் கூடுதலாகும். 2011 மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி, எழுத்தறிவு விகிதம் அகில இந்திய அளவில் 73.0 விழுக்ககாடு என்பதற்கெதிராக தமிழ்நாட்டில் 80.1 சதவீதமாக இருந்தது. மேலும் விவரங்கள் **இணைப்பு 1.1**ல் தரப்பட்டுள்ளன

### 1.1.1 மாநில மொத்த உற்பத்தி மதிப்பு

மாநிலத்தின் எல்லைக்குள் ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் உற்பத்தியாகும் பொருட்கள் மற்றும் சேவைகளின் மதிப்பு மாநில மொத்த உற்பத்தி மதிப்பு (GSDP) எனப்படும். ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சியில் ஏற்படும் மாற்றங்களின் அளவை GSDP குறிப்பதால், அது மாநில பொருளாதாரத்திற்கான முக்கிய குறியீடு ஆகும்.

பொருளாதாரத்தில் மாறிவரும் அமைப்பை புரிந்துகொள்வதற்கு, GSDPக்கு பிரிவுவாரியான (sectoral) பங்களிப்பின் மாற்றங்களும் முக்கியமானவை ஆகும். பொருளாதார நடவடிக்கை என்பது, வேளாண்மை, தொழில் மற்றும் சேவைகள் சார்ந்தது. அவை முறையே, முதல் நிலை, இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை பிரிவுகளாக வகைப்படுத்தப்படுகிறது.

அட்டவணை 1.1: தேசிய மொத்த உற்பத்தி (GDP)யுடன் ஒப்பிட்ட வகையில் GSDPன் போக்கு

*(₹ கோடியில்)*

| ஆண்டு | 2017-18 | 2018-19 | 2019-20 | 2020-21 | 2021-22 |
|---|---|---|---|---|---|
| GDP (2011-12 வரிசை) | 1,70,90,042 | 1,88,99,668 | 2,00,74,856 | 1,98,00,914 | 2,36,64,637 |
| முந்தைய ஆண்டுடன் ஒப்பிட்ட வகையில் GDPன் வளர்ச்சி விகிதம் (விழுக்காடு) | *11.03* | *10.59* | *6.22* | *(-) 1.36* | *19.51* |
| தற்போதைய விலைவிகிதங்களில் GSDP (2011-12 வரிசை) | 14,65,051 | 16,30,209 | 17,43,144 | 18,08,239 | 20,65,436 |
| முந்தைய ஆண்டுடன் ஒப்பிட்டவாறு GSDP வளர்ச்சி விகிதம் (விழுக்காடு) | *12.47* | *11.27* | *6.93* | *3.73* | *14.22* |

*(ஆதாரம்: புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்கத் துறை, மத்திய புள்ளியியல் அலுவலகம்)*

2021-22ல் GSDPன் தற்போதைய விலைவிகிதங்களின்படியான வளர்ச்சியானது 14.22 விழுக்காடு ஆகவும், இந்திய அளவிலான வளர்ச்சி 19.51 விழுக்காடு ஆகவும் இருந்தது.

**விளக்கப்படம் 1.1: GSDPக்கு பிரிவுவாரியான பங்களிப்பில் மாற்றம்**
**(2017-18 முதல் 2021-22 வரை)**




(ஆதாரம்: பொருளாதாரம் மற்றும் புள்ளியியல் துறை, மத்திய புள்ளியியல் அலுவலகம்)

கடந்த ஐந்தாண்டுகளில், வேளாண் மற்றும் சேவை துறைகளின் பங்களிப்பு முறையே 0.62 விழுக்காடு மற்றும 2.2 விழுக்ககாடு உயர்ந்திருந்தது. தொழில் துறையின் பங்களிப்பு 1.69 விழுக்காடு புள்ளிகள் குறைந்திருந்தது. மேலும், பொருட்கள் மீதான வரிகள் (பொருட்கள் மீதான மானியம் கழித்தது போக) 9.18 விழுக்காட்டிலிருந்து 8.05 விழுக்காடு என கணிசமாக குறைந்திருந்தது கவனிக்கத்தக்கது.

**விளக்கப்படம் 1.2: GSDPல் பிரிவுவாரியான வளர்ச்சி**




(ஆதாரம்: பொருளாதாரம் மற்றும் புள்ளியியல் துறை, மத்திய புள்ளியியல் அலுவலகம்)

கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2021-22ம் ஆண்டில் GSDPல் வேளாண் துறையின் வளர்ச்சி வீதம் குறைந்திருந்த அதே வேளையில் தொழில் மற்றும் சேவை துறைகளின் வளர்ச்சி, கோவிட் 19 காலகட்டத்திற்கு பிறகு தொடங்கப்பட்ட பொருளாதா நடவடிக்கை காரணமாக, கணிசமாக உயர்ந்திருந்தது என்பது மேலே உள்ள விளக்கப்படத்திலிருந்து தெரிய வருகிறது.

## 1.2 மாநில நிதிநிலை மீதான தணிக்கை அறிக்கைக்கான அடிப்படையும் அணுகுமுறையும்

மாநில நிதிநிலை மீதான தணிக்கை அறிக்கை, அரசியலமைப்பு சட்டம், பிரிவு 151 (2)ன்படி தயாரிக்கப்பட்டு, ஆளுநரிடம் அளிக்கப்படுகிறது. இந்திய அரசியலமைப்பு சட்டம், பிரிவு 151 (2)ன்படி, ஒரு மாநில அரசின் கணக்குகள் தொடர்பான இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின் (CAG) அறிக்கைகள் அம்மாநில ஆளுநரிடம் அளிக்கப்பட்டு, ஆளுநர் அவற்றை மாநில சட்டமன்றத்தில் தாக்கல் செய்யும்படி வகைப்படுத்துவார்.

மாநில அரசின் கட்டுப்பாட்டில் இயங்கும் கருவூலங்கள், கணக்குகளை பராமரிக்கும் பொறுப்புடைய அலுவலகங்கள் மற்றும் துறைகள் ஆகியவற்றிடமிருந்து பெறப்படும் கருவூலப்பட்டிகள், செலுத்துச்சீட்டுகள் மற்றும் முதனிலை மற்றும் துணை கணக்குகள் ஆகியவற்றையும் இந்திய ரிசர்வ் வங்கியிடமிருந்து பெறப்படும் அறிக்கைகள் ஆகியவற்றையும் கொண்டு மாநில கணக்காயர் (கணக்குகள் மற்றும் பணிவரவுகள்) (AG (A&E)) மாநிலத்தின் நிதி கணக்குகளையும் நிதியொதுக்க கணக்குகளையும் ஒவ்வொரு ஆண்டும் தயாரிக்கிறார். இம்மாநிலத்தில், கருவூலங்களானவை கருவூலப்பட்டிகளிலிருந்து (voucher) கணக்குகளை தொகுக்குகின்றன (முதனிலை தொகுப்பு); பின்னர் அக்கணக்குகள், தொடர்புடைய பட்டிகளுடன் AG (A&E)க்கு இரண்டாம் நிலை தொகுப்பின் பொருட்டு அனுப்பப்படுகின்றன. இக்கணக்குகள் முதன்மை கணக்காய்வுத் தலைவரால் (தணிக்கை - I) சுதந்திரமாக தணிக்கை செய்யப்பட்டு, CAGஆல் சான்றளிக்கப்படும்.

இவ்வறிக்கைக்கான அடிப்படை தகவல்களை, 2021-22ம் ஆண்டுக்கான நிதி கணக்குகளும் நிதியொதுக்க கணக்குகளும் அளிக்கின்றன. பிற தகவல் ஆதாரங்களுள் பின்வருவன அடங்கும்:

- மாநிலத்தின் 2021-22ம் ஆண்டுக்கான வரவு - செலவு திட்டம்: நிதிவகையிலான அளவீடுகள் மற்றும் நிதி ஒதுக்கீட்டு முன்னுரிமைகளை எதிர்நோக்கப்பட்டவைகளுடன் ஒப்பிட்டு மதிப்பிடுதல், தொடர்புடைய விதிகள் மற்றும் அவற்றுக்கான நடைமுறைகளுக்கு உட்பட்டு அவை திறம்பட செயல்படுத்தப்பட்டதா என்பதை மதிப்பிடுதல்;
- முதன்மை கணக்காய்வுத் தலைவர் (தணிக்கை - I), தமிழ்நாடு, அலுவலகம் மேற்கொண்ட தணிக்கையின் முடிவுகள்;
- துறை அலுவலர்கள், கருவூலங்கள் ஆகியவற்றுடன் இருந்த பிற தகவல்கள் (கணக்கு மற்றும் மேலாண்மை தகவல் அமைப்பு);
- GSDP தகவல்கள் மற்றும் மாநிலம் தொடர்பான பிற தகவல்கள்; மற்றும்
- CAGன் பல்வேறு தணிக்கை அறிக்கைகள்.

நிதிக்குழுவின் (Finance Commission - FC) பரிந்துரைகள், தமிழ்நாடு மாநில நிதி பொறுப்புடைமை மற்றும் வரவு - செலவு திட்ட மேலாண்மை சட்டம் (TNFR சட்டம்), சிறந்த வழக்கங்கள் மற்றும் இந்திய அரசின் வழிகாட்டுநெறிகள் ஆகியவற்றின் அடிப்படையிலும் பகுப்பாய்வு செய்யப்படுகிறது. தணிக்கைக்கான ஒரு துவக்க கூட்டம் மாநில நிதித்துறையுடன் 26 ஜூலை 2022 அன்றும், தணிக்கை நிறைவுக் கூட்டம் 8 டிசம்பர் 2022 அன்றும் நடைபெற்றன.

தணிக்கை நிறைவு கூட்டத்தில் அரசு அளித்த மறுமொழிகள் இவ்வறிக்கையில் உரிய இடங்களில் தகுந்தவாறு சேர்க்கப்பட்டுள்ளன.

## 1.3 அறிக்கையின் கட்டமைப்பு

இவ்வறிக்கை நான்கு அத்தியாயங்களை கொண்டுள்ளது:

| | |
|---|---|
| அத்தியாயம் – 1 | **கண்ணோட்டம்**<br>இந்த அத்தியாயம் இவ்வறிக்கைக்கான அடிப்படை மற்றும் அணுகுமுறையை விளக்குகிறது. இதில் கூறப்பட்டுள்ள தகவல்கள், அரசு கணக்குகளின் கட்டமைப்பு, வரவு - செலவு திட்ட நடைமுறைகள், முக்கிய குறியீடுகள் மீதான பகுப்பாய்வு, பற்றாக்குறை/மிகை உட்பட மாநிலத்தின் நிதி நிலை ஆகியவை பற்றிய ஒரு கண்ணோட்டத்தை அளிக்கின்றன. |
| அத்தியாயம் – 2 | **மாநிலத்தின் நிதிகள்**<br>இந்த அத்தியாயம் மாநிலத்தின் நிதிகள் பற்றிய ஒரு பரந்த பார்வையை அளிக்கிறது; முந்தைய ஆண்டுடன் ஒப்பிட்ட வகையில் முக்கிய நிதி இலக்கங்களில் முக்கிய மாற்றங்கள், 2017-18 முதல் 2021-22 வரையிலான காலகட்டத்தில் ஒட்டுமொத்த அளவிலான போக்குகள், மாநிலத்தின் கடன் நிலைமை, பொது கணக்கின் கீழ் முக்கிய நிதி நடவடிக்கைகள், ஆகியவற்றை மாநிலத்திற்கான நிதி கணக்குகளின் அடிப்படையில் பகுப்பாய்வு செய்கிறது. |
| அத்தியாயம் – 3 | **வரவு - செலவு திட்ட மேலாண்மை**<br>இந்த அத்தியாயம் மாநிலத்தின் நிதியொதுக்க கணக்குகளின் அடிப்படையில் அமைந்தது; மாநில அரசின் நிதியொதுக்க முன்னுரிமைகளை சீராய்வு செய்து, வரவு - செலவு திட்ட மேலாண்மை தொடர்பான அரசியலமைப்பு சட்டத்தின் வழிவகைகளிலிருந்து தவறிய நேர்வுகள் குறித்து தெரிவிக்கிறது. |
| அத்தியாயம் – 4 | **கணக்குகள் மற்றும் நிதிநிலை அறிக்கை நடைமுறைகளின் தரம்**<br>இந்த அத்தியாயம் மாநில அரசின் பல்வேறு அதிகார அமைப்புகள் அளித்த கணக்குகளின் தரம் மற்றும் பல்வேறு துறை அலுவலர்கள் உரிய நிதி விதிகள் மற்றும் ஒழுங்குமுறைமைகளை பின்பற்றாமை தொடர்பான குறிப்புகளை தெரிவிக்கிறது. |

## 1.4 அரசு கணக்குகள் கட்டமைப்பு மற்றும் வரவு - செலவு திட்ட நடைமுறை பற்றிய கண்ணோட்டம்

அரசு கணக்குகள், நிதி அடிப்படையிலான கணக்குவைப்பு மற்றும் அரசின் நிதி செயல்பாடுகளின் வகையிலான வகைப்படுத்துதல் என்ற இரு கோட்பாடுகளின் அடிப்படையில் அமைந்தவை ஆகும். நிதி அடிப்படையிலான கணக்குவைப்பு என்பது, தொகுநிதி, எதிர்பாரா செலவு நிதி மற்றும் பொது கணக்கு என்பவற்றுள் தொடர்புடைய ஒன்றின் கீழ் அனைத்து வரவுகளையும் செலவுகளையும் கணக்குவைப்பது ஆகும். இந்நிதிகள் அரசியலமைப்பு சட்டத்தினால்

உருவாக்கப்பட்டு, பொது பொறுப்புடைமைக்கான கருவிகளாக திகழ்கின்றன. அந்நிதிகள் குறித்த விவரங்களும் அவற்றின் நோக்கங்களும் கீழே தரப்பட்டுள்ளன:

### 1. மாநிலத்தின் தொகுநிதி (இந்திய அரசியலமைப்பு சட்டம், பிரிவு 266(1))

மாநில அரசு பெறும் அனைத்து வருவாய்கள், கடன்கள் (சந்தை கடன்கள், பத்திரங்கள், மத்திய அரசு மற்றும் நிதி நிறுவனங்களிடமிருந்து பெறப்படும் கடன்கள், தேசிய சிறு சேமிப்பு நிதியத்திற்கு அளிக்கப்படும் சிறப்பு பத்திரங்கள் போன்றவை), இந்திய ரிசர்வ் வங்கி அளிக்கும் வழிவகை முன்பணங்கள் மற்றும் அரசு திரும்ப பெறும் கடன்கள் ஆகியன இந்நிதியில் அடங்கும். சட்டத்தின்படி அல்லாமல் மற்றும் அரசியலமைப்பு சட்டத்தில் கூறப்படும் நோக்கங்களுக்கு அல்லாமல் இந்நிதியிலிருந்து எந்த தொகையையும் செலவிட இயலாது. குறிப்பிட்ட சில வகை செலவுகள் (எடுத்துக்காட்டாக, அரசியலமைப்பு அதிகாரத்தின் சம்பளம், கடனை திரும்ப செலுத்துதல் போன்றவை) இந்நிதியின் மீது சாட்டப்படும் செலவுகள் ஆகும்; இவை சட்டமன்றத்தின் ஒப்புதலுக்கு உட்பட்டவை அல்ல. மற்ற செலவுகள் அனைத்திற்கும் (அனுமதிக்கப்பட்ட செலவுகள்) சட்டமன்றத்தின் அனுமதியைப் பெற வேண்டும்.

### 2. மாநில எதிர்பாரா செலவு நிதி (இந்திய அரசியலமைப்பு சட்டம், பிரிவு 267(2))

இது சட்டமன்றத்தால் சட்டப்படி அமைக்கப்பட்ட, பணி செய்வதற்காக முன்பணம் வழங்கும் தன்மையுடைய நிதி ஆகும். இந்நிதி, எதிர்பாரா செலவை மேற்கொள்வதற்கு மாநில சட்டமன்றத்தின் ஒப்புதலை பெறுவதற்கு முன்பு அச்செலவிற்கான முன்பணத்தை வழங்கும் பொருட்டு, ஆளுநரின் கட்டுப்பாட்டில் வைக்கப்படுகிறது. இந்நிதியிலிருந்து செய்யப்படும் செலவுக்கான தொகையானது பின்னர் மாநில தொகுநிதியின் உரிய பெருந்தலைப்பின் கீழ் பற்று வைப்பதன் மூலம் மீள பெறப்படுகிறது. தமிழ்நாடு மாநிலத்தில் இந்நிதிக்கான மூல தொகை ₹ 150 கோடி ஆகும்.

### 3. மாநிலத்தின் பொது கணக்கு (இந்திய அரசியலமைப்பு சட்டம், பிரிவு 266(2))

மேற்கூறியவற்றை தவிர, அரசால் அல்லது அரசு சார்பாக பெறப்படும் அனைத்து பொது பணமும் பொது கணக்கில் வரவு வைக்கப்படும். இதற்கு அரசு ஒரு வங்கியாளராக அல்லது அறங்காவலராக செயல்படும். சிறு சேமிப்பு, வருங்கால வைப்புநிதி, வைப்புத்தொகைகள் (வட்டியுடனானவை, வட்டி இல்லாதவை), முன்பணங்கள் போன்ற திரும்ப செலுத்த வேண்டிய தொகைகள், சேம நிதிகள் (வட்டியுடனானவை, வட்டி இல்லாதவை), செலுத்தங்கள் மற்றும் அனாமத்து தலைப்புகள் (இவை இரண்டும் கணக்குவைக்கப்படாத தொகைகளுக்கான இடைக்கால தலைப்புகள்) ஆகியன பொது கணக்கில் அடங்கும். அரசிடம் உள்ள நிகர மீத தொகையும் பொது கணக்கிலேயே சேர்க்கப்படும். பொது கணக்கு சட்டமன்றத்தின் ஒப்புதலுக்கு உட்பட்டதல்ல.

ஒவ்வொரு நிதி ஆண்டு தொடர்பாகவும், அரசின் எதிர்பார்க்கப்படும் வரவுகள் மற்றும் செலவுகள் குறித்த ஒரு அறிக்கை சட்டமன்றத்தின் அவை அல்லது அவைகளில் தாக்கல் செய்யப்பட வேண்டும் என்பது இந்திய அரசியலமைப்பு சட்டம் (பிரிவு 202)படி கட்டாயம் ஆகும். இந்த ‘ஆண்டு நிதி அறிக்கை’ வரவு - செலவு திட்டத்தின்

முக்கிய ஆவணம் ஆகும். மேலும், வரவு - செலவு திட்டமானது, வருவாய் வகையிலான செலவை பிற செலவுகளிலிருந்து வேறுபடுத்தி காட்ட வேண்டும்.

**வருவாய் வகை வரவுகள்** என்பதில் வரி வருவாய், வரியல்லாத வருவாய், மத்திய அரசு வரிகள்/தீர்வைகளில் பங்கு மற்றும் இந்திய அரசின் மானியங்கள் போன்றவை அடங்கும்.

**வருவாய் வகை செலவு** என்பதில், இயல்வகையான அல்லது நிதிவகையான சொத்துக்களை உருவாக்க முடியாத அரசு செலவுகள் அனைத்தும் அடங்கும். இது, அரசு துறைகளின் வழக்கமான இயக்கம் மற்றும் பல்வேறு சேவைகள் தொடர்பான செலவுகள், அரசு பெற்ற கடன்கள் மீதான வட்டி செலுத்தங்கள் மற்றும் பல்வேறு நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட மானியங்கள் (மானியங்களுள் சில மூலதன சொத்துக்களை உருவாக்குவதற்காக அளிக்கப்பட்டிருந்தாலும்கூட) போன்ற செலவுகளுக்கு தொடர்புடையதாகும்.

**மூலதன வகை வரவுகள்** என்பதில், கீழே விளக்கப்பட்டுள்ளவாறு, கடன் வரவுகள் மற்றும் கடன் அல்லாத வரவுகள் அடங்கும்:

- **கடன் வரவுகள்**: சந்தை கடன்கள், பத்திரங்கள், நிதி நிறுவனங்களிடமிருந்து பெறப்படும் கடன்கள், வழிவகை முன்பணங்களின் கீழ் நிகர பரிவர்த்தனைகள், மத்திய அரசிடமிருந்து பெறப்படும் கடன்கள் மற்றும் முன்பணங்கள் போன்றவை;
- **கடன் அல்லாத வரவுகள்**: முதலீட்டை மீள பெறுதல் மூலமான வரவுகள், கடன்கள் மற்றும் முன்பணங்களை மீள பெறுதல்;

**மூலதன வகை செலவு** என்பதில், நிலம், கட்டடம், எந்திரம், கருவிகள் ஆகியன வாங்குதல், பங்குகளில் முதலீடு, பொது துறை நிறுவனங்களுக்கும் மற்ற வகையினருக்கும் அரசு வழங்கும் கடன்கள் மற்றும் முன்பணங்கள் ஆகியன அடங்கும்.

தற்போது, செயல்வகை மற்றும் பொருளாதாரம் என்ற இரண்டு தன்மைகளில் கணக்கு வகைப்படுத்தல் முறை அரசிடம் நடைமுறையில் உள்ளது.

| | நிதி செயல்பாட்டின் தன்மை | வகைப்பாடு |
|---|---|---|
| கணக்குகளுக்கான தலைமை கட்டுப்பாட்டாளரால் (CGA), பெரும் மற்றும் சிறு தலைப்புகளின் பட்டியலில் (List of Major and Minor head - LMMH) தரப்படுத்தப்பட்டுள்ளவை | செயல்பாடு - கல்வி, நலவாழ்வு போன்றவை | மானியங்கள் என்பதன் கீழ் பெருந்தலைப்பு (4 இலக்கங்கள்) |
| | துணை செயல்பாடு | துணை பெருந்தலைப்பு (2 இலக்கங்கள்) |
| | திட்டம் | சிறு தலைப்பு (3 இலக்கங்கள்) |
| மாநிலங்களின் முடிவுக்கு விடப்பட்டுள்ளவை | திட்டம் | துணை தலைப்பு (2 இலக்கங்கள்) |
| | துணை திட்டம் | விரிவான தலைப்பு (3 இலக்கங்கள்) - சம்பளம், பராமரிப்பு போன்றவை |
| | பொருளாதார தன்மை/நடவடிக்கை | குறுந்தலைப்பு (2 இலக்கங்கள்) - சம்பளம், காலமுறை பராமரிப்பு போன்றவை |

துறை, செயல், திட்டம் மற்றும் செலவின் தன்மை ஆகியவற்றை அறிய, செயல்வகை வகைப்பாடு உதவுகிறது. செலவுகளை வருவாய் வகை, மூலதன வகை, கடன் வகை

போன்றவைகளாக வகைப்படுத்த பொருளாதார வகைப்பாடு உதவுகிறது. பொருளாதார வகைப்பாடு என்பதை, 4-இலக்க பெருந்தலைப்பில் முதல் இலக்கத்தில் உள்ளீடு செய்யப்பட்டுள்ள எண்ணிடும் அடிப்படை மூலம் செய்ய இயலும். எடுத்துக்காட்டாக, 0 மற்றும் 1 வருவாய் வகை வரவுகளையும், 2 மற்றும் 3 வருவாய் வகை செலவையும் குறிக்கும். சில குறுந்தலைப்புகளின் உள்ளடக்கமான வரையறுப்பு மற்றும் பகிர்மானம் மூலமாகவும் பொருளாதார வகைப்பாடு செய்யப்படுகிறது. எடுத்துக்காட்டாக, பொதுவாக 'சம்பளம்' குறுந்தலைப்பு வருவாய் வகை செலவும், 'பெரும் பணிகள்' குறுந்தலைப்பு மூலதன வகை செலவும் ஆகும். வரவு - செலவு திட்ட ஆவணங்களில் குறுந்தலைப்பு நிதி ஒதுக்கீட்டிற்கான முதனிலை அலகு ஆகும்.

அரசு கணக்குகளின் கட்டமைப்பும் நிதி கணக்குகளின் அமைப்பும் **இணைப்பு 1.2**ல் விளக்கப்பட்டுள்ளன. மாநிலத்தின் நிதி நிலையை மதிப்பிடுவதற்கு பின்பற்றப்பட்ட முறைமை **இணைப்பு 1.3 - பகுதி 'அ'**ல் விளக்கப்பட்டுள்ளது. TNFR சட்டம், 2003ன் முக்கிய அம்சங்கள் **இணைப்பு 1.3 - பகுதி 'ஆ'**ல் தரப்பட்டுள்ளன.

## அரசு கணக்குகளின் கட்டமைப்பு




## வரவு - செலவு திட்ட நடைமுறைகள்

இந்திய அரசியலமைப்பு சட்டம், பிரிவு 202ல் கூறப்பட்டபடி, 2021-22 ஆண்டில் எதிர்பார்க்கப்படும் வரவுகள் மற்றும் செலவுகள் குறித்த மதிப்பீடுகள் அடங்கிய ஒரு

அறிக்கையை 'ஆண்டு நிதி அறிக்கை' (வரவு - செலவு திட்டம் என குறிப்பிடப்படுவது) என்ற வடிவில் சட்டமன்றத்தில் மாநில ஆளுநர் தாக்கல் செய்ய வைத்தார்; இதில் பின்வருவன அடங்கியிருந்தன:

- மாநில தொகுநிதியில் சாட்டப்பட்ட செலவு;
- மாநில தொகுநிதியிலிருந்து செய்ய திட்டமிடப்பட்ட பிற செலவுகளுக்கு தேவைப்பட்ட தொகைகள் மற்றும் வருவாய் வகை செலவினங்களை பிற செலவினங்களோடு வேறுபடுத்தி காட்டுதல்.

இந்த 'ஆண்டு நிதி அறிக்கை' வரவு - செலவு திட்டத்தின் முக்கிய ஆவணம் ஆகும். மேலும், வரவு - செலவு திட்டமானது வரவு வகையிலான செலவை பிற செலவுகளிலிருந்து வேறுபடுத்தி காட்ட வேண்டும்

மேற்படி அறிக்கை அரசியலமைப்பு சட்டம், பிரிவு 203ல் கூறப்பட்டுள்ளவாறு, 54 மானிய/நிதியொதுக்க கோரிக்கைகள், கடன் செலவுகள் மற்றும் பொது கடன் மீள செலுத்துதல் ஆகியவற்றுக்கான இரண்டு 'பிற வெளியீடுகள்' ஆகிய வடிவில் மாநில சட்டமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டன. இவற்றுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டபின், மேற்கூறிய செலவுகளுக்கு தேவையான நிதியை தொகுநிதியிலிருந்து ஒதுக்குவதற்காக பிரிவு 204ன் கீழ் சட்டமன்றம் நிதியொதுக்கீட்டு மசோதாவை நிறைவேற்றியது

தமிழ்நாடு வரவு - செலவு திட்ட நடைமுறை நூல், வரவு - செலவு திட்டத்தை வகுக்கும் முறையை விளக்கி, மதிப்பீடுகள் தயாரிப்பிலும் செலவு நடவடிக்கைகள் மீதான கண்காணிப்பிலும் அரசுக்கு வழிகாட்டுகிறது. வரவு - செலவு திட்டம் மற்றும் அது தொடர்பான பிற முன்னெடுப்புகள் குறித்த தணிக்கையின் கூர்ந்தாய்வின் முடிவுகள் இவ்வறிக்கையின் **அத்தியாயம் 3**ல் விளக்கப்பட்டுள்ளன.

### 1.4.1 நிதிகள் பற்றிய ஒரு சுருக்கம்

2020-21ஆண்டின் உள்ளபடியான வரவு - செலவு விவரங்கள், 2021-22 ஆண்டுக்கான மதிப்பீடுகள் (திருத்தப்பட்டவை) மற்றும் உள்ளபடியான வரவு - செலவு விவரங்கள் ஆகியவற்றை **அட்டவணை 1.2** ஒப்பிடுகிறது.

**அட்டவணை 1.2: 2020-21க்கான உள்ளபடியான இலக்கங்கள், 2021-22க்கான மதிப்பீடுகள் (திருத்தப்பட்டவை) மற்றும் உள்ளபடியான இலக்கங்கள் ஆகியவற்றின் ஒப்பீடு**

(₹ கோடியில்)

| வ. எண் | கூறு | 2020-21 உள்ளபடி-யானவை | 2021-22 வரவு செலவு திட்ட மதிப்பீடுகள் (திருத்தப்-பட்டவை) | 2021-22 உள்ளபடி-யானவை | மதிப்பீட்டில் உள்ள படியானதின் விழுக்காடு | GSDP$ உள்ளபடியானதின் விழுக்காடு |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1 | வரி வருவாய்* | 1,31,077 | 1,55,438 | 1,60,324 | *103.14* | *7.76* |
| | (i) சொந்த வரி வருவாய் | 1,06,153 | 1,21,858 | 1,22,866 | *100.83* | *5.95* |
| | (ii) மத்திய அரசு வரிகள்/தீர்வைகளில் பங்கு** | 24,924 | 33,580 | 37,458 | *111.55* | *1.81* |
| 2 | வரியல்லாத வருவாய் | 10,422 | 11,831 | 12,117 | *102.42* | *0.59* |
| 3 | உதவி மானியங்கள், பங்களிப்புகள்*** | 32,577 | 36,609 | 35,051 | *95.74* | *1.70* |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
|---|---|---|---|---|---|---|
| 4 | **வருவாய் வகை வரவுகள் (1+2+3)** | **1,74,076** | **2,03,878** | **2,07,492** | *101.77* | ***10.05*** |
| 5 | கடன்கள் மற்றும் முன்பணங்கள் மீள பெறுதல் | 5,245 | 5,946 | 5,355 | *90.06* | *0.26* |
| 6 | பிற வரவுகள் | -- | -- | -- | | -- |
| 7 | கடன்கள் மற்றும் பிற பொறுப்புகள்(அ) | 93,983 | 90,827 | 81,835# | *90.10* | *3.96* |
| 8 | **மூலதன வகை வரவுகள் (5+6+7)** | **99,228** | **96,773** | **87,190** | ***87.39*** | ***4.22*** |
| 9 | மொத்த வரவுகள் (4+8) | 2,73,304 | 3,00,651 | 2,94,682 | *98.01* | *14.27* |
| 10 | **வருவாய் வகை செலவு** | **2,36,402** | **2,59,151** | **2,54,030** | *98.02* | ***12.30*** |
| 11 | வட்டி செலுத்தங்கள் | 36,497 | 41,461 | 41,564 | *100.25* | *2.01* |
| **12** | **மூலதன வகை செலவு** | **33,067** | **37,936** | **37,011** | ***97.56*** | ***1.79*** |
| **13** | **கடன்கள் மற்றும் முன்பணங்கள்** | **3,835** | **3,564** | **3,641** | ***102.16*** | ***0.18*** |
| 14 | மொத்த செலவு (10+12+13) | 2,73,304 | 3,00,651 | 2,94,682 | *98.01* | *14.27* |
| 15 | வருவாய் பற்றாக்குறை ^^: **(4-10)** | (-) 62,326 | (-) 55,273 | (-) 46,538 | *84.20* | *2.25* |
| 16 | நிதி பற்றாக்குறை ^^ **{(4+5+6)-14}** | (-) 93,983 | (-) 90,827 | (-) 81,835 | *90.10* | *3.96* |
| 17 | முதனிலை பற்றாக்குறை **(16-11)** | (-) 57,486 | (-) 49,366 | (-) 40,271 | *81.58* | *1.95* |

*(ஆதாரம்: வரவு - செலவு திட்ட ஆவணங்கள் மற்றும் நிதி கணக்குகள்)*

*அ) கடன்கள் மற்றும் பிற பொறுப்புகள்: பொது கடனின் நிகர தொகை (வரவு - செலவு) + எதிர்பாரா செலவு நிதியின் நிகர தொகை + பொது கணக்கின் நிகர தொகை (வரவு - செலவு) + துவக்க மற்றும் இறுதி ரொக்க மீதங்களின் நிகர தொகை*

*$ GSDP (தற்போதைய விலை விகிதங்களில்) ₹ 20,65,436 கோடி*

** SGST ₹ 45,276 கோடியை உள்ளடக்கியது; ** CGST ₹ 10,308 கோடியை உள்ளடக்கியது; *** GST நடைமுறைப்படுத்தியதால் மாநில அரசுகளுக்கு ஏற்பட்ட வருவாய் இழப்பை ஈடு செய்ய இழப்பீடு ₹ 7,236 கோடியை உள்ளடக்கியது*

# பொருட்கள் மற்றும் சேவைவரி இழப்பீட்டிற்கு மாற்றாக மாநிலத்திற்கு கடன் வரவுகளின் கீழ் கடனாக வழங்கப்பட்ட ₹ 8,095 கோடியை *(2020-21ல் ₹ 6,241 கோடி)*, நிதிக் குழு பரிந்துரைத்தவாறு, நிதி குறியீடுகளுக்கு கடனாக கருதப்படக்கூடாது என மத்திய அரசின் செலவுத் துறை முடிவு செய்திருப்பதால், கடன்கள் மற்றும் பிற பொறுப்புகள் ₹ *73,740 கோடியாக இருக்கும்.*

*^^ நடப்பாண்டில் (2021-22) வருவாய் பற்றாக்குறையான ₹ 46,538 கோடி மற்றும் நிதிப் பற்றாக்குறையான ₹ 81,835 கோடியானது பொருட்கள் மற்றும் சேவை வரிக்கு மாற்றாக கடனாக பெறப்பட்ட ₹ 8,095 கோடியுடன் சேர்த்து படிக்கப்பட வேண்டும்.*

### 1.4.2 அரசின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் பற்றிய ஒரு சுருக்கம்

அரசின் கணக்குகள், அரசின் நிதி பொறுப்புகளையும் செய்யப்பட்ட செலவின் மூலம் உருவாக்கப்பட்ட சொத்துக்களையும் கணக்கு வைக்கின்றன. பொறுப்புகள் பெரும்பாலும், உள்நாட்டு கடன்கள், இந்திய அரசிடமிருந்து பெறப்பட்ட கடன்கள் மற்றும் முன்பணங்கள், பொது கணக்கு மற்றும் சேம நிதிகளிலிருந்து வரவுகள் ஆகியவற்றை கொண்டுள்ளன; சொத்துக்களில் முக்கியமாக, மூலதன செலவு, அரசு அளித்த கடன்கள் மற்றும் முன்பணங்கள் மற்றும் ரொக்க மீதங்கள் ஆகியவற்றை கொண்டுள்ளன.

அட்டவணை **1.3:** சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் பற்றிய ஒரு சுருக்கம்

**(₹ கோடியில்)**

| பொறுப்புகள் | | | | | சொத்துக்கள் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | **2020-21** | **2021-22** | *உயர்வு/ குறைவு (-) விழுக்காட்டில்* | | | **2020-21** | **2021-22** | *உயர்வு/ குறைவு (-) விழுக்காட்டில்* |
| **தொகு நிதி** | | | | | | | | | |
| A | உள்நாட்டு கடன்கள் | 4,29,748 | 5,02,205 | *16.86* | a | மொத்த மூலதன செலவு | 2,78,702 | 3,15,713 | *13.28* |
| B | இந்திய அரசிடமிருந்து கடன்கள் மற்றும் முன்பணங்கள் | 27,440 | 39,731* | *44.79* | b | இந்திய அரசிடமிருந்து கடன்கள் மற்றும் முன்பணங்கள் | 38,587 | 36,873 | *(-) 4.44* |
| C | எதிர்பாரா செலவு நிதி | 150 | 150 | -- | c | எதிர்பாரா செலவு நிதி | -- | -- | -- |
| **பொது கணக்கு** | | | | | | | | | |
| A | சிறு சேமிப்பு, வருங்கால வைப்பு நிதிகள் போன்றவை | 29,352 | 32,033 | *9.13* | a | முன்பணங்கள் | 8 | 8 | -- |
| B | வைப்பு நிதிகள் | 71,912 | 82,625 | *14.90* | b | செலுத்தங்கள் | 8 | 14 | *75.00* |
| C | சேம நிதிகள் | 10,233 | 11,288 | *10.31* | c | அனாமத்து மற்றும் பல்வகை | 237 | 280 | *18.14* |
| D | அனாமத்து மற்றும் பல்வகை | -- | -- | -- | d | ரொக்க மீதம் (குறிப்பிட்ட நோக்கத்திற்கான நிதியில் செய்யப்பட்ட முதலீடு உட்பட) | 55,073 | 72,386 | *31.44* |
| | | | | | | **மொத்தம்** | **3,72,615** | **4,25,274** | *14.13* |
| | | | | | | வரவுகளுக்கு மேற்பட்ட செலவின் திரள் மொத்தம் | 1,96,220 | 2,42,758 | *23.72* |
| | **மொத்தம்** | **5,68,835** | **6,68,032** | *17.44* | | **மொத்தம்** | **5,68,835** | **6,68,032** | |

*(ஆதாரம்: நிதி கணக்குகள்)*

* பொருட்கள் மற்றும் சேவைவரி இழப்பீட்டிற்கு மாற்றாக மாநிலத்திற்கு கடன் வரவுகளின் கீழ் 2021-22ல் கடனாக வழங்கப்பட்ட ₹ 8,095 கோடி மற்றும் 2020-21ல் வழங்கப்பட்ட ₹ 6,241 கோடியை, நிதிக் குழு பரிந்துரைத்தவாறு, நிதி குறியீடுகளுக்கு கடனாக கருதப்படக்கூடாது என மத்திய அரசின் செலவுத் துறை முடிவு செய்திருப்பதால், கடன்கள் மற்றும் முன்பணங்கள் *₹ 25,395 கோடியாக இருக்கும்.*

முந்தைய ஆண்டுடன் ஒப்பிடுகையில், பொறுப்புகள் வகையில் நடப்பாண்டில் கணிசமாக, 17.44 விழுக்காடு, உயர்வு இருந்தது. ஆயினும் பொருட்கள் மற்றும் சேவைவரி இழப்பீட்டிற்கு மாற்றாக மாநிலத்திற்கு கடன் வரவுகளின் கீழ் கடனாக வழங்கப்பட்ட ₹ 14,336 கோடியை (2021-22ல் ₹ 8,095 கோடி மற்றும் 2020-21ல் ₹ 6,241 கோடி), நிதிக் குழு பரிந்துரைத்தவாறு, தவிர்த்து பார்த்தால், பொறுப்புகளின் வளர்ச்சி 14.92 விழுக்காடாக குறைந்திருக்கும்.

## 1.5 நிதி குறியீடுகள்

ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் வருவாய், நிதி மற்றும் முதனிலை பற்றாக்குறைகள் ஆகிய மூன்று முக்கிய நிதிவகையிலான அளவுருக்கள் மாநில அரசின் நிதிநிலையில் உள்ள ஒட்டுமொத்தமான சமமற்ற நிலையின் அளவை குறிக்கின்றன. அரசு கணக்குகளில் உள்ள பற்றாக்குறை அரசின் வரவுக்கும் செலவுக்கும் உள்ள இடைவெளியை காட்டும். மேலும், அப்பற்றாக்குறைக்காக பெறப்படும் நிதிகளும், நிதி முறைகளும் அரசு நிதியின் நிலைக்கான குறியீடுகளாக பயன்படுத்தப்படும். பற்றாக்குறைகளை ஈடு செய்வதற்கான நிதிகளை பெறுவது தொடர்பான போக்குகள், தன்மை, அளவு மற்றும் முறைகள் பற்றி இப்பகுதி விளக்குகிறது; TNFR சட்டம் 2003ன் கீழ் 2021-22 நிதியாண்டுக்கு வைக்கப்பட்ட இலக்குகளுடன் ஒப்பிட்ட வகையில், வருவாய் மற்றும் நிதி பற்றாக்குறைகளின் உள்ளபடியான அளவுகள் குறித்த மதிப்பீடுகளையும் தருகிறது.

### 1.5.1 நிதியின் போக்குகள்

மூன்று வகை பற்றாக்குறைகள் குறைந்திருப்பதை **1.3** முதல் **1.5** வரையிலான **விளக்கப்படங்கள்** காட்டுகின்றன. ஆனால், கடன்கள்/GSDP விகிதம், உயர்ந்து வரும் நிலையில், 2017-18ல் 22.29 விழுக்காடாகவும் 2021-22ல் 28.87 விழுக்காடாகவும் இருந்தது. இது TNFRன் இலக்கான 28.70 விழுக்காடை விஞ்சியது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில், நிதிப் பற்றாக்குறைக்கும் GSDPக்குமான விகிதம் குறைந்து, நடப்பாண்டில் 3.96 விழுக்காடாக இருந்தது.

**விளக்கப்படம் 1.3: பற்றாக்குறை அளவுருக்களின் போக்குகள்**




(ஆதாரம்: உரிய ஆண்டுக்கான நிதி கணக்குகள்)

**விளக்கப்படம் 1.4: GSDP தொடர்பாக மிகை/பற்றாக்குறையின் போக்குகள்**




(ஆதாரம்: உரிய ஆண்டுக்கான நிதி கணக்குகள்)

**விளக்கப்படம் 1.5: நிதி பொறுப்புகள் மற்றும் GSDPன் போக்குகள்**




*(ஆதாரம்: உரிய ஆண்டுக்கான நிதி கணக்குகள்)*

** மத்திய அரசிடமிருந்து பெற்ற கடன்கள் மற்றும் முன்பணங்கள் 2020-21ல் ₹ 21.20 ஆயிரம் கோடியாகவும், 2021-22ல் ₹ 25.39 ஆயிரம் கோடியாகவும் இருக்கும்.*

வருவாய் பற்றாக்குறையை நீக்குதல், நிதி பற்றாக்குறை மற்றும் ஒட்டுமொத்த/நிலுவையில் உள்ள கடன்களை ஏற்கக்கூடிய அளவிற்கு குறைத்தல், மேம்பட்ட கடன் மேலாண்மை முறையை அமைத்தல், மத்திம கால கட்டமைப்பில் ஒளிவுமறைவற்ற தன்மையை மேம்படுத்துதல் ஆகியவற்றின் மூலம் நிதி மேலாண்மையில் அறிவுடைமையை உறுதி செய்யும் நோக்கத்துடன் மத்திய அரசும் தனித்தனி மாநில அரசுகளும் நிதி பொறுப்புடைமை மற்றும் வரவு - செலவு திட்ட மேலாண்மை சட்டத்தை (FRBM) இயற்றின. இப்பொருளில், பற்றாக்குறை மற்றும் கடன் அளவு தொடர்பாக மாநில அரசு பின்பற்ற வேண்டிய அளவிடக்கூடிய இலக்குகளை அச்சட்டம் விதிக்கிறது.

வருவாய் பற்றாக்குறையை நீக்குவதற்கும் நிதி பற்றாக்குறையை குறைப்பதற்கும் விதிக்கப்பட்ட காலக்கெடுவை தமிழ்நாடு அரசு TNFR சட்டம் 2003ஐ அவ்வப்போது திருத்துவதன் மூலம் நீட்டித்து வந்தது. TNFR சட்டம் 2003ஐ பின்பற்றும் வகையில், மாநில அரசு 2021-22ல் அடைய வேண்டிய இலக்குகளை விதித்த மத்திம கால நிதி திட்டத்தை (MTFP) உருவாக்கியது.

வரவு செலவுத் திட்டத்தில் கொடுக்கப்பட்ட முக்கியமான நிதி மாறுபாடுகள் மற்றும் TNFR சட்டத்தில் கொடுக்கப்பட்டுள்ள இலக்குகள் மற்றும் உள்ளபடியானவை **அட்டவணை 1.4**ல் கொடுக்கப்பட்டுள்ளது.

அட்டவணை 1.4: TNFR சட்டத்தின் வழிவகைகளை பின்பற்றியமை

| நிதி அளவுருக்கள் | சட்டத்தில் கூறப்பட்ட இலக்குகள் | உள்ளபடியான இலக்கங்கள் | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | 2017-18 | 2018-19 | 2019-20 | 2020-21 | 2021-22 |
| தற்போதைய விலைவிகிதங்களில் GSDP (₹ கோடியில்) | | 14,65,051 | 16,30,209 | 17,43,144 | 18,08,239 | 20,65,436 |
| வருவாய் பற்றாக்குறை (-) / மிகை (+) (₹ கோடியில்) | 2023-24 ஆண்டுடன் வருவாய் பற்றாக்குறையை நீக்குதல் | (-) 21,594 | (-) 23,459 | (-) 35,909 | (-) 62,326 | (-) 46,538 |
| நிதி பற்றாக்குறை (-) / மிகை (+) (*GSDPன் விழுக்காடாக*) | மார்ச் 2024 ஆண்டுடன் நிதிப் பற்றாக்குறையை மூன்று விழுக்காட்டிற்கு குறைத்தல் | (-) 39,840 *(2.72)* | (-) 47,335 *(2.90)* | (-) 60,179 *(3.45)* | (-) 93,983 *(5.20)* | (-) 81,835 *(3.96)* |
| நிலுவையில் உள்ள மொத்த கடன் (₹ கோடியில்) | | 3,26,518 | 3,68,736 | 4,23,743 | 5,18,796 | 6,10,667 |
| நிலுவையில் உள்ள மொத்த கடனுக்கும் GSDPக்கும் உள்ள விகிதம் (விழுக்காடு) | 28.70 விழுக்காடு | 22.29 | 22.62 | 24.31 | 28.35* | 28.87* |

(ஆதாரம்: *(i) TNFR சட்டம்; (ii) வரவு - செலவு திட்ட உரை -2021-22 மற்றும் (iii) உரிய ஆண்டுக்கான நிதி கணக்குகள்*)

* பொருட்கள் மற்றும் சேவைவரி இழப்பீட்டிற்கு மாற்றாக மாநிலத்திற்கு கடன் வரவுகளின் கீழ் கடனாக 2021-22ல் வழங்கப்பட்ட ₹ 8,095 கோடியும், 2020-21ல் வழங்கப்பட்ட ₹ 6,241 கோடியும் இந்த குறியீடுகளுக்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை.

➢ 2023-24 ஆண்டுடன் வருவாய் பற்றாக்குறையை நீக்குதல் மற்றும் மார்ச் 2024 ஆண்டுடன் நிதிப் பற்றாக்குறையை மூன்று விழுக்காட்டிற்கு குறைத்தல் போன்ற திருத்ததங்களை அரசு, TNFR சட்டம் 2003ல், ஜூன் 2021ல் மேற்கொண்டது.

பொருட்கள் மற்றும் சேவைவரி இழப்பீட்டிற்கு மாற்றாக மாநிலத்திற்கு வழங்கப்பட்ட கடன் தொகையான ₹ 8,095 கோடி பொது கடனாக வராது என்பதால், நிதிப் பற்றாக்குறைக்கும் GSDPக்குமான விகிதத்தை 3.57 விழுக்காடாக மாற்றி அமைக்குமாறு நிறைவு கூட்டத்தில் கூடுதல் தலைமைச் செயலாளர் (ACS) கேட்டுக்கொண்டார்.

இந்த கடன்கள் 6004-பொது கடனில் பதிவு செய்யப்பட்டது என்பதால், வருவாய் வரவுகளாக கருதமுடியாது. நிதிப் பற்றாக்குறைக்கும் GSDPக்குமான விகிதம் 3.96 விழுக்காடேயாகும்.

வருவாய் பற்றாக்குறை, நிதிப் பற்றாக்குறை மற்றும் முதனிலை பற்றாக்குறை ஆகியவை TNFR சட்டம் நிர்ணயித்த அளவைவிட அதிகமாக இருந்த போதிலும்,

அவை மேம்பாடு அடைந்துள்ளது. MTFPல் எதிர்பார்க்கப்பட்ட மற்றும் உள்ளபடியான நிலைகள் **அட்டவணை 1.5**ல் தரப்பட்டுள்ளன.

**அட்டவணை 1.5: 2021-22 ஆண்டிற்கு MTFPல் எதிர்பார்க்கப்பட்ட மற்றும் உள்ளபடியான நிலைகள்**

*(₹ கோடியில்)*

| வ. எண் | நிதி மாறுபாடுகள் | MTFPல் எதிர்பார்ப்பு | உள்ளபடியானவை (2021-22) | வேறுபாடு (விழுக்காடு) |
|---|---|---|---|---|
| 1 | சொந்த வரி வருவாய் | 1,52,270 | 1,22,866 | *(-) 19.31* |
| 2 | வரியல்லாத வருவாய் | 17,807 | 12,117 | *(-) 31.96* |
| 3 | மத்திய அரசின் வரிகளில் பங்கு | 36,463 | 37,458** | *2.73* |
| 4 | இந்திய அரசிடமிருந்து உதவி மானியம் | 44,516 | 35,051 | *(-) 21.26* |
| **5** | **வருவாய் வகை வரவுகள் (1+2+3+4)** | **2,51,056** | **2,07,492** | *(-) 17.35* |
| 6 | வருவாய் வகை செலவு | 2,67,949 | 2,54,030 | *(-) 5.19* |
| **7** | **வருவாய் பற்றாக்குறை (-)/ மிகை (+) (5-6)** | **(-) 16,893** | **(-) 46,538** | *175.49* |
| **8** | **நிதி பற்றாக்குறை (-)/மிகை (+)** | **(-) 60,481** | **(-) 81,835** | *35.31* |
| 9 | கடன் - GSDP விகிதம் (விழுக்காடு) | *28.70* | *28.87** | *0.17* |
| 10 | தற்போதைய விலை விகிதங்களில் GSDPன் வளர்ச்சி விகிதம் (*விழுக்காடு*) | *23.36* | *14.22* | *(-) 9.14* |

*(ஆதாரம்: (i) MTFP; (ii) நிதி கணக்குகள்; GSDP இலக்கங்கள்: மத்திய புள்ளிவிவர அலுவலகம்)*

* பொருட்கள் மற்றும் சேவைவரி இழப்பீட்டிற்கு மாற்றாக மாநிலத்திற்கு கடன் வரவுகளின் கீழ் கடனாக வழங்கப்பட்ட (நடப்பாண்டில் ₹ 8,095 கோடி மற்றும் 2020-21ல் ₹ 6,241 கோடி), இந்த குறியீடுகளுக்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை.

** 1996-97 முதல் 2017-18 வரையிலான காலகட்டத்தில் குறைவாக பகிரப்பட்ட மத்திய அரசின் பங்கான ₹ 3,224.59 கோடி 2021-22ல் பகிரப்பட்ட மத்திய அரசின் பங்குகளில் உள்ளடங்கியுள்ளது

மத்திய அரசின் வரிகளில் பங்கு, சொந்த வரி வருவாய் மற்றும் வரியல்லாத வருவாய் ஆகியவை 2021-22ல் MTFPல் எதிர்நோக்கப்பட்ட இலக்குகளை விட கணிசமாக குறைந்திருந்தது என்பது மேலே உள்ள அட்டவணையிலிருந்து தெரிய வருகிறது. 2020-21ல் MTFPல் சொந்த வரி வருவாய் மற்றும் வரியல்லாத வருவாய்க்கு எதிர்நோக்கப்பட்ட இலக்குகளைகூட (சொந்த வரி வருவாய்: ₹ 1,41,186 கோடி மற்றும் வரியல்லாத வருவாய் : ₹ 13,993 கோடி) 2021-22ல் எட்ட முடியவில்லை.

## 1.6 தணிக்கையின் ஆய்வுக்கு பின் பற்றாக்குறைகள் மற்றும் மொத்த கடன் தொகைகளின் அளவுகள்

நிதி மற்றும் நிதியொதுக்க கணக்குகளின் பகுப்பாய்வை அடிப்படையாக கொண்ட பல்வேறு நிதிவகையிலான அளவீடுகளில் தணிக்கை காண்புரையின் தாக்கத்தை இப்பிரிவு மேல்நோக்குகிறது

### 1.6.1 தணிக்கையின் ஆய்வுக்கு பிந்தைய பற்றாக்குறை இலக்கங்கள்

(i) சில கணக்கு சரிசெய்தல் காரணமாக, வருவாய் மற்றும் நிதி பற்றாக்குறை பாதிக்கப்பட்டது என்பது **அட்டவணை 1.6**ல் கொடுக்கப்பட்டுள்ளது:

அட்டவணை 1.6: குறைவாக/மிகையாக காட்டப்பட்ட வருவாய் மற்றும் நிதி பற்றாக்குறை

| விவரங்கள் | வருவாய் பற்றாக்குறையில் நேரும் மாற்றம் (குறைவாக காட்டப்பட்டது (+) / மிகையாக காட்டப்பட்டது (-)) (₹ *கோடியில்*) | நிதி பற்றாக்குறையில் நேரும் மாற்றம் (குறைவாக காட்டப்பட்டது/ (+) மிகையாக காட்டப்பட்டது (-)) (₹ *கோடியில்*) |
|---|---|---|
| மூலதன செலவின் திரும்ப பெறுகைகள் தவறுதலாக வருவாய் பிரிவில் சரிகட்டப்பட்டது | (+) 10.79 | -- |
| வட்டியுடன் கூடிய சேம நிதிகள் மற்றும் வைப்புத்தொகைகளுக்கு வட்டி வரவு வைக்கப்படாமை (ஈடு செய் காடு வளர்ப்பு மேலாண்மை நிதியம்) | (-) 3.80 | (-) 3.80 |
| முகமை வங்கிகளால் அந்தந்த வருடங்களில் தெரிவிக்கப்படாததால், முந்தைய ஆண்டு வரவினங்கள் இந்த ஆண்டில் கணக்கு வைக்கப்பட்டது | (+) 374.95 | (+) 374.95 |
| ஆயுள் காப்பீடு நிறுவனத்தில் முதலீடு செய்யப்பட்ட பங்களிப்புடன் கூடிய ஓய்வூதிய திட்ட நிதியின் வட்டியை அறிவிக்காமை | (-) 1,995.50 | (-) 1,995.50 |
| **மொத்தம்** | **(-) 1,613.56** | **(-) 1,624.35** |

(ஆதாரம்: *நிதி கணக்குகள்*)

நடப்பாண்டில், மாநிலத்தின் நிதி பற்றாக்குறை ₹ 81,834.54 கோடியிலிருந்து ₹ 83,458.89 கோடியாக உயரும். இதன் விளைவாக, நிதிப்பற்றாக்குறைக்கும் GSDPக்குமான விகிதம் 3.96 விழுக்காட்டிலிருந்து 0.08 விழுக்காடு கூடுதலாக உயரும்.

2021-22ல் சில நடவடிக்கைகளை ஆராய்ந்ததில், தொகுக்கப்பட்ட சேம நிதிக்கு குறைந்த பங்களிப்பு (₹ 1,874.58 கோடி) மற்றும் உத்தரவாத மீட்பு நிதிக்கு குறைந்த பங்களிப்பு (₹ 18,070.33 கோடி) ஆகியவை வெளிக்கொணரப்பட்டது. மேலும், இது வருவாய் மற்றும் நிதிப் பற்றாக்குறையில் அந்தளவு தாக்கத்தை ஏற்படுத்தும்.

### 1.6.2 தணிக்கையின் ஆய்வுக்கு பிந்தைய கடன் நிலுவை இலக்கங்கள்

நிலுவையில் உள்ள மாநில அரசின் கடன்கள் / பொறுப்புகள் மீதான பகுப்பாய்வு, அவற்றை (i) GSDPன் விழுக்காடு மற்றும் (ii) அரசின் நிலுவை கடன்களின் வளர்ச்சி விகிதம் என்ற வகைகளில் **அட்டவணை 1.7** மூலம் விளக்குகிறது.

அட்டவணை 1.7: நிலுவையில் உள்ள மொத்த கடன்கள் / பொறுப்புகள்

(₹ கோடியில்)

| | 2017-18 | 2018-19 | 2019-20 | 2020-21 | 2021-22 |
|---|---|---|---|---|---|
| நிலுவையில் உள்ள மொத்த கடன்கள் / பொறுப்புகள் | 3,26,518 | 3,68,736 | 4,23,743 | 5,18,796* | 6,10,667* |
| நிலுவையில் உள்ள கடன்களின் வளர்ச்சி விகிதம் (விழுக்காடு) | 15.22 | 12.93 | 14.92 | 22.43* | 17.71* |
| நிலுவையில் உள்ள மொத்த கடனுக்கும் GSDPக்கும் உள்ள விகிதம் (விழுக்காடு) | 22.29 | 22.62 | 24.31 | 28.35** | 28.87** |

(ஆதாரம்: உரிய ஆண்டுக்கான நிதி கணக்குகள்)

* பொருட்கள் மற்றும் சேவைவரி இழப்பீட்டிற்கு மாற்றாக மாநிலத்திற்கு கடன் வரவுகளின் கீழ் கடனாக 2021-22ல் வழங்கப்பட்ட ₹ 8,095.25 கோடி மற்றும் 2020-21ல் வழங்கப்பட்ட ₹ 6,241 கோடி, நிதிக் குழு பரிந்துரைத்தவாறு, நிதி குறியீடுகளுக்கு கடனாக கருதப்படக்கூடாது என மத்திய அரசின் செலவுத் துறை முடிவு செய்திருப்பதால், நிலுவையிலுள்ள மொத்த கடன்கள் 2021-22ல் ₹ 5,96,331 கோடியாகவும், ₹ 2020-21ல் 5,12,555 கோடியாகவும் இருக்கும். இதன் விளைவாக, வளர்ச்சி வீதம் 2021-22ல் 16.34 விழுக்காடாகவும் 2020-21 ல் 20.96 விழுக்காடாகவும் இருக்கும்.

** பொருட்கள் மற்றும் சேவைவரி இழப்பீட்டிற்கு மாற்றாக மாநிலத்திற்கு கடன் வரவுகளின் கீழ் கடனாக 2021-22ல் வழங்கப்பட்ட ₹ 8,095.25 கோடி மற்றும் 2020-21ல் வழங்கப்பட்ட ₹ 6,241 கோடி, இந்த குறியீடுகளுக்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை.

கடன் நிலுவை முந்தைய ஆண்டைவிட 16.34 விழுக்காடு உயர்ந்தது (உள்ளபடியான உயர்வு 17.71 விழுக்காடாகும்). நடப்பாண்டின் மூலதன வகை செலவு ₹ 40,652 கோடி மட்டுமே என்பதும் அதிக அளவிலான நிதி பற்றாக்குறையும், நடப்பாண்டில் வாங்கப்பட்ட கடன் தொகைகளை செலவிடுவதில் மூலதன வகை செலவுக்கு முன்னுரிமை அளிக்காமல், வருவாய் வகை செலவை மேற்கொள்ள அது பயன்படுத்தப்பட்டது என்பதை காட்டின. இதனால் எந்த அளவு மூலதன உருவாக்கம் குறைந்ததோ, கடன் அந்த அளவிற்கு வருங்கால தலைமுறையினர் மீதான சுமையாக மாறும்.

கடன்/GSDP விகிதம் (28.87 விழுக்காடு) MTFP கூறிய வரம்பான 28.70 விழுக்காட்டை விஞ்சியது. வரவு - செலவு திட்டத்திற்கு அப்பாற்பட்டு வாங்கப்பட்ட கடன்களின் நிலுவையான ₹ 27,699.88 கோடி தொகையை மொத்த நிலுவை தொகையுடன் சேர்த்தால், கடன்/GSDP விகிதம் இவ்வாண்டில் 1.34 விழுக்காடு உயர்ந்து 30.21 விழுக்காடு என ஆகும்.

சமீபத்திய கட்டண உயர்வு காரணமாக, எதிர்காலத்தில் தமிழ்நாடு மின்சார வாரியம் நல்ல நிலையில் இருக்கும் என கூடுதல் தலைமை செயலாளர் நிறைவு கூட்டத்தில் தெரிவித்தார். நிலுவையிலுள்ள கடன்கள் மற்றும் GSDPக்குமான விழுக்காட்டை பொறுத்தவரை, கூடுதல் தலைமைச் செயலாளர் இதை ஆராய்வதாக கூறினார்.

## 1.7 முடிவுரை

பற்றாக்குறைக்கான குறியீடுகள், வருவாய் பெருக்கம், செலவு மேலாண்மை ஆகியன அரசின் நிதிவகை செயல்பாட்டை மதிப்பிடுவதற்கான முக்கிய அளவீடுகள் ஆகும்.

**நிதி நிலை:** மத்திய வரிகளின் பங்கு ₹ 12,534 கோடி (50.29 விழுக்ககாடு) உயர்வு காரணமாக, வருவாய் பற்றாக்குறை 2020-21ல் ₹ 62,326 கோடி என்ற அளவிலிருந்து 2021-22ல் ₹ 46,538 கோடியாக குறைந்தது. வருவாய் பற்றாக்குறை 2017-18ல் ₹ 21,594 கோடி என்ற அளவிலிருந்து 2020-21ல் ₹ 62,326 கோடியாக உயர்ந்து, 2021-22ல் ₹ 46,538 கோடியாக குறைந்தது. வருவாய் வகை வரவுகள் வருவாய் வகை செலவுகளை எதிர்கொள்ள முடியாமல் வருவாய் பற்றாக்குறை நீடிப்பது என்பது கவலைப்பட வேண்டிய ஒன்றாகும் மற்றும் கடன் உயர்வுக்கு இது வழிவகுக்கும்.

நடப்பாண்டில் நிதிப்பற்றாக்குறைக்கும் GSDPக்குமான விகிதம் 3.96 விழுக்காடாக இருந்தது. இது 2020-21ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 1.24 விழுக்காடு புள்ளி முன்னேற்றம் அடைந்துள்ளது. ஆயினும், 2021-22ல் நிலுவையிலுள்ள கடன்கள் மற்றும் GSDPக்குமான விகிதம் 28.87 விழுக்காடாக இருந்தது. இது TNFRல் எதிர்நோக்கப்பட்ட இலக்கான 28.70 விழுக்காட்டை விட சிறிதளவு கூடுதலாகும்.

# அத்தியாயம் 2
# மாநில அரசின் நிதிகள்

# அத்தியாயம் 2

## மாநில அரசின் நிதிகள்

இந்த அத்தியாயம், தமிழ்நாடு அரசின் நடப்பாண்டு (2021-22) நிதிநிலை குறித்த ஒரு விரிவான பார்வையை அளிக்கிறது. மேலும், கடந்த ஐந்து ஆண்டுகளில் இருந்த ஒட்டுமொத்த போக்குகளை கருத்தில் கொண்டும், கடந்த ஆண்டின் (2020-21) நிதி நிலையோடு ஒப்பிட்டும், நடப்பாண்டில் நேர்ந்த மிக முக்கியமான மாறுதல்களை ஒரு பகுப்பாய்வும் செய்கிறது.

### 2.1 2020-21 ஆண்டுடன் ஒப்பிட்ட வகையில் 2021-22 ஆண்டின் நிதி நடவடிக்கைகளின் சுருக்கம்

கடந்த ஆண்டோடு (2020-21) ஒப்பிட்ட வகையில் மாநில அரசின் நடப்பாண்டிற்கான (2021-22) நிதி நடவடிக்கைகளின் சுருக்கத்தை **அட்டவணை 2.1** வழங்குகிறது; 2017-2022 காலகட்டத்தில் நிதி குறியீடுகளின் போக்கை **இணைப்பு 2.1** காட்டுகிறது.

**அட்டவணை 2.1: 2020-21 ஆண்டுடன் ஒப்பிட்ட வகையில் 2021-22 ஆண்டின் நிதி செயல்பாடுகளின் சுருக்கம்**

*(₹ கோடியில்)*

| வரவுகள் | 2020-21 | 2021-22 | செலவுகள் | 2020-21 | 2021-22 |
|---|---|---|---|---|---|
| **பிரிவு அ: வருவாய்** | | | | | |
| **வருவாய் வகை வரவுகள்** | **1,74,076.30** | **2,07,492.40** | **வருவாய் வகை செலவு** | **2,36,402.18** | **2,54,030.42** |
| மாநிலத்தின் சொந்த வரி வருவாய் | 1,06,152.96 | 1,22,866.29 | பொது பணிகள் | 78,992.92 | 84,893.54 |
| வரியல்லாத வருவாய் | 10,421.85 | 12,116.52 | சமூக பணிகள் | 89,804.85 | 88,749.10 |
| மத்திய அரசு வரிகள்/தீர்வைகளில் பங்கு | 24,924.51 | 37,458.62$ | பொருளாதார பணிகள் | 51,808.56 | 60,898.32 |
| இந்திய அரசின் மானியங்கள் | 32,576.98 | 35,050.97 | உதவி மானியங்கள் மற்றும் பங்களிப்புகள் | 15,795.85 | 19,489.46 |
| **பிரிவு ஆ: மூலதன வகை மற்றும் பிற இனங்கள்** | | | | | |
| பல்வகை மூலதன வகை வரவுகள் | -- | 0.01 | **மூலதன செலவு** | **33,067.65** | **37,010.78** |
| | | | பொது பணிகள் | *936.58* | *780.21* |
| | | | சமூக பணிகள் | *10,831.17* | *14,984.96* |
| | | | பொருளாதார பணிகள் | *21,299.90* | *21,245.61* |
| மீள பெறப்பட்ட கடன்கள், முன்பணங்கள் | 5,245.25 | 5,354.77 | வழங்கப்பட்ட கடன்கள், முன்பணங்கள் | 3,834.83 | 3,640.52 |
| பொது கடன் வரவுகள் | 1,02,866.97 | 1,04,484.99* | திருப்பி செலுத்தப்பட்ட பொது கடன் | 16,228.57 | 19,737.24 |
| எதிர்பாராச் செலவு நிதி | -- | -- | எதிர்பாரா செலவு நிதி | -- | -- |
| பொது கணக்கு வரவுகள் | 3,36,177.54 | 3,98,156.68 | பொது கணக்கு செலவுகள் | 3,23,188.72 | 3,83,756.59 |
| துவக்க ரொக்க இருப்பு | 49,428.69 | 55,072.80 | இறுதி ரொக்க இருப்பு | 55,072.80 | 72,386.10 |
| **மொத்தம்** | **6,67,794.75** | **7,70,561.65** | **மொத்தம்** | **6,67,794.75** | **7,70,561.65** |

*(ஆதாரம்: உரிய ஆண்டிற்கான நிதி கணக்குகள்)*

* நிதிக் குழுவின் பரிந்துரைப்படி, பொருட்கள் மற்றும் சேவைவரி இழப்பீட்டிற்கு மாற்றாக மாநிலத்திற்கு கடன் வரவுகளின் கீழ் கடனாக வழங்கப்பட்ட ₹ 8,095.25 கோடியை, நிதிக் குறியீடுகளுக்கு கடனாக கருதப்படக்கூடாது என மத்திய அரசின் செலவுத் துறை முடிவு செய்திருப்பதால், பொதுகடன் வரவுகள் ₹ 96,389.74 *கோடியாகும்.*

$ 1996-97 முதல் 2017-18 வரையிலான காலகட்டத்தில் குறைவாக பகிரப்பட்ட மத்திய அரசின் பங்கான *₹ 3,224.59 கோடி 2021-22ல் பகிரப்பட்ட மத்திய அரசின் பங்குகளில் உள்ளடங்கியுள்ளது*

**அட்டவணை 2.2: 2020-21-உடன் ஒப்பிடுகையில் 2021-22ல் முக்கிய நிதி தொகுப்பு இலக்கங்களில் முக்கிய மாற்றங்கள்**

| | |
|---|---|
| வருவாய் வகை வரவுகள் | ✓ மாநிலத்தின் வருவாய் வகை வரவுகள் 19.20 விழுக்காடு அளவிற்கு உயர்ந்தது.<br>✓ மாநிலத்தின் சொந்த வரி வருவாய் 15.74 விழுக்காடு உயர்ந்தது.<br>✓ சொந்த வரியல்லாத வருவாய் 16.26 விழுக்காடு உயர்ந்தது.<br>✓ மத்திய அரசு வரிகள்/தீர்வைகளில் மாநிலத்தின் பங்கு 50.29 விழுக்காடு உயர்ந்தது.<br>✓ இந்திய அரசின் உதவி மானியங்கள் 7.59 விழுக்காடு உயர்ந்தன. |
| வருவாய் வகை செலவு | ✓ வருவாய் வகை செலவுகள் 7.46 விழுக்காடு உயர்ந்தது.<br>✓ பொது பணிகள் மீதான வருவாய் வகை செலவுகள் 7.47 விழுக்காடு உயர்ந்தது.<br>✓ சமூக பணிகள் மீதான வருவாய் வகை செலவுகள் 1.18 விழுக்காடு குறைந்தது.<br>✓ பொருளாதார பணிகள் மீதான வருவாய் வகை செலவுகள் 17.54 விழுக்காடு உயர்ந்தது.<br>✓ உதவி மானியங்கள் மீதான செலவுகள் 23.38 விழுக்காடு உயர்ந்தது. |
| மூலதன வகை செலவு | ✓ மூலதன வகை செலவுகள் 11.92 விழுக்காடு உயர்ந்தது.<br>✓ பொது பணிகள் மீதான மூலதன வகை செலவுகள் 16.70 விழுக்காடு குறைந்தது.<br>✓ சமூக பணிகள் மீதான மூலதன வகை செலவுகள் 38.35 விழுக்காடு உயர்ந்தது.<br>✓ பொருளாதார பணிகள் மீதான மூலதன வகை செலவுகள் 0.25 விழுக்காடு அளவிற்கு சிறிதளவு குறைந்தது. |
| கடன்கள் மற்றும் முன்பணங்கள் | ✓ கடன்கள் மற்றும் முன்பணங்கள் வழங்குதல் 5.07 விழுக்காடு குறைந்தது.<br>✓ கடன்கள் மற்றும் முன்பணங்கள் மீளப் பெறுதல் 2.09 விழுக்காடு உயர்ந்தது. |
| பொது கடன் | ✓ பொது கடன் வரவுகள் 1.57 விழுக்காடு உயர்ந்தது.<br>✓ பொது கடன் திரும்ப செலுத்துதல் 21.62 விழுக்காடு உயர்ந்தது. |
| பொது கணக்கு | ✓ பொது கணக்கு வரவுகள் 18.44 விழுக்காடு உயர்ந்தது.<br>✓ பொது கணக்கு செலவுகள் 18.74 விழுக்காடு உயர்ந்தது. |
| ரொக்க இருப்பு | ✓ ரொக்க இருப்பு கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2021-22ல் ₹ 17,313 கோடி (31.44 விழுக்காடு) உயர்ந்தது |

முந்தைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2021-22ல் நிகழ்ந்த முக்கிய மாற்றங்கள் பின்வரும் துணை பத்திகளில் விளக்கப்பட்டுள்ளன.

- மாநிலத்தின் **வருவாய் வகை வரவுகள்** கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 19.20 விழுக்காடு (₹ 33,416 கோடி) அளவிற்கு உயர்ந்தது. ஆயினும், நடப்பாண்டில் பெறப்பட்ட ₹ 4,139 கோடி கடந்த ஆண்டுகளுக்குரியதாகும்.

2020-21ம் ஆண்டில் வருவாய் வகை வரவுகளில் 2017-18ம் ஆண்டில் விடுவிக்கப்பட்ட சரக்கு மற்றும் சேவை வரி இழப்பீடான ₹ 4,321 கோடி உள்ளடங்கியுள்ளது. இந்த தொகைகளை தவிர்த்து பார்த்தால் உள்ளபடியான வருவாய் வகை வரவினங்களின் வளர்ச்சி 19.79 விழுக்காடாக இருக்கும்.

- **வருவாய் வகை செலவினம்** கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் ₹ 17,628 கோடி (7.46 விழுக்காடு) உயர்ந்தது. இவ்வுயர்வுக்கு, சந்தை கடன்கள் மீது கொடுக்கப்பட்ட கூடுதல் வட்டி கொடுப்புகள் மற்றும் NABARDல் கூட்டுறவு நிறுவனங்களால் பெறப்பட்ட வேளாண் கடன்களை தள்ளுபடி செய்வதற்கான மானியம் ஆகியவை முக்கிய காரணங்களாகும்.

- கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில், 2021-22ல் மூலதன செலவினம் 11.92 விழுக்காடு (₹ 3,943 கோடி) உயர்ந்தது. 2019-20உடன் ஒப்பிடுகையில் 2020-21ல் 29.01 விழுக்காடு உயர்வு இருந்தது. முக்கியமாக, நகர்ப்புற மேம்பாடு (₹ 3,997.05 கோடி - 89.69 விழுக்காடு), விமான போக்குவரத்து (₹ 917.66 கோடி - 215.14 விழுக்காடு) மற்றும் மின் திட்டங்கள் (₹ 442.39 கோடி - 100 விழுக்காடு) ஆகியவற்றில் உயர்வு இருந்தன.

- கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் **பொது கடன் வரவுகள் அதாவது கடன்கள்** ₹ 1,618 கோடி (1.57 விழுக்காடு) உயர்வு இருந்தது.

- **கடன்கள் மற்றும் முன்பணங்களை மீளப்பெறுதல்** நடப்பாண்டில், ₹ 110 கோடி (2.09 விழுக்காடு) உயர்ந்தது. மீளப்பெறப்பட்ட தொகையினுள் இவ்வாண்டில், TANGEDCO[1] பெற்றிருந்த ₹ 4,563 கோடி கடனை UDAY திட்டத்தின் கீழான உதவி மானியமாக, கணக்களவில் சரி கட்டுதல் மூலம், மாற்றம் செய்யப்பட்டதும் அடங்கும். இவ்வாறாக, இவ்வாண்டில் உள்ளபடியே மீளப்பெறப்பட்ட கடன்கள் மற்றும் முன்பணங்கள் ₹ 792 கோடி மட்டுமே ஆகும். இது, கடந்த ஆண்டில் ₹ 682 கோடியாக இருந்தது.

- **கடன்கள் மற்றும் முன்பணங்கள்** வழங்குவதில் இவ்வாண்டில் முந்தைய ஆண்டைவிட ₹ 194 கோடி (5.07 விழுக்காடு) குறைவு ஏற்பட்டது;

- **பொது கணக்கு வரவுகள் மற்றும் செலவுகள்** முறையே ₹ 61,979 கோடி (18.44 விழுக்காடு) மற்றும் ₹ 60,567 கோடி (18.74 விழுக்காடு) உயர்ந்தன. பொது கணக்கின் கீழ் நிகர வரவுகள் முந்தைய ஆண்டைக்காட்டிலும் ₹ 1,411 கோடி உயர்ந்தது.

- மேற்கூறியவற்றின் நிகர விளைவாக, ஆண்டு முடிவில் இருந்த **ரொக்க இருப்பு** முந்தைய ஆண்டின் இருப்பைவிட ₹ 17,313 கோடி கூடுதலாக இருந்தது. ரொக்க இருப்பு 31 விழுக்காடு உயர்ந்தது. 2020-21ல் இவ்வுயர்வு 11 விழுக்காடாக இருந்தது.

[1] தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்.

## 2.2 நிதி ஆதாரங்கள் மற்றும் செலவினங்கள்

**அட்டவணை 2.3: 2020-21 மற்றும் 2021-22 ஆண்டுகளில் நிதி ஆதாரங்கள் மற்றும் செலவினங்கள் பற்றிய விவரங்கள்**

*(₹ கோடியில்)*

| | பொருள் | 2020-21 | 2021-22 | கூடுதல்/ குறைவு |
|---|---|---|---|---|
| ஆதாரங்கள் | ரிசர்வ் வங்கியில் துவக்க இருப்பு | 49,428 | 55,073 | 5,645 |
| | வருவாய் வகை வரவுகள் | 1,74,076 | 2,07,492 | 33,416 |
| | கடன்கள் மற்றும் முன் பணங்கள் மீளப்பெறப்பட்டமை | 5,245 | 5,355 | 110 |
| | எதிர்பாரா செலவு நிதி (நடப்பாண்டில் மீள பெறப்பட்டது) | -- | -- | -- |
| | பொது கடன் வரவுகள் (நிகரம்) | 86,638 | 84,748* | (-) 1,890 |
| | பொது கணக்கு வரவுகள் (நிகரம்) | 12,989 | 14,400 | 1,411 |
| | **மொத்தம்** | **3,28,376** | **3,67,068** | **38,692** |
| செலவினங்கள் | வருவாய் வகை செலவு | 2,36,402 | 2,54,030 | 17,628 |
| | மூலதன வகை செலவு | 33,067 | 37,011 | 3,944 |
| | கடன்கள் மற்றும் முன்பணங்கள் வழங்கல் | 3,835 | 3,641 | (-) 194 |
| | ரிசர்வ் வங்கியில் இறுதி இருப்பு | 55,072 | 72,386 | 17,314 |
| | **மொத்தம்** | **3,28,376** | **3,67,068** | **38,692** |

*(ஆதாரம்: நிதி கணக்குகள்)*

* பொருட்கள் மற்றும் சேவைவரி இழப்பீட்டிற்கு மாற்றாக மாநிலத்திற்கு கடன் வரவுகளின் கீழ் கடனாக வழங்கப்பட்ட ₹ 8,095.25 கோடியை, நிதிக் குழு பரிந்துரைத்தவாறு, நிதி குறியீடுகளுக்கு கடனாக கருதப்படக்கூடாது என மத்திய அரசின் செலவுத் துறை முடிவு செய்திருப்பதால், கடன் வரவுகள் (நிகரம்) *₹ 76,653 கோடியாகும்.*

குறிப்பு: 2020-21ல் இறுதி கையிருப்பு மற்றும் 2021-22ன் தொடக்க இருப்பு முழுதாக்கல் காரணமாக ₹ 0.01 கோடி வேறுபடுகிறது.

## 2.3 மாநிலத்தின் நிதி ஆதாரங்கள்

மாநிலத்தின் நிதி ஆதாரங்கள் கீழே விளக்கப்பட்டுள்ளன:

1. **வருவாய் வகை வரவுகள்** என்பதில் சொந்த வரி வருவாய், வரியல்லாத வருவாய், மத்திய அரசு வரிகள் மற்றும் தீர்வைகளில் மாநிலத்தின் பங்கு மற்றும் இந்திய அரசின் உதவி மானியங்கள் என்பன அடங்கும்.

2. **மூலதன வரவுகள்** என்பதில் முதலீடு நீக்கம் போன்ற பல்வகை மூலதன வகை வரவுகள், கடன்கள் மற்றும் முன்பணங்கள் மீளப்பெறுதல், உள்நாட்டு ஆதாரங்களிலிருந்து கடன் வரவுகள் (சந்தை கடன்கள், நிதி நிறுவனங்கள்/வணிக வங்கிகளிடமிருந்து பெறப்படும் கடன்கள்), இந்திய அரசிடமிருந்து பெறப்படும் கடன்கள் மற்றும் முன்பணங்கள் என்பன அடங்கும்.

   வருவாய், மூலதன ஆகிய இரண்டு வகை வரவுகளும் மாநிலத்தின் தொகுநிதியின் பகுதிகள் ஆகும்.

3. **பொது கணக்கு நிகர வரவுகள்:** சிறு சேமிப்பு, வருங்கால வைப்பு நிதி, சேமநலநிதிகள், வைப்புத் தொகைகள், அனாமத்து, செலுத்துகைகள், போன்றவை தொடர்பான, தொகுநிதியின் பகுதிகளாக சேராத சில வரவு மற்றும் செலவு இனங்கள் உள்ளன.

இவை, அரசியலமைப்பு சட்டத்தின் பிரிவு 266 (2)ன் கீழ் அமைக்கப்பட்ட பொது கணக்கின் கீழ் வைக்கப்படும்; இவை மாநில சட்டமன்றத்தின் ஒப்புதலுக்கு உட்பட்டவை அல்ல. இவ்வினங்களில் அரசு ஒரு வங்கியாளர் போன்று செயல்படும். இக்கணக்கின் கீழ் வழங்கப்பட்டது போக மீதமுள்ள தொகை அரசின் பயன்பாட்டுக்கு கிடைக்கும்.

**விளக்கப்படம் 2.1: நிதி வரும் மற்றும் செல்லும் வழிகள்**




*(ஆதாரம்: நிதி கணக்குகள்)*

### 2.3.1 மாநிலத்தின் வரவுகள்

வருவாய் மற்றும் மூலதனம் ஆகிய இரு வகைகளை சார்ந்த வரவுகளே மாநில அரசின் நிதி ஆதாரங்களாக உள்ளன. இவை தவிர, பொது கணக்கில் உள்ள நிதியை (செலவு போக உள்ள நிகர தொகை) அரசு தன் நிதி பற்றாக்குறையை சமன் செய்ய பயன்படுத்துகிறது.

**2021-22 ஆண்டில் மாநிலத்தின் வரவுகளின் கூறுகள்**




** பொருட்கள் மற்றும் சேவைவரி இழப்பீட்டிற்கு மாற்றாக மாநிலத்திற்கு கடன் வரவுகளின் கீழ் கடனாக வழங்கப்பட்ட ₹ 8,095.25 கோடியை, நிதிக் குழு பரிந்துரைத்தவாறு, நிதி குறியீடுகளுக்கு கடனாக கருதப்படக்கூடாது என மத்திய அரசின் செலவுத் துறை முடிவு செய்திருப்பதால், மத்திய அரசின் கடன்கள் மற்றும் முன்பணங்கள் ₹ 5,547 கோடியாக இருக்கும். இதன் விளைவாக பொது கடன் வரவுகள் ₹96,390 கோடியாக இருக்கும்.*

2021-22 ஆண்டில் மாநில அரசிடம் இருந்த மொத்த நிதி ஆதாரம் ₹ 3,31,732 கோடி ஆகும். இதில், வருவாய் வகை வரவினம் ₹ 2,07,492 கோடி (மொத்த நிதி ஆதாரத்தில் 62.55 விழுக்காடு) ஆகும். மூலதன வகை வரவுகள் (₹ 1,09,840 கோடி) மற்றும் பொது கணக்கு நிகர வரவுகள் (₹ 14,400 கோடி) ஆகியன மொத்த நிதி ஆதாரத்தின் முறையே 33.11 விழுக்காடு மற்றும் 4.34 விழுக்காடாக இருந்தன.

### 2.3.2 மாநிலத்தின் வருவாய் வகை வரவுகள்

அரசின் வருவாய் வகை வரவுகளை நிதி கணக்குகளின் விவர அறிக்கை 14 விளக்குகிறது. வருவாய் வகை வரவுகளில், மாநிலத்தின் சொந்த வரிகள் மற்றும் வரியல்லாத வருவாய்கள், இந்திய அரசிடமிருந்து மத்திய வரி மாற்றங்கள் மற்றும் உதவி மானியங்கள் என்பன அடங்கும்.

### 2.3.2.1 வருவாய் வகை வரவுகளின் போக்கும் வளர்ச்சியும்

வருவாய் வகை வரவுகளின் கூறுகள், ஐந்து ஆண்டு காலத்தில் அதன் போக்குகள், வளர்ச்சி, GSDP தொடர்பாக அதன் மேலோங்கு விகிதம் ஆகியன **அட்டவணை 2.4**ல் தரப்பட்டுள்ளன.

**அட்டவணை 2.4: வருவாய் வகை வரவுகளின் போக்கு**

| அளவுருக்கள் | 2017-18 | 2018-19 | 2019-20 | 2020-21 | 2021-22 |
|---|---|---|---|---|---|
| வருவாய் வகை வரவுகள் (₹ கோடியில்) | 1,46,280 | 1,73,741 | 1,74,526 | 1,74,076 | 2,07,492 |
| வருவாய் வகை வரவுகளின் வளர்ச்சி விகிதம் (விழுக்காடு) | *4.31* | *18.77* | *0.45* | (-) *0.26* | *19.20* |
| சொந்த வரி வருவாய் (₹ கோடியில்) | 93,737 | 1,05,534 | 1,07,462 | 1,06,153 | 1,22,866 |
| வரியல்லாத வருவாய் (₹ கோடியில்) | 10,764 | 14,200 | 12,888 | 10,422 | 12,117 |
| சொந்த வருவாய் (சொந்த வரி மற்றும் வரியல்லாத வருவாய்) வளர்ச்சி விகிதம் (விழுக்காடு) | *9.02* | *14.58* | *0.51* | (-) *3.14* | 15.79 |
| GSDP (₹ கோடியில்) (2011-12 விகிதங்கள்) | 14,65,051 | 16,30,209 | 17,43,144 | 18,08,239 | 20,65,436 |
| GSDP வளர்ச்சி விகிதம் (விழுக்காடு) | *12.47* | *11.27* | *6.93* | *3.73* | *14.22* |
| வருவாய் வகை வரவுகள் / GSDP (விழுக்காடு) | *9.98* | *10.66* | *10.01* | *9.63* | *10.05* |
| **மேலோங்கு விகிதங்கள்[2]** | | | | | |
| GSDP தொடர்பாக வருவாய் மேலோங்கு விகிதம் | 0.35 | 1.67 | 0.06 | (-) 0.07 | 1.35 |
| GSDP தொடர்பாக மாநிலத்தின் சொந்த வருவாய் மேலோங்கு விகிதம் | 0.72 | 1.29 | 0.07 | (-) 0.84 | 1.11 |

*(தற்போதைய விலைவிகிதங்களின்படியான GSDP பற்றிய தகவலுக்கான ஆதாரம்: பொருளாதாரம் மற்றும் புள்ளியியல் துறை, மத்திய புள்ளியியல் அலுவலகம்)*

- மாநிலத்தின் வருவாய் வகை வரவுகள் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 19.20 விழுக்காடு (₹ 33,416 கோடி) அளவிற்கு உயர்ந்தது. ஆயினும், நடப்பாண்டில் பெறப்பட்ட ₹ 4,139 கோடி கடந்த ஆண்டுகளுக்குரியதாகும். 2020-21ம் ஆண்டில் வருவாய் வகை வரவுகளில் 2017-18ம் ஆண்டில் விடுவிக்கப்பட்ட சரக்கு மற்றும் சேவை வரி இழப்பீடான ₹ 4,321 கோடி உள்ளடங்கியுள்ளது. இந்த தொகைகளை தவிர்த்து பார்த்தால் உள்ளபடியான வருவாய் வகை வரவினங்களின் வளர்ச்சி 19.79 விழுக்காடாக இருக்கும்.

- வருவாய் வகை செலவினம் 7.46 விழுக்காடு உயர்ந்தது. கடந்த ஆண்டில் எதிர்மறை வளர்ச்சி வீதமாக 0.26 விழுக்காடாக இருந்த வருவாய் வகை வரவினங்கள் 2021-22ல் 19.20 விழுக்காடு ஆண்டு வளர்ச்சி வீதம் இருந்தது.
- GSDP தொடர்பான வருவாய் மேலோங்கு விகிதம் கடந்த ஆண்டில் (-) 0.07 என்பதிலிருந்து நடப்பாண்டில் 1.35 என்ற அளவிற்கு உயர்ந்தது.

---

[2] மேலோங்கு விகிதம் என்பது, அடிப்படை மாறுபாட்டு காரணி மாறும் அளவின் காரணமாக நிதி மாறுபாடு காரணி மாறுவதன் நெகிழ்தன்மை அல்லது அளவை குறிக்கும். எடுத்துக்காட்டாக, GSDP தொடர்பான வருவாய் மேலோங்கு விகிதம் 1.85 என்பது, GSDP ஒரு விழுக்காடு உயர்ந்தால் வருவாய் வகை வரவு 1.85 விழுக்காட்டு புள்ளிகள் உயர்வதை குறிக்கும்.

விளக்கப்படம் 2.2: வருவாய் வகை வரவுகளின் போக்கு




(ஆதாரம்: உரிய ஆண்டிற்கான நிதி கணக்குகள்)

வருவாய் வகை வரவின கூறுகளின் போக்குகள் **விளக்கப்படம் 2.3**ல் கொடுக்கப்பட்டுள்ளது.

விளக்கப்படம் 2.3: வருவாய் வகை வரவின கூறுகளின் போக்குகள்




(ஆதாரம்: உரிய ஆண்டிற்கான நிதி கணக்குகள்)

### 2.3.2.2 மாநிலத்தின் சொந்த நிதி ஆதாரங்கள்

மாநிலத்தின் சொந்த நிதி ஆதாரங்களில் அதன் சொந்த வரி மற்றும் வரியல்லாத வருவாய் என்பன அடங்கும்; அவை பின்வரும் பத்திகளில் விளக்கப்பட்டுள்ளன.

#### சொந்த வரி வருவாய்

மாநிலத்தின் சொந்த வரி வருவாயில், மாநில GST, மாநில ஆயத்தீர்வை, வாகன வரி, முத்திரைத்தாள் கட்டணம் மற்றும் பதிவு கட்டணம், நில வரி, சரக்குகள் மற்றும் பயணிகள் மீதான வரிகள் போன்றவை அடங்கும். சொந்த வரி வருவாயின் வளர்ச்சி வீதம் **விளக்கப்படம் 2.4**ல் கொடுக்கப்பட்டுள்ளது.

**விளக்கப்படம் 2.4: 2017-2022 ஆண்டுகளில் சொந்த வரி வருவாயின் வளர்ச்சி**




*(ஆதாரம்: உரிய ஆண்டிற்கான நிதி கணக்குகள்)*

#### மாநிலத்தின் சொந்த வரி வருவாயின் கூறுகள்

பெரும் வரிகள் மற்றும் தீர்வைகள் மூலமான வருவாய் குறித்த விவரங்கள் **அட்டவணை 2.5**ல் தரப்பட்டுள்ளன.

**அட்டவணை 2.5: மாநிலத்தின் சொந்த வரி வருவாயின் கூறுகள்**

*(₹ கோடியில்)*

| வருவாய் தலைப்புகள் | 2017-18 | 2018-19 | 2019-20 | 2020-21 | 2021-22 | பொறி கோடுகள் |
|---|---|---|---|---|---|---|
| மாநில சரக்கு மற்றும் சேவை வரி | 24,589 | 38,533 | 38,376 | 37,942 | 45,277 | |
| விற்பனை, வணிகம், ஏனையவற்றின் மீதான வரிகள் | 46,356 | 42,701 | 44,515 | 43,489 | 48,668 | |
| மாநில ஆயத்தீர்வை | 5,815 | 6,863 | 7,206 | 7,822 | 8,237 | |
| வாகனங்கள் மீதான வரி | 5,363 | 5,573 | 5,675 | 4,561 | 5,627 | |
| முத்திரைத்தாள் மற்றும் பத்திரபதிவு கட்டணங்கள் | 9,195 | 11,066 | 10,856 | 11,675 | 14,331 | |
| நில வருவாய் | 152 | 178 | 258 | 211 | 205 | |
| சரக்கு மற்றும் பயணிகள் மீதான வரி | 900 | 3 | 11 | 2 | 12 | |
| இதர வரிகள் | 1,367 | 617 | 565 | 451 | 509 | |
| **மொத்தம்** | **93,737** | **1,05,534** | **1,07,462** | **1,06,153** | **1,22,866** | |
| **முந்தைய ஆண்டைவிட வளர்ச்சி வீதம் (விழுக்காட்டில்)** | **(9.07)** | **(12.59)** | **(1.83)** | **((-) 1.22)** | **(15.74)** | |

*(ஆதாரம்: உரிய ஆண்டிற்கான நிதி கணக்குகள்)*

- 2020-21ல் எதிர்மறையாக (-) 1.22 விழுக்காடு என்றிருந்த சொந்த வரி வருவாயின் ஆண்டு வளர்ச்சி விகிதம், 2021-22ல் கணிசமாக உயர்ந்து 15.74 விழுக்காடாக இருந்தது.
- 2021-22ல் சொந்த வரி வருவாய் மாநிலத்தின் GSDPல் 5.95 விழுக்காடு என்ற அளவில் இருந்தது; இத்துடன் ஒப்பிடுகையில், அண்டை மாநிலங்களான கர்நாடகா மற்றும் கேரளாவில் அது முறையே 7.01 விழுக்காடு மற்றும் 6.47 விழுக்காடு ஆக இருந்தது.
- மாநில சரக்கு மற்றும் சேவை வரி (19.33 விழுக்காடு), விற்பனை, வணிகம், ஏனையவற்றின் மீதான வரிகள் (11.91 விழுக்காடு), வாகனங்கள் மீதான வரி (23.38 விழுக்காடு) மற்றும் முத்திரைத்தாள் மற்றும் பத்திரபதிவு கட்டணங்கள் (22.75 விழுக்காடு) ஆகியவற்றில் கணிசமான உயர்வு இருந்தது.

### மாநில சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (SGST)

GST (மாநிலங்களுக்கான இழப்பீடு) சட்டம் 2017ன்படி, சரக்குகள் மற்றும் சேவைகள் வரியை அமல்படுத்துவதன் காரணமாக வருவாயில் ஏற்படும் இழப்பிற்கு, ஆண்டுக்கு 14 விழுக்காடு வளர்ச்சி என்ற கணக்கில், அடிப்படை ஆண்டு முதல் ஐந்து ஆண்டுகளுக்கு மாநிலங்களுக்கு இழப்பீடு வழங்கப்படும். மாநிலங்களுக்கிடையே சரக்குகள் மற்றும் சேவைகள் வழங்கப்படுவதன் மீது மத்திய அரசு ஒருங்கிணைந்த GST (IGST) விதித்து, அவை நுகரப்படும் மாநிலத்திற்கு அவ்வரியில் உரிய பங்கை பிரித்தளிக்கிறது.

தமிழ்நாடு அரசு GST சட்டத்தை 1 ஜூலை 2017 முதல் அமல்படுத்தி வருகிறது. GST (மாநிலங்களுக்கான இழப்பீடு) சட்டம் 2017ன்படி, GST முறையை அமல்படுத்துவதால் ஏற்படும் இழப்பை மத்திய அரசு ஐந்து ஆண்டுகளுக்கு மாநிலங்களுக்கு ஈடு செய்யும். மாநிலத்திற்கு அளிக்கப்பட வேண்டிய இழப்பீடு, ஒவ்வொரு ஆண்டிற்கும் இந்திய தணிக்கைத் துறைத் தலைவர் தணிக்கை செய்தபடியான இறுதி வருவாய் இலக்கங்கள் கிடைக்கப்பெற்ற பின் கணக்கிடப்பட வேண்டும். GSTக்குள் அடக்கப்பட்ட அடிப்படை ஆண்டிற்குரிய (2015-16) வருவாய் தொகை GST சட்டத்தின் கீழ் இறுதி செய்யப்பட்டது. தமிழ்நாட்டில், அடிப்படை ஆண்டில் (2015-16) வரிகள் மூலம் ஈட்டப்பட்டு GSTக்குள் உட்படுத்தப்பட்ட வருவாய் ₹ 29,786.36 கோடி ஆகும். ஒரு ஆண்டிற்கான உறுதி அளிக்கப்பட வேண்டிய வருவாய் தொகை ஆண்டொன்றுக்கு 14 விழுக்காடு வளர்ச்சி என்ற விகிதித்தில் கணக்கிடப்பட வேண்டும்.

அடிப்படை ஆண்டுக்குரிய இலக்கத்தின்படி 2021-22 ஆண்டிற்கான கணக்கிடப்பட்ட வருவாய் ₹ 65,380.24 கோடி (₹ 29,786.36 கோடி x 1.14 x 1.14 x 1.14 x 1.14 x 1.14 x 1.14) ஆகும். நிதி கணக்குகளில் 2021-22 ஆண்டிற்கான GST வருவாய் இலக்கம் வரவின் தன்மைக்கேற்ப, மாநில GST (SGST) மற்றும் IGSTன் உள்ளீட்டு வரி வரவு, IGSTன் பகிர்ந்தளிப்பு - SGSTன் உள்மாற்றம் செய்யப்பட்ட வரி கூறுகள் மற்றும் IGSTன் முன்கூட்டிய பகிர்ந்தளிப்பு - என காட்டப்பட்டுள்ளது. GSTன் கீழ் 2021-22 ஆண்டுக்கான எதிர்பார்க்கப்பட்ட வருவாய் மற்றும் உள்ளபடியான வருவாய் பற்றிய விவரங்கள் **அட்டவணை 2.6**ல் தரப்பட்டுள்ளன.

**அட்டவணை 2.6: GST சட்டத்தை அமல்படுத்தியபின் எதிர்பார்க்கப்பட்ட மற்றும் உள்ளபடியான வருவாய்**

*(₹ கோடியில்)*

| காலம் | எதிர்பார்க்கப் பட்ட வருவாய் * | வசூலிக்கப்பட்ட மொத்த வரிகள் | இழப்பீடு | இழப்பீடு உள்ளிட்ட மொத்தம் |
|---|---|---|---|---|
| ஏப்ரல் 2021 முதல் மார்ச் 2022 வரை | 65,380.24 | 45,276.49 | 7,235.80 | 52,512.29 |

** 14 விழுக்காடு வளர்ச்சி விகிதத்தின் அடிப்படையில் எதிர்பார்க்கப்பட்டது*
*(இலக்கங்கள் மீள வழங்கப்பட்ட தொகைகள் நீங்கலாக, தமிழ்நாடு அரசு கணக்கிட்டபடி)*

மேற்படி அட்டவணையில் கண்டவாறு, 2021-22ல் ₹ 65,380.24 கோடி வருவாய் எதிர்பார்க்கப்பட்டதற்கு எதிராக, புதிய வரிவிதிப்பு முறையில் ₹ 52,512.29 கோடி பெறப்பட்டது; மேலும், கடன் வரவுகளின் கீழ் ₹ 8,095.25 கோடி கடனை மாநிலம், மத்திய அரசிடமிருந்து பெற்றது.

2021-22ல் GSTயை நடைமுறைப்படுத்தியதால் ஏற்படும் இழப்பிற்காக ₹ 15,331.05 கோடியை தமிழக அரசு பெற்றது. இதில், மாநில அரசால் ₹ 7,235.80 கோடி வருவாய் வகை வரவுகளின் கீழ் மானியமாக பெறப்பட்டது. ஆயினும், 2021-22ல் GST இழப்பீடு நிதியில் போதுமான இருப்பு இல்லாததால், மாநில அரசு கூடுதலாக ₹ 8,095.25 கோடியை மாநில அரசின் கடன் வரவுகளின் கீழ் கடனாக பெற்றது. இக்கடன் மாநில அரசின் வளஆதாரங்களிலிருந்து திரும்ப செலுத்தப்படாது மற்றும் GST இழப்பீடு நிதியில் சேரும் மேல்வரியிலிருந்து திரும்ப செலுத்தப்படும். இந்த ஏற்பாடு காரணமாக, நடப்பாண்டில் நேர்ந்த வருவாய் பற்றாக்குறையான ₹ 46,538 கோடி மற்றும் நிதிப் பற்றாக்குறையான ₹ 81,835 கோடியை GST இழப்பீட்டு நிதியாக கடனாக பெற்ற ₹ 8,095.25 கோடியுடன் சேர்த்து பார்க்க வேண்டும்.

மேலும், GSTல் உள்ளடங்காத CST, VAT மற்றும் விற்பனை வரிகளின் கீழுள்ள சில கூறுகள், பொழுதுபோக்கு வரி, பந்தய வரி, நுழைவு வரி, கரும்பு மீதான மேல்வரி, மருந்து ஒப்பனை தயாரிப்புக்கான ஆயத்தீர்வை போன்றவை இழப்பீடு கணக்கிட்டிற்காக GST வருவாயுடன் சேர்த்துக்கொள்ளப்படும்.

### *வரியல்லாத வருவாய்*

வட்டி வரவுகள், பங்கு ஆதாயம் மற்றும் இலாபங்கள், சுரங்கம் மற்றும் பிற துறை வரவுகள் போன்றவை வரியல்லாத வருவாய் ஆகும். அவற்றின் விவரங்கள் **அட்டவணை 2.7**ல் தரப்பட்டுள்ளன.

அட்டவணை 2.7: மாநிலத்தின் வரியல்லாத வருவாயின் கூறுகள்

*(₹ கோடியில்)*

| வருவாய் தலைப்புகள் | 2017-18 | 2018-19 | 2019-20 | 2020-21 | 2021-22 | பொறி கோடுகள் |
|---|---|---|---|---|---|---|
| **வட்டி வரவுகள்** | **5,199** | **6,875** | **4,356** | **3,524** | **3,918** | |
| **பங்கு ஆதாயம் மற்றும் இலாபம்** | **159** | **156** | **192** | **205** | **272** | |
| **இதர வரியல்லாத வருவாய்கள்** | **5,406** | **7,169** | **8,340** | **6,693** | **7,927** | |
| a) பெரிய மற்றும் சிறிய பாசன திட்டங்கள் | 31 | 45 | 48 | 60 | 66 | |
| b) சாலைகள் மற்றும் மேம்பாலங்கள் | 125 | 143 | 83 | 181 | 118 | |
| c) நகர்ப்புற மேம்பாடு | 514 | 1,016 | 781 | 829 | 743 | |
| d) கல்வி | 1,153 | 1,592 | 1,793 | 1,650 | 1,065 | |
| e) இரும்புதாரா சுரங்கங்கள் | 1,146 | 1,057 | 1,150 | 765 | 1,005 | |
| f) ஏனையவை | 2,437 | 3,316 | 4,485 | 3,208 | 4,930 | |
| **மொத்தம்** | **10,764** | **14,200** | **12,888** | **10,422** | **12,117** | |
| மாநிலத்தின் சொந்த வள ஆதாரங்களில் வரியல்லாத வரி வருவாயின் பங்கு | *10.30* | *11.86* | *10.71* | *8.94* | *8.98* | |

*(ஆதாரம்: உரிய ஆண்டிற்கான நிதி கணக்குகள்)*

- 2021-22ல் மாநிலத்தின் வரியல்லாத வருவாய், முந்தைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ₹ 1,695 கோடி (16.26 விழுக்காடு) குறைந்தது. மாநிலத்தின் சொந்த வருவாயின் பங்கு என்ற வகையில், 2020-21ல் 8.94 விழுக்காடு என்ற அளவில் இருந்த வரியல்லாத வருவாய் 2021-22ல் 8.98 விழுக்காடு ஆக உயர்ந்தது.

### *2.3.2.3 மத்திய அரசிடமிருந்து நிதி மாற்றம்*

2012-2022 என்ற பத்தாண்டு காலத்தில் மத்திய அரசிடமிருந்தான நிதி மாற்றங்களின் போக்கு கீழே **விளக்கப்படம் 2.5**ல் தரப்பட்டுள்ளது:

விளக்கப்படம் 2.5: மத்திய அரசிடமிருந்தான நிதி மாற்றத்தின் போக்கு




*(ஆதாரம்: உரிய ஆண்டிற்கான நிதி கணக்குகள்)*

நடப்பாண்டில் மத்திய வரிகளில் பங்கு ₹ 12,534 கோடி (37.35 விழுக்காடு) கணிசமாக உயர்ந்தது. 1996-97 முதல் 2017-18 வரையிலான காலகட்டத்தில் குறைவாக பகிரப்பட்ட மத்திய அரசின் பங்கான ₹ 3,224.59 கோடி ரூபாய் 2021-22ல் பகிரப்பட்ட மத்திய அரசின் பங்குகளில் உள்ளடங்கியுள்ளது.

மத்திய அரசின் வரிகள் மற்றும் தீர்வைகளில் மாநிலத்தின் பங்கு, மத்திய அரசு வரி மாற்றத்தின் கூறுகள் மற்றும் இந்திய அரசின் உதவி மானியங்கள் குறித்த விவரங்கள் **அட்டவணைகள் 2.8** முதல் **2.10** வரையில் தரப்பட்டுள்ளன.

**அட்டவணை 2.8: மத்திய அரசின் வரிகள் மற்றும் தீர்வைகளில் மாநிலத்தின் பங்கு - நிதி குழுவின் பரிந்துரையின்படியான தொகை மற்றும் உள்ளபடியாக மாற்றப்பட்ட தொகை**

*(₹ கோடியில்)*

| ஆண்டு | நிதி குழுவின் பரிந்துரை | நிதி குழுவின் பரிந்துரையின்-படியான தொகை* | உள்ளபடியாக மாற்றப்பட்ட தொகை | வேறுபாடு |
|---|---|---|---|---|
| **1** | **2** | **3** | **4** | **5 (4-3)** |
| 2010-11 | சேவை வரி தவிர்த்து அனைத்து பகிரக்கூடிய வரிகளின் நிகர வசூல் தொகையில் 4.969 விழுக்காடு மற்றும் பகிரக்கூடிய சேவை வரியின் நிகர வசூல் தொகையில் 5.047 விழுக்காடு (13வது நிதிக் குழு (TFC) பரிந்துரையின்படி) | 10,132 | 10,914 | 782 |
| 2011-12 | | 11,884 | 12,715 | 831 |
| 2012-13 | | 14,017 | 14,520 | 503 |
| 2013-14 | | 16,534 | 15,853 | (-) 681 |
| 2014-15 | | 19,503 | 16,824 | (-) 2,679 |
| 2010-15 | | **72,070** | **70,826** | (-) 1,244 |
| 2015-16 | சேவை வரி தவிர்த்து அனைத்து பகிரக்கூடிய வரிகளின் நிகர வசூல் தொகையில் 4.023 விழுக்காடு மற்றும் பகிரக்கூடிய சேவை வரியின் நிகர வசூல் தொகையில் 4.104 விழுக்காடு (14வது நிதிக் குழு (XIV FC) பரிந்துரையின்படி) மற்றும் அனைத்து பகிரக்கூடிய வரிகளின் நிகர வசூல் தொகையில் 4.189 விழுக்காடு (XV (நிதிக் குழு பரிந்துரையின்படி) | 23,389 | 20,354 | (-) 3,035 |
| 2016-17 | | 26,992 | 24,538 | (-) 2,454 |
| 2017-18 | | 31,189 | 27,100 | (-) 4,089 |
| 2018-19 | | 36,084 | 30,639 | (-) 5,445 |
| 2019-20 | | 41,796 | 26,393 | (-) 15,403 |
| 2020-21 | | 39,848 | 24,925 | (-) 10,898 |
| **2015-21** | | **1,99,298** | **1,53,949** | **(-) 45,349** |
| **2021-22** | அனைத்து பகிரக்கூடிய வரிகளின் நிகர வசூல் தொகையில் 4.079 விழுக்காடு | **26,864** | **37,458*** | **10,594** |

** நிதி குழுவின் பரிந்துரைகள்*

*1996-97 முதல் 2017-18 வரையிலான காலகட்டத்தில் குறைவாக பகிரப்பட்ட மத்திய அரசின் பங்கான ₹3,224.59 கோடி 2021-22ல் பகிரப்பட்ட மத்திய அரசின் பங்குகளில் உள்ளடங்கியுள்ளது.*

*(ஆதாரம்: நிதித் துறையால் வழங்கப்பட்ட விவரங்கள்)*

### *மத்திய அரசு வரிகள்/தீர்வைகளில் பங்கு*

**அட்டவணை 2.9: மத்திய வரிகள் மாற்றத்தின் கூறுகள்**

*(₹ கோடியில்)*

| தலைப்பு | 2017-18 | 2018-19 | 2019-20 | 2020-21 | 2021-22 |
|---|---|---|---|---|---|
| மத்திய GST (CGST) | 382.92 | 7,561.77 | 7,489.35 | 7,406.64 | 10,308.10 |
| IGST | 2,735.56 | 603.50 | -- | -- | -- |
| நிறுவன வரி | 8,298.06 | 10,654.53 | 8,998.76 | 7,520.26 | 10,912.73 |
| நிறுவன வரி தவிர்த்து வருமானம் மீதான வரிகள் | 7,007.12 | 7,846.62 | 7,051.14 | 7,709.82 | 10,911.33 |
| சுங்க வரி | 2,734.70 | 2,171.71 | 1,672.92 | 1,324.08 | 2,920.27 |
| மத்திய ஆயத்தீர்வை | 2,858.60 | 1,443.22 | 1,163.13 | 837.75 | 1,753.77 |
| சேவை வரி | 3,082.99 | 282.27 | 0.00 | 108.04 | 609.98 |
| ஏனைய வரிகள்* | (-) 0.25 | 75.15 | 17.11 | 17.92 | 42.44 |
| **மொத்த மத்திய வரி மாற்றங்கள்** | **27,099.70** | **30,638.77** | **26,392.41** | **24,924.51** | **37,458.62** |
| முந்தைய ஆண்டைவிட கூடுதல் (விழுக்காடு) | *10.44* | *13.06* | *(-) 13.86* | *(-) 5.56* | *50.29* |
| வருவாய் வகை வரவுகள் | 1,46,280 | 1,73,741 | 1,74,526 | 1,74,076 | 2,07,492 |
| வருவாய் வகை வரவுகளில் மத்திய வரிகள் மாற்றத்தின் விழுக்காடு | *18.53* | *17.63* | *15.12* | *14.32* | *18.05* |

* *செல்வத்தின் மீது* வரிகள், வரவு மற்றும் செலவு மீதான பிற வரிகள், பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான பிற வரிகள் மற்றும் தீர்வைகள் ஆகியவற்றை உள்ளடக்கியது

*(ஆதாரம்: உரிய ஆண்டிற்கான நிதி கணக்குகள்)*

- 2021-22ல் மத்திய வரிகள் மற்றும் தீர்வைகளில் மாநிலத்தின் பங்காக உள்ளபடி மாற்றம் செய்யப்பட்ட தொகை 15வது நிதி குழு கணக்கிட்ட தொகையைவிட ₹ 10,595 கோடி கூடுதலாக இருந்தது; இதற்கு, 1996-97 முதல் 2017-18 வரையிலான காலகட்டத்தில் குறைவாக பகிரப்பட்ட மத்திய அரசின் பங்கான ₹ 3,224.59 கோடி ரூபாயை விடுவித்ததே முக்கிய காரணமாகும்.
- நிகர வசூல் தொகையில் (மத்திய அரசு வரிகள்) மாநில அரசின் பங்கின் வளர்ச்சி விகிதம் 2021-22ல் 50.29 விழுக்காடு என்ற அளவில் கணிசமாக உயர்ந்தது. இதன் விளைவாக, வருவாய் வகை வரவுகள் அதிகரித்து நிதி குறியீடுகளில் நேர்மறை தாக்கத்தை ஏற்படுத்தியது.
- எல்லா கூறுகளின் வளர்ச்சி வீதமும் உயர்ந்து இருந்து, நடப்பாண்டில் வருவாய் வரவுகள் 19.20 விழுக்காடு உயர்வதற்கு கணிசமாக பங்களித்தது.

## *இந்திய அரசின் உதவி மானியங்கள்*

**அட்டவணை 2.10: இந்திய அரசின் உதவி மானியங்கள்**

*(₹ கோடியில்)*

| தலைப்பு | 2017-18 | 2018-19 | 2019-20 | 2020-21 | 2021-22 |
|---|---|---|---|---|---|
| திட்டம் சாரா மானியங்கள்* | -- | -- | -- | -- | -- |
| மாநில திட்டங்களுக்கான மானியங்கள்* | -- | -- | (-) 71.80 | -- | -- |
| மத்திய அரசு திட்டங்களுக்கான மானியங்கள்* | -- | (-) 0.01 | -- | -- | -- |
| மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களுக்கான மானியங்கள்* | -- | (-) 1.23 | (-) 0.10 | -- | -- |
| சிறப்பு திட்டங்களுக்கான மானியங்கள் | -- | -- | -- | -- | -- |
| மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களுக்கான மானியங்கள் | 10,982.97 | 14,820.26 | 12,463.85 | 12,483.68 | 17,250.57 |
| நிதி குழு மானியங்கள் | 1,951.04 | 3,705.46 | 5,905.69 | 8,643.46 | 9,550.41 |
| மாநிலங்கள்/ சட்டமன்றம் உள்ள யூனியன் பிரதேசத்திற்கும் பிற நிதி மாற்றங்கள்/ மானியங்கள் | 1,745.43 | 4,843.73 | 9,485.73 | 11,449.84 | 8,250.00$ |
| **மொத்தம்** | **14,679.44** | **23,368.21** | **27,783.37** | **32,576.98** | **35,050.98** |
| முந்தைய ஆண்டைவிட கூடுதல் (விழுக்காடு) | *(-) 26.00* | *59.19* | *18.89* | *17.25* | *7.59* |
| வருவாய் வகை வரவுகளில் மானியத்தின் விழுக்காடு | *10.04* | *13.45* | *15.92* | *18.71* | *16.89* |

** திட்டம் மற்றும் திட்டம் சாரா மானியங்களின் பெயர்கள் 2017-18 ஆண்டு முதல் நீக்கப்பட்டு, மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களுக்கான மானியங்கள், நிதி குழு மானியங்கள் மற்றும் மாநிலங்களுக்கான பிற மானியங்கள் என மாற்றுப்பெயர்கள் சூட்டப்பட்டதால், அவற்றுக்கான இலக்கங்கள் இல்லை.*

*$ GST அமல்படுத்தியதால் ஏற்பட்ட வருவாய் இழப்பிற்கான ஈடு ₹ 7,236 கோடி தொகையும் சேர்ந்தது*

*(ஆதாரம்: உரிய ஆண்டிற்கான நிதி கணக்குகள்)*

- உதவி மானியம் முந்தைய ஆண்டைவிட ₹ 2,474 கோடி (7.59 விழுக்காடு) உயர்ந்தது.

- வருவாய் வகை வரவுகளில் விழுக்காடு என்ற வகையில் 2020-21ல் 18.71 அளவில் இருந்த உதவி மானியங்கள் 2021-22ல் 16.89 விழுக்காடு அளவிற்கு குறைந்தது; இந்த குறைவிற்கு 'வருவாய் பற்றாக்குறை மானியம் - அதிகார பகிர்வு'-ன் கீழ் ₹ 1,015 கோடி குறைவாக பெறப்பட்டதே முக்கிய காரணமாகும்.

### பதிநான்காவது/பதினைந்தாவது நிதி குழு மானியங்கள்

15வது நிதிக்குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் 2021-22ல் இந்திய அரசு மாநிலத்திற்கு மாற்றம் செய்த நிதி பற்றிய விவரங்கள் **அட்டவணை 2.11**ல் தரப்பட்டுள்ளன.

**அட்டவணை 2.11:** பரிந்துரைக்கப்பட்ட, உள்ளபடி விடுவிக்கப்பட்ட மற்றும் மாற்றப்பட்ட தொகைகள்

*(₹ கோடியில்)*

| மாற்றம் | 15வது நிதி குழு பரிந்துரைத்த தொகை 2021-22 | உள்ளபடி விடுவித்தது 2021-22 | பற்றாக்குறை 2021-22 |
|---|---|---|---|
| **(i)** ஊராட்சி அமைப்புகளுக்கான மானியங்கள் | 2,666.00 | 2,666.00 | இல்லை |
| **(ii)** நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான மானியங்கள் | 1313.00 | 1313.00 | இல்லை |
| **உள்ளாட்சி அமைப்புகளுக்கான மொத்தம்** | **3,979.00** | **3,979.00** | இல்லை |
| மாநில பேரிடர் நிவாரண நிதி* | 1,360.00 | 1,360.00* | இல்லை |
| பெரு மொத்தம் | **5,339.00** | **5,339.00** | இல்லை |

*(ஆதாரம்: மாநில நிதி துறையிடமிருந்து பெறப்பட்ட தகவல்கள்)* * ₹ 272 கோடி 2022-23ல் விடுவிக்கப்பட்டது

## 2.3.3 மூலதன வகை வரவுகள்

மூலதன வகை வரவுகள் என்பதில், முதலீடு நீக்கம் போன்ற பல்வகை மூலதன வகை வரவுகள், கடன்கள் மற்றும் முன்பணங்கள் மீளப்பெறுதல், உள்நாட்டு ஆதாரங்களிலிருந்து கடன் வரவுகள் (சந்தை கடன்கள், நிதி நிறுவனங்கள்/வணிக வங்கிகளிடமிருந்து பெறப்படும் கடன்கள்), இந்திய அரசிடமிருந்து பெறப்படும் கடன்கள் மற்றும் முன்பணங்கள் என்பன அடங்கும்.

**அட்டவணை 2.12:** மூலதன வகை வரவுகளின் வளர்ச்சி மற்றும் ஆக்கக்கூறுகளின் போக்கு

| மாநிலத்தின் நிதி வரவுகளின் ஆதாரங்கள் | 2017-18 | 2018-19 | 2019-20 | 2020-21 | 2021-22 |
|---|---|---|---|---|---|
| மூலதன வகை வரவுகள் *(₹ கோடியில்)* | **54,196.15** | **54,849.65** | **72,158.31** | **1,08,112.22** | **1,09,839.77** |
| பல்வகை மூலதன வரவுகள் | 2.24 | -- | -- | -- | 0.01 |
| கடன்கள் மற்றும் முன்பணங்கள் மீளப்பெறுதல் | 8,472.35 | 6,913.43 | 5,384.01 | 5,245.25 | 5,354.77 |
| பொது கடன் வரவுகள் *(₹ கோடியில்)* | **45,721.56** | **47,936.22** | **66,774.30** | **1,02,866.97** | **1,04,484.99** |
| *உள்நாட்டு கடன் (₹ கோடியில்)* | 42,968.86 | 45,596.47 | 64,784.61 | 91,997.03 | 90,842.61 |
| *வளர்ச்சி விகிதம் (விழுக்காடு)* | *(-) 33.16* | *6.12* | *42.08* | *42.00* | *(-) 1.25* |
| இந்திய அரசிடமிருந்து கடன்கள் மற்றும் முன்பணங்கள் *(₹ கோடியில்)* | 2,752.70 | 2,339.75 | 1,989.69 | 10,869.94 | 13,642.38* |
| *வளர்ச்சி விகிதம் (விழுக்காடு)* | *48.02* | *(-) 15.00* | *(-) 14.96* | *446.31* | *25.51* |
| கடன் வகை மூலதன வரவுகளின் வளர்ச்சி விகிதம் *(விழுக்காடு)* | (-) *30.87* | *4.84* | *39.30* | *54.05* | *1.57* |
| கடன் வகையல்லாத மூலதன வரவுகளின் வளர்ச்சி விகிதம் *(விழுக்காடு)* | 138.80 | (-) 18.42 | (-) 22.12 | (-) 2.58 | 2.09 |
| GSDP வளர்ச்சி விகிதம் *(விழுக்காடு)* | *12.47* | *11.27* | *6.93* | *3.73* | *14.22* |
| மூலதன வகை வரவுகளின் வளர்ச்சி விகிதம் (விழுக்காடு) | *(-) 22.23* | *1.21* | *31.56* | *49.83* | *1.60* |

*(ஆதாரம்: உரிய ஆண்டிற்கான நிதி கணக்குகள்)*

** நிதிக் குழுவின் பரிந்துரைப்படி, பொருட்கள் மற்றும் சேவைவரி இழப்பீட்டிற்கு மாற்றாக மாநிலத்திற்கு கடன் வரவுகளின் கீழ் கடனாக வழங்கப்பட்ட ₹8,095.25 கோடியை, நிதி குறியீடுகளுக்கு கடனாக கருதப்படக்கூடாது என மத்திய அரசின் செலவுத் துறை முடிவு செய்திருப்பதால், மத்திய அரசிடமிருந்து பெற்ற கடன்கள் மற்றும் முன்பணங்கள் ₹ 5,547.13 கோடியாக இருக்கும்.*

விளக்கப்படம் 2.6: மூலதன வரவுகளின் வளர்ச்சி




*(ஆதாரம்: உரிய ஆண்டிற்கான நிதி கணக்குகள்)*

- 2021-22ல் கடன்கள் மற்றும் முன்பணங்கள் மீள பெறப்பட்டதில், TANGEDCOக்கு அளிக்கப்பட்டிருந்த ₹ 4,563 கோடி கடனை UDAY திட்டத்தின் கீழான உதவி மானியமாக மாற்றம் செய்யப்பட்டதும் அடங்கும்.

- பொது கடன் வரவுகள் 2020-21ல் ₹ 1,02,867 கோடி என்பதிலிருந்து 2021-22ல் ₹ 1,04,485 கோடி[3] ஆக உயர்ந்தது; உள்நாட்டு கடனின் கீழ் சந்தை கடன்களில் ₹ 977 குறைவு இருந்தது.

### 2.3.4 நிதி திரட்டுவதில் மாநிலத்தின் செயல்பாடு

நிதி திரட்டுவதில் மாநிலத்தின் செயல்பாடு, சொந்த வரிகள் மற்றும் வரியல்லாத வருவாய் என்பவை அடங்கிய தனது சொந்த நிதி ஆதாரங்களின் கணக்கில் மதிப்பிடப்படுகிறது.

#### வரி மற்றும் வரியல்லாதவை - மதிப்பீடு மற்றும் உள்ளபடியான வரவுகள்

மாநிலத்தின் 2017-22 காலகட்டத்திற்கான சொந்த வரி மற்றும் வரியல்லாத வருவாய் வரவுகள் குறித்து நிதி குழு மற்றும் மாநில வரவு - செலவு திட்டம் ஆகியவற்றின் மதிப்பீடுகளும் உள்ளபடியான வரவுகளும் **விளக்கப்படம் 2.7**ல் தரப்பட்டுள்ளன.

---

[3] நிதிக் குழுவின் பரிந்துரைப்படி, பொருட்கள் மற்றும் சேவைவரி இழப்பீட்டிற்கு மாற்றாக மாநிலத்திற்கு கடன் வரவுகளின் கீழ் கடனாக வழங்கப்பட்ட ₹ 8,095.25 கோடியை, நிதி குறியீடுகளுக்கு கடனாக கருதப்படக்கூடாது என மத்திய அரசின் செலவுத் துறை முடிவு செய்திருப்பதால், பொது கடன் வரவுகள் *₹ 96,389.74 கோடியாக இருக்கும்.*

**விளக்கப்படம் 2.7: வரி மற்றும் வரியல்லாதவை - எதிர்பார்க்கப்பட்டதும் ஈட்டப்பட்டதும்**




(*ஆதாரம்:* நிதிக்குழு பரிந்துரைகள், வரவு செலவுத் திட்ட உரை மற்றும் நிதிக் கணக்குகள்)

2021-22ல் மாநிலத்தின் சொந்த வரி வருவாய் மற்றும் வரியல்லாத வருவாய் 15வது நிதிக்குழு மற்றும் வரவு செலவு திட்ட மதிப்பீடுகளைவிட குறைவாக இருந்தது;

## 2.4 நிதியை செலவிடுதல்

மாநில அரசு, நிதிவகை பொறுப்புடைமை தொடர்பான சட்டங்களுக்கு உட்பட்டு செலவுகளை மேற்கொள்ளும் கடமையை உடையது; அதே நேரம், நிகழ்ந்து வரும் நிதி சீரமைப்பு மற்றும் தொகுத்தல் பணியால் மூலதன உள்கட்டமைப்பு மற்றும் சமூக பிரிவின் வளர்ச்சிக்கான செலவு குறையாது என்பதையும் அரசு உறுதி செய்ய வேண்டும். இப்பத்தியும் அதன் துணை பத்திகளும் மாநிலத்தில் செலவின ஒதுக்கீடு மீதான பகுப்பாய்வின் முடிவுகளை அளிக்கின்றன.

### 2.4.1 செலவின் வளர்ச்சி மற்றும் கூறுகள்

மொத்த செலவு, அதன் கூறுகள், பல்வேறு பிரிவுகளின் பங்கு, போக்குகள் போன்றவற்றின் விவரங்கள் **அட்டவணைகள் 2.13** மற்றும் **2.14** மற்றும் **விளக்கப்படங்கள் 2.8** முதல் **2.10** ஆகியவற்றில் தரப்பட்டுள்ளன.

**அட்டவணை 2.13: மொத்த செலவு மற்றும் அதன் கூறுகள்**

(₹ கோடியில்)

| அளவுருக்கள் | 2017-18 | 2018-19 | 2019-20 | 2020-21 | 2021-22 |
|---|---|---|---|---|---|
| மொத்த செலவு | 1,94,593.86 | 2,27,989.47 | 2,40,088.56 | 2,73,304.66 | 2,94,681.72 |
| வருவாய் வகை செலவு | 1,67,873.63 | 1,97,200.60 | 2,10,434.73 | 2,36,402.18 | 2,54,030.42 |
| மூலதன வகை செலவு | 20,203.20 | 24,310.84 | 25,631.58 | 33,067.65 | 37,010.78 |
| கடன்கள் மற்றும் முன்பணங்கள் | 6,517.03 | 6,478.03 | 4,022.25 | 3,834.83 | 3,640.52 |
| **GSDPல் விழுக்காடு** | | | | | |
| மொத்த செலவு/GSDP | *13.28* | *13.99* | *13.77* | *15.11* | *14.27* |
| வருவாய் வகை செலவு/GSDP | *11.46* | *12.10* | *12.07* | *13.07* | *12.30* |
| மூலதன வகை செலவு/GSDP | *1.38* | *1.49* | *1.47* | *1.83* | *1.79* |
| கடன்கள் மற்றும் முன்பணங்கள்/GSDP | *0.44* | *0.40* | *0.23* | *0.21* | *0.18* |

*(ஆதாரம்: உரிய ஆண்டிற்கான நிதி கணக்குகள்)*

**அட்டவணை 2.14: செலவில் பல்வேறு பிரிவுகளின் பங்கு**

*(விழுக்காடு)*

| அளவுருக்கள் | 2017-18 | 2018-19 | 2019-20 | 2020-21 | 2021-22 |
|---|---|---|---|---|---|
| பொது பணிகள்* | 31.50 | 32.15 | 32.99 | 29.25 | 29.07 |
| சமூக பணிகள்* | 33.16 | 33.86 | 33.26 | 36.82 | 35.20 |
| பொருளாதார பணிகள்* | 26.10 | 24.62 | 25.54 | 26.75 | 27.88 |
| ஏனையவை (உள்ளாட்சி அமைப்புகளுக்கான மானியங்கள் மற்றும் கடன்கள் மற்றும் முன்பணங்கள்) | 9.24 | 9.37 | 8.21 | 7.18 | 7.85 |

(* இப்பணிகளின் கீழ் வருவாய் வகை மற்றும் மூலதன வகை செலவுகளின் மொத்தம்)

**விளக்கப்படம் 2.8: மொத்த செலவு : அதன் கூறுகளுடைய பங்கின் போக்கு**




*(ஆதாரம்: உரிய ஆண்டிற்கான நிதி கணக்குகள்)*

விளக்கப்படம் 2.9: மொத்த செலவு: - செயல்பாடுகள்வாரியான செலவு




*(ஆதாரம்: உரிய ஆண்டிற்கான நிதி கணக்குகள்)*

விளக்கப்படம் 2.10: செலவின் கூறுகள்




*(ஆதாரம்: நிதி கணக்குகள்)*

- 2021-22ல் செய்யப்பட்ட ₹ 2,94,682 கோடி மொத்த செலவில், வருவாய் வகை செலவு (₹ 2,54,030 கோடி), மூலதன வகை செலவு (₹ 37,011 கோடி) மற்றும் கடன்கள் மற்றும் முன்பணங்கள் (₹ 3,641 கோடி) முறையே 86.20 விழுக்காடு, 12.56 விழுக்காடு மற்றும் 1.24 விழுக்காடாக இருந்தன.

### 2.4.2 வருவாய் வகை செலவு

வருவாய் வகை செலவானது பணிகளை தற்போதைய அளவில் தொடந்து மேற்கொள்ளவும் கடந்த கால பொறுப்புகளுக்கான தொகைகளை செலுத்தவும் செய்யப்படுகிறது. எனவே, அதன் விளைவாக மாநிலத்தின் உள்கட்டமைப்பு மற்றும் பணிகளில் எந்த ஏற்றமும் ஏற்படுவதில்லை.

2017-22 காலகட்டத்தில் வருவாய் வகை செலவு மொத்த செலவில் சராசரியாக 86.62 விழுக்காடாக (2017-18ல் 86.27 விழுக்காடு முதல் 2021-22ல் 86.20 விழுக்காடு வரை) இருந்தது. அதன் வளர்ச்சி விகிதம் ஏற்றத்தாழ்வுகளுடன் 2017-22 காலகட்டத்தில் 6.71 விழுக்காடு முதல் 17.47 விழுக்காடு வரை இருந்து, 2021-22ல் 7.46 விழுக்காடானது. வருவாய் வகை செலவு, அதன் வளர்ச்சி விகிதம், மொத்த செலவில் அதன் விகிதம், GSDP மற்றும் வருவாய் வகை வரவு தொடர்பாக அதன் மேலோங்கு விகிதம் ஆகியன **அட்டவணை 2.15** மற்றும் வருவாய் வகை செலவின் பிரிவுவாரியான பகிர்மானம் பற்றிய விவரங்கள் **விளக்கப்படம் 2.11** ஆகியவற்றில் தரப்பட்டுள்ளன.

**அட்டவணை 2.15: வருவாய் வகை செலவு - அடிப்படை அளவுருக்கள்**

| அளவுருக்கள் | 2017-18 | 2018-19 | 2019-20 | 2020-21 | 2021-22 |
|---|---|---|---|---|---|
| மொத்த செலவு *(₹ கோடியில்)* | 1,94,593.86 | 2,27,989.47 | 2,40,088.56 | 2,73,304.66 | 2,94,681.72 |
| வருவாய் வகை செலவு *(₹ கோடியில்)* | 1,67,874.00 | 1,97,200.60 | 2,10,434.73 | 2,36,402.18 | 2,54,030.42 |
| வருவாய் வகை செலவின் வளர்ச்சி விகிதம் (விழுக்காடு) | *9.58* | *17.47* | *6.71* | *12.34* | *7.46* |
| மொத்த செலவில் வருவாய் வகை செலவின் விழுக்காடு | 86.27 | 86.50 | 87.65 | 86.50 | 86.20 |
| வருவாய் வகை செலவு/GSDP (*விழுக்காடு*) | *11.46* | *12.10* | *12.07* | *13.07* | *12.30* |
| வருவாய் வகை வரவில் வருவாய் வகை செலவின் விழுக்காடு | *114.76* | *113.50* | *120.58* | *135.80* | *122.43* |
| **வருவாய் வகை செலவின் மேலோங்கு விகிதம்** | | | | | |
| GSDP தொடர்பாக (விகிதம்) | 0.77 | 1.55 | 0.97 | 3.31 | 0.52 |
| வருவாய் வகை வரவு தொடர்பாக (விகிதம்) | 2.22 | 0.93 | 14.91 | (-) 47.46 | 0.39 |

*(ஆதாரம்: உரிய ஆண்டிற்கான நிதி கணக்குகள்)*

**விளக்கப்படம் 2.11: வருவாய் வகை செலவின் பிரிவுவாரியான பகிர்மானம்**

**(விழுக்காட்டில்)**




*(ஆதாரம்: நிதி கணக்குகள்)*

- 2021-22ல், வருவாய் வகை செலவு முந்தைய ஆண்டைவிட ₹ 17,628.24 கோடி (7.46 விழுக்காடு) அளவு உயர்ந்தது. இந்த உயர்வு கடந்தாண்டில் 12.34 விழுக்காடு ஆகும். இந்தாண்டு உயர்வுக்கு, நடப்பாண்டில் கூட்டுறவில் (பெருந்தலைப்பு 2425) ₹ 5,368.55 கோடியும், வட்டி செலுத்தங்களில் (பெருந்தலைப்பு 2049) ₹ 5,067.18 கோடியும் உயர்வு ஏற்பட்டதே முக்கிய காரணமாகும். 2020-21ல் GSDPல் 13.07 விழுக்காடாக இருந்த வருவாய் வகை செலவினம் 2021-22ல் 12.30 விழுக்காடாக உயர்ந்தது.
- உள்ளபடியான வருவாய் வகை செலவு MTFPல் மதிப்பிடப்பட்டதைவிட ₹ 13,919 கோடி (5.19 விழுக்காடு) குறைவாக இருந்தது.

### *2.4.2.1 வருவாய் வகை செலவில் முக்கிய மாற்றங்கள்*

மாநிலத்தின் வருவாய் வகை செலவில் பல்வேறு கணக்கு தலைப்புகளின் கீழ் நடப்பாண்டிற்கும் முந்தைய ஆண்டிற்கும் இடையே இருந்த கணிசமான வேறுபாடுகளை **அட்டவணை 2.16** காட்டுகிறது.

**அட்டவணை 2.16: 2020-21 மற்றும் 2021-22 ஆண்டுகளிடையே வருவாய் வகை செலவில் இருந்த வேறுபாடு**

(₹ கோடியில்)

| பெருந் தலைப்பு | விவரம் | 2021-22 | 2020-21 | கூடுதல் / குறைவு (-) |
|---|---|---|---|---|
| 2425 | கூட்டுறவு | 7,321.13 | 1,952.58 | 5,368.55 |
| 2049 | வட்டி செலுத்தங்கள் | 41,564.10 | 36,496.92 | 5,067.18 |
| 3604 | உள்ளாட்சி மன்றங்களுக்கும் ஊராட்சி நிறுவனங்களுக்குமான இழப்பீடுகளும், ஒதுக்கீடுகளும் | 19,489.46 | 15,795.85 | 3,693.61 |
| 2505 | ஊரக வேலைவாய்ப்பு | 4,916.01 | 2,244.26 | 2,671.75 |
| 2235 | சமூக பாதுகாப்பு மற்றும் நலன் | 10,634.84 | 9,100.82 | 1,534.02 |
| 2210 | மருத்துவமும் பொது சுகாதாரமும் | 12,609.73 | 11,184.85 | 1,424.88 |
| 2401 | பயிர் வளர்ப்பு | 10,092.71 | 9,152.47 | 940.24 |
| 3055 | பயிர் வளர்ப்பு | 1,046.82 | 298.17 | 748.65 |
| 2055 | காவல் | 8,043.55 | 7,456.51 | 587.04 |
| 2015 | தேர்தல் | 865.77 | 358.50 | 507.27 |
| 2515 | பிற ஊரக மேம்பாட்டுத் திட்டங்கள் | 1,423.39 | 916.54 | 506.85 |
| 2071 | ஓய்வூதியமும் பிற ஓய்வூதிய பலன்களும் | 26,249.95 | 27,115.07 | (-) 865.12 |
| 2216 | வீட்டு வசதி | 4,119.47 | 5,244.71 | (-) 1,125.24 |
| 2225 | ஆதி திராவிடர், பழங்குடியினர், இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் | 2,997.13 | 4,231.33 | (-) 1,234.20 |
| 2801 | மின் சக்தி | 15,140.10 | 16,475.11 | (-) 1,335.01 |
| 2245 | இயற்கை சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு | 9,704.44 | 12,021.70 | (-) 2,317.26 |

*(ஆதாரம்: நிதி கணக்குகள்)*

- வருவாய் வகை செலவினம் முக்கியமாக, கோவிட்-19 என்ற இயற்கை சீற்ற துயர் தணிப்புக்காக செலவு செய்யப்பட்டது. நடப்பாண்டில், கோவிட்-19 சம்பந்தமான துயர் தணிப்புக்காக மத்திய அரசிடமிருந்து ₹ 505.24 கோடி பெறப்பட்டது மற்றும் 2071, 2075, 2210, 2211, 2235 மற்றும் 2245 என்ற பெருந்தலைப்புகளின் கீழ் ₹ 9,584.11 கோடி செலவு செய்யப்பட்டது. '2245-80-800-AJ – கோவிட்-19 காரணமாக ஊரடங்கை சமாளிக்க வாழ்வாதார ஆதரவு - அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு பணஉதவி' (₹ 8,392.76 கோடி) மற்றும் '2245-80-800-AH' – கோவிட் 19 பேரழிவை கட்டுப்படுத்துதல்/தடுப்பு நடவடிக்கைகளுக்கு தயாராயிருத்தல்' (₹ 830.57 கோடி) **(இணைப்பு 2.2)** என்ற தலைப்புகளின் கீழ் ₹ 9,223.33 கோடி செலவு செய்யப்பட்டது மற்றும்
- உள்நாட்டு கடன் மீதான அதிக வட்டி கொடுப்புகள் காரணமாக, வட்டி செலுத்தங்கள் 14 விழுக்காடு உயர்ந்தது. 2020-21ல் உள்நாட்டு கடன்களின் திருப்பிச் செலுத்துகைகள் 10 விழுக்காடு குறைந்திருந்து, 2021-22ல் 24 விழுக்காடு என்ற அளவில் கணிசமாக உயர்ந்தது.

### *2.4.2.2 தவிர்க்கவியலாத செலவு*

மாநில அரசின் தவிர்க்கவியலாத வருவாய் வகை செலவில், வட்டி செலுத்தங்கள், சம்பளங்கள் மற்றும் ஊதியங்கள் மற்றும் ஓய்வூதியங்கள் என்பன அடங்கும். அரசின்

நிதியிலிருந்து செய்யப்படும் செலவில் இது முன்னுரிமை பெறுகிறது. தவிர்க்கவியலாத செலவின் உயர்வால், வளர்ச்சி பணிகளுக்கு செலவு செய்ய அரசுக்கு குறைந்த நிதியையே விட்டு வைக்கும்.

**அட்டவணை 2.17: தவிர்க்கவியலாத செலவின் கூறுகள்**

*(₹ கோடியில்)*

| தவிர்க்கவியலாத செலவின் கூறுகள் | 2017-18 | 2018-19 | 2019-20 | 2020-21 | 2021-22 |
|---|---|---|---|---|---|
| சம்பளங்கள் மற்றும் ஊதியங்கள் | 37,140 | 43,394 | 47,447 | 47,333 | 50,293 |
| ஊதிய மானியங்கள் | 6,819 | 7,792 | 8,190 | 8,027 | 8,416 |
| ஓய்வூதியங்கள் | 21,132 | 27,993 | 28,577 | 26,204 | 25,662 |
| வட்டி செலுத்தங்கள் | 26,012 | 28,757 | 31,980 | 36,497 | 41,564 |
| **மொத்தம்** | **91,103** | **1,07,936** | **1,16,194** | **1,18,061** | **125,935** |
| வருவாய் வகை வரவுகளில் விழுக்காடு கணக்கில் | | | | | |
| சம்பளங்கள் மற்றும் ஊதியங்கள் | *25.39* | *24.98* | *27.19* | *27.19* | *24.24* |
| ஊதிய மானியங்கள் | *4.66* | *4.48* | *4.69* | *4.61* | *4.06* |
| ஓய்வூதியங்கள் | *14.45* | *16.11* | *16.37* | *15.05* | *12.37* |
| வட்டி செலுத்தங்கள் | *17.78* | *16.55* | *18.32* | *20.97* | *20.03* |
| **மொத்தம்** | ***62.28*** | ***62.12*** | ***66.57*** | ***67.82*** | ***60.70*** |
| வருவாய் வகை செலவில் விழுக்காடு கணக்கில் | | | | | |
| சம்பளங்கள் மற்றும் ஊதியங்கள் | *22.12* | *22.01* | *22.55* | *20.02* | *19.80* |
| ஊதிய மானியங்கள் | *4.06* | *3.95* | *3.89* | *3.40* | *3.31* |
| ஓய்வூதியங்கள் | *12.59* | *14.20* | *13.58* | *11.08* | *10.10* |
| வட்டி செலுத்தங்கள் | *15.49* | *14.58* | *15.20* | *15.44* | *16.36* |
| **மொத்தம்** | ***54.26*** | ***54.74*** | ***55.22*** | ***49.94*** | ***49.57*** |

*(ஆதாரம்: உரிய ஆண்டிற்கான நிதி கணக்குகள்)*

**விளக்கப்படம் 2.12: மொத்த வருவாய் வகை செலவில் தவிர்க்கவியலாத செலவின் பங்கு**




*(ஆதாரம்: உரிய ஆண்டிற்கான நிதி கணக்குகள்)*

- ஓய்வூதிய வயதை 60[4] ஆக உயர்த்தியதன் காரணமாக ஓய்திய செலவு ₹ 542 கோடி குறைந்திருந்த போதிலும், வட்டி கொடுப்பு உயர்வு ₹ 5,067 கோடி காரணமாக தவிர்க்கவியலாத செலவு (₹ 1,25,935 கோடி) ₹ 7,874 கோடியாக அதிகரித்தது.
- மொத்த வருவாய் வகை வரவினத்தில் (₹ 2,07,492 கோடி) வட்டி கொடுப்பிற்கான செலவுகள் 20.03 விழுக்காடாக இருந்தது. இது 2020-21ல் 20.97 விழுக்காடாக இருந்தது. 2020-21ல் வருவாய் வகை செலவினத்தில் வட்டி கொடுப்பிற்கான செலவுகள் 15.44 விழுக்காட்டிலிருந்து நடப்பாண்டில் 16.36 விழுக்காடாக உயர்ந்தது.

### *2.4.2.3 தேசிய ஓய்வூதிய திட்டத்தின் கீழ் தவிர்த்திருக்கக்கூடிய செலவினம்*

**தமிழ்நாடு அரசு தேசிய ஓய்வூதிய திட்டத்தில் சேராமல் மற்றும் நிதி மேலாளரை நியமிக்காமல், DCPS பங்களிப்பை தொடர்ந்து LIC மற்றும் கருவூல பத்திரங்களில் முதலீடு செய்து வந்தது. இதிலிருந்து வரும் ஆதாயம் முறையே 5.47 விழுக்காடு மற்றும் 4.29 விழுக்காடாகும். இந்த காலகட்டத்தில் வருங்கால வைப்பு நிதி (GPF)க்குரிய வட்டி விகிதத்திற்கு ஈடான 7.10 விழுக்காடு விகிதத்தில் சந்தாதாரர்களுக்கு மாநில அரசு வட்டி செலுத்தியது. LIC மற்றும் கருவூல பத்திரங்களில் பெறப்படும் ஆதாயம் குறைவாக இருப்பதால், இந்த வேறுபாட்டு தொகையை அரசே ஏற்கிறது. 2021-22ல், வேறுபாட்டு தொகையாக ₹ 670.36 கோடியை செலுத்தியது. இது முற்றிலும் தவிர்க்கக்கூடியது மற்றும் மாநில வருவாய் ஆதாரங்களில் சுமையை ஏற்படுத்துகிறது. மாநில அரசு தேசிய ஓய்வூதிய திட்டத்தில் சேர்ந்து நிதி மேலாளரை நியமித்திருந்தால், சந்தாதாரர்கள் தற்போது அரசு வழங்கும் GPF வட்டியான 7.10 விழுக்காடை விட கூடுதல் விழுக்காடு வட்டியை பெற்றிருந்திருப்பார்கள்.**

தமிழ்நாடு அரசு தனது பணியாளர்களுக்காக 'வரையறுக்கப்பட்ட பங்களிப்புடன்கூடிய ஓய்வூதிய திட்டம்' (DCPS)ஐ 1 ஏப்ரல் 2003 முதல் அமல்படுத்தியது. இத்திட்டம் 2003 அல்லது அதற்கு பின் மாநில அரசு பணியில் சேர்ந்தோர் அனைவருக்கும் பொருந்தும். இத்திட்டத்தின் கீழ், பணியாளர்கள் தமது அடிப்படை ஊதியம் மற்றும் அகவிலைப்படியில் 10 விழுக்காடு தொகையையும் மாநில அரசு அதற்கு சமமான தொகையையும் செலுத்துவர்; இவ்விரண்டு பங்களிப்புகளும் முதலில் பொது கணக்கிற்கு (பெருந்தலைப்பு '8342-117-வரையறுக்கப்பட்ட பங்களிப்புடன்கூடிய ஓய்வூதிய திட்டம்' (DCPS)) மாற்றப்படும்.

ஒவ்வொருவருக்குமான அரசு பணியாளர்[5] DCPS கணக்குகளை அரசு தகவல் மையம் பராமரிக்கிறது. அம்மையம் ஒவ்வொரு ஆண்டும் அறிவிக்கப்படும் விகிதங்களில் வட்டியை கணக்கிட்டு ஒவ்வொரு பணியாளரின் DCPS கணக்கிலும் வரவு வைக்கிறது.

31 மார்ச் 2003 அல்லது அதற்கு முன்போ பணியில் சேர்ந்த மாநில அரசு ஊழியர்களின் ஓய்வூதியம் மற்றும் பிற ஓய்வூதிய பலன்கள் மீதான

---

4 அரசு ஆணை எண் 29 நாள் 25 பிப்ரவரி 2021ன்படி

5 உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்களின் பணியாளர்களும் சேர்த்து.

நடப்பாண்டு செலவு ₹ 26,249.95 கோடி ஆகும். இது நடப்பாண்டின் மொத்த வருவாய் வகை செலவினமான ₹ 2,54,030.42 கோடி தொகையில் 10.33 விழுக்காடு ஆகும்.

தேசிய ஓய்வூதிய திட்டத்தின் கட்டமைப்பு உருவாக்கப்பட்டதும், ஓய்வூதிய நிதி ஒழுங்கு முறைமை மற்றும் மேம்பாட்டு அமைப்பு (PFRDA), தேசிய ஓய்வூதிய திட்டத்தில் சேருமாறு தமிழ்நாடு அரசிடம் கோரியது (2008 மற்றும் 2009). தமிழ்நாடு அரசு தேசிய ஓய்வூதிய திட்ட கட்டமைப்பில் சேர மறுத்தது (2010); ஓய்வூதிய நிதி தொகையை மாநிலத்தின் பொது கணக்கில் வைத்திருக்கும் தற்போதைய முறையையே தொடர்ந்து பின்பற்றுவதான தனது முடிவை நியாயப்படுத்தும் வகையில், நாடாளுமன்றம், PFRDA சட்டத்தை இயற்றாததை அது துவக்கத்தில் சுட்டிக்காட்டியது.

DCPS என்னும் புதிய ஓய்வூதிய திட்டம் துவக்கப்பட்டு 19 ஆண்டுகள் ஆன பின்னரும், மாநில அரசு தேசிய ஓய்வூதிய திட்டத்தில் சேரவில்லை மற்றும் ஒரு நிதி மேலாளரை அமர்த்தவில்லை. மாறாக, மார்ச் 31, 2022 வரையில் நிதியில் சேர்ந்திருந்த ₹ 53,462.93 கோடி தொகையில், ₹ 36,510.00 கோடி தொகை இந்திய ஆயுள் காப்பீட்டு நிறுவனத்தின் 'தொகை சேரும் திட்டத்துடன் கூடிய புதிய குழு ஓய்வு பெறும் திட்டம்' என்பதன் கீழ் முதலீடு செய்யப்பட்டது. தமிழ்நாடு அரசுக்கும், இந்திய ஆயுள் காப்பீட்டு நிறுவனத்திற்கும் (LIC) எந்தவித ஒப்பந்தமும்/புரிந்துணர்வு ஒப்பந்தமும் இல்லை என்பதும், இதனால் LICயின் சொந்த பாலிசியை அடிப்படையாக கொண்டு இந்த முதலீடுகளிலிருந்து வட்டி (5.47 விழுக்காடு) ஈட்டியதும் , அது அரசால் கணக்கு வைத்திருப்பவர்களுக்கு GPFக்கு நிகராக செலுத்தப்படும் 7.10 விழுக்காடு வட்டியை விட மிகவும் குறைவு என்பதும் எதிர்நோக்கப்பட்டது. மீதமுள்ள ₹ 16,952.93 கோடி தொகையில், 31 மார்ச் 2022 நிலையில் ₹ 11,803.19 கோடி அரசு கருவூல பட்டியல்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது.

LICல் செய்யப்பட்ட முதலீடுகளிலிருந்து பெறப்பட்ட வட்டியான ₹ 4,754.63 கோடி (2019-20ல் ₹ 1,128.65 கோடி, 2020-21ல் ₹ 1,630.48 கோடி மற்றும் 2021-22ல் ₹ 1,995.50 கோடி ), மாநில அரசால் கணக்களவில் சரிகட்டப்படாமலேயே, ஆயுள் காப்பீடு நிறுவனத்திலேயே மறுமுதலீடு செய்யப்பட்டது.

இவ்வாறாக, அரசு கணக்கின் பெருந்தலைப்பு 0049ன் கீழ் வரவு வைக்கப்பட வேண்டிய வட்டி வரவு வைக்கப்படவில்லை. இதனால் இந்த அளவுக்கு வருவாய் வகை வரவினங்கள் குறைத்துக் காட்டப்பட்டது.

2021-22ம் ஆண்டில், DCPSல் பணியாளர்கள் மற்றும் அரசு பங்களிப்புகள் முறையே ₹ 2,916.26 கோடி மற்றும் ₹ 2,870.08 கோடி ஆகும். நடப்பாண்டில், அரசால் பெருந்தலைப்பு 2049-வட்டி கொடுப்புகள் என்ற பெருந்தலைப்பின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டு ₹ 3,172.71 கோடி DCPS நிதியில் வரவு வைக்கப்பட்டது. 2017-18ல் ₹ 1,714.87 கோடியாக இருந்த DCPSக்கான வட்டி கொடுப்புகள் 2021-22ல் ₹ 3,172.71 கோடியாக உயர்ந்தது.

2021-22ம் ஆண்டில் DCPS நிதியை LICலும், அரசு கருவூல பத்திரங்களிலும் முதலீடு செய்து அதிலிருந்து அரசு வட்டியாக/சராசரி வருவாயாக முறையே 5.47 விழுக்காடு (₹ 1,995.50 கோடி) மற்றும் 4.29 விழுக்காடு (₹ 506.85 கோடி) ஈட்டியது. ஆயினும், இந்த காலகட்டத்தில் வருங்கால வைப்பு நிதி (GPF)க்குரிய வட்டி விகிதத்திற்கு ஈடான 7.10 விழுக்காடு விகிதத்தில் (₹ 3,172.71 கோடி) மாநில அரசு வட்டி செலுத்தியது.

மேலும், கடந்த ஐந்தாண்டுகளில் வட்டி சுமை 85 விழுக்காடு உயர்ந்தது மற்றும் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 16 விழுக்காடு உயர்வு இருந்தது. அங்கீகரிக்கப்பட்ட நிதி மேலாளர்களிடம் செய்யப்பட்ட முதலீடுகளிலிருந்து பெறப்பட்ட சராசரி வருமானம் 9.50 விழுக்காடு முதல் 9.91 விழுக்காடாக இருந்தது என்பது CAGன் தணிக்கை அறிக்கை 13-2020ல் (மத்திய அரசு) குறிப்பிடப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில், மாநில அரசு LICல் 5.47 விழுக்காடும் கருவூல பத்திரங்களில் 4.29 விழுக்காடு மட்டுமே வட்டியாக ஈட்டியது. சந்தாதாரர்களுக்கு 7.10 விழுக்காடு வட்டி கொடுக்கும் பொருட்டு, கூடுதல் சராசரி வட்டி வீதமான 2.22 விழுக்காட்டை தனது சொந்த ஆதாரங்களிலிருந்து எதிர்கொண்டது. இது அரசுக்கு தவிர்த்திருக்கக்கூடிய கூடுதல் செலவினமாகும். இதன் விளைவாக ₹ 670.36 கோடி[6] அளவுக்கு அரசுக்கு கூடுதல் சுமை ஏற்பட்டது. கடந்த ஆண்டில் தவிர்த்திருக்கக்கூடிய வட்டி பொறுப்பு ₹ 726.25 கோடியாகும். மாநில அரசு தேசிய ஓய்வூதிய திட்டத்தில் சேர்ந்திருந்தால், இந்த கூடுதல் சுமைகளை தவிர்த்திருக்க முடியும் மற்றும் சந்தாதாரர்களும் தற்போது அரசு வழங்கும் GPF வட்டியான 7.10 விழுக்காடை விட கூடுதல் விழுக்காடு வட்டியை பெற்றிருந்திருப்பார்கள்.

இவ்வாறாக, PFRDA சட்டப்படி தமிழ்நாடு அரசு தேசிய ஓய்வூதிய திட்டத்தில் சேராதது மற்றும் நிதி மேலாளரை நியமிக்கப்படாதது, தேசிய ஓய்வூதிய திட்ட தொடங்கப்பட்டதிலிருந்து தவிர்த்திருக்கக்கூடிய கூடுதல் செலவினம் ஏற்பட்டது. ஒவ்வொரு ஆண்டும் அதிகரித்து வரும் இந்த தவிர்த்திருக்கக்கூடிய நிதி சுமை மாநில வருவாய் வகை செலவினத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும்.

இதை சுட்டிக்காட்டிய போது, கூடுதல் தலைமைச் செயலாளர், பழைய ஓய்வூதிய திட்டத்தை தொடர்வது தொடர்பான கோரிக்கையை நிறைவேற்றும் பொருட்டு அதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து, அரசு தகுந்த முடிவெடுப்பதற்கு பரிந்துரைகளை வழங்குவதற்காக நிபுணர் குழு அமைக்கப்பட்டுள்ளதாகவும், அக்குழு தனது அறிக்கையை அரசு 27 நவம்பர் 2018ல் வழங்கியுள்ளதாகவும் அது அரசின் பரிசீலனையில் உள்ளதாகவும் தெரிவித்தார். மேலும் இறுதி கலந்தாய்வில் PFRDAன் கீழ் நிதி மேலாளர் மூலமாக நிதியை முதலீடு செய்வது தொடர்பாக அரசு எந்த விதமான கொள்கை முடிவும் எடுக்கவில்லை எனவும் தெரிவிததார்.

**இதே மாதிரியான காண்புரைகள் CAG அறிக்கை எண் 1 -2022ல் இடம் பெற்றுள்ளது. அதில், தவிர்த்திருக்கக்கூடிய வட்டி சுமை ₹ 726.25 கோடியாகும். அரசு தகுந்த திருத்த நடவடிக்கைகளை எடுக்கவில்லை.**

#### *2.4.2.4 மானியங்கள்*

மானியங்கள், நேரிடையாக வழங்கப்பட்டு, 'மானியங்கள்' (subsidies) என்ற தலைப்பின் கீழ் கணக்கு வைக்கப்படுவது மட்டுமன்றி, மக்களுக்கு சலுகையுடன் கூடிய பொது சேவைகளை அளிப்பதன் மூலம் மறைமுகமாகவும்[7] வழங்கப்படுகின்றன. 2017-22 காலகட்டத்தில் வருவாய் வகை வரவுகள் மற்றும் வருவாய் வகை செலவு ஆகியவற்றில் மானியங்களின் விழுக்காடு **அட்டவணை 2.18**ல் தரப்பட்டுள்ளது:

[6] ₹ 3,172.71 கோடி - ₹ 1,995.50 கோடி - ₹ 506.85 கோடி - ₹ 670.36 கோடி

[7] தொடர்புடைய பெருந்தலைப்பின் கீழ் '11 – மானியங்கள்' என்ற குறுந்தலைப்பின் கீழ் கணக்கு வைக்கப்படாத மானியங்கள் 'மறைமுகமான மானியங்கள்' ஆகும்.

**அட்டவணை 2.18: 2017-22 காலகட்டத்தில் மானியங்கள் மீதான செலவு**

| | 2017-18 | 2018-19 | 2019-20 | 2020-21 | 2021-22 |
|---|---|---|---|---|---|
| மானியங்கள் (₹ கோடியில்) | 15,230 | 18,922 | 20,144 | 25,110 | 21,689 |
| வருவாய் வகை வரவுகளில் மானியங்களின் விழுக்காடு | *10.41* | *10.89* | *11.54* | *14.42* | *10.45* |
| வருவாய் வகை செலவில் மானியங்களின் விழுக்காடு | *9.07* | *9.60* | *9.57* | *10.62* | *8.54* |

*(ஆதாரம்: உரிய ஆண்டிற்கான நிதி கணக்குகள்)*

மாநில அரசு 2017-22 காலகட்டத்தில் மானியம் வழங்கிய திட்டங்களின் பட்டியல் **அட்டவணை 2.19** மற்றும் **2.20**களில் தரப்பட்டுள்ளன.

**அட்டவணை 2.19: மாநில அரசு மானியம் வழங்கிய திட்டங்களின் பட்டியல்**

*(₹ கோடியில்)*

| திட்டத்தின் பெயர் | 2017-18 | 2018-19 | 2019-20 | 2020-21 | 2021-22 |
|---|---|---|---|---|---|
| சமூக பாதுகாப்பு - உணவு பாதுகாப்பு - பொது விநியோக திட்டத்திற்கான ஆதரவு | 6,000 | 7,989 | 8,363 | 9,604 | 9,324 |
| மின்சாரம் - பொது வகை நுகர்வோருக்கான கட்டண குறைப்பு காரணமாக TNEBக்கு அளிக்கப்பட்ட இழப்பீடு | 3,623 | 3,076 | 3,367 | 3,518 | 3,448 |
| தொழில் ஊக்குவிப்பின் பொருட்டு VAT மீள அளித்தல் | 1,600 | 2,000 | 2,560 | 1,290 | 1,559 |
| மாணவர்களுக்கான பேருந்து கட்டண சலுகை மீதான செலவை ஈடு கட்டுதல் | 541 | 764 | 1,275 | 3,430 | 1,289 |
| வறுமை கோட்டிற்கு கீழ் உள்ள மக்களுக்கு இலவச கைத்தறி துணிகள் வழங்குதல் | 484 | 468 | 484 | 479 | 488 |
| விசைத்தறி நெசவாளர்கள் சார்பில் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு தொகை செலுத்துதல் | 387 | 343 | 336 | 384 | 371 |
| வேளாண் இடுபொருட்களுக்காக விவசாயிகளுக்கு மானியம் | 81 | 1 | 183 | 1 | -- |
| பிற மானியங்கள் | 2,514 | 4,281 | 3,576 | 6,404 | 5,210 |
| **மொத்தம்** | **15,230** | **18,922** | **20,144** | **25,110** | **21,689** |

*(ஆதாரம்: உரிய ஆண்டிற்கான நிதி கணக்குகள்)*

**அட்டவணை 2.20 : 2017-22 கால கட்டத்தில் வழங்கப்பட்ட பெரிய அளவிலான மறைமுக மானியங்கள்**

| திட்டத்தின் பெயர் | செலவினம் (₹ *கோடியில்*) | | | | |
|---|---|---|---|---|---|
| | 2017-18 | 2018-19 | 2019-20 | 2020-21 | 2021-22 |
| இலவச மிக்ஸி, க்ரைண்டர் மற்றும் மின் விசிறி ஆகியவை வழங்குதல் | -- | -- | -- | 23 | -- |
| திருமண உதவித் திட்டம் - திருமாங்கல்யத்திற்கு நான்கு கிராம் தங்க நாணயம் வழங்குதல் | 718 | 739 | 709 | 832 | -- |
| பள்ளி மாணவ/மாணவியருக்கு இலவச சீருடை வழங்குதல் | 390 | 384 | 411 | 409 | 408 |
| அரசு மற்றும் அரசு உதவி பெறும் மேல்நிலை பள்ளிகளில் பயிலும் XI மற்றும் XII ஆம் வகுப்பு மாணவ / மாணவியருக்கு இலவச மிதிவண்டி வழங்குதல் | 16 | 382 | 230 | 221 | 2 |
| வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் மக்களுக்கு இலவச ஆடுகள் வழங்குதல் | 194 | 193 | 193 | 192 | -- |
| மாதவிடாய் சுகாதாரத் திட்டம் (வளரின சிறுமிகளுக்கு இலவச சானிட்டரி நாப்கின்கள் வழங்குதல்) | 46 | 46 | 46 | 55 | 115 |
| வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் ஒவ்வொரு குடும்பத்திற்கும் இலவச கறவை மாடுகள் வழங்குதல் | 48 | 47 | 47 | 51 | -- |

| திட்டத்தின் பெயர் | செலவினம் (₹ கோடியில்) | | | | |
|---|---|---|---|---|---|
| | 2017-18 | 2018-19 | 2019-20 | 2020-21 | 2021-22 |
| இலவச மடிக்கணினி வழங்குதல் | 641 | 144 | 1,372 | 17 | 482 |
| டாக்டர். முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு உதவி திட்டம் | 646 | 900 | 883 | 884 | 863 |
| முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்டம் | 1,734 | 1,363 | 935 | 985 | 1,046 |
| கோவிட்-19 காரணமாக ஊரடங்கை சமாளிக்க வாழ்வாதார ஆதரவு - அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு பண உதவி | -- | -- | -- | 7,903 | 8,393 |
| **மொத்தம்** | **4,433** | **4,198** | **4,826** | **11,572** | **11,309** |

*(ஆதாரம்: உரிய ஆண்டுக்கான விரிவான நிதி கணக்குகள்)*

மொத்த மானியங்கள் ₹ 36,682 கோடியிலிருந்து ₹ 32,998 கோடியாக (10.04 விழுக்காடு) குறைந்தது. நடப்பாண்டில், வெளிமுகமான மானியங்கள் 13.62 விழுக்காடு (₹ 3,421 கோடி) குறைந்தது. மத்திய அரசு உதவி திட்டத்தின் கீழ், முக்கியமாக, வேளாண் மற்றும் மீன்வள துறைகளில் நேர்ந்த ₹ 910 கோடி, ‘பிற மானியங்கள்’ (₹ 5,210 கோடி) என்ற தலைப்பின் கீழ் உள்ளடங்கியிருக்கிறது.

திருமண உதவி, மகப்பேறு உதவி, இலவச மடிக்கணினி போன்ற மறைமுக மானியங்கள், முந்தைய ஆண்டைவிட 2021-22ம் ஆண்டில் ₹ 263 கோடி அளவில் சிறிதளவு குறைந்தது. இச்செலவினம் மானியத்திற்கு பதிலாக மானிய உதவியாக தவறுதலாக வகைப்படுத்தப்பட்டது.

### *2.4.2.5 ‘சிறு தலைப்பு - 911’ன் கீழ் மிகையாக கொடுத்த தொகையை திருப்பி செலுத்துதல்*

கணக்கு கட்டுப்பாட்டு அலுவலரால் வெளியிடப்பட்ட 'மத்திய மற்றும் மாநிலங்களுக்கான பெரு மற்றும் சிறு தலைப்பு விவரங்கள்' (LMMH), பத்தி 3.10ன் படி, கடந்த வருடங்களில் நிகழ்ந்த மிகை கொடுப்புகளை திருப்பிச் செலுத்த, சம்பந்தப்பட்ட பெரும்/துணை-பெருந் தலைப்பின் கீழ் 'கழிக்க - மிகையாக கொடுத்த தொகையை திருப்பிச் செலுத்ததுல்' (எண் 911) என்ற தனி தலைப்பின் கீழ் பதிய வேண்டும். இது, நிதியொதுக்க கணக்குகளில் செயல்பாட்டு பெரு/துணை-பெருந் தலைப்பின் கீழுள்ள மொத்த செலவினம் பாதிக்கப்படாத வகையில் இருக்க வேண்டும்.

நடப்பாண்டில், கடந்த ஆண்டுகளில் செலவழிக்கப்படாத 591 கணக்குத் தலைப்புகளிலிருந்த ₹ 814.68 கோடியை ‘911-மிகையாக கொடுத்த தொகையை திருப்பி செலுத்துதல்’ என்ற தலைப்பின் கீழ் அரசு கணக்கில் திருப்பிச் செலுத்தப்பட்டது. இதில், முழுவதும் மத்திய அரசு ஆதரவளிக்கும் திட்டங்களான 24 திட்டங்களின் கீழ் ₹ 9.93 கோடியும், மத்திய மாநில அரசுகள் பொறுப்பேற்கும் திட்டங்களான 31 திட்டங்களின் கீழ் ₹ 25.46 கோடியும் அடங்கும். 591 திட்டங்களில், கடந்த ஆண்டுகளில் சம்பந்தப்பட்ட, ஒரு கோடிக்கும் மேலான செலுத்துகைகள், 55 திட்டங்களின் கீழ் திருப்பிச் செலுத்தப்பட்டது **(இணைப்பு 2.3)**. இதில், ‘விவசாயிகளின் பயிர்கடனுக்கான வட்டி குறைப்புக்காக கூட்டுறவு நிறுவனங்களுக்கு வட்டி மானியம்’ (₹ 187.81 கோடி), ‘குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாய கல்விச் சட்டம் 2009, பிரிவு 12(1)(c)ன் கீழ் பள்ளி கட்டணத்தை திரும்ப வழங்குதல் (₹ 104.88 கோடி) மற்றும் விளையாட்டு போட்டிகள் நடத்துவதற்காக தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்திற்கு வழங்கப்பட்ட மானியம் (₹ 90.40 கோடி) ஆகிய மூன்று திட்டங்களின் கீழ் நடந்த பெருமளவு செலுத்துகைகளும் உள்ளடங்கியுள்ளன.

விவசாயிகளின் பயிர்கடனுக்கான வட்டியை குறைப்புக்காக கூட்டுறவு நிறுவனங்களுக்கு வட்டி மானியம்' என்ற திட்டத்தின் கீழ் 2020-21லும் 911 என்ற சிறு தலைப்பின் கீழ் ₹ 137.80 கோடி அரசு கணக்கில் செலுத்தப்பட்டதும் தெரிய வந்தது

இது, பணம் எடுக்கப்பட்ட கணக்கு ஆண்டில், உள்ளபடியான செலவினம் கூட்டிக்காட்டப்பட்டதோடு மட்டுமல்லாமல், அந்த ஆண்டுகளில் வருவாய் வகை செலவினமும், வருவாய் பற்றாக்குறையும் அந்த அளவிற்கு கூடுதலாக காட்டப்பட்டுள்ளதை சுட்டிக்காட்டுகிறது. மேலும், இந்த திட்டங்களின் கீழ் தவறான செலவினமும் காட்டப்பட்டுள்ளன.

மேலும், உள்ளபடியான செலவின கணக்குத் தலைப்புகளை உறுதி செய்ய முடியாமல், கடந்த ஆண்டுகளில் செலவழிக்கப்படாத ₹ 287.44 கோடி 0070-60-800 என்ற கணக்குத் தலைப்பின் கீழ் பதியப்பட்டது. இதனையும் சேர்த்தால் நடப்பாண்டில் செலுத்துகைகள் ₹ 1,102.12 கோடியாக உயரும் மற்றும் வருவாய் வரவினங்களும் ₹ 287.44 கோடி அளவிற்கு குறைக்கப்பட வேண்டும்.

### *மாநில நிதிக் குழு*

இந்திய அரசியலமைப்பு சட்டப்பிரிவு 243-I மற்றும் 243-Y ஆகிய பிரிவுகளில் உள்ளபடி, அரசியலமைப்பு சட்டத் திருத்தப் பிரிவு 73 மற்றும் 74 தொடங்கப்பட்ட ஒரு ஆண்டுக்குள்ளும் அதன்பிறகு ஒவ்வொரு ஐந்து ஆண்டு முடிந்த பின்பும் மாநில அரசு நிதிக்குழுவை அமைப்பது கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது. உள்ளாட்சி அமைப்புகளின் நிதி நிலையை ஆராய்ந்து மேதகு ஆளுநரிடமும், மேதகு முதல்வரிடமும் அறிக்கை அளிக்க வேண்டும் என மாநில நிதிக்குழு கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது. மாநில அரசு ஐந்து மாநில நிதிக் குழுக்களை அமைத்தது மற்றும் அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை சட்டப்பேரவையில் முன்வைக்கப்பட்டது. மாநில நிதிக் குழு அமைக்கப்பட்ட விவரங்கள் பின்வருமாறு:

**அட்டவணை 2.21 : மாநில நிதிக் குழு அமைக்கப்பட்ட விவரங்கள்**

| | முதலாவது மாநில நிதிக் குழு | இரண்டாவது மாநில நிதிக் குழு | மூன்றாவது மாநில நிதிக் குழு | நான்காவது மாநில நிதிக் குழு | ஐந்தாவது மாநில நிதிக் குழு |
|---|---|---|---|---|---|
| **உருவாக்கப்பட்ட தேதி** | 23.4.1994 | 1.12.1999 | 1.12.2004 | 1.12.2009 | 1.12.2004 |
| **பரிந்துரை காலம்** | 1997-98 முதல் 2001-02 வரை | 2002-03 முதல் 2006-07 வரை | 2007-08 முதல் 2011-12 வரை | 2012-13 முதல் 2016-17 வரை | 2017-18 முதல் 2021-22 வரை |

*(ஆதாரம் : மாநில நிதிக்குழு அறிக்கை)*

ஐந்தாவது நிதிக்குழு அறிக்கை, மாநில ஐந்தாவது நிதிக்குழு பரிந்துரைகள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்த விளக்க குறிப்பாணையுடன் சட்டப்பேரவையில் முன்னிடப்பட்டது. மாநில நிதிக் குழுவால் வழங்கப்பட்ட பரிந்துரைகளின் எண்ணிக்கை மற்றும் அரசால் முழுமையாக/பகுதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட மற்றும் ஏற்றுக்கொள்ளப்படாத பரிந்துரைகளின் எண்ணிக்கை பற்றிய விவரங்கள் பின்வரும் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன.

அட்டவணை 2.22 : அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பரிந்துரைகளின் எண்ணிக்கை

| விளக்க குறிப்பு | ஐந்தாவது மாநில நிதிக் குழுவால் வழங்கப்பட்ட பரிந்துரைகளின் மொத்த எண்ணிக்கை | அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பரிந்துரைகளின் மொத்த எண்ணிக்கை | பகுதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட பரிந்துரைகளின் மொத்த எண்ணிக்கை | அரசால் ஏற்றுக்கொள்ளப் படாத பரிந்துரைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| நான்காவது நிதிக்குழு பரிந்துரைகளை செயல்படுத்துவதில் உள்ள நிலை | 4 | 4 | 0 | 0 |
| ஊராட்சி நிறுவனங்கள் | 51 | 49 | 2 | 0 |
| நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் | 106 | 91 | 8 | 7 |

*(ஆதாரம் : மாநில நிதிக்குழு அறிக்கை)*

### 2.4.3 மூலதன வகை செலவு

மூலதன வகை செலவு என்பது முக்கியமாக சாலைகள், கட்டடங்கள் போன்ற நிலையான சொத்துகளை உருவாக்குவதற்காக செய்யப்படும் செலவு ஆகும். மூலதன வகை செலவு வரவு-செலவு திட்ட ஒதுக்கீடு மற்றும் அதற்கு அப்பாற்பட்ட வகையிலான முறைகள் மூலம் செய்யப்படுகிறது. அண்மைக் காலங்களில் உள்கட்டமைப்பு தேவைகள் பன்மடங்கு கூடி, மூலதன வகை செலவின் பெரும்பகுதியை மேற்கொள்ள சிறப்பு நிறுவனங்கள் நிறுவப்பட்டுள்ளன.

இவ்வாண்டில் அரசு மூலதன வகையில் ₹ 37,011 கோடி செலவிட்டது; இது முந்தைய ஆண்டைவிட ₹ 3,943 கோடி (11.92 விழுக்காடு) கூடுதல் ஆகும். எனினும், மொத்த செலவுடன் ஒப்பிட்டால், இது முந்தைய ஆண்டைவிட 0.46 விழுக்காடு என்ற சிறிய அளவிலான உயர்வு ஆகும். 2017-22 காலகட்டத்தில் இருந்த மூலதன வகை செலவின் போக்கு **விளக்கப்படம் 2.13**ல் தரப்பட்டுள்ளது.

விளக்கப்படம் 2.13: மாநிலத்தில் மூலதன வகை செலவு




*(ஆதாரம்: உரிய ஆண்டிற்கான நிதி கணக்குகள்)*

### *2.4.3.1 மூலதன வகை செலவில் முக்கிய மாற்றங்கள்*

2020-21 ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2021-22ல் மூலதன வகை செலவில் இருந்த முக்கிய மாற்றங்கள் **அட்டவணை 2.23**ல் தரப்பட்டுள்ளன.

**அட்டவணை 2.24: மூலதன வகை செலவில் முக்கிய மாற்றங்கள்**

*(₹ கோடியில்)*

| பெருந்-தலைப்பு | விவரம் | 2021-22 | 2020-21 | கூடுதல் / குறைவு (-) |
|---|---|---|---|---|
| 4217 | நகர்ப்புற வளர்ச்சி தொடர்பான மூலதன வகை செலவு | 8,453.54 | 4,456.49 | 3,997.05 |
| 5053 | சிவில் விமான போக்குவரத்து குறித்த மூலதன வகை செலவு | 1,344.21 | 426.55 | 917.66 |
| 5054 | சாலைகள் மற்றும் மேம்பாலங்கள் குறித்த மூலதன வகை செலவு | 13,385.53 | 12,748.23 | 637.30 |
| 4801 | மின் திட்டங்கள் குறித்த மூலதன வகை செலவு | 442.39 | 0.00 | 442.39 |
| 4515 | ஊரக மேம்பாட்டுத் திட்டங்கள் குறித்த மூலதன வகை செலவு | 1,745.83 | 1,319.32 | 426.51 |
| 4215 | குடிநீர் வழங்கல் மற்றும் துப்புரவு குறித்த மூலதன வகை செலவு | 3,008.07 | 2,624.83 | 383.24 |
| 4210 | மருத்துவம் மற்றும் பொது சுகாதாரம் குறித்த மூலதன வகை செலவு | 2,300.78 | 2,293.87 | 6.91 |
| 4055 | காவல் குறித்த மூலதன வகை செலவு | 7.29 | 253.33 | (-) 246.04 |
| 5465 | பொது நிதி மற்றும் வியாபார நிறுவனங்களில் முதலீடு | 400.00 | 837.00 | (-) 437.00 |
| 4702 | சிறுபாசனம் குறித்த மூலதன வகை செலவு | 113.14 | 728.22 | (-) 615.08 |
| 4700 | பெரும்பாசன குறித்த மூலதன வகை செலவு | 2,131.46 | 3,405.42 | (-) 1,273.96 |

*(ஆதாரம்: உரிய ஆண்டிற்கான நிதி கணக்குகள்)*

முக்கியமாக, துணை பெருந் தலைப்பு 'மாநில மூலதன மேம்பாடு' கீழ் நடந்த செலவு (₹ 1,608 கோடி (217.03 விழுக்காடு உயர்வு)) மற்றும் 'இதர நகர்ப்புற மேம்பாட்டு திட்டங்கள்' கீழ் நடந்த செலவு - ₹ 4,731 கோடி (120.17 விழுக்காடு உயர்வு) காரணமாக 4217-நகர்ப்புற வளர்ச்சி தொடர்பான மூலதன வகை செலவில் உயர்வு இருந்தது. 5053- சிவில் விமான போக்குவரத்து குறித்த மூலதன வகை செலவு உயர்வுக்கு - ₹ 1,344 கோடி (215.13 விழுக்காடு உயர்வு) விமான நிலையம் அமைப்பதே முக்கிய காரணமாகும்.

### *2.4.3.2 மூலதன வகை செலவின் தரம்*

நிதி பொறுப்புடைமை மற்றும் வரவு செலவு திட்ட மேலாண்மை என்ற கட்டமைப்பில், மாநிலம், நிதி பற்றாக்குறையை குறைந்த அளவில் வைத்திருக்க வேண்டும் என்பதோடு மட்டுமல்லாமல் வருவாய் பற்றாக்குறையை அறவே அகற்ற வேண்டும் என்றும் மூலதன செலவினம்/முதலீடு (கடன்கள் மற்றும் முன்பணங்கள் உட்பட) ஆகியவற்றை தனது சொந்த வருவாய் ஆதாரங்களை கொண்டே செய்ய வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், மாநில அரசு தனது முதலீடுகளிலிருந்து போதிய ஆதாயங்களை பெறவும், மறைமுக மானியங்கள் என்ற வகையில் தனது வரவு - செலவு திட்டத்தில் சுமையை புகுத்தாமல் தான் வாங்கிய கடன்களை சரிக்கட்டவும் தேவையான நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டும். நடப்பாண்டில் அரசு மேற்கொண்ட முதலீடுகள் மற்றும் மூலதன வகை செலவின் மீதான பரந்த பகுப்பாய்வு முடிவுகளை அறிக்கையின் இப்பகுதி முந்தைய ஆண்டுகளின் நேர்வுகளுடன் ஒப்பிட்ட வகையில் தெரிவிக்கிறது.

### நிறுவனங்கள், கழகங்கள் மற்றும் பிற அமைப்புகளில் செய்யப்பட்ட முதலீடுகளின் தரம்

2021-22 நிதி கணக்குகளின்படி, மார்ச் 2022 நிலையில், மாநில அரசு ஒரு சட்டமுறை கழகம், 57 அரசு நிறுவனங்கள், இரண்டு கூட்டுப் பங்கு நிறுவனங்களிலும் மற்றும் பல்வேறு கூட்டுறவு அமைப்புகளிலும் ₹ 42,166.64 கோடி முதலீடு செய்திருந்தது.

அரசால் செய்யப்பட்ட முதலீடுகளின் விவரங்கள் கீழே உள்ள **அட்டவணை 2.24**ல் கொடுக்கப்பட்டுள்ளது:

**அட்டவணை 2.24: அரசால் செய்யப்பட்ட முதலீடுகள்**

| வரிசை எண் | விவரம் | நிறுவனங்களின் எண்ணிக்கை | ஆண்டு இறுதியில் முதலீடு (₹ கோடியில்) |
|---|---|---|---|
| 1 | தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவனம் | 1 | 3.81 |
| 2 | அரசு நிறுவனங்கள் | 57 | 41,674.83 |
| 3 | கூட்டு பங்கு நிறுவனங்கள் | 2 | 0.71 |
| 4 | கூட்டுறவு அமைப்புகள் | * | 487.29 |
| | **மொத்தம்** | **60*** | **42,166.64** |

* கூட்டுறவு நிறுவனங்களின் எண்ணிக்கை கிடைக்கப்பெறவில்லை

*(ஆதாரம்: நிதி கணக்குகள்)*

கடந்த ஐந்தாண்டு காலத்தில் (2017-18 முதல் 2021-22 வரை) இந்த முதலீடுகளிலிருந்து பெறப்பட்ட சராசரி வருமானம் 0.45 விழுக்காடு என்ற சொற்ப அளவிலேயே இருந்த நிலையில், அரசு தான் வாங்கிய கடன்களுக்கு இதே காலகட்டத்தில் சராசரியாக 7.50 விழுக்காடு வட்டி செலுத்தியது.

2017-22 காலகட்டத்தில் ஆண்டு முடிவில் இருந்த முதலீடுகள் மற்றும் அவற்றின் மூலம் பெறப்பட்ட வருமானம் பற்றிய விவரங்கள் **அட்டவணை 2.25**ல் தரப்பட்டுள்ளன.

**அட்டவணை 2.25: முதலீடுகளிலிருந்து பெறப்பட்ட வருமானம்**

| முதலீடு/வருமானம்/கடன்கள் மீதான செலவு | 2017-18 | 2018-19 | 2019-20 | 2020-21 | 2021-22 |
|---|---|---|---|---|---|
| ஆண்டு இறுதியில் முதலீடு (₹ கோடியில்) | 33,579 | 36,480 | 39,866 | 41,578 | 42,167 |
| ஆண்டு இறுதியில் கடன்கள் (₹ கோடியில்) | 3,26,518 | 3,68,736 | 4,23,743 | 5,18,796 | 5,96,331* |
| வருமானம் (₹ கோடியில்) | 153 | 135 | 160 | 174 | 256 |
| வருமான விகிதம் (விழுக்காடு) | *0.46* | *0.37* | *0.40* | *0.42* | *0.61* |
| அரசு வாங்கிய கடன்களுக்காக செலுத்திய சராசரி வட்டி விகிதம் (விழுக்காடு) | *8.53* | *8.27* | *8.07* | *7.74* | *7.50* |
| செலுத்தப்பட்ட வட்டி விகிதத்திற்கும் வருமான விகிதத்திற்கும் இடையே வேறுபாடு (விழுக்காடு) | *8.07* | *7.90* | *7.67* | *7.32* | *6.84* |
| அரசு வாங்கிய கடன்களுக்கான வட்டிக்கும் முதலீடுகளிலிருந்து பெற்ற வருமானத்திற்கும் இடையே வேறுபாடு (₹ கோடியில்) # | 2,709.83 | 2,881.92 | 3,057.72 | 3,043.51 | 2,884.22 |

\# ஆண்டு இறுதியில் முதலீடு X வட்டி விகிதத்திற்கும் வருமானத்திற்கும் இடையே வேறுபாடு

* 2020-21ல் கடனாக பெறப்பட்ட ₹ 6,241 கோடி மற்றும் 2021-22ல் கடனாக பெறப்பட்ட ₹ 8,095 கோடி நீங்கலாக

*(ஆதாரம்: உரிய ஆண்டிற்கான நிதி கணக்குகள்)*

2021-22ம் ஆண்டில், மாநில அரசு மாநில போக்குவரத்து கழகத்திலும் (₹ 688.05 கோடி), தமிழ்நாடு உப்பு நிறுவனத்திலும் (₹ 5 கோடி) ₹ 693.05 கோடி முதலீடு செய்திருந்தது.

### இழப்பில் இயங்கும் நிறுவனங்களில் முதலீடுகள்

இழப்பில் இயங்கும் அல்லது நிகர மதிப்பு கரைந்துவிட்ட நிறுவனங்கள், கழகங்கள் மற்றும் பிற அமைப்புகளில் செய்யப்படும் மூலதன வகை செலவு நிலைத்திருக்காது. அத்தகைய நிறுவனங்கள், கழகங்கள் மற்றும் கூட்டுறவு அமைப்புகளில் செய்யப்படும் முதலீடுகள் மூலதன வகை செலவின் தரத்தை பாதிக்கின்றன.

இழப்பில் இயங்கும் நிறுவனங்களில் முதலீடு பங்கு மூலதனமான செய்யப்படுகிறது. 2020-21 உடன் ஒப்பிடுகையில் முதலீடுகளின் வளர்ச்சி ஆறு விழுக்காடு உயர்ந்திருந்த போதிலும், 2017-18ல் ₹ 712.54 கோடியாக இருந்த முதலீடு, 2021-22ல் ₹ 427.73 கோடியாக குறைந்தது. மார்ச் 2022 நிலையில், இழப்பில் இயங்கும் 25 நிறுவனங்கள்/கழகங்கள்/கூட்டுறவு அமைப்புகளில் அரசு ₹ 6,857.42 கோடி தொகையை முதலீடு செய்தது. இதில், நிகர மதிப்பு கரைந்து விட்ட மற்றும் இழப்பில் இயங்கும் நான்கு நிறுவனங்களில் ₹ 263.58 கோடி முதலீடு செய்யப்பட்ட விவரங்கள் கீழே உள்ள **அட்டவணை 2.26**ல் கொடுக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 2.26: இழப்பில் இயங்கும் நிறுவனங்களில் செய்யப்பட்ட முதலீடுகள்**

*(₹ கோடியில்)*

| வரிசை எண் | நிறுவனங்கள்/ கழகங்கள் | 2021-22ல் செய்யப்பட்ட முதலீடு | 31 மார்ச் 2022 வரை செய்யப்பட்ட மொத்த முதலீடு | நிறுவனங்களால் தெரிவிக்கப்பட்ட 31 மார்ச் 2022ன் மொத்த இழப்பு | 31.03.2022 அன்றுள்ளவாறு நிகர மதிப்பு |
|---|---|---|---|---|---|
| 1 | மாநகர போக்குவரத்து கழகம் (சென்னை) | 0.82 | 893.72 | (-) 6,481.23 | (-) 5,588.33 |
| 2 | தமிழ்நாடு மாநில போக்குவரத்து கழகம் (திருநெல்வேலி) | 166.87 | 823.24 | (-) 5,993.70 | (-) 5,170.45 |
| 3 | தமிழ்நாடு மாநில விரைவு போக்குவரத்து கழகம் | 65.20 | 698.38 | (-) 3,756.02 | (-) 3,057.63 |
| 4. | தமிழ்நாடு மாநில போக்குவரத்து கழகம் (சேலம்) | 30.69 | 552.84 | (-) 4,735.33 | (-) 4,182.49 |
| | மொத்தம் | **263.58** | **2968.18** | | |

(ஆதாரம்: *வணிக தணிக்கை பிரிவிலிருந்து திரட்டப்பட்ட விவரங்கள் மற்றும் நிதி கணக்குகள்)*

TANGEDCOவில் அரசு ₹ 25,375.93 கோடி முதலீடு செய்திருந்தது. அதனுடைய நிகர மதிப்பு 31 மார்ச் 2021ல் (-) 93,209.77 கோடியாக இருந்தது.

கொள்முதல் செய்த நிறுவனங்களுக்கு ஏதேனும் தொகை TANGEDCO செலுத்த தவறியிருந்தால், மத்திய அரசின் அறிவுறுத்தலுக்கு இணங்க மத்திய ரிசர்வ் வங்கி (RBI) மாநில அரசின் கணக்கில் அத்தொகை பற்று வைக்கப்படும் என தமிழ்நாடு, தமிழ்நாடு மின்சார வாரியம் மற்றும் மத்திய அரசு ஆகியவற்றின் முத்தரப்பு ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ளது. 2021-22 கணக்குகளை கூர்ந்தாய்வு செய்ததில், RBIயால் TANGEDCO விநியோகிப்பாளருக்கு எந்த தொகையையும் பற்று வைக்கவில்லை. மார்ச் 31, 2022 அன்று மின் வாங்கியதற்கான பொறுப்பு ₹ 8,251.34 கோடியாக இருந்தது.

நிகர மதிப்பு கரைந்து விட்ட மற்றும் இழப்பில் இயங்கும் இந்த நிறுவனங்களில் செய்யப்பட்ட முதலீடுகள் மூலதன வகை செலவின தரத்தை பாதிக்கும்.

இறுதி கலந்தாய்வில், கூடுதல் தலைமை செயலாளர் இது குறித்து பார்க்கப்படும் என உறுதியளித்தார்.

### முதலீடு தொகை தொடர்பாக அரசுக்கும் பொது துறை நிறுவனங்களுக்கும் இடையே வேறுபாடு

நிதி கணக்குகளின் விவர அறிக்கை 19 - பிரிவு 2ல் கூறப்பட்டுள்ளவாறு, 21 நிறுவனங்கள்/கழகங்கள் (**இணைப்பு 2.4**) தொடர்பாக மேற்படி வேறுபாடு இருந்தது. பெருமளவிலான வேறுபாடுகள் (நிதி கணக்குகளின் விவர அறிக்கை 16ன்படி) (i) தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் (ii) தமிழ்நாடு மாநில போக்குவரத்து கழக (கோயமுத்தூர்) வரையம் மற்றும் (iii) சென்னை மெட்ரோ இரயில் ஆகிய நிறுவனங்கள் தொடர்பாக இருந்தன.

வேறுபாடுகளை ஒத்திசைவு செய்ய அரசு மற்றும் பொது துறை நிறுவனங்கள் தகுந்த நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

### கடந்த ஐந்து ஆண்டுகளில் வழங்கப்பட்ட மற்றும் மீளப் பெறப்பட்ட கடன்கள்

கூட்டுறவு சங்கங்கள் மற்றும் நிறுவனங்களில் செய்யப்பட்ட முதலீடுகள் தவிரவும், அந்த நிறுவனங்களுள் பலவற்றுக்கு அரசு கடன்கள் மற்றும் முன்பணங்களையும் தந்து வந்துள்ளது.

மார்ச் 31, 2022 நிலையில் நிலுவையில் இருந்த கடன்கள் மற்றும் முன்பணங்கள், கடந்த ஐந்து ஆண்டுகளில் வட்டி வரவுகள் மற்றும் செலுத்தப்பட்ட வட்டி ஆகியன பற்றிய விவரங்களை **அட்டவணை 2.27** அளிக்கிறது.

**அட்டவணை 2.27: நிலுவையில் இருந்த கடன்கள் மற்றும் முன்பணங்கள்**

*(₹ கோடியில்)*

| வழங்கப்பட்ட மற்றும் மீளப்பெறப்பட்ட கடன்கள் | 2017-18 | 2018-19 | 2019-20 | 2020-21 | 2021-22 |
|---|---|---|---|---|---|
| ஆண்டு துவக்கத்தில் நிலுவையில் இருந்த கடன்கள் | 43,749 | 41,794 | 41,359 | 39,997 | 38,587 |
| இவ்வாண்டில் அளிக்கப்பட்ட கடன் தொகை | 6,517 | 6,478 | 4,022 | 3,835 | 3,640 |
| இவ்வாண்டில் மீள பெறப்பட்ட கடன் தொகை | 8,472 | 6,913 | 5,384 | 5,245 | 5,355 |
| ஆண்டு இறுதியில் நிலுவையில் இருந்த கடன்கள் | 41,794 | 41,359 | 39,997 | 38,587 | 36,872 |
| நிகர கூடுதல் | (-) 1,955 | (-) 435 | (-) 1,362 | (-) 1,410 | (-) 1,715 |
| பெறப்பட்ட வட்டி | 1,484 | 2,703 | 4 | 346 | 320 |
| அரசு வழங்கிய கடன்கள் மற்றும் முன்பணங்களின் நிலுவை தொகையில் வட்டி வரவுகளின் விழுக்காடு | *3.47* | *6.50* | *0.01* | *0.88* | *0.85* |
| அரசு வாங்கி நிலுவையிலுள்ள கடன்களுக்காக செலுத்தப்பட்ட வட்டியின் சராசரி விகிதம் | *8.53* | *8.27* | *8.07* | *7.74* | *7.50* |
| செலுத்தப்பட்ட வட்டி மற்றும் பெறப்பட்ட வட்டி ஆகியவற்றின் விகிதங்களிடையே வேறுபாடு (விழுக்காடு) | *5.06* | *1.77* | *8.06* | *6.86* | *6.51* |

(ஆதாரம்: உரிய ஆண்டிற்கான நிதி கணக்குகள்)

### சேம நிதியிலிருந்து மூலதன செலவு செய்யப்பட்டமை

நிதி கணக்குகளில் தெரிவிக்கப்பட்ட மூலதன வகை செலவு (₹ 37,011.78 கோடி), சேம நிதியிலிருந்து செலவிடப்பட்ட தொகையை (₹ 5.01 கோடி) கழித்தபின் உள்ள நிகர தொகையை குறிக்கும்.

### UDAY திட்ட அமலாக்கம்

மின் பகிர்மான நிறுவனங்களின் நிதி மேம்பாட்டிற்கான உஜ்வல் டிஸ்காம் அசுரன்ஸ் யோஜனா (Ujwal Discom Assurance Yojana - UDAY) திட்டத்தை இந்திய அரசின் மின் அமைச்சகம் துவக்கியது (நவம்பர் 2015).

மாநில மின் பகிர்மான நிறுவனங்களின் செயல்பாட்டு மற்றும் நிதி திறனை மேம்படுத்தும் நோக்கில் மின் அமைச்சகம், தொடர்புடைய மாநில அரசு மற்றும் மாநில மின் பகிர்மான நிறுவனங்கள் ஆகியவற்றுக்கிடையே ஒரு முத்தரப்பு புரிந்துணர்வு ஒப்பந்தம் உருவாக்கப்பட்டது. பகிர்மான நிறுவங்களின் நிலுவை கடன்களில் 75 விழுக்காடு அளவை இரண்டு ஆண்டு காலத்தில் மாநில அரசுகள் ஏற்றுக்கொள்ள அத்திட்டம் வகை செய்தது.

தமிழ்நாடு அரசு பிப்ரவரி - மார்ச் 2017ல் ரிசர்வ் வங்கி, நாக்பூர், மூலம் கடன் பத்திரங்களை வெளியிட்டு ₹ 22,815 கோடி கடன் வாங்கியது.

அரசு ₹ 22,815 கோடி அளவிற்கான அந்த உதவியை கடனாக கருதியது. வட்டியில்லாத அக்கடனை தமிழ்நாடு அரசு மானியமாக (2017-18 முதல் துவங்கும் மொத்தம் ஐந்து சம அளவு தவணைகள்) மாற்றியமைத்து, ₹ 4,563 கோடி கணக்கு மாற்றம் செய்து, தேவையான கணக்களவிலான சரிக்கட்டல்களை செய்தது. வட்டியில்லா கடன் 2017-18, 2018-19, 2019-20, 2020-21 மற்றும் 2021-22 ஆண்டுகளில் மானியமாக மாற்றப்பட்டது.

2016-17 முதல் 2021-22 வரையிலாள காலகட்டத்தில், UDAY திட்டத்தின், நிலுவையிலுள்ள கடன்கள் மற்றும் மானியமாக மாற்றியது பற்றிய விவரங்க்ள **அட்டவணை 2.28**ல் காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை 2.28: UDAY திட்டத்தின் கீழ் கடன் / மானியத்தின் நிலை**

*(₹ கோடியில்)*

| ஆண்டு | வட்டியில்லா கடன் நிலுவை | மானியமாக மாற்றப்பட்ட கடன் தொகை | மீத நிலுவை |
|---|---|---|---|
| 2016-17 | 22,815 | -- | 22,815 |
| 2017-18 | 22,815 | 4,563 | 18,252 |
| 2018-19 | 18,252 | 4,563 | 13,689 |
| 2019-20 | 13,689 | 4,563 | 9,126 |
| 2020-21 | 9,126 | 4,563 | 4,563 |
| 2021-22 | 4,563 | 4,563 | -- |

*(ஆதாரம்: உரிய ஆண்டிற்கான நிதி கணக்குகள்)*

### 2.4.4 செலவு முன்னுரிமைகள்

மனித வள வளர்ச்சி நிலைகளை உயர்த்துவதற்கு மாநிலங்கள் கல்வி, நலவாழ்வு போன்ற முக்கிய சமூக பணிகள் மீதான தமது செலவை உயர்த்த வேண்டும். ஒரு குறிப்பிட்ட பிரிவிற்கான ஒதுக்கீடு தேசிய சராசரி ஒதுக்கீட்டைவிட குறைவாக

இருந்தால், அப்பிரிவிற்கான நிதி முன்னுரிமை (மொத்த செலவில் அப்பிரிவிற்கான ஒதுக்கீட்டின் விகிதம்) குறைவாக உள்ளது என பொருள்படும். மொத்த செலவில் இத்தகைய கூறுகளின் விகிதம் அதிகமாக இருப்பின், செலவின் தரம் மேம்பட்டதாக கருதப்படும். நலவாழ்வு, கல்வி மற்றும் மூலதன வகை செலவு தொடர்பான மாநிலத்தின் செலவு முன்னுரிமை பற்றிய விவரங்கள் **அட்டவணை 2.29**ல் தரப்பட்டுள்ளன:

**அட்டவணை 2.29: செலவு முன்னுரிமைகள்**

*(விழுக்காட்டில்)*

| மாநிலத்தின் செலவு முன்னுரிமை | மொத்த செலவு/ GSDP | மூலதன வகை செலவு / மொத்த செலவு | கல்வி மீதான மூலதன வகை செலவு /மொத்த செலவு | நலவாழ்வு மீதான மூலதன வகை செலவு / மொத்த செலவு |
|---|---|---|---|---|
| பொதுவான மாநிலங்கள் (2021-22) | 15.84 | 14.41 | 0.37 | 0.63 |
| தமிழ் நாடு | 14.26 | 13.80 | 0.17 | 0.85 |
| கர்நாடகா | 12.76 | 19.92 | 0.58 | 0.98 |
| கேரளா | 18.10 | 10.44 | 0.30 | 0.19 |

*(ஆதாரம் :GSDPக்கு பொருளாதாரம் மற்றும் புள்ளியியல் துறை)*

- GSDPல் மொத்த செலவினத்தின் விழுக்காடு, கேரளா மாநிலத்துடன் ஒப்பிடுகையில் குறைவாகவும், கர்நாடகா மாநிலத்துடன் ஒப்பிடுகையில் கூடுதலாகவும் இருந்தது.
- நடப்பாண்டில், மொத்த செலவினத்தில் கல்விக்கான மூலதன வகை செலவினம் கர்நாடகா மற்றும் கேரளா மாநிலங்களைவிட குறைவாக இருந்தது.
- மொத்த செலவினத்தில் நல்வாழ்வு மீதான மூலதன வகை செலவினம் கேரளா மாநிலத்துடன் ஒப்பிடுகையில் கூடுதலாகவும், கர்நாடகா மாநிலத்துடன் ஒப்பிடுகையில் குறைவாகவும் இருந்தது.

## 2.4.5 குறுந்தலைப்பு வாரியான செலவு

இவ்வாண்டில் செய்யப்பட்ட குறுந்தலைப்புவாரியான செலவு **விளக்கப்படம் 2.14**ல் தரப்பட்டுள்ளது.

**விளக்கப்படம் 2.14: குறுந்தலைப்பு வாரியான செலவு**

(விழுக்காட்டில்)




*(ஆதாரம்: நிதி கணக்குகள்)*

- நடப்பாண்டில் ஊதியங்கள் மற்றும் படிகள், ஓய்வூதியம் மற்றும் வட்டி ஆகிய பொறுப்புகள் தொடர்பான செலவு மொத்த செலவில் 44.15 விழுக்காடாக இருக்க, இவ்வாண்டில் செய்யப்பட்ட முதலீடுகள் மிக குறைந்த அளவாக 0.95 விழுக்காடு மற்றும் பெரும் பணிகள் மீதான செலவு 10.11 விழுக்காடு ஆக இருந்தன; இது, மொத்த செலவில் கிட்டத்தட்ட பாதி அளவு தவிர்க்க இயலாத செலவுகளுக்காகவே செய்யப்பட்டதை காட்டியது.

## 2.5 பொது கணக்கு

சிறு சேமிப்பு, வருங்கால வைப்பு நிதி, சேமநிதிகள், வைப்பு தொகைகள், அநாமத்து, செலுத்துகைகள், போன்றவை தொடர்பான வரவு - செலவு நடவடிக்கைகள் தொகுநிதியின் பகுதிகளாக சேராமல் அரசியலமைப்பு சட்டத்தின் பிரிவு 266 (2)ன்படி அமைக்கப்பட்ட பொது கணக்கின் கீழ் வைக்கப்படும்; இவை மாநில சட்டமன்றத்தின் ஒப்புதலுக்கு உட்பட்டவை அல்ல. இவ்வினங்களில் அரசு ஒரு வங்கியாளர் போன்று செயல்படும். இக்கணக்கின் கீழ் வழங்கப்பட்டது போக மீதமுள்ள தொகை அரசின் பயன்பாட்டுக்கு கிடைக்கும்.

### 2.5.1 பொது கணக்கு நிகர இருப்புகள்

மாநிலத்தின் பொது கணக்கில் இருந்த பகுதிவாரியான நிகர இருப்புகள் **அட்டவணை 2.30**ல் தரப்பட்டுள்ளன.

**அட்டவணை 2.30: பொது கணக்கில் 31 மார்ச் அன்று இருந்த பகுதிவாரியான நிகர இருப்பு**

(₹ கோடியில்)

| பகுதி | துணை பகுதி | 2017-18 | 2018-19 | 2019-20 | 2020-21 | 2021-22 |
|---|---|---|---|---|---|---|
| I. சிறு சேமிப்பு, வருங்கால வைப்பு நிதி போன்றவை | சிறு சேமிப்பு, வருங்கால வைப்பு நிதி போன்றவை | (-) 21,659.87 | (-) 24,109.76 | (-) 26,475.22 | (-) 29,352.41 | (-) 32,032.78 |
| J. சேம நிதிகள் | (a) வட்டியுடன் கூடிய சேம நிதிகள் | -- | -- | (-) 113.42 | (-) 113.42 | (-) 113.42 |
| | (b)வட்டி ஈட்டாத சேம நிதிகள் | (-) 1,877.04 | (-) 1,330.01 | (-) 2,044.94 | (-) 2,030.89 | (-) 2,273.04 |
| K. வைப்பு தொகைகள் மற்றும் முன்பணங்கள் | (a) வட்டியுடன் கூடிய வைப்பு நிதிகள் | (-) 4,128.42 | (-) 8,008.32 | (-) 9,323.98 | (-) 8,014.50 | (-) 7643.95 |
| | (b) வட்டி ஈட்டாத வைப்பு நிதிகள் | (-) 10,083.23 | (-) 13,646.16 | (-) 15,235.43 | (-) 22,096.51 | (-) 26,667.81 |
| | (c) முன்பணங்கள் | 9.00 | 7.71 | 7.67 | 7.64 | 7.62 |
| L. அநாமத்து மற்றும் பல்வகை | (b) அநாமத்து | (-) 121.00 | (-) 141.69 | (-) 283.10 | 29.01 | 57.60 |
| | (c) பிற கணக்குகள் | 14,618.84 | 10,100.00 | 3,692.59 | 5,841.15 | 15,108.59 |
| | (d) அயல்நாட்டு அரசுகளுடனான கணக்குகள் | 1.24 | 1.24 | 1.24 | 1.24 | 1.24 |
| | (e) பல்வகை | -- | -- | -- | -- | -- |
| M. செலுத்தங்கள் | (a) பண அஞ்சல்கள் மற்றும் பிற செலுத்தங்கள் | 199.04 | (-) 0.50 | (-) 0.51 | (-) 0.48 | 5.47 |
| | (b) அரசுகளுக்கிடையேயான சரிக்கட்டல் கணக்கு | 12.50 | 5.10 | 8.56 | 8.48 | 8.83 |
| மொத்தம் | | (-) 23,028.94 | (-) 37,122.39 | (-) 49,766.54 | (-) 55,720.69 | (-) 53,541.65 |

*குறிப்பு: (+) பற்று மீதத்தையும் (-) வரவு மீதத்தையும் குறிக்கும்*

*(ஆதாரம்: உரிய ஆண்டிற்கான நிதி கணக்குகள்)*

**விளக்கப்படம் 2.15: பொது கணக்கு இருப்புகளின் கூறுகளில் ஆண்டுவாரியான மாற்றங்கள்**

(₹ கோடியில்)




(ஆதாரம்: உரிய ஆண்டிற்கான நிதி கணக்குகள்)

- 2020-21ல் ₹ 55,720.69 கோடி ஆக இருந்த அரசின் பொது கணக்கு பொறுப்புகள் 2021-22ல் ₹ 53,541.65 கோடியாக (3.91 விழுக்காடு) குறைந்தது.
- ரொக்க இருப்பு முதலீடு உயர்வே பொது கணக்கின் நிகர குறைவுக்கு முக்கிய காரணமாகும்.
- பொது கணக்கிற்கான பெரும் பங்களிப்புகள் (i) சிறு சேமிப்பு, வருங்கால வைப்பு நிதி போன்றவை மற்றும் (ii) வைப்புத் தொகைகள் என்பவற்றிலிருந்து பெறப்பட்டன.

## 2.5.2 சேம நிதிகள்

மாநில அரசின் பொது கணக்கின் கீழ் குறிப்பான மற்றும் வரையறுக்கப்பட்ட நோக்கங்களுக்காக சேம நிதிகள் உருவாக்கப்படுகின்றன. இவற்றுக்கான தொகைகள் மாநிலத்தின் தொகுநிதியிலிருந்து பங்களிப்பு அல்லது மானியங்கள் என்ற வகையில் பெறப்படுகின்றன.

சேம நிதிகளில் 31 மார்ச் 2022 அன்று இருந்த மொத்த மீதம் ₹ 11,287.91 கோடி ஆகும் (வட்டியுடன் கூடிய சேமநிதுகள் - ₹ 113.42 கோடியும், வட்டியில்லாத சேம நிதிகள் - ₹ 11,174.49 கோடி உட்பட). பெரும் சேம நிதிகளுள் சில கீழே விளக்கப்பட்டுள்ளன.

### 2.5.2.1 தொகுக்கப்பட்ட கடன்தீர் நிதி

பனிரெண்டாவது நிதி குழுவின் பரிந்துரைகளுக்கேற்ப, சந்தை கடன்கள், பிற கடன்கள் மற்றும் கடன் பொறுப்புகளை தீர்க்க மாநில அரசுகள் கடன் தீர் நிதியை (CSF) உருவாக்கின. அந்நிதியை ரிசர்வ் வங்கி நிர்வகிக்கிறது.

சந்தை கடன்கள், மத்திய அரசு கடன்கள் மற்றும் மாநில அரசுக்கு கிடைக்கப் பெற்ற தேசிய சிறுசேமிப்பு நிதிக்கு விடுவிக்கப்பட்ட சிறப்பு கடன் பத்திரங்கள் போன்ற கடன்களை தீர்க்க 2005-06ல் மாநில அரசு CSFஐ உருவாக்கியது. அந்நிதியை ரிசர்வ் வங்கி நிர்வகிக்கிறது. தமிழ்நாடு அரசின் அரசிதழில் வெளியிடப்பட்ட அறிவிக்கையின்படி, முந்தைய ஆண்டின் முடிவில் நிலுவையில் இருந்த கடன் பொறுப்புகளில் 0.5 விழுக்காடு என்ற விகிதத்தில் அரசு CSFக்கு பங்களிக்கலாம். இவ்வாண்டில் மாநில அரசு அந்நிதிக்கு ₹ 582.20 கோடி (முதலீடுகளிலிருந்து பெறப்பட்ட வட்டி மட்டும்) பங்களித்தது; இது, 1 ஏப்ரல் 2021 அன்று நிலுவையில் இருந்த ₹ 4,91,355.69 கோடி பொறுப்புகளில் 0.11 விழுக்காடு மட்டுமே ஆகும். இவ்வாறாக, இந்நிதிக்கு குறைவான பங்களிப்பு ₹ 1,874.58 கோடி (₹ 2,456.78 கோடி கழிக்க ₹ 582.20 கோடி) ஆகும்.

மார்ச் 31, 2022 நிலையில் CSFல் ₹ 8,070.69 கோடி மீதம் இருந்தது; முதலீடுகளிலிருந்து நடப்பாண்டில் ₹ 309.48 கோடி வட்டி பெறப்பட்டது.

பொறுப்புகளின் உயர்ந்துவரும் போக்கு காரணமாக, வருங்கால பொறுப்புகளை போதுமான அளவில் ஏற்கும் வகையில் அரசு இந்நிதிக்கு அதிக அளவில் பங்களிப்பை அளிக்க வேண்டும்.

### 2.5.2.2 மாநில பேரிடர் நிவாரண நிதி

இந்திய அரசு 1 ஏப்ரல் 2010 அன்று அப்போதிருந்த பேரிடர் நிவாரண நிதிக்கு மாற்றாக மாநில பேரிடர் நிவாரண நிதியை (SDRF) உருவாக்கியது. SDRF வழிகாட்டுநெறிகளின்படி, மத்திய மற்றும் மாநில அரசுகள் அந்நிதிக்கு ஒரு குறிப்பிட்ட விகிதத்தில் பங்களிக்க வேண்டும். அந்த பங்களிப்புகள் பொது கணக்கிற்கு பெருந்தலைப்பு – 8121க்கு மாற்றப்படும். நடப்பாண்டில் செலவு பெருந்தலைப்பு – 2245ன் கீழ் கணக்கு வைக்கப்படும்.

ரிசர்வ் வங்கியின் மிகைபற்று ஒழுங்காற்று வழிகாட்டுநெறிகளின் கீழ் மிகைப் பற்றுக்கு பொருந்தக்கூடிய வட்டி விகிதத்தில் மாநில அரசுகள் SDRFக்கு வட்டி செலுத்த வேண்டும். அவ்வட்டி அரையாண்டு அடிப்படையில் வரவு வைக்கப்பட வேண்டும். SDRFல் சேரும் தொகை மற்றும் SDRF தொகையின் முதலீட்டிலிருந்து பெறப்படும் வருவாய், மத்திய அரசின் தேதியிட்ட பத்திரங்கள், ஏலம் விடப்படும் அரசு கடன் பத்திரங்கள் மற்றும் பட்டியலிடப்பட்ட வணிக வங்கிகளில் வட்டியுடன் கூடிய வைப்புத் தொகை ஆகியவற்றில் முதலீடு செய்யப்பட வேண்டும்.

பேரிடரால் பாதிக்கப்பட்டோருக்கு உடனடி நிவாரணம் வழங்குவதற்கான செலவை எதிர்கொள்ள மட்டுமே SDRFஐ பயன்படுத்த வேண்டும்; பேரிடர் ஆயத்த நிலை, மறு சீரமைப்பு, மறுகட்டுமானம் மற்றும் துயர் தணிப்பு பணிகளுக்கான ஒதுக்கீடுகளுக்கு SDRFஐ பயன்படுத்தக்கூடாது. இத்தகைய செலவுகள் வழக்கமான வரவு செலவு திட்டம்/மாநில திட்ட நிதி போன்றவை மூலம் எதிர்கொள்ளப்பட வேண்டும்.

மாநில அரசு 2021-22ல் SDRF கணக்கிற்கு ₹ 1,088 கோடி (மத்திய அரசு பங்கு ₹ 816 கோடி மற்றும் தனது பங்கு ₹ 272 கோடி) தொகையை இயற்கை பேரிடர்களை எதிர்கொள்ளும் பொருட்டு மாற்றியது.

SDRFலிருந்து செய்யப்பட்ட செலவு பற்றிய விவரங்கள் **அட்டவணை 2.31**ல் தரப்பட்டுள்ளன.

**அட்டவணை 2.31: SDRFலிருந்து செய்யப்பட்ட செலவு பற்றிய விவரங்கள்**

*(₹ கோடியில்)*

| கணக்கு பெருந்தலைப்பு | சிறு தலைப்பு | 2021-22ல் ஆன செலவு |
|---|---|---|
| 2245- இயற்கை பேரிடர்களுக்கான நிவாரணம் **01-** வறட்சி | 101 - கருணை நிவாரணம் | 0.11 |
| | 102 - குடிநீர் வழங்கல் | 0.01 |
| | 800 - பிற செலவுகள் | 0.01 |
| | 911 - கழிக்க: கூடுதலாக வழங்கப்பட்ட தொகை மீள பெறப்பட்டது | (-) 0.93 |
| | துணை மொத்தம் | **(-) 0.80** |
| 2245- இயற்கை பேரிடர்களுக்கான நிவாரணம் **02** - வெள்ளங்கள், புயல்கள் போன்றவை | 101 - கருணை நிவாரணம் | 8.99 |
| | 105 – கால்நடை பராமரிப்பு | 2.63 |
| | 106 - சேதமுற்ற சாலைகள் மற்றும் பாலங்கள் பழுதுநீக்கம் மற்றும் சீரமைப்பு | 16.63 |
| | 107 - சேதமுற்ற அரசு அலுவலக கட்டிடங்களை பழுது நீக்கம் மற்றும் சீரமைப்பு | 2.98 |
| | 111 - இறந்தவர் குடும்பங்களுக்கு கருணை தொகை | 72.18 |
| | 113 - வீடுகள் பழுதுநீக்கம் / மறுகட்டுமானத்திற்காக உதவி | 19.25 |
| | 114 - வேளாண் இடுபொருட்கள் வாங்க விவசாயிகளுக்கு உதவி | 105.52 |
| | 117 - கால்நடைகள் வாங்க விவசாயிகளுக்கு உதவி | 0.52 |
| | 118 - சேதமுற்ற படகுகள் / மீன்பிடி கருவிகள் பழுதுநீக்கம் / புதிதாக வாங்க உதவி | 5.89 |
| | 122 – சேதமுற்ற பாசன மற்றும் வெள்ள தடுப்பு அமைப்புகள் பழுதுநீக்கம் மற்றும் சீரமைப்பு | 19.94 |
| | 190 - பொது துறை மற்றும் பிற அரசு நிறுவனங்களுக்கு உதவி | 40.97 |
| | 191 - மாநகராட்சிகளுக்கு உதவி | 215.00 |
| | 800 - பிற செலவுகள் | 58.78 |
| | 282 – பொது சுகாதாரம் | 5.74 |
| | 911 - கழிக்க: கூடுதலாக வழங்கப்பட்ட தொகை மீள பெறப்பட்டது | (-) 51.73 |
| | துணை மொத்தம் | **523.29** |
| 2245- இயற்கை பேரிடர்களுக்கான நிவாரணம் **80-** பொது | 800 - பிற செலவுகள் | 9,224.20 |
| | 101- பேரழிவை தடுக்கும் ஆயத்த பணிகளில் பயிற்சியளிப்பதற்கான மையம் | -- |
| | 102 - பேரழிவு ஏற்படகூடிய இடங்களில் உடனடி நடவடிக்கை மற்றும் இயற்கை பேரழிவு மேலாண்மை | 21.39 |
| | 911 - கழிக்க: கூடுதலாக வழங்கப்பட்ட தொகை மீள பெறப்பட்டது | (-) 63.62 |
| | துணை மொத்தம் | **9,181.97** |
| | பெரு மொத்தம் | **9,704.44** |
| **05 - SDRF** | **901-** கழிக்க - **SDRF**லிருந்து செலவிடப்பட்ட தொகை | **(-) 1,088.00** |

(ஆதாரம்: *நிதிக கணக்குகள்*)

இவ்வாண்டில் மாநில அரசு ₹ 9,704.44 கோடி செலவிட்டது; இதில் கோவிட்-19ஐ எதிர்கொள்ள தயாராக இருப்பதற்காகவும், நிவாரண நடவடிக்கைகளுக்காகவும் செய்த செலவு ₹ 9,181.97 கோடியும் உள்ளடங்கும். இது, இந்நிதிக்கு மாற்றப்பட்ட தொகையை (₹ 1,088 கோடி) விட கூடுதலாகும். எனவே, அந்நிதியில் 31 மார்ச் 2021 நிலையில் மீத தொகை ஏதும் இருக்கவில்லை.

#### *2.5.2.3 உத்தரவாத மீட்பு நிதி*

அளிக்கப்பட்ட உத்தரவாதங்களை பயன்படுத்தும் நேர்வுகளில் அவற்றுக்கான தொகைகளை செலுத்துவதற்காக உத்தரவாத மீட்பு நிதி மார்ச் 2003ல் அமைக்கப்பட்டது; அதனை ரிசர்வ் வங்கி நிர்வகிக்கிறது. நடப்பாண்டில் வழங்கப்பட்ட அதிகரிக்கும் உத்தரவாதத்தின் விளைவாக செயல்படுத்தும் உத்தரவாத தொகைக்கும் மற்றும் நிலுவையிலுள்ள செயல்படுத்தப்படும் உத்தரவாத தொகைக்கு இணையாக குறைந்த பட்சம் ஐந்தில் ஒரு பங்கு அளிக்க வேண்டும்.

நடப்பாண்டில் தர வேண்டிய பங்களிப்பு தொகையான ₹ 18,395.08 கோடிக்கெதிராக மாநில அரசு ₹ 324.75 கோடி செலுத்தியது. இவ்வாறாக, நடப்பாண்டில் இந்நிதிக்கு குறைவான பங்களிப்பு ₹ 18,070.33 கோடியாக இருந்தது. நிதியில் 31 மார்ச் 2022 அன்று இருந்த இறுதி மீதம் ₹ 1,145.73 கோடி ஆகும்; இதில், ₹ 1,008.49 கோடி அரசு கடன் பத்திரங்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. நடப்பாண்டில் பத்திரங்கள் விற்றதில் கிடைத்த ஆதாயம் ₹ 28.92 கோடி ஆகும். 2021-22ல் எந்த உத்தரவாதமும் பயன்படுத்தப்படவில்லை.

## 2.6 கடன் மேலாண்மை

தேவையான அளவு நிதி பெறுதல், அதற்குரிய நோக்கங்களை அடைதல், சட்டம் இயற்றுவது அல்லது ஆண்டு வரவு-செலவு திட்டம் மூலமான அறிவிப்புகள் மூலம் அரசு நிர்ணயித்த பிற அரசு கடன் மேலாண்மை இலக்குகளை அடைதல் ஆகிய நோக்கங்களுக்காக அரசின் கடன் நிலையை மேலாண்மை செய்வதற்கான ஒரு உத்தியை வகுத்து செயல்படுத்துவது கடன் மேலாண்மை எனப்படும்.

2017-18 முதல் 2021-22 வரையிலான காலகட்டத்தில் நிலுவையில் இருந்த கடன் அளவின் போக்கு (அரசின் உள்நாட்டு கடன், இந்திய அரசிடமிருந்தான கடன்கள் மற்றும் முன்பணங்கள் மற்றும் பொது கணக்கு பொறுப்புகள் உட்பட) மற்றும் GSDPல் கடன் அளவின் பங்கு ஆகியன **விளக்கப்படம் 2.16**ல் தரப்பட்டுள்ளன.

விளக்கப்படம் 2.16: நிலுவையிலுள்ள கடன் அளவின் போக்கு




*(ஆதாரம்: உரிய ஆண்டிற்கான நிதி கணக்குகள்)*

* பொருட்கள் மற்றும் சேவைவரி இழப்பீட்டிற்கு மாற்றாக மாநிலத்திற்கு கடன் வரவுகளின் கீழ் கடனாக வழங்கப்பட்ட ₹ 14,336 கோடியை (2021-22 - ₹ 8,095.25 கோடி மற்றும் 2020-21 - ₹ 6,241 கோடி) , நிதிக் குழு பரிந்துரைத்தவாறு, நிதி குறியீடுகளுக்கு கடனாக கருதப்படக்கூடாது என மத்திய அரசின் செலவுத் துறை முடிவு செய்திருப்பதால், மத்திய அரசின் கடன்கள் மற்றும் முன்பணங்கள் ₹ 5,96,331 கோடியாக இருக்கும்.

^ பொருட்கள் மற்றும் சேவைவரி இழப்பீட்டிற்கு மாற்றாக மாநிலத்திற்கு கடன் வரவுகளின் கீழ் கடனாக வழங்கப்பட்ட ₹ 14,336 கோடியை (2021-22 - ₹ 8,095.25 கோடி மற்றும் 2020-21 - ₹ 6241 கோடி) எடுத்துக்கொள்ளப்படவில்லை.

## 2.6.1 வரவு - செலவு திட்டத்திற்கு அப்பாற்பட்ட கடன்களின் நிலுவை

TNFR சட்டம் 2003ன் படி, மொத்த பொறுப்புகள் என்பது 'மாநில தொகு நிதி மற்றும் மாநில பொது கணக்குகளில் உள்ள பொறுப்புகள்' அடங்கும். எனினும், பல்வேறு மாநில திட்ட பணிகளுக்காக கழகங்கள்/முகமைகளால் வாங்கப்பட்டு, அசல் மற்றும் வட்டியை செலுத்தும் பொறுப்பை மாநில அரசு ஏற்றுள்ள கடன்கள் மாநிலத்தின் நிதி கணக்குகளில் சேர்க்கப்படவில்லை. இக்கடன்கள் மாநிலத்தின் பொறுப்புகளை மறைமுகமாக உயர்த்துகின்றன. அவ்வாறான கடன்களின் நிலுவை பற்றிய விவரங்கள் **அட்டவணை 2.32**ல் தரப்பட்டுள்ளன:

அட்டவணை 2.32: வரவு - செலவு திட்டத்திற்கு அப்பாற்பட்ட கடன்களின் நிலுவை

*(₹ கோடியில்)*

| வ. எண் | முகமையின் பெயர் | 31 மார்ச் 2021 அன்று நிலுவை | நடப்பாண்டில் வரவு செலவு திட்டத்திற்கு அப்பால் பெறப்பட்ட கடன்கள் | நடப்பாண்டில் அரசு மீள செலுத்தியது | 31 மார்ச் 2022 அன்று நிலுவை |
|---|---|---|---|---|---|
| 1 | தமிழ்நாடு ஊரக வீட்டுவசதி மற்றும் உள்கட்டமைப்பு வளர்ச்சி நிறுவனம் | 411.63 | -- | 38.60 | 373.03 |
| 2 | தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனம் - நீர் மற்றும் சுகாதார தொகுப்பு நிதி | 220.77 | 35.08 | 16.68 | 239.17 |
| 3 | தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் | 1.59 | -- | 1.14 | 0.45 |
| 4 | தமிழ்நாடு நீர்வள ஆதார பாதுகாப்பு மற்றும் ஆறு மறுசீரமைப்பு | 34.43 | 594.88 | -- | 629.31 |
| 5 | TANGEDCO | 14,700.49 | 11,727.43 | -- | 26,427.92 |
| | மொத்தம் | 15,368.91 | 12,357.39 | 56.42 | 27,669.88 |

*(ஆதாரம்: உரிய ஆண்டுக்கான வரவு - செலவு திட்ட ஆவணங்கள் மற்றும் நிதி கணக்குகள்)*

வரவு - செலவு திட்டத்திற்கு அப்பாற்பட்ட கடன்களுக்கான அசல் மற்றும் வட்டி தொகைகள் அத்திட்டத்தின் மூலமே செலுத்தப்பட்டாலும், அவ்வாறான

கடன்களின் நிலுவைகள் ₹ 27,669.88 கோடி என்ற தொகை 31 மார்ச் 2022 அன்று நிலுவையில் இருந்த அரசின் மொத்த கடன்களில் (₹ 6,10,667 கோடி) சேர்க்கப்படவில்லை. அவை நிதி கணக்குகளில் காட்டப்படாததால், ஆண்டின் இறுதியில் நிலுவையில் உள்ள அரசின் கடன்கள் பற்றிய விவரங்களில் வெளிப்படைத்தன்மை இருக்கவில்லை; எனவே, அரசின் நிதி பொறுப்புகள் பற்றிய உண்மை நிலையை கணக்கு பதிவுருக்களிலிருந்து அறிய இயலாது

உத்தரவாத மீட்பு நிதியிலிருந்து மேற்சொன்ன முகமைகளுக்கு அரசு திருப்பிச் செலுத்த வேண்டும். 2021-22ல், எதிர்பார்க்கப்பட்ட உத்தரவாத கட்டண தொகையான ₹ 1,733.90 கோடிக்கெதிராக, அரசால் பெறப்பட்ட உத்தரவாத கட்டணம் ₹ 295.89 கோடியாகும். இவ்வாறாக, உத்தரவாத கட்டணத்தின் குறைந்த வசூல் ₹ 1,438.01 கோடியாகும். வாரியம்/கம்பெனி/நிறுவன கடன்களை அரசு திருப்பிச் செலுத்துவதால், உத்தரவாத கட்டணத்தை முழுமையாக வசூலித்திருப்பதை உறுதி செய்ய அரசு தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய தேவையாகிறது. தவறும் பட்சத்தில், வரக்கூடிய ஆண்டில் வருவாய் பற்றாக்குறை மற்றும் நிதிப் பற்றாக்குறையில் எதிர்மறை தாக்கத்தை ஏற்படுத்தும் மற்றும் அந்த கடன்கள் அரசுக்கு நேரிடை பொறுப்புகளாகிறது.

### 2.6.2 கடன் நிலையின் கூறுகள்

மாநில அரசின் மொத்த கடனில் பொதுவாக அரசின் உள்நாட்டு கடன் (சந்தை கடன்கள், ரிசர்வ் வங்கியிடமிருந்து பெற்ற வழிவகை முன்பணங்கள், தேசிய சிறு சேமிப்பு நிதிக்கு அளிக்கப்பட்ட சிறப்பு பத்திரங்கள், நிதி நிறுவனங்களிடமிருந்து பெற்ற கடன்கள்), மத்திய அரசிடமிருந்து பெற்ற கடன்கள் மற்றும் முன்பணங்கள், பொது கணக்கு பொறுப்புகள் ஆகியன அடங்கும். கடன் தொகையின் கூறுவாரியான போக்கு **அட்டவணை 2.33**லும் மற்றும் 2021-22 இறுதியில் நிலுவையில் இருந்த கடன் தொகையின் பிரிவுகள் **விளக்கப்படம் 2.17**லும் தரப்பட்டுள்ளன.

**அட்டவணை 2.33: கடன் தொகையின் கூறுவாரியான போக்கு**

| நிலுவையிலுள்ள மொத்த கடன்கள் (A+B) | | 2017-18 | 2018-19 | 2019-20 | 2020-21 | 2021-22 |
|---|---|---|---|---|---|---|
| | | **3,26,518** | **3,68,736** | **4,23,743** | **5,18,796** | **6,10,667** |
| *A. பொது கடன் (₹ கோடியில்)* | *உள்நாட்டு கடன்* | *2,72,634* | *3,04,350* | *3,52,625* | *4,29,748* | *5,02,205* |
| | *இந்திய அரசு கடன்கள்* | *16,135* | *17,292* | *17,925* | *27,440* | *39,731** |
| *B. பொது கணக்கு பொறுப்புகள் (₹ கோடியில்)* | | *37,749* | *47,094* | *53,193* | *61,608* | *68,731* |
| *C.* வரவு - செலவு திட்டத்திற்கு அப்பாற்பட்ட கடன்களின் நிலுவை | | | | | *15,368.91* | *27,669.88* |
| நிலுவையில் இருந்த கடனின் வளர்ச்சி விகிதம் (விழுக்காடு) | | ***15.22*** | ***12.93*** | ***14.92*** | ***22.43*** | ***17.71*** |
| கடன் / GSDP (*விழுக்காடு*) | | *22.29* | *22.62* | *24.31* | *28.35* | *28.87^* |
| மொத்த கடன் வரவுகள் *(₹ கோடியில்)* | | 1,62,088 | 1,63,335 | 1,87,208 | 2,44,197 | **2,48,996 |
| மீள செலுத்தப்பட்ட கடனின் மொத்தம் *(₹ கோடியில்)* | | 1,18,964 | 1,21,117 | 1,32,202 | 1,49,143 | 1,57,125 |
| மீதமிருந்த கடன் *(₹ கோடியில்)* | | **43,124** | **42,218** | **55,006** | **95,054** | **91,871** |
| மீள செலுத்தப்பட்ட கடன் / கடன் வரவுகள் (விழுக்காடு) | | *73.39* | *74.15* | *70.62* | *61.07* | *63.10* |

(*ஆதாரம்: உரிய ஆண்டிற்கான நிதி கணக்குகள்*) * பொருட்கள் மற்றும் சேவைவரி இழப்பீட்டிற்கு மாற்றாக மாநிலத்திற்கு கடன் வரவுகளின் கீழ் கடனாக வழங்கப்பட்ட ₹ 14,336 கோடியை (2021-22 - ₹ 8,095.25 கோடி மற்றும் 2020-21 - ₹ 6,241 கோடி), நிதிக் குழு பரிந்துரைத்தவாறு, நிதி குறியீடுகளுக்கு கடனாக கருதப்படக்கூடாது என மத்திய அரசின் செலவுத் துறை முடிவு செய்திருப்பதால், மத்திய அரசிடமிருந்து பெற்ற கடன்கள் மற்றும் முன்பணங்கள் ₹ 25,395 கோடியாக இருக்கும்.

^ பொருட்கள் மற்றும் சேவைவரி இழப்பீட்டிற்கு மாற்றாக மாநிலத்திற்கு கடன் வரவுகளின் கீழ் கடனாக வழங்கப்பட்ட ₹ 14,336 கோடி (2021-22 - ₹ 8,095.25 கோடி மற்றும் 2020-21 - ₹ 6241 கோடி) எடுத்துக்கொள்ளப்படவில்லை

** பொருட்கள் மற்றும் சேவைவரி இழப்பீட்டிற்கு மாற்றாக மாநிலத்திற்கு கடன் வரவுகளின் கீழ் கடனாக வழங்கப்பட்ட ₹ 8,095.25 கோடியை, நிதிக் குழு பரிந்துரைத்தவாறு, நிதி குறியீடுகளுக்கு கடனாக கருதப்படக்கூடாது என மத்திய அரசின் செலவுத் துறை முடிவு செய்திருப்பதால், மொத்த கடன் வரவுகள் ₹ 2,40,900.75 கோடியாக இருக்கும். இதன் விளைவாக, மீதமிருந்த கடன் ₹ 83,775.75 கோடியாக இருக்கும்.

**விளக்கப்படம் 2.17: 2021-22 இறுதியில் நிலுவையில் இருந்த கடனின் பிரிவுகள்**




*(ஆதாரம்: நிதி கணக்குகள்)*

** மத்திய அரசிடமிந்து பெற்ற கடன்கள் மற்றும் முன்பணங்கள்: ₹ 25,395 கோடி ; ^ மொத்த கடன்கள் ₹ 5,96,331 கோடி*

- 2020-21 இறுதியில் ₹ 4,29,748 கோடி ஆக இருந்த அரசின் உள்நாட்டு கடன் 16.86 விழுக்காடு உயர்ந்து 2021-22 இறுதியில் ₹ 5,02,205 கோடி ஆக ஆனது.

- மாநில அரசு 2021-22ல் ரிசர்வ் வங்கி மூலம் வெளி சந்தையிலிருந்து ₹ 35,500 கோடி. ஏற்கெனவே இருந்த அரசு பத்திரங்களை மறு வெளியீடு செய்து இக்கடன் தொகைகளை பெற்றதால், அதில் ₹ 762.97 கோடி தள்ளுபடி செய்ய நேர்ந்தது.

கடன் தொகையின் கூறுவாரியான போக்குகள், உள்நாட்டு கடன் வாங்கப்பட்டது மற்றும் மீள செலுத்தப்பட்டது என்பவற்றுக்கிடையேயான ஒப்பீடு ஆகியன **விளக்கப்படங்கள் 2.18** மற்றும் **2.19**ல் தரப்பட்டுள்ளன.

**விளக்கப்படம் 2.18: கடன் கூறுகளின் போக்குகள்**

*(₹ கோடியில்)*




| | 2017-18 | 2018-19 | 2019-20 | 2020-21 | 2021-22 |
|---|---|---|---|---|---|
| சந்தை கடன்கள் | 36,023 | 32,278 | 49,826 | 76,796 | 72,500 |
| இந்திய அரசிடமிருந்து பெற்ற கடன்கள் | 1,797 | 1,157 | 633 | 9,515 | 12,290 |
| NSSFக்கு வெளியிடப்பட்ட சிறப்பு பத்திரங்கள் | -1,749 | -1,777 | -1,803 | -1,803 | -1,803 |
| நிதி நிறுவனங்களிடமிருந்து பெற்ற கடன்கள் | 660 | 1,215 | 252 | 2,130 | 1,761 |
| சிறு சேமிப்பு, வருங்கால வைப்புநிதி போன்றவை | 2,334 | 2,450 | 2,365 | 2,877 | 2,680 |
| வைப்புத் தொகைகளும், முன்பணங்களும் | 8,074 | 10,635 | 8,123 | 16,437 | 10,714 |
| அநாமத்தும் பல்வகைகளும் | 388 | -3,037 | 5,682 | -6,981 | -43 |
| செலுத்துகைகள் | -7 | 207 | -3 | 0 | -6 |
| சேம நிதிகள் | 991 | 253 | 1,293 | 656 | 1,055 |
| எதிர்பாரா செலவு நிதி | 0 | 0 | 10 | 0 | 0 |
| ஒட்டுமொத்த பற்றாக்குறைகள் | 48,511 | 43,381 | 66,378 | 99,627 | 99,148 |
| ரொக்க இருப்பில் உயர்வு/குறைவு | 8,671 | -3,954 | 6,199 | 5,644 | 17,313 |
| மொத்த நிதிப் பற்றாக்குறை | 39,840 | 47,335 | 60,179 | 93,983 | 81,835 |

*(ஆதாரம்: உரிய ஆண்டிற்கான நிதி கணக்குகள்)*

*குறிப்பு:* பொருட்கள் மற்றும் சேவைவரி இழப்பீட்டிற்கு மாற்றாக மாநிலத்திற்கு கடன் வரவுகளின் கீழ் கடனாக வழங்கப்பட்ட ₹ 8,095.25 கோடியை, நிதிக் குழு பரிந்துரைத்தவாறு, நிதி குறியீடுகளுக்கு கடனாக கருதப்படக்கூடாது என மத்திய அரசின் செலவுத் துறை முடிவு செய்திருப்பதால், இந்திய அரசிடமிருந்து பெற்ற கடன்கள் *₹ 5,547.13 கோடியாக இருக்கும்.*

**விளக்கப்படம் 2.19: வாங்கப்பட்ட மற்றும் மீள செலுத்தப்பட்ட உள்நாட்டு கடன்கள்**

*(₹ கோடியில்)*




*(ஆதாரம்: உரிய ஆண்டிற்கான நிதி கணக்குகள்)*

நிதி பற்றாக்குறையின் கூறுகள் மற்றும் அது ஈடு செய்யப்பட்ட வழிகள் **அட்டவணை 2.34**ல் தரப்பட்டு மற்றும் நிதி பற்றாக்குறையை ஈடு செய்வதற்கான நிதிகள் அருவி வகையிலான **விளக்கப்படம் 2.20**ல் மூலம் விளக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 2.34: நிதி பற்றாக்குறையின் கூறுகள் மற்றும் அது ஈடு செய்யப்பட்ட வழிகள்**

*(₹ கோடியில்)*

| விவரங்கள் | | 2017-18 | 2018-19 | 2019-20 | 2020-21 | 2021-22 |
|---|---|---|---|---|---|---|
| **நிதி பற்றாக்குறையின் கூறுகள்** | | **39,840** | **47,335** | **60,179** | **93,983** | **81,835** |
| 1 | வருவாய் வகை பற்றாக்குறை | 21,594 | 23,459 | 35,909 | 62,326 | 46,538 |
| 2 | நிகர மூலதன வகை செலவு | 20,201 | 24,311 | 25,632 | 33,067 | 37,011 |
| 3 | நிகர கடன்கள் மற்றும் முன்பணங்கள் | (-) 1,955 | (-) 435 | (-) 1,362 | (-) 1,410 | (-) 1,714 |
| **நிதி பற்றாக்குறை ஈடு செய்யப்பட்ட வழிகள்** | | | | | | |
| 1 | சந்தை கடன்கள் | 36,023 | 32,278 | 49,826 | 76,796 | 72,500 |
| 2 | இந்திய அரசிடமிருந்து கடன்கள் | 1,797 | 1,157 | 633 | 9,515 | 12,290* |
| 3 | NSSFக்கு அளிக்கப்பட்ட சிறப்பு பத்திரங்கள் | (-) 1,749 | (-) 1,777 | (-) 1,803 | (-) 1,803 | (-) 1,803 |
| 4 | நிதி நிறுவனங்களிடமிருந்து கடன்கள் | 660 | 1,215 | 252 | 2,130 | 1,761 |
| 5 | சிறு சேமிப்பு, வருங்கால வைப்பு நிதி போன்றவை | 2,334 | 2,450 | 2,365 | 2,877 | 2,680 |
| 6 | வைப்புத் தொகைகள் மற்றும் முன்பணங்கள் | 8,074 | 10,635 | 8,123 | 16,437 | 10,714 |
| 7 | அநாமத்து மற்றும் பல்வகை | 388 | (-) 3,037 | 5,682 | (-) 6,981 | (-) 43 |
| 8 | செலுத்துகைகள் | (-) 7 | 207 | (-) 3 | -- | (-) 6 |
| 9 | சேம நிதிகள் | 991 | 253 | 1,293 | 656 | 1,055 |
| 10 | எதிர்பாரா செலவு நிதி | -- | -- | 10 | -- | -- |
| 11 | **ஒட்டுமொத்த பற்றாக்குறை** | **48,511** | **43,381** | **66,378** | **99,627** | **99,148** |
| 12 | ரொக்க இருப்பில் கூடுதல் / குறைவு | 8,671 | (-) 3,954 | 6,199 | 5,644 | 17,313 |
| 13 | **மொத்த நிதி பற்றாக்குறை** | **39,840** | **47,335** | **60,179** | **93,983** | **81,835** |

(*ஆதாரம்: உரிய ஆண்டிற்கான நிதி கணக்குகள்*) * பொருட்கள் மற்றும் சேவைவரி இழப்பீட்டிற்கு மாற்றாக மாநிலத்திற்கு கடன் வரவுகளின் கீழ் கடனாக வழங்கப்பட்ட ₹ 8,095.25 கோடியை, நிதிக் குழு பரிந்துரைத்தவாறு, நிதி குறியீடுகளுக்கு கடனாக கருதப்படக்கூடாது என மத்திய அரசின் செலவுத் துறை முடிவு செய்திருப்பதால், இந்திய அரசிடமிருந்து பெற்ற கடன்கள் *₹ 4,195 கோடியாக இருக்கும்.*

**விளக்கப்படம் 2.20: நிதி பற்றாக்குறையை ஈடு செய்யப்பட்ட வழிகள்**

*(₹ கோடியில்)*




*(ஆதாரம் : நிதி கணக்குகள்)*

நிதி பற்றாக்குறையை ஈடு செய்யும் கூறுவாரியான வரவுகள் மற்றும் செலுத்தங்கள் பற்றிய விவரங்கள் **அட்டவணை 2.35**ல் தரப்பட்டுள்ளன.

**அட்டவணை 2.37: நிதி பற்றாக்குறையை ஈடு செய்யும் கூறுகளின் கீழ் வரவுகள் மற்றும் செலவுகள்**

*(₹ கோடியில்)*

| வ. எண் | விவரங்கள் | வரவு | செலவு | நிகர தொகை |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 | சந்தை கடன்கள் | 87,000 | 14,500 | 72,500 |
| 2 | இந்திய அரசிடமிருந்து கடன்கள் | *13,642 | 1,352 | 12,290 |
| 3 | NSSFக்கு அளிக்கப்பட்ட சிறப்பு பத்திரங்கள் | -- | 1,803 | (-) 1,803 |
| 4 | நிதி நிறுவனங்களிடமிருந்து கடன்கள் | 3,843 | 2,082 | 1,761 |
| 5 | சிறு சேமிப்பு, வருங்கால வைப்பு நிதி போன்றவை | 9,054 | 6,374 | 2,680 |
| 6 | வைப்புத்தொகைகள் மற்றும் முன்பணங்கள் | 78,091 | 67,377 | 10,714 |
| 7 | அநாமத்து மற்றும் பல்வகை | 3,06,841 | 3,06,884 | (-) 43 |

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| 8 | செலுத்துகைகள் | -- | 6 | (-) 6 |
| 9 | சேம நிதிகள் | 4,170 | 3,115 | 1,055 |
| 10 | எதிர்பாரா செலவு நிதி | -- | -- | -- |
| **11** | **மொத்த / ஒட்டுமொத்த பற்றாக்குறை** | **5,02,641** | **4,03,493** | **99,148** |
| 12 | ரொக்க இருப்பில் உயர்வு | 72,386 | 55,073 | 17,313 |
| **13** | **மொத்த நிதி பற்றாக்குறை** | **4,30,255** | **3,48,420** | **81,835** |

*(ஆதாரம்: நிதி கணக்குகள்)*

* பொருட்கள் மற்றும் சேவைவரி இழப்பீட்டிற்கு மாற்றாக மாநிலத்திற்கு கடன் வரவுகளின் கீழ் கடனாக வழங்கப்பட்ட ₹ 8,095.25 கோடியை, நிதிக் குழு பரிந்துரைத்தவாறு, நிதி குறியீடுகளுக்கு கடனாக கருதப்படக்கூடாது என மத்திய அரசின் செலவுத் துறை முடிவு செய்திருப்பதால், இந்திய அரசிடமிருந்து பெற்ற கடன்கள் *₹ 5,547.13 கோடியாக இருக்கும்.*

### 2.6.3 கடன் விவரங்கள்: முதிர்வு மற்றும் மீள செலுத்துதல்

கடன் முதிர்வு மற்றும் மீள செலுத்துதல் என்பது, கடனை மீள செலுத்துவது அல்லது அதற்குரிய தொகைகளை செலுத்துவதற்கான அரசின் பொறுப்புடைமையை குறிக்கும். கடன் மற்றும் அதனை மீள செலுத்துவதற்கான காலம் குறித்த விவரங்கள் **அட்டவணை 2.36** மற்றும் **விளக்கப்படம் 2.21**ல் தரப்பட்டுள்ளன.

**அட்டவணை 2.36: கடன் முதிர்வு பற்றிய நிலை**

| மீள செலுத்துவதற்கான காலம் (ஆண்டுகள்) | தொகை (₹ கோடியில்) | *விழுக்காடு* (பொது கடனில்) |
|---|---|---|
| 0-1 | 23,507 | *4.34* |
| > 1 - 3 | 74,968 | *13.83* |
| > 3 - 5 | 85,808 | *15.83* |
| > 5 - 7 | 93,797 | *17.31* |
| > 7 | 2,10,671 | *38.88* |
| மற்றவை [8] | 53,185 | *9.81* |
| **மொத்தம்** | **5,41,936** | ***100.00*** |

*(ஆதாரம்: நிதி கணக்குகள்)*

[8] இத்தொகைக்கான செலுத்தல் விவரங்களை மாநில கணக்காயர் (கணக்கு மற்றும் பணிவரவுகள்) அவர்கள் பராமரிப்பதில்லை.

விளக்கப்படம் 2.21: சந்தை கடன்களை மீள செலுத்தும் நிரல்

(₹ கோடியில்)




*(ஆதாரம்: நிதி கணக்குகள்)*

அடுத்த பத்தாண்டுகளில் திருப்பிச் செலுத்தப்படும் நிலுவையிலுள்ள சந்தை கடன்களின் விவரங்கள் (2022-23 ஆண்டிலிருந்து) **அட்டவணை 2.37**லும் மற்றும் **விளக்கப்படம் 2.22**லும் கொடுக்கப்பட்டுள்ளன.

அட்டவணை 2.37 : திருப்பிச் செலுத்தப்படும் கடன்கள் மற்றும் வட்டி

| ஆண்டு | திருப்பிச் செலுத்தப்படும் | | |
|---|---|---|---|
| | சந்தை கடன்கள் | வட்டி | மொத்தம் |
| 2022-23 | 18,996.81 | 1632.72 | 20,629.53 |
| 2023-24 | 35,749.15 | 2,703.30 | 38,452.45 |
| 2024-25 | 30,450.00 | 2,451.09 | 32,901.09 |
| 2025-26 | 37,375.00 | 2,926.18 | 40,301.18 |
| 2026-27 | 40,610.00 | 3,069.34 | 43,679.34 |
| 2027-28 | 45,635.32 | 3,449.23 | 49,084.55 |
| 2028-29 | 40,905.50 | 3,320.89 | 44,226.39 |
| 2029-30 | 31,150.00 | 2,248.86 | 33,398.86 |
| 2030-31 | 50,977.00 | 3,466.94 | 54,443.94 |
| 2031-32 | 34,100.00 | 2,396.15 | 36,496.15 |

**விளக்கப்படம் 2.22: சந்தை கடன்களை செலுத்துதல்**




*(ஆதாரம்: நிதி கணக்குகள்)*

மாநிலத்தின் நிலுவையிலுள்ள கடன்கள் மற்றும் வட்டியை அடுத்த பத்தாண்டுகளில் திருப்பிச் செலுத்துகைகளின் போக்கு மேற்கண்டவாறு ஏற்ற இறக்கத்துடன் காணப்பட்டது. அடுத்த பத்தாண்டுகளில் மாநிலத்தின் வட்டி பொறுப்பு ₹ 27,664.70 கோடியாகவும், சந்தைகடன்கள் ₹ 3,65,948.78 கோடியாகவும் இருக்கும்.

## 2.7 கடன் தாங்கு தன்மை பற்றிய பகுப்பாய்வு

கடன் தொடர்பான தொகைகளை நடப்பாண்டு மற்றும் வரும் ஆண்டுகளில் செலுத்துவதற்குரிய அரசின் ஆற்றல் கடன் தாங்கு தன்மை எனப்படும். மேற்படி தன்மை, நடப்பு காலத்துடன் துவங்கும் ஒரு காலகட்டத்தில் கடன் தொடர்பான நிதி பொறுப்புகளை ஏற்கக்கூடிய சாத்தியக்கூறை கணக்கில் கொள்கிறது; அது பொருளாதாரத்தின் நிதி நிலையை மதிப்பிடுவதற்கு ஒரு முக்கிய காரணி ஆகும். உயர் அளவிலான கடன் நிலை பெரும் எண்ணிக்கையிலான இடர்களை உருவாக்கும். உயர் அளவிலான கடன் நிலை பொதுவாக, அதிக அளவில் கடன் வாங்கும் தேவைகளுடனும், அதன் காரணத்தால் கடன் பெற இயலாத நிலையுடனும் (கடன் வாங்கும் தேவைகளை நிறைவு செய்ய இயலாமை அல்லது உயர் வட்டி விகிதங்களில் வாங்குவது) தொடர்பு கொண்டது ஆகும்.

கடன் தாங்கு நிலைக்கான குறியீடுகளில் 2017-18 முதல் 2021-22 வரையிலான காலகட்டத்தில் இருந்த போக்குகள் **அட்டவணை 2.38** மற்றும் **விளக்கப்படம் 2.23**ல் தரப்பட்டுள்ளன.

**அட்டவணை 2.38: கடன் தாங்கு நிலைக்கான குறியீடுகளின் போக்குகள்**

| கடன் தாங்கு நிலைக்கான குறியீடுகள் | 2017-18 | 2018-19 | 2019-20 | 2020-21 | 2021-22 |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| நிலுவையில் உள்ள பொது கடன்* *(₹ கோடியில்)* | 2,88,769 | 3,21,642 | 3,70,550 | 4,57,188 | 5,41,936 |
| நிலுவையில் உள்ள பொது கடன் தொகையின் வளர்ச்சி விகிதம் (விழுக்காடு) | *14.57* | *11.38* | *15.21* | *23.38* | 18.54 |
| GSDP *(₹ கோடியில்)* | 14,65,051 | 16,30,209 | 17,43,144 | 18,08,239 | 20,65,436 |
| GSDP வளர்ச்சி விகிதம் (விழுக்காடு) | *12.47* | *11.27* | *6.93* | *3.73* | *14.22* |
| பொது கடன்*/GSDP (விழுக்காடு) | *19.71* | *19.73* | *21.26* | *25.28* | *26.24* |
| மாநில கடன்களை திருப்பி செலுத்துவதற்கான கடன் முதிர்வு குறிப்பு – செலுத்து தவறியது ஏதேனும் இருப்பின், உட்பட | | | | | |
| நிலுவையில் உள்ள பொது கடனுக்கான சராசரி வட்டி விகிதம் (விழுக்காடு) | 8.01 | 7.97 | 7.71 | 7.49 | 7.11 |
| வருவாய் வகை வரவில் செலுத்தப்பட்ட வட்டி தொகையின் விழுக்காடு | 17.78 | 16.55 | 18.32 | 20.97 | 20.03 |
| பெறப்பட்ட கடனில் மீள செலுத்தப்பட்ட கடனின் விழுக்காடு | 19.66 | 31.43 | 26.76 | 15.78 | 18.89 |
| அரசுக்கு கிடைத்த நிகர கடன் # *(₹ கோடியில்)* | 15,064 | 8,562 | 22,218 | 55,656 | 41,132 |
| கடன் வரவுகளில் நிகர கடனின் விழுக்காடு | 32.95 | 17.86 | 33.27 | 54.10 | 39.37 |
| கடன் நிலைப்படுத்துதல் (குவைய பரவல்$ + முதன்மை பற்றாக்குறை) | (-) 2,662 | (-) 8,782 | (-) 32,403 | (-) 74,478 | (-) 21,897 |

*(ஆதாரம்: உரிய ஆண்டிற்கான நிதி கணக்குகள்)*

* *நிலுவையில் உள்ள பொது கடன் என்பது, 6003 - உள்நாட்டு கடன் மற்றும் 6004 – மத்திய அரசிடமிருந்து பெறப்பட்ட கடன்கள் மற்றும் முன்பணங்கள் ஆகிய தலைப்புகளின் கீழ் நிலுவையில் இருந்த தொகைகளின் கூட்டுத்தொகை ஆகும்.* கடனாக 2020-21ல் பெறப்பட்ட ₹ 6,241 கோடி மற்றும் 2021-22ல் பெறப்பட்ட ₹ 8,095 கோடியை தவிர்த்து பார்த்தால், *2021-22ல் நிலுவையிலுள்ள பொதுகடன்* ₹ 5,27,600 கோடியாக இருக்கும்.

# *மாநில அரசுக்கு கிடைத்த நிகர கடன் என்பது, மீள செலுத்தப்பட்ட பொது கடன் மற்றும் பொது கடன் மீது செலுத்தப்பட்ட வட்டி இவற்றின் மொத்த தொகைக்கு மேற்பட்ட பொது கடன் வரவுகள் என்ற வகையில் கணக்கிடப்படும்*

$ குவைய பரவல் = {முந்தைய ஆண்டு நிதி பொறுப்பு (கடனிருப்பு) *வட்டி பரவல் (GSDP வளர்ச்சி விகிதம் - செலுத்தப்பட்ட சராசரி வட்டி)}/100

விளக்கப்படம் 2.23: கடன் தாங்கு நிலைக்கான குறியீட்டுகளின் போக்குகள்




*(ஆதாரம்: உரிய ஆண்டிற்கான நிதி கணக்குகள்)*

*கடனாக 2020-21ல் பெறப்பட்ட ₹ 6,241 கோடி மற்றும் 2021-22ல் பெறப்பட்ட ₹ 8,095 கோடி நீங்கலாக

பொருட்கள் மற்றும் சேவைவரி இழப்பீட்டிற்கு மாற்றாக மாநிலத்திற்கு கடன் வரவுகளின் கீழ் 2020-21ல் கடனாக வழங்கப்பட்ட ₹ 6,241 கோடி மற்றும் 2021-22ல் வழங்கப்பட்ட ₹ 8,095 கோடியை, நிதிக் குழு பரிந்துரைத்தவாறு, நிதி குறியீடுகளுக்கு கடனாக கருதப்படக்கூடாது என மத்திய அரசின் செலவுத் துறை முடிவு செய்திருப்பதால், நிலுவையிலுள்ள கடன் பொறுப்புகள் ₹ 5,27,600 கோடியாக இருக்கும். நிலுவையிலுள்ள பொது கடன்களுக்கும் GSDPக்குமான விகிதம் 25.54 விழுக்காடாக இருக்கும்

- கடனுக்கும் GSDPக்கும் ஆன விகிதம் நிலையானதாகவோ அல்லது காலப்போக்கில் குறைந்து வருவதாகவோ உள்ள நிதி கொள்கை தொடர்ந்து பின்பற்றத்தக்க கொள்கையாக கருதப்படும். எனினும், மேற்கண்டவற்றில் இருந்து, அவ்விகிதம் உயர்ந்து வரும் போக்கில் உள்ளதை காணலாம்; இது கடன்கள் உயர் அளவுகளில் உள்ளதை காட்டும் மற்றும் உயர் அளவிலான பற்றாக்குறைகளுக்கு வழி வகுக்கும்

- வருவாய் வகை வரவுகளுக்கும் செலுத்தப்படும் வட்டிக்கும் இடையேயான விகிதம் சிறிதளவு குறைந்து 20.03 விழுக்காடாக இருந்தது. கடனாக பெறப்படும் தொகையில் கணிசமான பகுதி கடன்களை மீள செலுத்தவும் அவற்றின் மீதான வட்டியை செலுத்தவும் பயன்படுத்தப்பட்டால், வளர்ச்சி பணிகளுக்காக அரசுக்கு கிட்டும் நிகர தொகை குறையும்.

### 2.7.1 வாங்கப்பட்ட கடனின் பயன்பாடு

கடனாக வாங்கப்பட்ட நிதி முக்கியமாக ஒரு சிறந்த நிலையில் மூலதன உருவாக்கம் மற்றும் வளர்ச்சி பணிகளுக்காக பயன்படுத்தப்பட வேண்டும். கடனாக வாங்கப்பட்ட

நிதியை நடப்பு கால செலவுகளுக்கும் நிலுவையில் உள்ள கடன்களுக்கான வட்டியை செலுத்துவதற்கும் பயன்படுத்துவது என்பது நிலைத்திருக்கக்கூடியது அல்ல.

2017-18 முதல் 2021-22 வரையிலான காலகட்டத்தில், கடனாக வாங்கப்பட்ட நிதி பயன்படுத்தப்படுவதில் இருந்த போக்குகள் **அட்டவணை 2.39** மற்றும் **விளக்கப்படம் 2.24**ல் காட்டப்பட்டுள்ளன.

**அட்டவணை 2.39: கடனாக வாங்கப்பட்ட நிதியின் பயன்பாடு**

*(₹ கோடியில்)*

| ஆண்டு | | 2017-18 | 2018-19 | 2019-20 | 2020-21 | 2021-22 |
|---|---|---|---|---|---|---|
| கடனாக வாங்கப்பட்ட மொத்த தொகை (பொது கடன்) | **A** | 45,722 | 47,936 | 66,774 | 1,02,867 | 1,04,485* |
| முந்தைய கடன் மீள செலுத்தப்பட்டது (அசல்) (விழுக்காடு) | **B** | 8,991 *(19.66)* | 15,064 *(31.43)* | 17,866 *(26.75)* | 16,229 *(15.78)* | 19,737 *(18.89)* |
| நிகர மூலதன வகை செலவு (விழுக்காடு) | **C** | 20,203 *(44.19)* | 24,311 *(50.72)* | 25,632 *(38.39)* | 33,067 *(32.14)* | 37,011 *(35.42)* |
| நிகர கடன்கள் மற்றும் முன்பணங்கள் | **D** | 1,955 (4.28) | 435 (0.90) | 1,362 (2.04) | 1,410 (1.37) | 1,714 (1.64) |
| நிகர கடன் தொகையில் வருவாய் வகை செலவு மேற்கொள்ளப்பட்ட அளவு | **E = A-B-C-D** | 14,573 (31.87) | 8,126 (16.95) | 21,914 (32.82) | 52,161 (50.71) | 46,023 (44.05) |

*(ஆதாரம்: உரிய ஆண்டிற்கான நிதி கணக்குகள்)*

* பொருட்கள் மற்றும் சேவைவரி இழப்பீட்டிற்கு மாற்றாக மாநிலத்திற்கு கடன் வரவுகளின் கீழ் கடனாக வழங்கப்பட்ட ₹ 8,095.25 கோடியை, நிதிக் குழு பரிந்துரைத்தவாறு, நிதி குறியீடுகளுக்கு கடனாக கருதப்படக்கூடாது என மத்திய அரசின் செலவுத் துறை முடிவு செய்திருப்பதால், பொதுகடன் வரவுகள் ₹ 96,390 *கோடியாகும்.*

- கடன் தொகையிலிருந்து 44.05 விழுக்காடு வருவாய் வகை செலவினத்திற்கு பயன்படுத்தப்பட்டது.
- நடப்பாண்டில் கடன்கள் சிறிதளவு (1.57 விழுக்காடு) உயர்ந்ததற்கு, வருவாய் வரவினங்களில் பெருமளவு உயர்வே (19.20 விழுக்காடு) காரணமாகும்.

**விளக்கப்படம் 2.24: வாங்கப்பட்ட கடன் தொகை பயன்படுத்தப்படும் போக்கு**




(ஆதாரம்: உரிய ஆண்டிற்கான நிதி கணக்குகள்)

### 2.7.2 உத்தரவாதங்களின் நிலை - எதிர்பாரா பொறுப்புகள்

அரசு உத்தரவாதம் அளித்ததன் அடிப்படையில் கடனை பெற்றவர் அக்கடனை மீள செலுத்த தவறும் நிலையில் அரசு அத்தொகையை செலுத்த வேண்டிய எதிர்பாரா பொறுப்புகள் மாநில தொகுநிதிக்கு உண்டு. உத்தரவாதங்கள் தொடர்பான அதிகபட்ச அளவை விதிக்கும் சட்டங்கள் அல்லது உத்தரவுகளை மாநில அரசுகள் பிறப்பித்துள்ளன.

இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் பிரிவு 293ன்படி, மாநில அரசுகள் உத்தரவாதங்களை அளிப்பதற்கான வரையறைகளை மாநில சட்டமன்றங்கள் விதிக்க வேண்டும். நிலுவையில் இருக்கக்கூடிய மொத்த உத்தரவாதங்களுக்கு முந்தைய ஆண்டின் மொத்த வருவாய் வகை வரவுகளின் 100 விழுக்காடு மற்றும் GSDPன் 10 விழுக்காடு என்பனவற்றுள் எது சிறியதோ அதனை அதிகபட்ச அளவாகவும், நிதி சுமை அடிப்படையிலான உத்தரவாதங்களுக்கு முந்தைய ஆண்டின் மொத்த வருவாய் வகை வரவுகளின் 75 விழுக்காடு மற்றும் GSDPன் 7.5 விழுக்காடு என்பனவற்றுள் எது சிறியதோ அதனை அதிகபட்ச அளவாகவும், தமிழ்நாடு நிதி பொறுப்புடைமை சட்டம் 2003 விதித்துள்ளது.

மார்ச் 31, 2022 நிலையில் நிலுவையில் இருந்த மாநில அரசின் மொத்த உத்தரவாதங்கள் ₹ 91,975.39 கோடி ஆகும். இது 2020-21ன் மொத்த வருவாய் வகை வரவுகளில் (₹ 1,74,076.30 கோடி) 52.84 விழுக்காடு மற்றும் GSDPல் (₹ 20,65,436 கோடி, தற்போதைய விலைவிகிதங்களில்) 4.45 விழுக்காடு ஆகும். அரசு அளித்த உத்தரவாதம் எதுவும் நடப்பாண்டில் பயன்படுத்தப்படவில்லை. உத்தரவாத கட்டணமாக பெறக்கூடிய தொகை ₹ 1,733.90 கோடி என மதிப்பிடப்பட்டதற்கு எதிராக, அரசு உள்ளபடியே ஈட்டியது ₹ 295.89 கோடி ஆகும். இவ்வாறாக, உத்தரவாத கட்டணம் ஈட்டுவதில் ₹ 1,438.01 கோடி குறைவு இருந்தது.

2017-18 முதல் 2021-22 வரையிலான காலகட்டத்தில் நிலுவையில் இருந்த அரசின் உத்தரவாதங்கள், வட்டி உட்பட, பற்றிய விவரங்கள் **விளக்கப்படம் 2.25**ல் தரப்பட்டுள்ளன.

**விளக்கப்படம் 2.25: மாநில அரசால் வழங்கப்பட்ட உத்தரவாதங்கள்**




*(ஆதாரம்: உரிய ஆண்டிற்கான நிதி கணக்குகள்)*

### 2.7.3 ரொக்க இருப்பு மேலாண்மை

ரிசர்வ் வங்கியுடனான ஒப்பந்தத்தின்படி, மாநில அரசு ஒவ்வொரு நாளும் ₹ 3.25 கோடி குறைந்தபட்ச ரொக்கத்தை வங்கியுடனான கணக்கில் வைத்திருக்க வேண்டும். ஏதாவதொரு நாளில் மீத தொகை இந்த குறைந்தபட்ச அளவைவிட குறைந்தால், அப்பற்றாக்குறையை அவ்வப்போது சாதாரண வழிவகை முன்பணங்கள் / சிறப்பு வழிவகை முன்பணங்கள் / மிகைப்பற்று பெறுவதன் மூலம் சரி செய்யலாம். அரசு பெறக்கூடிய சாதாரண வழிவகை முன்பணங்களுக்கான வரம்பு 31 மார்ச் 2022 முதல் ₹ 3,601 கோடி ஆகும். சிறப்பு வழிவகை முன்பணங்களுக்கான வரம்பை வங்கி அவ்வப்போது திருத்தி அமைக்கும். மாநில அரசு தனது உபரி ரொக்க மீதத்தை குறுகிய மற்றும் நீண்ட கால இந்திய அரசு கடன் பத்திரங்களில் முதலீடு செய்கிறது. அத்தகைய முதலீடுகளிலிருந்து ஈட்டப்படும் ஆதாயங்கள் ‘0049 - வட்டி வரவுகள்’ என்ற தலைப்பின் கீழ் வரவுகளாக வரவு வைக்கப்படும். ரொக்க மீதங்கள் ஒருங்கிணைக்கப்பட்ட கடன்தீர் நிதி மற்றும் உத்தரவாத மீட்பு நிதி ஆகியவற்றிலும் முதலீடு செய்யப்படும்.

மாநில அரசு 2021-22ல் மேற்குறிப்பிட்ட அளவிலான குறைந்தபட்ச தினசரி ரொக்க மீதத்தை ரிசர்வ் வங்கியில் வைத்திருந்தது; சாதாரண மற்றும் சிறப்பு வழிவகை முன்பணங்கள் மற்றும் மிகைப்பற்று தொகைகள் எதையும் பெறவில்லை.

2021-22 ஆண்டில் இருந்த ரொக்க மீதம் மற்றும் அதன் முதலீடுகள் பற்றிய விவரங்கள் **அட்டவணை 2.40**ல் தரப்பட்டுள்ளன.

**அட்டவணை 2.40: ரொக்க மீதங்கள் மற்றும் அதன் முதலீடுகள்**

*(₹ கோடியில்)*

| | 1 ஏப்ரல் 2021 அன்று துவக்க இருப்பு | 31 மார்ச் 2022 அன்று இறுதி இருப்பு |
|---|---|---|
| **அ. பொதுவான ரொக்க மீதம்** | | |
| கருவூலங்களில் ரொக்கம் | -- | -- |
| ரிசர்வ் வங்கியில் வைப்பு | (-) 467.24 | 266.95 |
| பிற வங்கிகளில் வைப்பு | -- | -- |
| இறுதி செய்யப்படாத செலுத்தங்கள் - உள்ளூர் | 16.80 | 16.80 |
| **மொத்தம்** | **(-) 450.44** | **283.75** |
| ரொக்க மீத முதலீடுகள் கணக்கில் உள்ள முதலீடுகள் | 5,622.30 | 14,875.95 |
| **மொத்தம் (அ)** | **5,171.86** | **15,159.70** |
| **ஆ. பிற ரொக்க மீதங்கள் மற்றும் முதலீடுகள்** | | |
| பொதுப்பணி, வன துறைகளின் அலுவலர்களிடம் இருந்த ரொக்கம் | 4.16 | 4.16 |
| எதிர்பாரா செலவுகளுக்காக துறை அலுவலர்களிடம் இருந்த நிலையான முன்பணம் | 7.82 | 7.59 |
| குறிப்பிட்ட நோக்கங்களுக்கான நிதிகளில் முதலீடு | 49,888.96 | 57,214.65 |
| **மொத்தம் (ஆ)** | **49,900.94** | **57,226.40** |
| **மொத்தம் (அ + ஆ)** | **55,072.80** | **72,386.10** |
| **ஈட்டப்பட்ட வட்டி** | **3,524.47** | **3,917.94** |

***(ஆதாரம்: நிதி கணக்குகள்)***

மாநில அரசின் ஆண்டு இறுதி ரொக்க மீதங்கள் (மற்றும் அதன் முதலீடுகள்) 2020-21ல் ₹ 55,073 கோடி என்ற அளவிலிருந்து 2021-22ல் ₹ 72,386 கோடி என்ற அளவிற்கு ₹ 17,313 கோடி உயர்வு கண்டன.

இந்திய அரசு பத்திரங்கள் மற்றும் அரசு கடன் பத்திரங்களில் செய்யப்பட்டிருந்த முதலீடுகளிலிருந்து மாநில அரசு 2021-22ல் ₹ 121 கோடி வட்டி ஈட்டியது. ஆண்டின் இறுதியில் குறிப்பிட்ட நோக்கங்களுக்கான நிதிகளில் செய்யப்பட்டிருந்த ₹ 57,215 கோடி முதலீடுகளுள், ₹ 7,748.22 கோடி ஒருங்கிணைக்கப்பட்ட கடன் தீர் நிதியிலும், ₹ 1,008.49 கோடி உத்தரவாத மீட்பு நிதியிலும் முதலீடு செய்யப்பட்டிருந்தன.

2017-18 முதல் 2021-22 வரையிலான காலகட்டத்தில் அரசின் ரொக்க மீத முதலீடு கணக்கின் போக்கு, அக்காலகட்டத்தில் இருந்த ரொக்க மீதங்கள் மற்றும் வாங்கப்பட்ட சந்தை கடன்கள் ஆகியவற்றின் போக்கு **அட்டவணை 2.41** மற்றும் **விளக்கப்படம் 2.26**லும் தரப்பட்டுள்ளன; நடப்பாண்டில் ரொக்க மீதங்கள் மற்றும் ரொக்க மீத முதலீடுகளில் இருந்த மாதவாரியான மாற்றங்கள் **விளக்கப்படம் 2.27**ல் தரப்பட்டுள்ளன.

**அட்டவணை 2.41: ரொக்க மீத முதலீடு கணக்கு (பெருந்தலைப்பு – 8673)**

*(₹ கோடியில்)*

| ஆண்டு | துவக்க இருப்பு | இறுதி இருப்பு | உயர்வு (+) / குறைவு (-) | ஈட்டிய வட்டி |
|---|---|---|---|---|
| 2017-18 | 15,144.29 | 18,585.03 | 3,440.74 | 564.26 |
| 2018-19 | 18,585.03 | 11,008.09 | (-) 7,576.94 | 729.20 |
| 2019-20 | 11,008.09 | 10,141.94 | (-) 866.15 | 300.72 |
| 2020-21 | 10,141.94 | 5,622.30 | (-) 4,519.64 | 214.51 |
| 2021-22 | 5,622.30 | 14,875.95 | 9,253.65 | 120.58 |

*(ஆதாரம்: உரிய ஆண்டிற்கான நிதி கணக்குகள்)*

2017-22 காலகட்டத்தில் மாநில அரசின் ரொக்க மீத முதலீடுகளின் போக்கு மீதான பகுப்பாய்வு, 2017-18ல் முதலீடுகள் கணிசமாக உயர்ந்ததை காட்டியது. எனினும், முதலீடுகள் குறைந்துவரும் போக்கிலிருந்து, 2020-21 இறுதியில் ₹ 5,622 கோடி ஆக இருந்த முதலீடு கணிசமாக உயர்ந்து 2021-22 இறுதியில் ₹ 14,876 கோடியாக இருந்தது. அரசு, நிலுவையிலுள்ள பொது கடன்களுக்கு சராசரியாக 7.11 விழுக்காடு வட்டி செலுத்தி வரும் நிலையில், கருவூல பத்திரங்களில் செய்திருந்த முதலீடுகளுக்கு சராசரியாக 4.29 விழுக்காடு ஈட்டியது.

2017-22 காலகட்டத்தில் ரொக்க மீத முதலீடு கணக்கில் இருந்த மீதங்களையும் அரசு வாங்கிய சந்தை கடன்களையும் **விளக்கப்படம் 2.26** ஒப்பிடுகிறது. சந்தை கடன்கள் அதிக வட்டி விகிதங்களில் வாங்கப்பட்டன; ஆனால், அரசு கடன் பத்திரங்கள் மூலம் குறைவான விகித வட்டியே கிடைக்கப்பெற்றது.

**விளக்கப்படம் 2.26: சந்தை கடன்கள் மற்றும் ரொக்க மீத முதலீடுகள்**




*(ஆதாரம்: உரிய ஆண்டிற்கான நிதி கணக்குகள்)*

**விளக்கப்படம் 2.27: நடப்பாண்டில் மாதவாரியான ரொக்க மீதங்கள் மற்றும் நிகர மீத தொகையின் முதலீடுகள்**




*(ஆதாரம்: நிதி கணக்குகள்)*

நேர்மறை நிகர ரொக்க இருப்பு முதலீடு என்பது அந்தந்த மாதங்களில் அரசு கடன் பத்திரங்களில் முதலீடு செய்வதை குறிக்கும் (கணக்கு பெருந்தலைப்பு 8673) மற்றும் எதிர்மறை நிகர ரொக்க இருப்பு முதலீடு என்பது அந்தந்த மாதங்களில் கடன் பத்திரங்கள் முதிர்வுற்றாலோ அல்லது தள்ளுபடி செய்தாலோ அரசு கணக்கில் திரும்ப வரவு வைக்கப்படும்.

## 2.8 முடிவுரை மற்றும் பரிந்துரைகள்

**மாநிலத்தின் சொந்த நிதி ஆதாரங்கள்:**

**சொந்த வரி வருவாய்:** சொந்த வரி வருவாயின் ஆண்டு வளர்ச்சி விகிதம் 2021-22ல் 15.74 விழுக்காடாக இருந்தது.

மாநிலத்தின் சொந்த வரி வருவாய் 2021-22ல் அதன் GSDPல் 5.95 விழுக்காடு ஆகும்;

**வரியல்லாத வருவாய் :** மாநிலத்தின் வரியல்லாத வருவாய் 2021-22ல் முந்தைய ஆண்டைவிட ₹ 1,695 கோடி உயர்ந்தது. மாநிலத்தின் சொந்த நிதி ஆதாரங்களில் இதன் பங்கு 2020-21ல் 8.94 விழுக்காடு என்ற அளவிலிருந்து 2021-22ல் 8.98 விழுக்காடாக சிறிதளவு உயர்ந்தது.

**நிதி சேகரிப்பில் மாநிலத்தின் செயல்பாடு:** 2021-22ல் சொந்த வரி வருவாய் மற்றும் வரியல்லாத வருவாய், FFC, வரவு - செலவு திட்டம் மற்றும் MTFP கூறிய இலக்குகளைவிட கணிசமாக குறைந்திருந்தன.

***பரிந்துரை:*** வருவாய் நிலுவையை வசூலிக்கவும் வரி ஏய்ப்பை கண்டுபிடிக்கும் முறைமையை வலுப்படுத்தவும் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

***(பத்திகள் 2.3.2.2 மற்றும் 2.3.4)***

**வருவாய் வகை செலவு:** வருவாய் வகை செலவுகளின் வளர்ச்சி விகிதம் 2017-22 காலகட்டத்தில், 2017-18ல் 9.58 விழுக்காடு முதல் 2021-22ல் 7.46 விழுக்காடு வரை என மிகுந்த ஏற்றத்தாழ்வுகளை கொண்டிருந்தது. 2021-22ல் வருவாய் வகை செலவு முந்தைய ஆண்டைவிட ₹ 17,628 கோடி உயர்ந்திருந்தது. GSDPன் விழுக்காடு என்ற வகையில் அது 2020-21ல் 13.07 விழுக்காடு என்ற அளவிலிருந்து நடப்பாண்டில் 12.30 விழுக்காடாக குறைந்தது.

**மூலதன வகை செலவு** நடப்பாண்டில் 11.92 விழுக்காடு உயர்ந்தது. 2020-21ல் GSDPல் 1.83 விழுக்காடாக இருந்த மூலதன வகை செலவு நடப்பாண்டில் 1.79 விழுக்காடாக குறைந்தது. நடப்பாண்டில், அரசு இழப்பில் இயங்கும் நிறுவனங்கள்/ கழகங்களில், மார்ச் 2022ல் நிகர மதிப்பு கரைந்து விட்ட போதிலும், ₹ 263.58 கோடி முதலீடு செய்துள்ளது;

***பரிந்துரை:*** *இழப்பில் இயங்கும் நிறுவனங்கள் மீது தொடர்ந்து முதலீடு செய்யும் தேவை குறித்து தகுந்த முடிவு எடுப்பதற்கு, அரசு, சுதந்திரமான மூன்றாம் தரப்பு மதிப்பீடு செய்ய தொடங்க வேண்டும்*

***(பத்திகள் 2.4.1 மற்றும் 2.4.3)***

**தேசிய ஓய்வூதிய திட்டம்:** தமிழ்நாடு அரசு தேசிய ஓய்வூதிய திட்டத்தில் சேரவில்லை மற்றும் நிதி மேலாளரை நியமிக்கப்படவில்லை. DCPS பங்களிப்பை தொடர்ந்து LIC மற்றும் கருவூல பத்திரங்களில் முதலீடு செய்து ஆதாயமாக முறையே 5.47 விழுக்காடு மற்றும் 4.29 விழுக்காடு ஈட்டியது. இந்த காலகட்டத்தில் வருங்கால வைப்பு நிதி (GPF)க்குரிய வட்டி விகிதத்திற்கு ஈடான 7.10 விழுக்காடு விகிதத்தில் சந்தாதாரர்களுக்கு மாநில அரசு வட்டி செலுத்தியது.

நிதி மேலாளரை நியமிக்காததால் 2021-22ல் மட்டும், ₹ 670.36 கோடியை (சராசரி வட்டி வீதம் 4.88 விழுக்காடு) கூடுதல் சுமையாக அரசு தனது சொந்த ஆதாரங்களிலிருந்து செலுத்தியது. ஒவ்வொரு ஆண்டும் வட்டிச்சுமையும் கூடிக்கொண்டே வருகிறது. மாநில அரசு தேசிய ஓய்வூதிய திட்டத்தில் சேர்ந்து PFRD சட்டத்திற்கிணங்க நிதி மேலாளரை நியமித்திருந்தால், கூடுதல் வட்டி சுமையை தவிர்த்திருக்க முடியும் மற்றும் சந்தாதாரர்கள் தற்போது அரசு வழங்கும் GPF வட்டியான 7.10 விழுக்காடை விட கூடுதல் விழுக்காடாக 9.50 விழுக்காடு முதல் 9.91 விழுக்காடு வரை வட்டியை பெற்றிருந்திருப்பார்கள். இவ்வாறாக, PFRD சட்டப்படி தமிழ்நாடு அரசு தேசிய ஓய்வூதிய திட்டத்தில் சேராதது மற்றும் நிதி மேலாளரை நியமிக்கப்படாதது, தவிர்த்திருக்கக்கூடிய கூடுதல் செலவினத்திற்கு வழிவகுத்தது (2020-21லிருந்து ₹ 1,296.61 கோடி). இந்த தவிர்த்திருக்கக்கூடிய செலவினம் ஒவ்வொரு ஆண்டும் அதிகரித்து வருகிறது.

*பரிந்துரை: மேம்பட்ட ஆதாயத்தை உறுதி செய்யும் வகையில் நிதி மேலாளரை நியமிக்க அரசு ஆலோசிக்க வேண்டும்.*

***(பத்தி 2.4.2.3)***

# அத்தியாயம் 3
# வரவு - செலவு திட்ட மேலாண்மை

## அத்தியாயம் 3

## வரவு - செலவு திட்ட மேலாண்மை

### 3.1 வரவு - செலவு திட்ட நடைமுறை

ஆண்டுதோறும் செய்யப்படும் வரவு - செலவு திட்டமிடல் என்பது, பொது வள ஆதாரங்களை திறம்பட பயன்படுத்துவது குறித்து விளக்கமாக தெரிவிப்பதற்கான ஒரு வழியாகும். வரவு - செலவு திட்ட நடவடிக்கை, அடுத்த நிதியாண்டிற்கான துறைகளின் மதிப்பீடுகளை வடிவமைப்பதற்கான வழிகாட்டுதலை அத்துறைகளுக்கு அளிக்கும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் மாதம் வெளியிடப்படும் வரவு - செலவு திட்ட சுற்றறிக்கை மூலம் தொடங்குகின்றது. வரவு - செலவு திட்டம் தயாரிக்க மாநிலத்தில் வழக்கமாக பின்பற்றப்படும் செயல்முறை பின்வரும் விளக்கப்படத்தில் தரப்பட்டுள்ளன:

**வரவு - செலவு திட்ட நடைமுறை**




*CSS: மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள்; CS: மத்திய அரசு திட்டங்கள்; EAP: வெளிநாட்டு நிதியுதவி பெறும் திட்டங்கள்*

நிதி மசோதா, ஆண்டு நிதி அறிக்கை (வரவு - செலவு திட்டம்) மற்றும் மானிய கோரிக்கைகள் முறையே இந்திய அரசியலமைப்பு சட்டம், பிரிவுகள் 199, 202 மற்றும் 203 ஆகியவற்றின்படி அமைக்கப்படல் வேண்டும்.

இந்திய அரசியலமைப்பு சட்டம், பிரிவு 202ன்படி, ஒரு ஆண்டில் எதிர்நோக்கப்படும் வரவுகள் மற்றும் செலவுகள் குறித்த ஓர் அறிக்கை 'ஆண்டு நிதி அறிக்கை' என்ற வகையில் மாநில சட்டமன்றத்தில் தாக்கல் செய்யப்பட வேண்டும். வரவு - செலவு திட்டத்தில் தொகுநிதியில் சாட்டப்படும் செலவுகளும் பிற செலவுகளும் தனித்தனியாக காட்டப்பட வேண்டும். அவ்வறிக்கை வருவாய் வகையிலான செலவுகளை பிற செலவுகளிலிருந்து வேறுபடுத்தி காட்ட வேண்டும்.

### 3.1.1 2021-22ல் மொத்த ஒதுக்கீடு, உள்ளபடியான செலவுகள் மற்றும் சேமிப்பு / மிகையின் சுருக்கம்

2021-22 ஆண்டிற்கான மொத்த ஒதுக்கீடு, செலவு மற்றும் சேமிப்பு/மிகையின் சுருக்கம், அனுமதிக்கப்பட்ட/சாட்டிய வகைகளுக்கான பிரிவு விவரங்களுடன் **அட்டவணை 3.1**ல் கொடுக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 3.1: வரவு - செலவு திட்டத்தின் சுருக்கம்**

*(₹ கோடியில்)*

| *மொத்த ஒதுக்கீடு* | | *செலவு* | | *சேமிப்பு (-)* | | *மிகை (+)* | |
|---|---|---|---|---|---|---|---|
| அனுமதிக்கப்பட்டது | சாட்டியது | அனுமதிக்கப்பட்டது | சாட்டியது | அனுமதிக்கப்பட்டது | சாட்டியது | அனுமதிக்கப்பட்டது | சாட்டியது |
| 2,84,539 | 65,201 | 2,56,920 | 62,442 | (-) 27,624 | (-) 2,759 | (+) 5 | --* |

* 0.66 *கோடி*

*(ஆதாரம்: நிதியொதுக்க கணக்குகள்)*

மேற்கூறப்பட்டுள்ள ஒட்டுமொத்த அளவிலான ₹ 30,383 கோடி சேமிப்பிலிருந்து, குறிப்பிட்ட சில மானியங்கள்/நிதியொதுக்கங்களில் நேரிட்ட ₹ 5 கோடி மிகை செலவை கழித்தபின், நிகர சேமிப்பு ₹ 30,378 கோடி அளவில் இருந்தது.

2021-22ல் மாநில சட்டமன்றம் ஒப்புதல் அளித்த மூல மற்றும் துணை ஒதுக்கீடுகள், மறுநிதியொதுக்கங்கள் மற்றும் செலவு பற்றிய விவரங்கள் **விளக்கப்படம் 3.1**ல் கொடுக்கப்பட்டுள்ளன.

**விளக்கப்படம் 3.1: வரவு - செலவு திட்டம் மற்றும் செலவின் சுருக்கம்**




*(ஆதாரம்: நிதியொதுக்க கணக்குகள்)*

### 3.1.2 சாட்டிய மற்றும் அனுமதிக்கப்பட்ட செலவுகள்

2017-18 முதல் 2021-22 வரையிலான ஐந்தாண்டுகளில் நேர்ந்த மொத்த அனுமதிக்கப்பட்ட மற்றும் சாட்டிய செலவுகள் மற்றும் சேமிப்பு/மிகை பற்றிய விவரங்கள் **அட்டவணை 3.2**ல் கொடுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 3.2: சேமிப்பு/மிகையின் போக்குகள்**

*(₹ கோடியில்)*

| ஆண்டு | ஒதுக்கீடு | | செலவு | | நிகர சேமிப்பு (-) | |
|---|---|---|---|---|---|---|
| | அனுமதிக்கப்-பட்டது | சாட்டியது | அனுமதிக்கப்-பட்டது | சாட்டியது | அனுமதிக்கப்-பட்டது | சாட்டியது |
| 2017-18 | 1,98,227 | 38,574 | 1,72,362 (87) | 36,260 (94) | (-) 25,865 (13) | (-) 2,314 (6) |
| 2018-19 | 2,21,168 | 46,825 | 2,03,324 (92) | 44,846 (96) | (-) 17,844 (8) | (-) 1,980 (4) |
| 2019-20 | 2,36,358 | 51,995 | 2,10,349 (89) | 50,910 (98) | (-) 26,009 (11) | (-) 1,084 (2) |
| 2020-21 | 2,82,839 | 56,133 | 2,40,033 (85) | 53,720 (96) | (-) 42,806 (15) | (-) 2,413 (4) |
| 2021-22 | 2,84,539 | 65,201 | 2,56,920 (90) | 62,442 (96) | (-) 27,619 (10) | (-) 2,759 (4) |

*அடைப்புக்குறிகளுக்குள் உள்ள இலக்கம் விழுக்காட்டை குறிக்கும்*
*(ஆதாரம்: உரிய ஆண்டிற்கான நிதியொதுக்க கணக்குகள்)*

நடப்பாண்டில் அனுமதிக்கப்பட்ட மானியத்தின் பயன்பாடு 90 விழுக்காடாக இருந்தது, இது முந்தைய ஆண்டை விட ஐந்து விழுக்காடு அதிகரித்துள்ளது.

## 3.2 நிதியொதுக்க கணக்குகள்

ஒவ்வொரு நிதி ஆண்டிலும், நிதியொதுக்கீட்டு சட்டத்தில் இணைக்கப்பட்டுள்ள அட்டவணைகளில் குறிப்பிட்டுள்ள பல்வேறு பணிகளுக்கான அனுமதிக்கப்பட்ட[1] மானியங்கள் மற்றும் சாட்டிய[2] நிதியொதுக்கங்களுக்கு எதிராக அரசு செய்த செலவிற்கான கணக்குகள் நிதியொதுக்க கணக்குகள் எனப்படும். இக்கணக்குகள், வரவு - செலவு திட்ட நிலையிலான மூல ஒதுக்கீடுகள், துணை ஒதுக்கீடுகள், நிதி ஒப்படைப்புகள் மற்றும் மறுநிதியொதுக்கங்கள் ஆகியவற்றை காட்டுவதுடன், வரவு - செலவு திட்டத்தில் அனுமதித்தது மற்றும் சாட்டியது என்ற இரு இனங்கள் தொடர்பாகவும் நிதியொதுக்கீட்டு சட்டம் அனுமதித்த தொகைகளுக்கெதிராக பல்வேறு பணிகளுக்காக செய்யப்பட்ட உள்ளபடியான வருவாய் மற்றும் மூலதன வகை செலவுகளையும் காட்டுகின்றன. இவ்வகையில், நிதியொதுக்க கணக்குகள் நிதி பயன்பாடு பற்றி புரிந்துகொள்ள உதவி செய்து, நிதிக்கணக்குகளுக்கு இணை ஆவணங்களாக திகழ்கின்றன.

நிதியொதுக்கங்கள் மீதான இந்திய தணிக்கை துறைத் தலைவரின் தணிக்கை, பல்வேறு மானியங்களின் கீழ் உள்ளபடியே செய்யப்பட்ட செலவு நிதியொதுக்க சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அனுமதியை ஒட்டி உள்ளதா மற்றும் அரசியலமைப்பு சட்டத்தின் (பிரிவு 202) வழிவகைகளின் கீழ் சாட்டப்பட வேண்டிய செலவு அவ்வாறே சாட்டப்பட்டதா என்பவற்றை அறிய விழைகிறது. செய்யப்பட்ட

---

1 குறிப்பிட்ட நோக்கங்களுக்கான மானிய கோரிக்கைகளுக்கு சட்டமன்றம் ஒப்புதல் அளித்த தொகைகள்

2 மாநில சட்டமன்ற ஒப்புதலுக்கு உட்படாமல், மாநில தொகுநிதியில் நேரடியாக சாட்டப்படும் தொகை.

செலவானது, சட்டங்கள் தொடர்புடைய விதிகள், ஒழுங்குமுறைகள் மற்றும் அறிவுறுத்தல்களுடன் ஒத்திருக்கிறதா என்பதை அறியவும் அது விழைகிறது.

## 3.3 வரவு - செலவு திட்டம் மற்றும் கணக்கு வைப்பு முறையின் நம்பகத்தன்மை

இந்திய அரசியலமைப்பு சட்டம், பிரிவு 202ன்படி, ஒரு ஆண்டில் எதிர்நோக்கப்படும் வரவுகள் மற்றும் செலவுகள் குறித்த ஓர் அறிக்கை 'ஆண்டு நிதி அறிக்கை' என்ற வகையில் மாநில சட்டமன்றம்/மன்றங்களில் தாக்கல் செய்யப்பட வேண்டும். இவ்வறிக்கையானது தொகுநிதியில் சாட்டப்பட்ட செலவுகளையும், பிற செலவுகளையும் தனித்தனியாக காட்ட வேண்டும். மேலும், வருவாய் வகையிலான செலவுகளை பிற செலவுகளிலிருந்து வேறுபடுத்தி காட்ட வேண்டும்.

### 3.3.1 சட்டப்படியான அதிகாரமில்லாமல் செய்யப்பட்ட செலவு

இந்திய அரசியலமைப்பு சட்டம், பிரிவு 204ன் வழிவகைகளுக்கு இணங்க நிறைவேற்றப்பட்ட சட்டத்தின்படியான நிதியொதுக்கம் தவிர்த்து வேறு எந்த வழிவகையிலும் மாநில தொகுநிதியிலிருந்து பணம் எடுக்கப்படக்கூடாது. நிதியாண்டிலேயே துணை அல்லது கூடுதல் ஒதுக்கீடு அல்லது நிதியொதுக்கம் இந்திய அரசியலமைப்பு சட்டம், பிரிவு 205ன் வழிவகைகளுக்கு இணங்க அந்த நிதியாண்டில் வழங்கப்படுகிறது. இது, வரவு - செலவு திட்ட தொகையை விட கூடுதலாக ஏற்படும் செலவை எதிரேற்பதற்கான ஒதுக்கீடாகும்.

#### *3.3.1.1 இறுதி திருத்திய நிதியொதுக்கம் (FMA) இல்லாமல் செய்யப்பட்ட செலவு*

புதிய திட்டத்திற்கான செலவை துணை ஒதுக்கீடு அல்லது நிதியொதுக்கம் அல்லது மாநிலத்தின் எதிர்பாரா செலவு நிதியிலிருந்து முன்பணமாக பணத்தை பெற்று மேற்கொள்ளலாமே தவிர, நிதியொதுக்கம் இல்லாமல் செய்யக்கூடாது.

எனினும், **இணைப்பு 3.1ல்** விளக்கப்பட்டுள்ளவாறு, 15 நேர்வுகளில் மொத்தம் ₹ 37.93 கோடி FMA ஒதுக்கீடு இல்லாமல் செலவு செய்யப்பட்டது;

#### *3.3.1.2 மூல மற்றும் துணை ஒதுக்கீடு இல்லாமல் செய்யப்பட்ட செலவு*

இந்திய அரசியலமைப்பு சட்டம், பிரிவுகள் 204 மற்றும் 205ன் கீழ் மாநில சட்டமன்றம் உரிய நிதியொதுக்க சட்டங்களை நிறைவேற்றாமல் மாநில தொகுநிதியிலிருந்து பணம் எடுக்கப்படுவதை அச்சட்டத்தின் பிரிவு 266 (3) தடை செய்கிறது. எனினும், **அட்டவணை 3.3**ல் விளக்கப்பட்டுள்ளபடி, 6 நேர்வுகளில், சட்டமன்றத்தின் நிதியொதுக்க ஒப்புதலின்றி செய்யப்பட்ட மறுநிதியொதுக்கம்[3] மூலமாக மொத்தம் ₹ 2.26 கோடி செலவு மேற்கொள்ளப்பட்டது.

[3] ஒரு மானியம் அல்லது நிதியொதுக்கத்தின் ஒரே பிரிவின் கீழ் ஒரு நிதியொதுக்க அலகில் நேர்ந்த சேமிப்புகளை உரிய அதிகாரம் பெற்றவர் மற்றொரு அலகிற்கு மாற்றம் செய்வது மறுநிதியொதுக்கம் எனப்படும்.

**அட்டவணை 3.3: மூல மற்றும் துணை ஒதுக்கீடு இல்லாமல் செய்யப்பட்ட செலவு**

*(₹ இலட்சத்தில் )*

| மானிய எண் | கணக்கு தலைப்பு | மொத்த மானியம் (மறுநிதியொதுக்கம்) | உள்ளபடியான செலவு |
|---|---|---|---|
| 31 | 2852.07.800.UA | 5.00 | 5.00 |
| 36 | 3475.00.800.JK | 0.13 | 0.13 |
| 43 | 2202.02.800.UB | 205.19 | 205.19 |
| 50 | 2071.01.101.AR | 2.54 | 2.54 |
| 54 | 4406.01.102.JM | 7.89 | 7.89 |
| 54 | 4406.02.110.JK | 5.25 | 5.25 |
| மொத்தம் | | **226.00** | **226.00** |

*(ஆதாரம்: நிதியொதுக்க கணக்குகள்)*

### 3.3.2 வரவு - செலவு திட்ட மானியம் காலாவதியாகாமல் இருக்க நிதி வரைதல்

தமிழ்நாடு வரவு செலவு திட்ட நூல், பத்தி 178ன் படி, அரசு கணக்கிலிருந்து உடனடி தேவை இல்லாமல் பணம் எடுப்பது என்பது முறையற்றது ஆகும். மேலும், தமிழ்நாடு நிதிக் குறியீடு தொகுதி-I இன் பிரிவு 39 இன் படி, நிதியாண்டின் முடிவில் அனைத்து ஒதுக்கீடுகளும் காலாவதியாகிவிடும். அதனைத் தவிர்க்க, கருவூலத்திலிருந்து பணம் எடுத்து அடுத்த ஆண்டில் செலவினங்களுக்காக பயன்படுத்துவது கூடாது.

‘2041-00-800-AG - சாலைப் பாதுகாப்புத் திட்டத்தை செயல்படுத்துதல்’ என்ற கணக்குத் தலைப்பின் கீழ், ₹ 2.77 கோடி செலவாகப் பதிவு செய்யபட்டு அந்த நிதியாண்டின் இறுதியில் எடுக்கப்பட்டு, இரண்டு தனித்தனி வங்கிக் கணக்குகளில், வழிமுறைகளை மீறி வைக்கப்பட்டது. இதனால் அந்த நிதிஆண்டில், வருவாய் வகை செலவினமானது மேற்கூறப்பட்ட அளவிற்கு அதிகப்படுத்தப்பட்டு காட்டப்பட்டது. இது நிதியாண்டின் முடிவில் பணம் காலாவதியாகாமல் இருக்க தேவையில்லாமல் எடுக்கப்பட்டதைச் சுட்டிக்காட்டுகிறது.

### 3.3.3 செலவை தவறாக வகைப்படுத்துதல்

செலவு மற்றும் வரவுகளை தவறாக வகைப்படுத்துவது நிதிநிலை அறிக்கைகளின் நம்பகத்தன்மை மீது பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும். ஆண்டு நதிநிலை அறிக்கை வருவாய் வகை செலவை, பிற செலவுகளிலிருந்து வேறுபடுத்தி காட்டுகிறது. வருவாய் வகை செலவை மூலதன வகை செலவாகவோ அல்லது மூலதன வகை செலவை வருவாய் வகை செலவாகவோ வகைப்படுத்துவதன் விளைவாக வருவாய் வகை செலவு மற்றும் வருவாய் வகை பற்றாக்குறை/மிகையின் அளவை கூடுதலாக/குறைத்து காட்டப்படும்.

#### *3.3.3.1 செலவை தவறாக கணக்கு வைத்தல்*

மூலதன சொத்துக்களை பெறுவதற்கும், பிற மூலதன வகை செலவிற்கும் நிதியொதுக்கம் பெறுவதற்கும் குறிப்பான குறுந்தலைப்புகள் (object head) உள்ளன.

நடப்பாண்டில், 'மாநில உள்கட்டமைப்பு மற்றும் வசதிகள் நிதி'க்கு மாற்றம் செய்யப்பட்ட ₹ 10.79 கோடி அளவிலான மூலதன வகை செலவு, மூலதன செலவாக கணக்கு வைக்கப்படாமல், வருவாய் வகை செலவாக 'சேமநிதியிலிருந்து செய்யப்பட்ட செலவு' என்ற தலைப்பின் கீழ் தவறுதலாக கணக்கு வைக்கப்பட்டது. இந்த தவறான வகைப்படுத்துதலால் வருவாய் வகை செலவானது மேற்படி தொகை அளவிற்கு அதிகமாக காட்டப்பட்டது.

### 3.3.4 தேவையற்ற அல்லது மிகையான துணை மானியம்

2021-22ம் ஆண்டில் மூல ஒதுக்கீடு ₹ 3,35,288.14 கோடி மற்றும் துணை ஒதுக்கீடு ₹ 14,451.49 கோடி என்பவற்றுக்கெதிராக, ₹ 3,19,361.82 கோடி மட்டுமே செலவு செய்யப்பட்டு, ₹ 30,377.81 கோடி நிகர சேமிப்பு ஏற்பட்டது. **இணைப்பு 3.2**ல் விளக்கப்பட்டுள்ளபடி, 59 நேர்வுகளில்[4] பெறப்பட்ட துணை ஒதுக்கீடான மொத்தம் ₹ 242.64 கோடி, அவற்றின் மூல ஒதுக்கீடு முழுமையாக பயன்படுத்தப்படாத நிலையில் தேவையற்றதாக நிருபிக்கப்பட்டன. 59 நேர்வுகளில், 37 நேர்வுகள் "மானியம் 19 - சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை"யின் கீழ் இருந்தன, வரவு செலவு பட்டியல் தேவையில்லாமல் வழங்கப்பட்ட துணை ஒதுக்கீடு ₹ 175.60 கோடி ஆகும்.

#### 3.3.4.1 போதுமான அளவில் இல்லாத துணை ஒதுக்கீடுகள்

**அட்டவணை 3.4**ல் விளக்கப்பட்டுள்ளவாறு, இரண்டு நேர்வுகளில் துணை ஒதுக்கீடு போதுமானதாக இல்லை என ஆகி கூடுதல் செலவு ஏற்பட்டது.

**அட்டவணை 3.4: போதுமானதாக இல்லாத துணை ஒதுக்கீடு நேர்வு**
***(₹ 1 கோடி தொகைக்கு கூடுதல் செலவு கொண்டவை)***

*(₹ கோடியில்)*

| வ. எண் | மானிய எண் மற்றும் விவரம் | மூல ஒதுக்கீடு | துணை மானிய ஒதுக்கீடு | மொத்த ஒதுக்கீடு | உள்ள படியான செலவு | கூடுதல் செலவு |
|---|---|---|---|---|---|---|
| 1 | 34 - நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை - **கடன்கள் (அனுமதிக்கப்பட்டது)** | 542.37 | 27.64 | 570.01 | 572.00 | 1.99 |
| 2 | 44 - குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் துறை - **மூலதனம் (அனுமதிக்கப்பட்டது)** | 0.65 | 2.55 | 3.20 | 5.06 | 1.86 |
| | மொத்தம் | **543.02** | **30.19** | **573.21** | **577.06** | **3.85** |

*(ஆதாரம்: நிதியொதுக்க கணக்குகள்)*

மானிய எண் 34ல் நிகழ்ந்த கூடுதல் செலவை ஆய்வு செய்ததில், '6217-60-190-PK' என்ற கணக்குத் தலைப்பின் கீழ் துணை மதிப்பீடுகள் மற்றும் மறுநிதியொதுக்கம் மூலம் கூடுதல் ஒதுக்கீடு செய்யப்பட்டது. கணக்குத் தலைப்புகள் 6217-60-190-PN, '6217-60-190-PI' மற்றும் '7610-00-201-AY' ஆகியவற்றின் கீழ் மறுநிதியொதுக்கம் மூலம் கூடுதல் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இருப்பினும், மானியத்தின் கீழ் ஒட்டுமொத்த ஒதுக்கீட்டை விட செலவு அதிகமாக செய்யப்பட்டுள்ளது.

[4] 50 இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட கூடுதல் ஒதுக்கீடுகள் இருக்கும் சந்தர்ப்பங்கள்

இரண்டாவது நிகழ்வில், '4851-00-102-LG சிறுதொழில் குழுமத்திற்கு உள்கட்டமைப்பு ஆதரவு' என்ற கணக்குத் தலைப்பின் கீழ், மூல ஒதுக்கீட்டில் செய்யப்பட்ட அடையாள ஒதுக்கீடானது மறுநிதியொதுக்கம் மூலம் திரும்பப் பெறப்பட்டது என்பது கண்டறியப்பட்டது. இருப்பினும், இந்த கணக்குத் தலைப்பின் கீழ் ₹ 1.86 கோடி செலவழிக்கப்பட்டது என்பது குறைப்பாடுள்ள வரவு-செலவுத் திட்ட செயல்முறையைக் குறிக்கிறது.

### 3.3.5 தேவையற்ற/மிகையான/போதுமானதாக இல்லாத மறுநிதியொதுக்கங்கள்

துணை மானியத்தை தவிர, ஒரு மானியத்திற்குள்ளே நிதியை மறுஒதுக்கம் செய்ய மறுநிதியொதுக்கத்தை பயன்படுத்த முடியும். ஒரு மானியத்தினுள் அல்லது சாட்டப்பட்ட நிதியொக்கத்திற்குள், சேமிப்பு எதிர்நோக்கப்படும் ஒரு அலகிற்கான ஒதுக்கீட்டிலிருந்து கூடுதல் நிதி தேவைப்படும் மற்றொரு அலகிற்கு, ஒரே பிரிவின் கீழ், (வருவாய் - அனுமதிக்கப்பட்டது, வருவாய் - சாட்டப்பட்டது, மூலதனம் - அனுமதிக்கப்பட்டது, மூலதனம் - சாட்டப்பட்டது) நிதியை தகுதியுடைய அதிகார அமைப்பு மூலம் மாற்றுவது மறுநிதியொதுக்கம் ஆகும்.

எனினும், ஒரு துணை தலைப்பிலிருந்து மற்றொன்றிற்கு கணிசமான அளவில் மறுநிதியொதுக்கம் செய்வது தவிர்க்கப்பட வேண்டும்; செய்ய விடுபட்டமை மற்றும் தொலைநோக்கு பார்வையின்மையை சரிசெய்வதற்காக மட்டுமே மறுநிதியொதுக்கம் செய்யும் முறையை பயன்படுத்துவது என்பது கூடாது.

**அட்டவணை 3.5**ல் விளக்கப்பட்டுள்ளவாறு, வரவு - செலவு திட்ட ஒதுக்கீட்டில் இருந்த துல்லியமின்மையை சுட்டிக்காட்டுவது மட்டுமல்லாமல், நிதி தேவையுள்ள பிற துறைகளுக்கு நிதி கிடைக்க விடாமல் செய்யும் வகையில், போதுமானதாக இல்லாத/தேவையற்ற/மிகையான மறுநிதியொதுக்கம் இருந்ததை தணிக்கை கூர்ந்தாய்வில் தெரியவந்தது.

**அட்டவணை 3.5: 2021-22ல் ஆராயாது செய்யப்பட்ட மறுநிதியொதுக்கங்கள்**

| வரிசை எண் | விவரம் | கணக்கு தலைப்புகளின் எண்ணிக்கை | தொகை (₹ கோடியில்) | பார்வை - இணைப்பு எண் |
|---|---|---|---|---|
| 1 | ₹ 2 கோடிக்கும் மேலான சேமிப்புகள் | 59 | 2,371.20 | 3.3 |
| 2 | ₹ 2 கோடிக்கு மேலான மிகை | 30 | 539.70 | 3.3 |
| 3 | மூல மற்றும் துணை ஒதுக்கீடுகளுக்குள்ளேயே செலவினம் இருந்து, மறுநிதியொதுக்கம் மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்டமை | 26 | 53.00 | 3.4 |
| 4 | மறுநிதியொதுக்கம் மூலம் ₹ 100 கோடிக்கு மேலான ஒதுக்கீடுகள் திரும்ப பெறப்பட்டமை | 14 | 2,756.88 | 3.5 |
| 5 | பெருந் தலைப்பு 8342ன் கீழ் வைப்புத் தொகை (2049-60-101) வட்டி பொறுப்புகளுகான முழு ஒதுக்கீடும் திரும்பபெறப்பட்டமை | 18 | 26.19 | 3.6 |

*(ஆதாரம்: விரிவான நிதியொதுக்க கணக்குகள்)*

மேலும், **இணைப்பு 3.7**ல் விவரிக்கப்பட்டுள்ளவாறு, ஆராயாது செய்யப்பட்ட மறுநிதியொக்கம் என்பதை குறிக்கும் வகையில், 14 நேர்வுகளில் செய்யப்பட்ட ஒதுக்கீடு முழுவதும் மறுநிதியொதுக்கம் மூலம் திரும்ப பெறப்பட்டும் திட்டங்களின் கீழ் ₹ 37.92 கோடி செலவு செய்யப்பட்டது கண்டறியப்பட்டது.

- '5053-02-102-AD - மதுரை விமான நிலைய விரிவாக்கம்' என்ற கணக்குத் தலைபின் கீழ் துணை மதிப்பீடுகளில் ₹ 34.51 கோடி வழங்கப்பட்டுள்ளது. முழுத் தொகையும் ஆகஸ்ட் 2021ல் செலவழிக்கபட்டது. இருப்பினும், மார்ச் 2022ல் மறுஒதுக்கீட்டின் போது, முழு ஒதுக்கீடும் திரும்பிப் பெறப்பட்டது, இதன் விளைவாக இறுதி மாற்றியமைக்கப்பட்ட ஒதுக்கீடு (FMA) இல்லாமல் செலவழிக்கப்பட்டது.

- '4851-00-102-LG - சிறுதொழில் குழுமத்திற்கு உள்கட்டமைப்பு ஆதரவு' என்ற தலைப்பின் கீழ் மூல ஒதுக்கீட்டில் அடையாள ஒதுக்கம் செய்யப்பட்டது, இது மார்ச் 2022ல் மறுநிதியொக்கம் மூலம் திரும்பப் பெறப்பட்டது. இருப்பினும், 2022 பிப்ரவரி மாதத்தில் ₹ 1.86 கோடி செலவு செய்யப்பட்டுள்ளது.

நிதி துறை வெளியிட்ட மறுநிதியொதுக்க ஆணைகள் மீதான விரிவான கூர்ந்தாய்வு, மொத்தம் உள்ள 24,676 இனங்களுள் 9,656 இனங்களுக்கு (39.13 விழுக்காடு) கூடுதல் நிதி ஒதுக்கடு/ஒதுக்கீட்டை திரும்ப பெற்றமைக்கு சரியான காரணங்கள் அளிக்கப்படாமல், "உள்ளபடியான தேவை", "குறைந்த/கூடுதல் தேவைப்பாடு", "உள்ளபடியான தேவையின் அடிப்படையில்" போன்ற தெளிவற்ற சொற்றொடர்கள் இடம்பெற்றிருந்ததை காட்டியது; இது தமிழ்நாடு வரவு செலவு திட்ட நடைமுறை நூல், பத்தி 151(ii)க்கு எதிரானதாகும். தணிக்கை மூலம் சுட்டிக் காட்டப்பட்டதன் பேரில், ஒப்படைப்புகள் / அதிகமாக ஒதுக்கப்பட்டதற்கான குறிப்பிட்ட காரணங்களை வழங்குவதற்காக துறைகள் மற்றும் துறைத் தலைவர்களுக்கு விரிவான அறிவுறுத்தல்கள் வழங்கப்படும் என்று அரசு பதிலளித்தது.

இவ்வாறாக, பல்வேறு கட்டங்களில் ஆராயாது செய்யப்பட்ட மறுநிதியொதுக்கம் மற்றும் ஒதுக்கீடு இல்லாமல் செலவிடுதல் ஆகியவை, வரவு - செலவு திட்டம் மறுநிதியொதுக்கம் என்ற இரண்டு நிலைகளிலும் உள்கட்டுப்பாட்டு/ கண்காணிப்பு முறைமை வலுவற்று இருப்பதை தெளிவாக சுட்டிக்காட்டின.

### 3.3.6 செலவிடப்படாத தொகை, ஒப்படைக்கப்பட்ட நிதியொதுக்கங்கள் மற்றும்/அல்லது பெருமளவிலான சேமிப்புகள் / ஒப்படைப்புகள்

மதிப்பீடுகளை எப்போதும் மிக துல்லியமாக கணக்கிடுவது இயலாத ஒன்றாக இருக்கக்கூடும்; எனினும் முன்யோசனையின்மை, கண்கூடாக உள்ளதை புறக்கணித்தல் அல்லது தரமற்ற முறையிலான மதிப்பிடுதல் ஆகியவை காரணமாக விடுபடுதல் அல்லது துல்லியமின்மை ஏற்பட்டால், அது ஏற்புக்கு உரியதல்ல. எதிர்பார்க்கக்கூடிய எந்த ஒன்றுக்கும் வரவு - செலவு திட்டத்தில் இடமளிக்கவும், தேவையான அளவு மட்டுமே அவற்றுக்கு நிதி ஒதுக்கவும் வேண்டும் என்பது மதிப்பிடும் அலுவலர்கள் அனைவருக்குமான அடிப்படை விதி ஆகும். உரிய நேரத்தில் ஒப்படைக்கப்பட வேண்டிய சேமிப்பு தொகையை தொடர்புடையவர் தாமே வைத்திருப்பதில் பயன் ஏதும் இல்லை. இக்காரணத்திற்காக, செலவிடப்படாமல் போகக்கூடிய நிதி ஒதுக்கீடு கூடிய விரைவில் ஒப்படைப்பாக தெரிவிக்கப்பட வேண்டும். அவ்வாறு ஒப்படைக்கவில்லையெனில், நிதி கிடைத்திருந்தால் அதை செலவிட்டிருக்கக்கூடிய துறைகளுக்கு அது கிடைக்காமல் போகும். ஒப்படைப்புகள் பொதுவாக மார்ச் மாதத்தில் செய்யப்படுகின்றன. நிகழ்ந்துள்ள செலவின் அளவு குறித்த கவனமான ஆய்வும்,

கடந்த மாதங்களில் நிகழ்ந்த செலவுகள் மீதான கண்காணிப்பும், கட்டுப்பாட்டு அலுவலர் தனது இறுதியான நிதி தேவையை தகுந்த அளவிலான துல்லியத்தன்மையுடன் கூடிய வகையில் மதிப்பிடுவதற்கு உதவ வேண்டும். சேமிப்பு தொகைகளை வருங்காலத்தின் கூடுதல் நிதி தேவைக்காக ஒதுக்கி வைக்கக்கூடாது.

பெருமளவிலான சேமிப்புகள் மற்றும் ஒப்புவிப்புகள் ஏற்பட்ட நேர்வுகள் பின்வரும் பத்திகளில் விளக்கப்பட்டுள்ளன.

### *3.3.6.1 சேமிப்புகள்*

பல்வேறு மானியங்களின் கீழ் தலா ₹ 100 கோடி அளவிற்கு மேல் சேமிப்பு இருந்த 42 நேர்வுகளில் மொத்தம் ₹ 28,723.33 கோடி (**இணைப்பு 3.8**) அளவுக்கு சேமிப்பு ஏற்பட்டது என தணிக்கை கண்டறிந்தது. நடப்பாண்டில், தலா ₹ 10 கோடி அளவுக்கு மேலாக நிதி ஒதுக்கப்பட்டு, அதில் 50 விழுக்காட்டிற்கு குறைவான பயன்பாடு இருந்த மானியங்கள்/ நிதியொதுக்கங்கள் பற்றிய விவரங்கள் **அட்டவணை 3.6**ல் தரப்பட்டுள்ளன.

**அட்டவணை 3.6: ₹ 10 கோடிக்கும் மேலான மானியம்/நிதி ஒதுக்கங்களில் 50 விழுக்காட்டிற்கு குறைவான பயன்பாடு இருந்த மானியங்கள்/நிதியொதுக்கங்கள்**

*(₹ கோடியில்)*

| வ. எண் | மானியம் மற்றும் விவரம் | மொத்த ஒதுக்கீடு | செலவு | பயன்பாட்டின் விழுக்காடு |
|---|---|---|---|---|
| | **வருவாய்** | | | |
| 1 | 38 - பொதுத் துறை (சாட்டியது) | 10.36 | 3.70 | *35.71* |
| | **மூலதனம்** | | | |
| 2 | 05 - வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை (அனுமதிக்கப்பட்டது) | 549.39 | 253.99 | *46.23* |
| 3 | 06 - கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம், மற்றும் மீனவர் நலத்துறை) | 470.32 | 188.04 | *39.98* |
| 4 | 07 - மீன்வளம் மற்றும் மீனவர் நலன் (கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை) | 580.97 | 275.45 | 47.41 |
| 5 | 09 - பிற்படுத்தபட்டோர், மிகவும் பிற்படுத்தபட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை | 88.84 | 40.21 | *45.26* |
| 6 | 13 - உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் பாதுகாப்புத் துறை) | 867.64 | 93.58 | 10.79 |
| 7 | 16 - நிதித் துறை | 620.00 | 47.36 | 7.64 |
| 8 | 22 - காவல் (உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை) | 281.50 | 7.29 | 2.59 |
| 9 | 23 - தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் (உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை) | 25.63 | 0.25 | 0.98 |
| 10 | 54 - வனம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை) | 93.98 | 41.43 | 44.08 |
| | **கடன்கள்** | | | |
| 11 | 05 - வேளாண்மைத் துறை (அனுமதிக்கப்பட்டது) | 130.76 | 0.76 | 0.58 |
| 12 | 48 - போக்குவரத்து துறை | 549.45 | 100.78 | 18.34 |

*(ஆதாரம்: நிதியொதுக்க கணக்குகள்)*

நான்கு நேர்வுகளில் வழங்கப்பட்ட ஒதுக்கீட்டில் 10 விழுக்காட்டிற்கும் குறைவாகவே பயன்படுத்தப்பட்டதாக கவனிக்கப்பட்டது. குறைவான பயன்பாட்டிற்கான காரணங்களை சமந்தப்பட்ட துறைகள் அளிக்கவில்லை.

### *3.3.6.2 ஒப்படைப்புகள்*

தமிழ்நாடு வரவு - செலவு திட்ட நடைமுறை நூலின் பத்தி 140ன்படி, நிதியை செலவிடும் துறைகள், மானியங்கள்/நிதியொதுக்கங்களை அல்லது அவற்றில் ஒரு பகுதியை, சேமிப்பு எதிர்நோக்கப்பட்டவுடன், நிதி துறையிடம் ஒப்படைக்க வேண்டும்.

நடப்பாண்டில், ₹ 30,377.81 கோடி மொத்த சேமிப்பில் ₹ 29,879.64 கோடி மட்டுமே ஒப்படைக்கப்பட்டது. இறுதி நாளன்று (31 மார்ச் 2022) ஒப்படைக்கப்பட்ட ₹11,739.35 கோடி (நிகரம்) தொகையில், மொத்தம் ₹ 12,387.29 கோடி (**இணைப்பு 3.9)** மதிப்புள்ள 92 நேர்வுகள் தலா ₹ 10 கோடி தொகைக்கு மேற்பட்ட மதிப்புடையவை ஆகும்.

மேலும் சேமிப்பை விட அதிகமாக ஒப்படைப்பது தொடர்பாக, நிதியாண்டின் இறுதியில் ஒப்படைக்கபட வேண்டிய சேமிப்பின் சரியான அளவை, மறுநிதியொதுக்கத்தின் போது துறைகளால் அறிய முடியவில்லை.

IFHRMS நடைமுறைக்கு வந்த பிறகும், நிதித்துறைக்கு மாநிலத்தின் நிதி மீது சரியான கட்டுப்பாடு இல்லை என்பதை இது குறிக்கிறது.

- 20 மானியங்கள் மற்றும் இரண்டு நிதியொதுக்கத்தில், தலா ₹ 1 கோடி அளவிற்கும் மேலான சேமிப்புகள் (₹ 895.01 கோடி) முழுமையாக ஒப்படைக்கப்படவில்லை (**இணைப்பு 3.10**).

- வருவாய் பிரிவின் கீழ் 18 மானியங்கள்/நிதியொதுக்கங்களிலும், மூலதன பிரிவின் கீழ் 11 மானியங்கள்/நிதியொதுக்கங்களிலும் மற்றும் கடன் பிரிவின் கீழ் ஐந்து மானியங்கள்/நிதியொதுக்கங்களிலும் சேமிப்பைவிட கூடுதலான தொகை ஒப்படைக்கப்பட்டது (**இணைப்பு 3.11**).

### *3.3.6.3 வரவு செலவுத் திட்ட பயன்பாடு*

பயன்பாட்டு விழுக்காட்டின் அடிப்படையில் பிரிவுகளாக தொகுக்கப்பட்ட மானியங்கள்/நிதியொதுக்கங்களின் எண்ணிக்கையையும் ஒவ்வொரு பிரிவிலும் நேர்ந்த சேமிப்புகளையும் கீழே உள்ள **அட்டவணை 3.7**ல் கொடுக்கப்பட்டுள்ளது.

அட்டவணை 3.7: மானிய / நிதியொதுக்கத்தின் பயன்பாடு

| பயன்பாட்டு விழுக்காடு | 50%-70% | 70%-90% | 90%-100% |
|---|---|---|---|
| **மானியங்களின் எண்ணிக்கை** | 6 | 29 | 21 |
| **சேமிப்புகள் (₹ கோடியில்)** | 5,675.09 | 12,765.14 | 11,936.39 |

*(ஆதாரம்: நிதியொதுக்க கணக்குகள்)*

2017-18 முதல் 2021-22 வரையிலான காலகட்டத்தில் ஒதுக்கப்பட்ட வரவு செலவுத் திட்ட பயன்பாட்டினை **விளக்கப்படம் 3.2** காட்டுகிறது.

**விளக்கப்படம் 3.2: 2017-18 முதல் 2021-22 வரையிலான காலகட்டத்தில் வரவு செலவுத் திட்ட ஒதுக்கீட்டின் பயன்பாடு**




*(ஆதாரம்: நிதியொதுக்க கணக்குகள்)*

நடப்பாண்டில் பயன்பாட்டின் விழுக்காடு கணிசமாக 4.65 விழுக்காடு அதிகரித்து 91.31 விழுக்காடாக உள்ளது.

### *3.3.6.4 தொடர் சேமிப்புகள்*

கடந்த ஐந்தாண்டுகளில், **இணைப்பு 3.12**ல் கூறப்பட்டுள்ளவாறு, மொத்த ஒதுக்கீட்டில் ஐந்து விழுக்காட்டிற்கும் மேலான தொடர்ந்த சேமிப்பு 24 மானியங்கள்/ நிதியொதுக்கங்களில் ஏற்பட்டது. சேமிப்பின் விழுக்காடு வருவாய் பிரிவில் 5.22 முதல் 81.79 வரையிலும், மூலதன பிரிவில் 8.36 முதல் 100 விழுக்காடு வரையிலும் இருந்தது.

மானியம் 16 - நிதித்துறையின் கீழ் கடந்த ஐந்தாண்டு காலம் முழுவதும் தொடர்ச்சியாக 92 விழுக்காட்டிற்கு மேலாக மூலதனப் பிரிவின் கீழ் சேமிப்பு இருந்ததை **இணைப்பு 3.12** காட்டுகிறது. **அட்டவணை 3.8**ல் கூறப்பட்டுள்ளவாறு, கடந்த ஐந்தாண்டுகளில் ‘4070-00-800-KF - தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாடு நிதிக்கு மாற்றம்’ என்ற கணக்கு தலைப்பின் கீழ் பெருமளவு நிதி ஒதுக்கப்பட்டு, அது மறுநிதியொதுக்கம் மூலம் திரும்ப பெறப்பட்டது.

**அட்டவணை 3.8: தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின் கீழ் செய்யப்பட்ட ஒதுக்கீடு மற்றும் மறுநிதியொதுக்கம்**

*(₹ கோடியில்)*

| விவரம் | 2017-18 | 2018-19 | 2019-20 | 2020-21 | 2021-22 |
|---|---|---|---|---|---|
| ஒதுக்கீடு | 2,000 | 500 | 500 | 500 | 500 |
| மறுநிதியொதுக்கம் | (-) 2,000 | (-) 499 | (-) 498 | (-) 500 | (-) 457 |

*(ஆதாரம் : உரிய ஆண்டிற்கான நிதியொதுக்க கணக்குகள்)*

கடந்த ஐந்தாண்டுகளில் தொடர்ச்சியாக வரவு - செலவு திட்டத்தில் நிதி ஒதுக்கப்பட்டு, குறிப்பான காரணங்கள் அளிக்கப்படாமல், மறுநிதியொதுக்கம் மூலம் திரும்ப பெறப்பட்டது என்பதை மேற்படி அட்டவணையிலிருந்து அறியலாம்.

முறையற்ற வரவுசெலவுத் திட்டத்தால், மறுநிதியொதுக்கத்தில் அதிகப்படியான ஒதுக்கீடு திரும்பப் பெறப்பட்டது, இது நிதியைப் பயன்படுத்தக்கூடிய பிற திட்டங்களுக்கு கிடைக்காமல் போகும்.

கடந்த ஆண்டுகளின் ஒப்படைப்புகளை அரசாங்கம் பரிசீலித்து, மாற்றுவதற்கான உள்ளபடியான தேவையை மதிப்பிட வேண்டும்.

இதனை சுட்டிக்காட்டிய போது, பல உள்கட்டமைப்பு திட்டங்கள் ஆரம்ப நிலையில் இருப்பதால், செயல்படுத்தும் முகமைகள் TNIDFயிடம் நிதி உதவியை கோரவேண்டிய தேவை எழவில்லை என்றும், உள்ளபடியான தேவை சரியாக மதிப்பிடப்படவில்லை என்பதால் வரவு செலவு திட்ட ஒதுக்கீடுகள் ஒப்படைக்கப்பட்டதாக அரசு மறுமொழி (டிசம்பர் 2022) அளித்தது.

## 3.3.7 மிகை செலவும் அதன் முறைப்படுத்துதலும்

இந்திய அரசியலமைப்பு சட்டம், பிரிவு 205(1)(b)ன்படி, ஒரு மானியம்/நிதியொதுக்கத்தின் கீழ் ஏற்பட்ட மிகை செலவு மாநில சட்டமன்றத்தின் மூலம் முறைப்படுத்தப்படவேண்டும் என்பது மாநில அரசுக்கு கட்டாயமாகும். மிகை செலவை முறைப்படுத்த ஒரு காலக்கெடுவை இப்பிரிவு குறிப்பிடாவிட்டாலும், நிதியொதுக்க கணக்குகளை பொது கணக்குகள் குழு விவாதித்த பின் மிகை செலவுகள் முறைப்படுத்தப்படுகின்றன.

### *3.3.7.1 முறைப்படுத்தப்பட வேண்டிய நடப்பாண்டின் மிகை செலவு*

அனைத்துச் செலவுகளுக்கும் சட்டமன்ற அனுமதி தேவை. ஒதுக்கீட்டைவிட கூடுதலாக செலவிடுதல் இதற்கு முரணாக இருப்பது மட்டுமல்லாமல் நிதித் திட்டமிடலில் குறைபாடுகள் உள்ளதைக் குறிக்கிறது.

2021-22ஆம் ஆண்டில் மானியங்கள்/நிதிஒதுக்கங்களைவிட கூடுதலாக செலவிடப்பட்ட நேர்வுகள் பற்றிய விவரங்கள் **அட்டவணை 3.9ல்** கொடுக்கப்பட்டுள்ளன.

அட்டவணை 3.9: முந்தைய ஆண்டுகளின் மிகை செலவு

*(₹ கோடியில்)*

| துறையின் பெயர் | அனுமதிக்கப்பட்டது | | | சாட்டியது | | |
|---|---|---|---|---|---|---|
| | வருவாய் | மூலதனம் | கடன்களும் முன்-பணங்களும் | வருவாய் | மூலதனம் | கடன்களும் முன்-பணங்களும் |
| இயற்கை சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு (மானிய எண்.51) | -- | -- | -- | 0.66 | -- | -- |
| மனித வள மேலாண்மைத் துறை (மானிய எண்.35) | -- | 0.73 | -- | -- | -- | -- |
| குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை (மானிய எண்.44) | -- | 1.86 | -- | -- | -- | -- |
| நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (மானிய எண்.34) | -- | -- | 1.99 | -- | -- | -- |
| **மொத்தம்** | **--** | **2.59** | **1.99** | **0.66** | **--** | **--** |
| **மொத்த மானியம்** | **5.24** | | | | | |

*(ஆதாரம்: நிதியொதுக்க கணக்குகள்)*

ஆண்டுக்கான ஒதுக்கீட்டை விட அதிகப்படியான செலவு என்பது சட்டமன்ற ஒப்புதலை பெற வேண்டும் என்ற விதியை மீறுவதோடு மட்டுமல்லாமல், திட்டமிடலில் குறைபாடுகளையும் குறிக்கிறது. நிதி ஒதுக்கீட்டுடன் ஒப்பிட்ட வகையில் செலவின முன்னேற்றத்தைக் கண்காணிப்பதன் மூலம் இதனை தவிர்க்கலாம்.

அதிகப்படியான செலவுக்கான காரணங்கள் பின்வரும் பத்திகளில் விவாதிக்கப்பட்டுள்ளன:

### இயற்கை சீற்றம் காரணமாக நிவாரணம்

- இதை, தணிக்கை சுட்டிக் காட்டிய போது, அரசு ஒப்புக்கொண்டு அவசரத் தேவையின் காரணமாக ₹ 0.66 கோடி செலவழிக்கப்பட்டுள்ளதாகவும், எதிர்காலத்தில் இதுபோன்ற குறைபாடுகள் தவிர்க்கப்படும் என்றும் பதிலளித்தது (டிசம்பர் 2022).

### நகராட்சி நிர்வாகம் மற்றும் நீர் வழங்கல் துறை

- சேமிப்பின் மூலம் ஈடுகட்டப்பட்ட போதிலும், கூடுதல் செலவினமான ₹ 1.99 கோடி, முக்கியமாக, "6217.60.190.PK - ₹ 38.44 கோடி, 6217.60.190.PN - ₹ 18.23 கோடி, 6217.60.190.PI - ₹ 17.29 கோடி மற்றும் 7610.00.201.AY - ₹ 0.80 கோடி" ஆகிய கணக்குத் தலைப்புகளின் கீழ் நடந்தது.

  இதனை சுட்டிக்காட்டிய போது, ஆண்டு இறுதியில், அதாவது 24-03-2022 அன்று, இறுதி துணை மதிப்பீட்டை இறுதி செய்த பிறகு, ₹ 2.59 கோடி (கணக்கு தலைப்பு: 6217.60.190.PK) பெறப்பட்டதால், ஒதுக்கீடு செய்ய முடியவில்லை என்று அரசு (டிசம்பர் 2022) பதிலளித்தது. கூடுதல் செலவினம், சம்பந்தப்பட்ட கணக்குத் தலைப்பில் கீழ் போதுமான மறு ஒதுக்கீடு செய்யப்படாததால் ஏற்பட்டது என்பதால் அரசின் பதில் ஏற்கத்தக்கல்ல.

### குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை

- "4851.00.102.LG - சிறுதொழில் குழுமத்திற்கான உள்கட்டமைப்பு ஆதரவு - மேல்விஷாரம், ராணிப்பேட்டை மாவட்டம், VISHTEC பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் (CETP) ZLD அமைப்பின் கூடுதல் திறன் 750 KLD உருவாக்கம்" என்ற கணக்குத் தலைப்பின் கீழ் ₹ 1.86 கோடி கூடுதலாக செலவு செய்யப்பட்டது. இதை துவக்க கூட்டத்தில் சுட்டிக்காட்டிய போது, மறுநிதியொதுக்கம் மூலம், 4851-00-102-LG என்ற கணக்குத் தலைப்பிலிருந்து, "2851-00-102-MV - மூலதனச் சொத்துக்களை உருவாக்குவதற்கான மானியங்களுக்கு" என்ற கணக்குத் தலைப்புக்கு மாற்றப்பட்டது என்று அரசு (ஆகஸ்ட் 2022) பதிலளித்தது. மூலதனத் தலைப்பிலிருந்து வருவாய்த் தலைப்பிற்கு மறுநிதியொதுக்கம் செய்ய முடியாது என்பதால் துறையின் பதில் ஏற்கத்தக்கதல்ல.

### *3.3.7.2* முறைப்படுத்தப்பட வேண்டிய முந்தைய ஆண்டுகளின் மிகை செலவு

2014-21 காலகட்டத்தில் நேர்ந்த ₹ 2,848.83 கோடி அளவிலான மிகை செலவு முறைப்படுத்தப்படாமல் நிலுவையில் இருந்தது (**அட்டவணை 3.10**).

**அட்டவணை 3.10: முறைப்படுத்தப்பட வேண்டிய முந்தைய ஆண்டுகளின் மிகை செலவு**

| ஆண்டு | மானிய எண்/நிதியொதுக்கம் | முறைப்படுத்தப்பட வேண்டிய மிகை செலவு (₹ கோடியில்) | முறைப்படுத்துதலின் நிலை |
|---|---|---|---|
| 2014-15 | 10, 16, 23,30, 32, 35, 36, 40, 43, 45 | 78.55 | 18/08/2022 மற்றும் 02/09/2022 அன்று அதிகப்படியான செலவுகள் பற்றிய பத்திகள் விவாதிக்கப்பட்டன, PAC அறிக்கை பெறப்பட வேண்டியுள்ளது. |
| 2015-16 | 19, 23, 30, 39, 47, 49 | 82.16 | |
| 2016-17 | 10, 12, 17, *21*, 32, 39, 40 | 167.16 | நான்கு மானியங்களுக்கும் மற்றும் ஐந்து நிதியொதுக்கங்களுக்கும் விளக்க குறிப்பு பெறப்பட்டுள்ளது. |
| 2017-18 | 06, 10, 13, 19, 21, 24, 40, 41, 52 | 77.55 | ஆறு மானியங்களுக்கும் மற்றும் ஒரு நிதியொதுக்கத்திற்கும் விளக்க குறிப்பு பெறப்பட்டுள்ளது. |
| 2018-19 | 10, 15, 27, 37, 40, 42, 43 | 1,480.54 | ஏழு மானியங்களுக்கும் விளக்க குறிப்பு பெறப்பட்டுள்ளது. |
| 2019-20 | 13, 40, 41, 43, 48 | 942.00 | ஐந்து மானியங்களுக்கும் விளக்கக்குறிப்பு பெறப்பட வேண்டியுள்ளது |
| 2020-21 | 27 | 20.87 | மாநில நிதி தணிக்கை அறிக்கை 19/10/2022 அன்று சட்டமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. |
| | **மொத்தம்** | **2,848.83** | |

*(ஆதாரம்: நிதியொதுக்க கணக்குகள்)*

## 3.4 வரவு - செலவு திட்டம் மற்றும் கணக்குவைப்பு முறையின் செயல் திறன் குறித்த குறிப்புகள்

நிதி சார்ந்த பல்வேறு குறியீடுகளை எய்துவதற்கு, வரி நிர்வாகம்/பிற வரவு மற்றும் பொது செலவு மீதான திறனுள்ள மேலாண்மை இன்றியமையாதது. உண்மை நிலைக்கு பொருந்தாத கருத்துருக்கள் அடிப்படையிலான நிதி ஒதுக்கீடு, செலவு கண்காணிப்பு முறையில் குறைபாடுகள், வலுவற்ற திட்ட செயல்பாட்டு திறன்கள், வலுவற்ற உள்கட்டுப்பாடுகள் ஆகியவற்றின் காரணமாக பல்வேறு வளர்ச்சி திட்டங்களுக்கு குறைவான நிதி ஒதுக்கீடு அமைகிறது. சில துறைகளில் ஏற்படும்

அளவுக்கதிகமான சேமிப்பு, நிதி கிடைத்திருந்தால் பயன்படுத்தியிருக்கக்கூடிய பிற துறைகளுக்கு நிதி கிடைக்கவிடாமல் செய்கிறது.

### 3.4.1 வரவு - செலவு திட்ட மதிப்பீடு மற்றும் எதிர்பார்ப்பிற்கும் உள்ளபடியானவற்றுக்கும் இடையேயான இடைவெளி

2021-22 ஆண்டில் வரவு - செலவு திட்ட ஒதுக்கீட்டுடன் (மூல மற்றும் துணை ஒதுக்கீடுகள்) ஒப்பிட்ட வகையில் அனுமதிக்கப்பட்ட மற்றும் சாட்டிய வகைகளின் கீழ் உள்ளபடியான செலவின் சுருக்கம் **அட்டவணை 3.11**ல் தரப்பட்டுள்ளது.

**அட்டவணை 3.11: மூல/துணை ஒதுக்கீடுகளுக்கெதிராக உள்ளபடியான செலவின் நிலை**

*(₹ கோடியில்)*

| செலவின் தன்மை | மூல மானியம்/ நிதி-யொதுக்கம் | துணை மானியம்/ நிதி-யொதுக்கம் | மொத்தம் | உள்ள படியான செலவு | நிகர சேமிப்பு (-) | ஒப்படை-க்கப்பட்ட தொகை | 31 மார்ச் அன்று ஒப்படைக்கப் -பட்ட தொகை | ஒப்படைப்பு செய்ய -ப்பட்ட சேமிப்பின் விழுக்காடு |
|---|---|---|---|---|---|---|---|---|
| **(1)** | **(2)** | **(3)** | **(4)** | **(5)** | **(6)** | **(7)** | **(8)** | **(9) = ((7)/(6)) x 100** |
| **அனுமதிக்கப்பட்டது** | | | | | | | | |
| I வருவாய் வகை | 2,20,115.64 | 11,279.62 | 2,31,395.26 | 2,16,331.25 | (-) 15,064.00 | (-) 14,571.84 | (-) 9,762.58 | *96.73* |
| II மூலதன வகை | 44,340.10 | 2,323.39 | 46,663.49 | 36,948.00 | (-) 9,715.49 | (-) 9,864.41 | (-) 1,726.00 | *101.53* |
| III கடன்களும் முன்பணங்களும் | 5,807.92 | 672.19 | 6,480.11 | 3,640.52 | (-) 2,839.59 | (-) 2,845.67 | (-) 246.25 | *100.21* |
| **மொத்தம்-அனுமதிக்கப்பட்டது** | **2,70,263.66** | **14,275.20** | **2,84,538.86** | **2,56,919.77** | **(-) 27,619.08** | **(-) 27,281.92** | **(-) 11,734.83** | |
| **சாட்டியது** | | | | | | | | |
| IV வருவாய் வகை | 45,140.35 | 48.02 | 45,188.37 | 42,602.95 | (-) 2,585.42 | (-) 2,427.41 | 52.29 | *93.89* |
| V மூலதன வகை | 26.74 | 128.28 | 155.02 | 101.86 | (-) 53.17 | (-) 53.16 | (-) 53.16 | *99.99* |
| VI பொது கடன் – மீள செலுத்துதல் | 19,857.38 | 0.00 | 19,857.39 | 19,737.24 | (-) 120.14 | (-) 117.15 | (-) 3.65 | *97.51* |
| **மொத்தம்-சாட்டியது** | **65,024.47** | **176.30** | **65,200.78** | **62,442.05** | **(-) 2,758.73** | **(-) 2,597.72** | **(-) 4.52** | |
| **எதிர்பாரா செலவு நிதிக்கு ஒதுக்கீடு** | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| **பெரு மொத்தம்** | **3,35,288.13** | **14,451.50** | **3,49,739.64** | **3,19,361.82** | **(-) 30,377.81** | **(-) 29,879.64** | **(-) 11,739.35** | |

*(ஆதாரம்: 2021-22ம் ஆண்டிற்கான நிதியொதுக்க கணக்குகள்)*

ஒட்டுமொத்த சேமிப்பான ₹ 30,377.81 கோடி (துணை ஒதுக்கீட்டில் 100 விழுக்காட்டிற்கும் அதிகமானவை), கூடுதல் தேவைகளை நிதியொதுக்கம் மூலம் மட்டுமே அரசு செலவழித்திருக்க முடியும் மற்றும் துணை ஒதுக்கீடான ₹ 14,451.50 கோடி முழுவதும் தேவையற்றதாக ஆனது. இது முறையற்ற வரவு-செலவு நிர்வாகத்தைக் குறிக்கிறது. எனவே, தேவையற்ற துணை ஒதுக்கீடுகளைத் தவிர்க்க அரசு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்றும், துணை ஒதுக்கீடுகள் தேவையற்றதாகக் கண்டறியப்பட்டால், கட்டுப்பாட்டு அதிகாரிகள் பொறுப்பேற்க வேண்டும் என்றும் பரிந்துரைக்கப்படுகிறது.

மார்ச் 2022ல் ₹ 29,879.64 கோடி ஒப்படைக்கப்பட்டது. இதில், கடைசி நாளான 31 மார்ச் 2022 அன்று ₹ 11,739.35 கோடி (39.29 விழுக்காடு) ஒப்படைக்கப்பட்டது. இது முறையற்ற வரவு-செலவு திட்டமிடலைக் குறிக்கிறது.

கடந்த ஐந்தாண்டு காலத்தில் மூல வரவு - செலவு திட்ட ஒதுக்கீடு மற்றும் திருத்தப்பட்ட மதிப்பீடுகளுடன் ஒப்பிட்ட வகையில் செலவின் போக்குகள் **அட்டவணை 3.12**ல் கூறப்பட்டுள்ளவாறு இருந்தன.

**அட்டவணை: 3.12: சேமிப்புகள் / மிகையின் போக்குகள்**

*(₹ கோடியில்)*

| | 2017-18 | 2018-19 | 2019-20 | 2020-21 | 2021-22 |
|---|---|---|---|---|---|
| மூல ஒதுக்கீடு | 2,19,339.48 | 2,43,847.26 | 2,68,501.58 | 3,04,954.43 | 3,35,288.14 |
| துணை ஒதுக்கீடு | 17,462.14 | 24,146.16 | 19,851.68 | 34,018.02 | 14,451.49 |
| திருத்திய மதிப்பீடு (மூல + துணை நிலை ஒதுக்கீடு) | 2,36,801.62 | 2,67,993.42 | 2,88,353.26 | 3,38,972.45 | 3,49,739.63 |
| உள்ளபடியான செலவு | 2,08,622.18 | 2,48,170.03 | 2,61,259.86 | 2,93,753.73 | 3,19,361.82 |
| நிகர சேமிப்பு | (-) 28,179.44 | (-) 19,823.39 | (-) 27,093.40 | (-) 45,218.72 | (-) 30,377.81 |
| *சேமிப்பின் விழுக்காடு* | *11.90* | *7.40* | *9.40* | *13.34* | *8.69* |

*(ஆதாரம் : உரிய ஆண்டிற்கான நிதியொதுக்க கணக்குகள்)*

மேலே உள்ள அட்டவணையில் இருந்து, நிதிப் பயன்பாட்டில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் இருப்பதையும், சேமிப்பின் விழுக்காடு 2020-21ல் 13.34 ஆக இருந்து 2021-22ல் 8.69 விழுக்காடாகக் குறைந்ததையும் காணலாம்.

மாநிலத்தின் நிதியொதுக்கக் கணக்குகளில் மொத்தம் 1,367 துணைத் தலைப்புகளில் கருத்துத் தெரிவிக்கப்பட்டு, சேமிப்பு/கூடுதல் ஏற்பட்டதற்கான காரணங்களை சம்பந்தப்பட்ட துறைகளிடம் கேட்கப்பட்டது. 383 துணைத் தலைப்புகளின் மாறுபாட்டிற்கான காரணங்கள் பெறப்படவில்லை.

ACS, வரவு-செலவு பிரச்சனைகள் IFHRMS குழுக்களால் தீர்க்கப்படும் என்று, இறுதி கலந்தாய்வில் கூறினார்.

### 3.4.2 விரைவுபடுத்தப்பட்ட செலவு

அரசின் நிதி ஆண்டு முழுவதும் சமமாக செலவிடப்பட வேண்டும். நிதி ஆண்டின் இறுதியில் செலவை விரைவுபடுத்துவது நிதி ஒழுங்குமுறையை மீறுவதாகும். செலவு செய்வதில் சீரான போக்கை பின்பற்றுவது, சிறந்த பொது நிதி மேலாண்மையின் முக்கிய கூறு ஆகும்; ஏனெனில், ஒரு மாதத்தில் நிகழும் எதிர்நோக்கப்படாத பெருமளவிலான செலவின் விளைவாக அம்மாதத்தில் வரவுக்கும் செலவுக்கும் இடையே பொருத்தமின்மையால் ஏற்படும் நிதிவகையிலான ஏற்றத்தாழ்வு மற்றும் தற்காலிக நிதி தட்டுப்பாட்டை அவ்வழக்கம் தடுக்கும்.

தமிழ்நாடு நிதி விதித் தொகுப்பின் பிரிவு 39ன்படி, நிதியாண்டின் இறுதி மாதத்தில் செலவை விரைவுபடுத்துவது தவிர்க்கப்பட வேண்டும். இதற்கு முரணாக, **இணைப்பு 3.13**ல் பட்டியலிடப்பட்டுள்ள 124 துணை தலைப்புகளின் கீழ் மூல ஒதுக்கீட்டின்போது ஒதுக்கப்பட்ட ₹ 14,247.45 கோடி தொகை முழுவதும் மார்ச் 2022ல் செலவிடப்பட்டது. மேலும், **அட்டவணை 3.13**ல் பட்டியலிடப்பட்டுள்ள மூன்று மானியங்களில் 50 விழுக்காடு செலவு மார்ச் 2022ல் செய்யப்பட்டது.

ஆண்டு இறுதியில் செய்யப்பட்ட விரைவான செலவு கட்டுப்பாட்டில் குறைபாடுகளை காட்டுகிறது.

**அட்டவணை 3.13: மார்ச் மாதத்தில் மட்டும் 50 விழுக்காடு செலவு நேர்ந்த மானியங்கள்**

*(₹ கோடியில்)*

| வ. எண் | மானிய எண் | விவரம் | 1வது காலாண்டு | 2வது காலாண்டு | 3வது காலாண்டு | 4வது காலாண்டு | மொத்தம் | மார்ச் மாத செலவு | மொத்த செலவில் மார்ச் மாத செலவின் விழுக்காடு |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | 04 | ஆதி-திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலவாழ்வு துறை | 319.16 | 271.09 | 280.40 | 1,575.91 | 2,446.57 | 1,414.66 | *57.82* |
| 2. | 27 | தொழில் துறை | 8.69 | 876.76 | 34.95 | 1,324.63 | 2,245.04 | 1,269.37 | *56.54* |
| 3. | 31 | தகவல் தொழில் நுட்பத் துறை | 1.41 | 3.22 | 5.02 | 61.59 | 71.24 | 43.17 | *60.60* |
| **மொத்தம்** | | | | | | | **4,762.85** | **2,727.20** | ***57.26*** |

*(ஆதாரம்: VLC தரவுகளிலிருந்து தொகுக்கப்பட்டது)*

2021-22ம் ஆண்டின் மாதவாரியான வரவு மற்றும் செலவு விவரங்களை **விளக்கப்படம் 3.3** காட்டுகிறது.

**விளக்கப்படம் 3.3: மாதாந்திர வருவாய் மற்றும் செலவினம்**

*(₹ கோடியில்)*




*(ஆதாரம்: VLC தரவுகளிலிருந்து தொகுக்கப்பட்டது)*

## 3.5 எதிர்பாரா செலவு நிதியிலிருந்து முன்பணங்கள்

மாநிலத்தின் எதிர்பாரா செலவு நிதி, இந்திய அரசியலமைப்பு சட்டம், பிரிவுகள் 267(2) மற்றும் 283(2)ல் வகை செய்யப்பட்டுள்ளதற்கு ஏற்ப, தமிழ்நாடு எதிர்பாரா செலவு நிதி சட்டம், 1954ன் கீழ் அமைக்கப்பட்டது. மாநில சட்டமன்ற ஒப்புதல் பெறப்படும்வரை ஒத்தி வைப்பது விரும்பத்தக்கதல்ல என கருதப்படும் எதிர்பாராத மற்றும் அவசரத்தன்மை கொண்ட செலவை மேற்கொள்ள மட்டுமே இந்நிதியிலிருந்து முன்பணங்கள் அளிக்கப்படலாம். அலுவல் முன்பணம் எனும் வகையிலான இந்நிதியின் மொத்த தொகை ₹ 150 கோடி ஆகும்.

எதிர்பாரா செலவு நிதியிலிருந்து முன்பணம் (CFA) எடுக்க அளிக்கப்பட்ட ஒப்புதல்கள் மற்றும் உள்ளபடியான பயன்பாடுகள் பற்றிய விவரங்கள் **அட்டவணை 3.14**ல் தரப்பட்டுள்ளன.

**அட்டவணை 3.14: CFA ஒப்புதல்களின் விவரங்கள் (2017-18 முதல் 2021-22)**

| ஆண்டு | CFA ஒப்புதல்கள் | | CFA பயன்பாடு | | பயன்பாட்டின் விழுக்காடு | |
|---|---|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | தொகை (₹ கோடியில்) | எண்ணிக்கை | தொகை (₹ கோடியில்) | எண்ணிக்கை | தொகை |
| 2017-18 | 46 | 50.78 | 43 | 42.12 | 93 | 83 |
| 2018-19 | 35 | 64.15 | 33 | 46.95 | 94 | 73 |
| 2019-20 | 30 | 40.01 | 27 | 33.69 | 90 | 84 |
| 2020-21 | 20 | 55.10 | 16 | 31.61 | 80 | 57 |
| 2021-22 | 04 | 17.15 | 03 | 12.26 | 75 | 71 |

*(ஆதாரம்:அரசு ஆணைகள்)*

நடப்பாண்டில் வெளியிடப்பட்ட CF ஆணைகள் மற்றும் ஆண்டு இறுதி நிலையிலான செலவு விவரங்கள் **அட்டவணை 3.15**ல் தரப்பட்டுள்ளன.

**அட்டவணை 3.15: ஒப்புதலளிக்கப்பட்ட எதிர்பாரா செலவு நிதி முன்பணங்கள் பற்றிய விவரங்கள்**

| ஆணை எண் | அரசாணை வெளியிடப்பட்ட நாள் | கணக்குத் தலைப்பு மற்றும் பெயர் | CF உத்தரவின் படி வழங்குதல் (₹) | AG (A&E) அறிக்கையின் படி CF இலிருந்து பயன்படுத்தப்பட்ட தொகை (₹) |
|---|---|---|---|---|
| 1 | G. O. Rt. No. 269 தேதியிட்டது 21-04-2021 | 2014.00.800.JE (மாற்றுத் தீர்வு மையங்களில் உள்ள சமரசக் கூடங்களுக்கான ஆதரவு) | 1,00,00,000 | 1,00,00,000 |
| 2 | G. O. Rt. No. 672 தேதியிட்டது 18-10-2021 | 2235.02.103.MD (தமிழ் நாடு பணிபுரியும் மகளிர் விடுதிக் கழகத்திற்கு கட்டுமானப் பணிகளுக்கான மானியம்) | 1,00,00,000 | -- |
| | | | (-) 1,00,00,000 | CFA ரத்து செய்யப்பட்டது. அரசாணை Rt எண். 4 தேதி 03-01-2022 |
| 3 | G. O. Rt. No. 693 தேதியிட்டது 28-10-2021 | 2235.01.105.AC (தாயகம் திரும்பியோர் துயர் தணிப்பு நடவடிக்கைகள்) | 7,14,54,000 | -- |
| | | | (-) 3,88,27,000 | CFA ரத்து செய்யப்பட்டது. அரசாணை Rt எண். 44 தேதி 19-01-2022 |

| ஆணை எண் | அரசாணை வெளியிடப்பட்ட நாள் | கணக்குத் தலைப்பு மற்றும் பெயர் | CF உத்தரவின் படி வழங்குதல் (₹) | AG (A&E) அறிக்கையின் படி CF இலிருந்து பயன்படுத்தப்பட்ட தொகை (₹) |
|---|---|---|---|---|
| 4 | G. O. Rt. No. 749 தேதியிட்டது 20-11-2021 | 2852.07.101.AP (தலைமைச் செயலகத்தில் மின்னனு அலுவலக செயலாக்கம்) | 8,00,00,000 | 8,00,00,000 |
| மொத்தம் | | | **12,26,27,000** | **12,26,27,000** |

மேலே உள்ள அட்டவணையிலிருந்து, இரண்டு சந்தர்ப்பங்களில், CF அனுமதிக்கப்பட்டது ரத்து செய்யப்பட்டது (ஒன்று பகுதியாக மற்றும் ஒன்று முழுமையாக). ‘தலைமைச் செயலகத்தில் மின்னனு அலுவலக (e office) செயலாக்க’ செலவினங்களை அவசர காலச் செலவு என வகைப்படுத்த முடியாது என்பதும் குறிப்பிடத்தக்கது. எதிர்பாரா செலவு நிதி முன்பண செலவினங்களுக்கு தேர்ந்தெடுக்கும் அடிப்படை முறை துறையிடமிருந்து பதில் பெறப்பட வேண்டியுள்ளது.

பணிபுரியும் பெண்கள் விடுதி கட்டுவதற்கு அனுமதிக்கப்பட்ட CF நிர்வாக காரணங்களால் ரத்து செய்யப்பட்டது. இவ்வாறு CFகளை ரத்து செய்வது, அனுமதிக்கப்பட்ட தொகைகளுக்கு உடனடி செலவு தேவையில்லை என்பதை உணர்த்துகிறது.

தணிக்கை மூலம் சுட்டிக்காட்டப்பட்டதன் பேரில், அடுத்த ஆண்டு முதல் பகுதி/முழு பயன்படுத்தாதது சரி செய்யப்படும் என அரசு (டிசம்பர் 2022) பதிலளித்தது.

## 3.6 பாலின வரவு-செலவு திட்டம்

2018-19 ஆம் ஆண்டிலிருந்து வருடாந்திர வரவு-செலவு திட்ட ஆவணத்தில் ஒரு பகுதியாக பாலின வரவு-செலவு திட்ட அறிக்கையை மாநில அரசு சமர்ப்பித்தது. மொத்த வரவு-செலவு திட்டத்தில் பெண்களுக்கான சாத்தியமான செலவீனத்தை பாலின வரவு-செலவு திட்ட அறிக்கை சித்தரிக்கிறது. மாநில அரசு, பெண்கள் முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ பயன்பெறும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ள திட்டங்களுக்கு ஒட்டுமொத்த வரவு-செலவு திட்டதில் மேற்கொள்ளப்படும் செலவினங்களை காட்டுகிறது மற்றும் இந்த அறிக்கை பகுதி A, பகுதி B மற்றும் பகுதி C ஆகிய மூன்று வகைகளாக அறிக்கை வகைப்படுத்தப்பட்டு மொத்த வரவு செலவு திட்டத்தில் (மூல ஒதுக்கீடு) ₹ 88,298.87 கோடியை ஒதுக்கியது.

- பெண்களுக்கு 100 விழுக்காடு செலவினங்களைக் கொண்ட திட்டங்களை பகுதி A உள்ளடக்கியது, 40 விழுக்காடு முதல் 99 விழுக்காடு வரை பெண்களுக்கு பயனளிக்கும் திட்டங்கள் பகுதி Bல் அடங்கும் மற்றும் பகுதி Cல் மற்ற திட்டங்கள் மற்றும் பயனாளிகள் சார்ந்ததாக இல்லாத பிற செலவுகள் துறை வாரியாக தொகுக்கப்பட்டுள்ளது மற்றும் குறைந்தபட்சம் 30 விழுக்காடு செலவினம் இந்தப் பிரிவின் கீழ் பெண்களுக்கு பயனளிக்கும் என்று அரசாங்கம் கருதுகிறது.
- 2021-22 ஆம் ஆண்டில், பகுதி A, B மற்றும் Cன் கீழ் உள்ள திட்டங்களின் மொத்த எண்ணிக்கை 411 ஆகும், இதில் பகுதி Aல் 86 திட்டங்களும்,

பகுதி Bல் 302 திட்டங்களும் மற்றும் பகுதி Cல் 23 திட்டங்களும் இருந்தன.

- பகுதி A திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட ₹ 5,206.28 கோடியில் (5.90 விழுக்காடு, 83.70 விழுக்காடு (₹ 4,357.79 கோடி) செலவு செய்யப்பட்டது. சமூக நலன் மற்றும் சத்துணவுத் துறையில், மகப்பேறு உதவித் திட்டங்கள், ஆதரவற்ற விதவைத் திட்டங்கள் மற்றும் திருமண உதவித் திட்டங்கள் கீழ் பெருமளவு செலவழிக்கப்பட்டது.
- பகுதி B பிரிவின் கீழ், ஆண்டு வரவு-செலவு திட்டத்தில் மொத்தமாக ₹ 36,191.16 கோடி (40.99 விழுக்காடு) ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதில் கல்வி, விளையாட்டு மற்றும் கலாச்சாரம், சமூக நலம் மற்றும் சத்துணவு, விவசாயம், பொது பொருளாதார சேவைகளின் கீழ் உணவு பாதுகாப்பு, ஊரக மேம்பாடு, நீர் வழங்கல், சுகாதாரம், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற மேம்பாடு, SC/ST/BC/MBC மற்றும் சிறுபான்மையினர் நலன் மற்றும் சுகாதாரம் மற்றும் குடும்ப நலம் ஆகியவைக்கு பெருமளவு ஒதுக்கீடு செய்யப்பட்டன.

## 3.7 குறிப்பிட்ட மானியங்கள் மீதான சீராய்வு

செலவினக் கட்டுப்பாட்டு முறைமையின் விரிவான மதிப்பாய்வு மேற்கொள்வதற்காக, கடந்த ஐந்தாண்டுகளுக்கான தொடர் சேமிப்புகள் மற்றும் 2021-22 ஆம் ஆண்டில் உள்ள கணிசமான அளவு சேமிப்புகளின் அடிப்படையில், 'மானிய எண் 04 - ஆதி-திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை' மற்றும் 'மானிய எண் 13 - உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)' தேர்ந்தெடுக்கப்பட்டன.

சோதனை ஆய்வு மூலம் வரவு - செலவு திட்ட நடைமுறையில் வெளிப்பட்ட குறைபாடுகள் பின்வரும் பத்திகளில் விளக்கப்பட்டுள்ளன.

### 3.7.1 மானிய எண் 04 - ஆதி-திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை

ஆதி-திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, மாவட்டந்தோறும் மாவட்ட ஆதி-திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் மூலம் ஆதி-திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு பல்வேறு நலத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

#### *3.7.1.1 ஒதுக்கீடு மற்றும் செலவு*

2021-22ம் ஆண்டில், மூல/துணை ஒதுக்கீடுகளுடன் ஒப்பிட்டு உள்ளபடியான செலவின் சுருக்கம் **அட்டவணை 3.16**ல் தரப்பட்டுள்ளது.

**அட்டவணை 3.16: மானிய எண் 4ன் வரவு - செலவு திட்ட ஒதுக்கீடும் உள்ளபடியான செலவும்**

*(₹ கோடியில்)*

| | செலவின் தன்மை | மூல ஒதுக்கீடு | துணை ஒதுக்கீடு | மொத்தம் | செலவு | சேமிப்பு (-)/ மிகை (+) | சேமிப்பின் விழுக்காடு | ஒப்படைப்பு தொகை |
|---|---|---|---|---|---|---|---|---|
| அனுமதித் தது | I வருவாய் | 3,717.03 | 0.00* | 3,717.03 | 2,218.77 | (-) 1,498.26 | 40.31 | 1,489.74 |
| | II மூலதனம் | 404.89 | 0.00** | 404.89 | 227.08 | (-) 177.81 | 43.92 | 177.72 |
| | III கடன்கள் | 0.40 | 0.14 | 0.54 | 0.54 | 0.00 | 0.00 | 0.00 |
| ***மொத்தம் - அனுமதித்தது (அ)*** | | **4,122.32** | **0.14** | **4,122.46** | **2,446.39** | **(-) 1,676.07** | **40.66** | **1,667.46** |
| சாட்டியது | IV வருவாய் | 20.02 | 0.01 | 20.03 | 17.30 | (-) 2.73 | 13.63 | 3.42 |
| ***மொத்தம் - சாட்டியது (ஆ)*** | | **20.02** | **0.01** | **20.03** | **17.30** | **(-) 2.73** | **13.63** | **3.42** |
| **பெரு மொத்தம் (அ+ஆ)** | | **4,142.34** | **0.15** | **4,142.49** | **2,463.69** | **(-) 1,678.80** | **40.53** | **1,670.88** |

** ₹ 25,000* *** ₹ 1,000*

*(ஆதாரம் : 2021-22 ஆண்டிற்கான நிதியொதுக்க கணக்குகள்)*

**அட்டவணை 3.16**லிருந்து, மானியத்தில் இறுதி சேமிப்பு ₹ 1,678.80 கோடியாக இருந்தாலும், மறுநிதியொதுக்கம் மூலம் மட்டும் ஒப்படைத்த தொகை ₹ 1,670.88 கோடி ஆகும். ஒட்டுமொத்த சேமிப்பு 40.53 விழுக்காடாக இருந்தது முறையற்ற வரவு-செலவை குறிக்கிறது. கடந்த 5 ஆண்டுகளில் ஒதுக்கீட்டுடன் ஒப்பிடும்போது ஒட்டுமொத்த சேமிப்பு **அட்டவணை 3.17**ல் காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை: 3.17: கடந்த 5 வருட ஒதுக்கீடு மற்றும் சேமிப்பு**

*(₹ கோடியில்)*

| ஆண்டு | மொத்த மானியம் | செலவு | சேமிப்பு | சேமிப்பின் விழுக்காடு |
|---|---|---|---|---|
| 2017-18 | 3,283.44 | 2,986.48 | (-) 296.96 | *9.04* |
| 2018-19 | 3,577.80 | 3,355.36 | (-) 222.45 | *6.22* |
| 2019-20 | 3,828.65 | 3,600.05 | (-) 228.60 | *5.97* |
| 2020-21 | 4,143.16 | 3,725.99 | (-) 417.17 | *10.07* |
| 2021-22 | 4,142.49 | 2,463.69 | (-) 1,678.80 | *40.53* |

*(ஆதாரம் : உரிய ஆண்டிற்கான நிதியொதுக்க கணக்குகள்)*

கடந்த ஐந்தாண்டுகளில் வரவு-செலவுத் திட்ட ஒதுக்கீட்டில் 5.97 முதல் 40.53 விழுக்காடு வரை தொடர் சேமிப்பு இருந்ததை இது சுட்டிக்காட்டுகிறது.

ஆதி-திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையில் மொத்த செலவினத்தில் 57.82 விழுக்காடு மார்ச் 2022ல் மட்டுமே செலவிடபட்டுள்ளது. துறையின் மாத வாரியான செலவின விவரங்கள் **விளக்கப்படம் 3.4**ல் கொடுக்கப்பட்டுள்ளது.

**விளக்கப்படம் 3.4: ஆதி-திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் செலவினம்**

***(₹ கோடியில்)***




*(ஆதாரம்: VLC தரவுகளிலிருந்து தொகுக்கப்பட்டது)*

2017-18 முதல் 2021-22 வரையிலான காலகட்டத்தில் மானியத்தின் மொத்தச் செலவில் மார்ச் மாதத்தின் செலவின விழுக்காடு அதிகரித்துள்ளதைக் கீழே உள்ள **விளக்கப்படம் 3.5**ல் இருந்து கவனிக்கலாம். இது ஒப்படைப்புகளை தவிர்ப்பதற்காக மார்ச் மாதத்தில் மேற்கொள்ளப்பட்ட விரைவு செலவுகளைக் குறிக்கிறது.

**விளக்கப்படம் 3.5: மார்ச் மாதத்தில் பயன்பாட்டிற்கெதிரான செலவினம்**

***(₹ கோடியில்)***




*(ஆதாரம்: VLC தரவுகளிலிருந்து தொகுக்கப்பட்டது)*

### *3.7.1.2 தொடர் சேமிப்புகள்*

2021-22ம் ஆண்டில், மானியத்தின் மூலதன பிரிவின் கீழ் 43.91 விழுக்காடு சேமிப்பு ஏற்பட்டது. 2017-22 என்ற ஐந்தாண்டு காலத்தில் ஏற்பட்ட சேமிப்பு **அட்டவணை 3.18**ல் காட்டப்பட்டுள்ளவாறு மொத்த மானியத்தில் 28.15 விழுக்காடு முதல் 62.64 விழுக்காடு வரை இருந்தது.

அட்டவணை 3.18: ஆண்டுவாரியான மூலதன பிரிவின் கீழ் செய்யப்பட்ட ஒதுக்கீடும் சேமிப்பும்

(₹ கோடியில்)

| ஆண்டு | மொத்த மானியம் | செலவு | சேமிப்பு | ஒப்படைப்பு தொகை | சேமிப்பின் விழுக்காடு |
|---|---|---|---|---|---|
| 2017-18 | 229.01 | 85.55 | (-) 143.46 | (-) 142.71 | *62.64* |
| 2018-19 | 150.50 | 74.59 | (-) 75.90 | (-) 75.84 | *50.43* |
| 2019-20 | 134.03 | 91.47 | (-) 42.55 | (-) 23.72 | *31.75* |
| 2020-21 | 369.28 | 265.32 | (-) 103.95 | (-) 100.87 | *28.15* |
| 2021-22 | 404.89 | 227.08 | (-) 177.81 | (-) 177.72 | *43.91* |

*(ஆதாரம்: உரிய ஆண்டுக்கான நிதியொதுக்க கணக்குகள்)*

மூலதன சொத்துக்களை உருவாக்குவதற்கு மூலதனவகை செலவு செய்யப்படுகிறது. இந்த மூலதன பிரிவில் ஏற்பட்டுவரும் தொடர் சேமிப்பானது, மூலதன சொத்துக்களை உருவாக்க அரசு போதிய முக்கியத்துவம் கொடுக்கவில்லை என்பதையும், செலவின கட்டுப்பாடு இல்லாததையும் சுட்டிக்காட்டுகிறது.

மேலும் ஆய்வு செய்ததில், **அட்டவணை 3.19**ல் விவரிக்கப்பட்டுள்ளவாறு பின்வரும் வருவாய் மற்றும் மூலதனக் கணக்குத் தலைப்புகளின் கீழ் சேமிப்பு தொடர்ந்து நிகழ்ந்தது கவனிக்கப்பட்டது.

அட்டவணை 3.19: கணக்குத் தலைப்புகளின் கீழ் நிகழ்ந்த தொடர் சேமிப்பு விவரங்கள்

| வ. எண் | கணக்குத் தலைப்பின் பெயர் | சேமிப்பு தொகை *(₹ இலட்சத்தில்)* | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | 2017-18 | 2018-19 | 2019-20 | 2020-21 | 2021-22 |
| 1. | 2225.01.277.AG (V) - ஆதி-திராவிடர் நலப்பள்ளிகளுக்கு பரிசுகள் வழங்குதல் | 24.36 (29.92) | 44.01 (54.06) | 34.31 (42.14) | 67.66 (83.11) | 62.89 (100.00) |
| 2. | 2225.01.277.JY (V) - ஆறாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை படிக்கும் ஆதி திராவிட மாணவிகளுக்கிடையே கல்வியறிவை மேம்படுத்த சிறப்பு ஊக்கத் தொகை திட்டம் | 375.27 (9.85) | 266.21 (6.99) | 250.72 (7.29) | 517.33 (15.05) | 666.72 (19.61) |
| 3. | 2225.01.277.KH (V) - ஆதி திராவிட வகுப்பு மாணவர்கள் உயர்கல்விக்காக வெளிநாடு செல்வதற்கான படிப்புதவித் தொகை | .. | 30.00 (100.00) | 30.00 (100.00) | 30.60 (100.00) | 530.60 (100.00) |
| 4. | 2225.01.277.KL (V) - உயர்கல்வி சிறப்பு படிப்புதவி திட்டத்தின் கீழ் ஆதி திராவிடர்கள், கிறித்தவர்களாக மதம் மாறிய ஆதி திராவிடர்களுக்கு நிதியுதவி | 473.90 (17.91) | 793.20 (29.98) | 1,414.93 (54.01) | 1,222.92 (67.94) | 557.73 (46.48) |

| வ. எண் | கணக்குத் தலைப்பின் பெயர் | சேமிப்பு தொகை *(₹ இலட்சத்தில்)* | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | 2017-18 | 2018-19 | 2019-20 | 2020-21 | 2021-22 |
| 5. | 2225.01.277.KQ (V) - ஆதி-திராவிடர் நல உயர் நிலைப் பள்ளிகள் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் ஒன்பதாம் வகுப்பு முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை படிக்கும் மாணவர்களுக்கு சிறப்புப் பயிற்சி | 11.27 (11.65) | 12.93 (13.37) | 5.37 (5.55) | 95.97 (99.23) | 40.98 (42.37) |
| 6. | 2225.01.277.KS (V) – திறன்மிக்க ஆதி-திராவிடர் / பழங்குடியின மாணவர்கள் புகழ்பெற்ற பள்ளிகளில் படிக்க நிதி உதவி | 228.98 (15.27) | 237.23 (15.82) | 152.42 (10.16) | 894.28 (59.62) | 723.99 (48.27) |
| 7. | 2225.01.277.LA (V) - ஆதி திராவிட மாணவர்களுக்கு பொது நுழைவுத் தேர்வு பயிற்சி அளித்தல் | 50.00 (100.00) | 50.00 (100.00) | 50.00 (100.00) | 50.00 (100.00) | 50.00 (100.00) |
| 8. | 2225.01.793.SB (V) - ஆதி திராவிடர்களுக்கான துணைத் திட்டத்தின் கீழ் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களை செயல்படுத்துதல் (SCSP) | 2,885.77 (21.38) | 4,667.00 (34.57) | 4,608.11 (34.13) | 1,788.72 (13.25) | 5,202.91 (38.54) |
| 9. | 2225.01.800.JI (V) - பாதைகளையும் இடுகாடுகளையும் ஏற்படுத்தும் திட்டம் | 75.53 (99.59) | 28.70 (37.85) | 5.02 (6.61) | 57.53 (75.86) | 64.12 (84.55) |
| 10. | 2225.02.277.AF (V) - பழங்குடியினர் விடுதிகளின் பராமரிப்பு | 235.78 (41.59) | 304.79 (46.64) | 710.72 (66.81) | 337.78 (52.12) | 285.18 (28.02) |
| 11. | 2225.02.277.AR (V) - அனைவருக்கும் கல்வித் திட்டத்தின் (SSA) கீழ் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு ஊதியம் | 1.85 (6.49) | 4.08 (11.85) | 47.75 (65.35) | 29.01 (56.92) | 3.84 (14.41) |
| 12. | 2225.02.277.AW (V) - மாணவர் இல்லம் இணைந்த பழங்குடியின பள்ளிகளை தொடங்குதலும் பராமரித்தலும் | 117.28 (13.68) | 131.43 (13.38) | 903.22 (50.35) | 351.03 (29.73) | 0.37 (7.44) |
| 13. | 2225.02.277.KE (V) - அரசு பழங்குடியினர் உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் மேல்நிலைப் பள்ளகளின் ஒன்பதாம் வகுப்பு முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை படிக்கும் மாணவர்களுக்கு சிறப்புப் பயிற்சி | 2.85 (5.82) | 7.97 (15.41) | 4.36 (9.21) | 43.67 (99.86) | 43.73 (100.00) |
| 14. | 2225.02.282.AA (V) - நடமாடும் மருத்துவ பிரிவுகள் மற்றும் மருந்தகங்கள் | 52.14 (100.00) | 48.23 (76.29) | 94.09 (70.60) | 12.67 (26.98) | 2.93 (6.13) |
| 15. | 2225.02.796.AD (V) - பரவலாக வாழும் பண்டைய பழங்குடியினர் | 50.34 (95.12) | 24.66 (41.59) | 44.76 (43.23) | 9.79 (15.68) | 20.94 (33.91) |

| வ. எண் | கணக்குத் தலைப்பின் பெயர் | சேமிப்பு தொகை (₹ இலட்சத்தில்) | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | 2017-18 | 2018-19 | 2019-20 | 2020-21 | 2021-22 |
| 16. | 4225.01.277.JN (V) – RIDFன் கீழ் NABARD வங்கியின் கடன் உதவியுடன் ஆதி-திராவிடர் மற்றும் பழங்குடியுனர் நலத்துறை உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் | 3,999.88 (80.00) | 3,563.13 (71.26) | 10,000.00 (100.00) | 7,671.65 (57.96) | 5,561.43 (46.35) |

*(அடைப்புக்குறியில் உள்ள புள்ளவிவரங்கள் மொத்த ஒதுக்கீட்டின் விழுக்காடாக சேமிப்பைக் குறிக்கின்றன)*
*(ஆதாரம்: அந்தந்த ஆண்டுகளுக்கான விரிவான ஒதுக்கீட்டுக் கணக்குகள்)*

### 3.7.1.3 இறுதி திருத்திய மானியத்தை விட கூடுதல் சேமிப்புகள்

மறுநிதியொதுக்கம் மூலம் பணம் திரும்பப் பெறப்பட்ட போதிலும், **அட்டவணை 3.20**ல் கொடுக்கப்பட்டுள்ளவாறு, திட்டங்களின் கீழ் ஆண்டு இறுதியில் பெருமளவில் சேமிப்புகள் இருந்தது என்பது பதிவுருக்களை ஆய்வு செய்ததில் தெரிய வந்தது.

**அட்டவணை 3.20: இறுதி திருத்திய மானியத்தை (FMG) விட கூடுதல் சேமிப்புகள்**

*(₹ கோடியில்)*

| வ. எண் | கணக்குத் தலைப்பு மற்றும் விவரம் | மொத்த ஒதுக்கீடு | மறுநிதி யொதுக்கம் | இறுதி திருத்திய மானிய | செலவு | FMGல் சேமிப்பு |
|---|---|---|---|---|---|---|
| 1. | 2225.01.001.AC (V) - தலைமையக பணியாளர்கள் - ஆதி திராவிடர் நலத்துறை | 7.10 | 0.00 | 7.10 | 6.91 | (-) 0.19 |
| 2. | 2225.01.277.AA (V) - பள்ளிக் கல்வி | 534.77 | (-) 26.58 | 508.19 | 484.25 | (-) 23.94 |
| 3. | 2225.01.277.KM (V) - கல்வி சலுகைகள் | 878.59 | (-) 358.06 | 520.53 | 520.43 | (-) 0.10 |
| 4. | 2225.01.277.KX (V) - ஆதி-திராவிடர் நலத்துறை ITI மற்றும் விடுதி திறப்பு | 1.85 | 2.69 | 4.54 | 4.43 | (-) 0.11 |
| 5. | 2225.01.277.JX (V) - மூன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை படிக்கும் ஆதிதிராவிட மாணவியரிடையே கல்வியறிவை மேம்படுத்த சிறப்பு ஊக்கத் திட்டம் | 11.31 | (-) 1.79 | 9.51 | 9.29 | (-) 0.22 |
| 6. | 2225.01.277.JY (V) - ஆறாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை படிக்கும் தாழ்த்தப்பட்ட சாதிப் பெண்களிடையே கல்வியறிவை மேம்படுத்த சிறப்பு ஊக்கத் திட்டம் | 34.00 | (-) 6.37 | 27.63 | 27.33 | (-) 0.30 |
| 7. | 2225.01.800.BI (V) - ஈம சடங்குகளுக்கு தொகை கொடுத்தல் | 9.95 | 0.00 | 9.95 | 9.24 | (-) 0.71 |

| வ. எண் | கணக்குத் தலைப்பு மற்றும் விவரம் | மொத்த ஒதுக்கீடு | மறுநிதி யொதுக்கம் | இறுதி திருத்திய மானிய | செலவு | FMGல் சேமிப்பு |
|---|---|---|---|---|---|---|
| 8. | 2225.02.277.SA (V) - மெட்ரிகுலேஷனுக்கு மேற்பட்ட படிப்புக்கு இந்திய அரசு உதவித் தொகைகள் | 34.83 | (-) 0.21 | 34.62 | 34.50 | (-) 0.12 |
| 9. | 2235.01.200.UA (V) - கலவரங்களால் பாதிக்கப்பட்ட ஆதி திராவிடர், பழங்குடியினருக்கு உதவி | 15.00 | 0.00 | 15.00 | 14.61 | (-) 0.39 |
| 10. | 4225.01.277.JA (V) - ஆதி திராவிடர் களுக்கு விடுதிகள் கட்டுதல் | 21.00 | 10.76 | 31.76 | 30.52 | (-) 1.24 |

*(ஆதாரம்: விரிவான ஒதுக்கீட்டு கணக்குகள்)*

### *3.7.1.4 இறுதி திருத்திய மானியத்தைவிட அதிகமாக செலவுகள்*

பதிவேடுகளை ஆய்வு செய்ததில் **அட்டவணை 3.21**ல் காட்டப்பட்டுள்ளபடி இறுதி திருத்திய மானியத்தைவிட பின்வரும் திட்டங்களின் கீழ் ₹ 10 இலட்சத்திற்கு அதிகமாக செலவானது தெரியவந்தது.

**அட்டவணை 3.21 இறுதி திருத்திய மானியத்தைவிட அதிகமாக செலவுகள்**

*(₹ கோடியில்)*

| வ. எண் | கணக்குத் தலைப்பு மற்றும் விவரம் | மொத்த ஒதுக்கீடு | மறுநிதி யொதுக்கம் | இறுதி திருத்திய மானியம் | செலவு | FMGல் சேமிப்பு |
|---|---|---|---|---|---|---|
| 1. | 2225.01.283.JA - ஆதி-திராவிடர்களுக்கான வீட்டு மனைகள். உள்கட்டமைப்பு வசதிகள் **(வருவாய் - சாட்டப்பட்டது)** | 20.00 | (-) 3.42 | 16.58 | 17.27 | 0.69 |
| 2. | 2225.01.277.AE - தங்கும் விடுதிகள் **(வருவாய் - அனுமதிக்கப்பட்டது)** | 324.29 | (-) 75.24 | 249.05 | 253.76 | 4.71 |
| 3. | 2225.01.277.AA - பள்ளிகள் **(வருவாய் - அனுமதிக்கப்பட்டது)** | 132.64 | (-) 32.07 | 100.57 | 111.29 | 10.72 |
| 4. | 2225.80.001.AA - மாவட்ட பணியாளர்கள் - ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை **(வருவாய் - அனுமதிக்கப்பட்டது)** | 53.34 | 2.00 | 55.34 | 55.97 | 0.63 |
| 5. | 2225.01.277.KW - பி.எச்.டி படிக்கும் ஆதி-திராவிடர் பழங்குடியின மாணவர்களுக்கு நிதி உதவி **(வருவாய் - அனுமதிக்கப்பட்டது)** | 16.00 | (-) 10.38 | 5.62 | 6.00 | 0.38 |
| 6. | 2225.01.277.AF (V) - பழங்குடியினர் விடுதிகளின் பராமரிப்பு **(வருவாய் - அனுமதிக்கப்பட்டது)** | 10.17 | (-) 3.22 | 6.95 | 7.32 | 0.37 |

| வ. எண் | கணக்குத் தலைப்பு மற்றும் விவரம் | மொத்த ஒதுக்கீடு | மறுநிதி யொதுக்கம் | இறுதி திருத்திய மானியம் | செலவு | FMGல் சேமிப்பு |
|---|---|---|---|---|---|---|
| 7. | 2225.01.800.JY - பழங்குடியின மாணவர்கள் தங்கி பயிலும் நடுநிலை/உயர்நிலை பள்ளிகளை உயர்நிலை/மேல்நிலை பள்ளிகளாக நிலை உயர்த்துதல் **(வருவாய் - அனுமதிக்கப்பட்டது)** | 11.34 | (-) 1.10 | 10.24 | 10.47 | 0.23 |
| 8. | 2225.02.277.SE - பழங்குடியினருக்கான மெட்ரிக் படிப்புக்கு முந்தைய படிப்புக்கான உதவித் தொகை **(வருவாய் - அனுமதிக்கப்பட்டது)** | 4.10 | 0.00 | 4.10 | 4.29 | 0.19 |
| 9. | 2225.02.277.AY - பழங்குடியினருக்கான தொழில் பயிற்சி நிறுவனங்கள் **(வருவாய் - அனுமதிக்கப்பட்டது)** | 7.75 | (-) 0.69 | 7.06 | 7.22 | 0.16 |
| 10. | 2225.02.800.AB - கண்காணிப்பு குழு பணியாளரமைப்பு **(வருவாய் - அனுமதிக்கப்பட்டது)** | 1.43 | (-) 0.32 | 1.11 | 1.26 | 0.15 |
| 11. | 4225.02.800.AB - பழங்குடியினர் வாழ்விடங்களில் அடிப்படை உள்கட்டமைப்பு மேம்பாடு **(மூலதனம்- அனுமதிக்கப்பட்டது)** | 130.00 | (-) 43.26 | 86.74 | 87.90 | 1.15 |

FMGஐ (அட்டவணை 3.21ன் வரிசை எண் 3) விட ₹ 10.72 கோடி அதிகமாக இருப்பதற்கான காரணங்களை பகுப்பாய்வு செய்ததில் செலவு முக்கியமாக சம்பளத்துடன் தொடர்புடையது என்பதை வெளிப்படுத்தியது, துல்லியமாக மதிப்பிடக்கூடிய ஒரு சம்பளத் தலைப்பின் கீழ் உள்ள தேவையை மதிப்பிடுவதில் ஏற்பட்ட தோல்வி வரவு செலவுத் திட்ட தயாரிப்பிலுள்ள அக்கறையின்மையை காட்டுகிறது.

### *3.7.1.5 மறுநிதியொதுக்கம் மூலம் ஒதுக்கீடு முழுவதும் திரும்ப பெறப்பட்டமை*

**அட்டவணை 3.22**ல் கூறப்பட்டுள்ள திட்டங்களுக்கு, மூல மற்றும் துணை மானியத்தில் கொடுக்கப்பட்ட தொகை முழுவதும், மறுநிதியொதுக்கம் மூலம் திரும்பப் பெறப்பட்டது.

**அட்டவணை 3.22: மறுநிதியொதுக்கம் மூலம் ஒதுக்கீடு முழுவதும் திரும்ப பெறப்பட்டமை**

(₹ இலட்சத்தில்)

| வ. எண் | கணக்குத் தலைப்பு மற்றும் விவரம் | ஒதுக்கீடு (மூல+துணை மானிய ஒதுக்கீடு) | மறுநிதியொதுக்கம் |
|---|---|---|---|
| 1 | 2225.01.277.AG (V) - ஆதி-திராவிடர் நலப் பள்ளிகளுக்கு பரிசுகள் வழங்குதல் | 62.89 | (-) 62.89 |
| 2 | 2225.01.277.BD - அரசு உதவி பெறும் பாலிடெக்னிக் / பொறியியல் கல்லூரிகளுக்கு இழப்பீடு | 164.06 | (-) 164.06 |
| 3 | 2225.01.277.BE - சாரண சாரணிய இயக்கம் | 22.48 | (-) 22.48 |

| வ. எண் | கணக்குத் தலைப்பு மற்றும் விவரம் | ஒதுக்கீடு (மூல+துணை மானிய ஒதுக்கீடு) | மறுநிதியொதுக்கம் |
|---|---|---|---|
| 4 | 2225.01.277.BY – ஆதி-திராவிடர் நல விடுதிகள் மற்றும் உயர்நிலைப் பள்ளிகள்/ மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவியர்கள் மற்றும் அவர்களின் தாய்மார்களுக்கு ஆலோசனை மற்றும் விழிப்புணர்வு ஏற்படுத்துதல் | 19.84 | (-) 19.84 |
| 5 | 2225.01.277.KH - ஆதி திராவிட வகுப்பு மாணவர்கள் உயர்கல்விக்காக வெளிநாடு செல்வதற்கான படிப்புதவித் தொகை | 530.60 | (-) 530.60 |
| 6 | 2225.01.227.KJ - அரசு/அரசு உதவி பெறும் மேல்நிலைப் பள்ளிகளில் பதினொன்று மற்றும் பன்னிரண்டாம் வகுப்புகளின் படிக்கும் ஆதி திராவிடர்/ பழங்குடியினர் / கிறிஸ்தவ மதத்திற்கு மாறிய ஆதி திராவிடர் மற்றும் அனைத்து மாணவியர்களுக்கும் இலவச மிதிவண்டி வழங்கல் | 3,653.35 | (-) 3,653.35 |
| 7 | 2225.01.227.KO - அரசு/அரசு உதவி பெறும் மேல்நிலைப் பள்ளிகளில் பதினொன்று மற்றும் பன்னிரண்டாம் வகுப்புகளின் படிக்கும் ஆதி திராவிடர்/ பழங்குடியினர் / கிறிஸ்தவ மதத்திற்கு மாறிய ஆதி திராவிடர் மற்றும் அனைத்து மாணவர்களுக்கும் இலவச மிதிவண்டி வழங்கல் | 2,886.70 | (-) 2,886.70 |
| 8 | 2225.01.227.LA – பொது சேர்க்கை தேர்வுக்கு (CAT) ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கும் திட்டம் | 50.00 | (-) 50.00 |
| 9 | 2225.01.227.LB - உயர்நிலை/ மேல்நிலைப் பள்ளிகளில் படிக்கும் ஆதி திராவிடர் மாணவர்களுக்கு அறிவுத் திறன் வளர்ச்சி சிறப்பு மையம் மற்றும் விளையாட்டுத் திறன் மேம்பாட்டு சிறப்பு மையம் உருவாக்குதல் | 19.54 | (-) 19.54 |
| 10 | 2225.02.227.BF - பி.எச்.டி படிக்கும் பழங்குடியின மாணவர்களுக்கு நிதி உதவி | 12.50 | (-) 12.50 |
| 11 | 2225.02.227.BK - சாரண சாரணிய இயக்கம் | 6.00 | (-) 6.00 |
| 12 | 2225.02.227.BQ - பழங்குடியினர் நல விடுதிகள் மற்றும் உயர்நிலைப் பள்ளிகள்/ மேல்நிலைப் பள்ளிகளில் உள்ள மாணவியர்கள் மற்றும் அவர்களின் தாய்மார்களுக்கு ஆலோசனை மற்றும் விழிப்புணர்வு ஏற்படுத்துதல் | 2.76 | (-) 2.76 |
| 13 | 2225.02.227.KE - அரசு பழங்குடியினர் உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் ஒன்பதாம் வகுப்பு முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை படிக்கும் மாணவர்களுக்கு சிறப்புப் பயிற்சி | 43.73 | (-) 43.73 |
| 14 | 2225.02.794.SA - பழங்குடியினர் துணைத் திட்டதின் கீழ் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத் தொகுத்களில் பட்டியல் பழங்குடியினருக்கான நலத் திட்டங்கள் | 651.00 | (-) 651.00 |
| 15 | 2225.02.794.SB - அழிந்து வரும் நிலையில் உள்ள பழங்குடியினரின் மேம்பாடு - இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் 275(i)ன் கீழ் வழங்கும் நிதியுதவி | 1,700.00 | (-) 1,700.00 |
| 16 | 4225.01.277.AB - ஆதி-திராவிடர் நல விடுதுகளை மேம்படுத்துதல் | 2,500.00 | (-) 2,500.00 |

| வ. எண் | கணக்குத் தலைப்பு மற்றும் விவரம் | ஒதுக்கீடு (மூல+துணை மானிய ஒதுக்கீடு) | மறுநிதியொதுக்கம் |
|---|---|---|---|
| 17 | 4225.01.793.SA - ஆதி திராவிடர்கள் அதிகம் வசிக்கும் வட்டங்கள்/ கிராமங்களில் உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதல் | 800.00 | (-) 800.00 |
| 18 | 4225.01.800.JA - சமுதாய கூடங்கள் கட்டுதல் | 1,449.01 | (-) 1,449.01 |
| 19 | 4225.02.277.KC - RIDFஇன் கிழ் NABARD வங்கியின் கடன் உதவியுடன் ஆதி-திராவிடர் மற்றும் பழங்குடியுனர் நலத்துறை உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் | 302.34 | (-) 302.34 |
| | மொத்தம் | **14,876.80** | **(-) 14,876.80** |

*(ஆதாரம்: விரிவான ஒதுக்கீட்டு கணக்குகள்)*

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குனரகம் அளித்த பதிவேடுகள் மற்றும் பதில்களின் மூலம் பின்வருவனவற்றை தணிக்கை கண்டறிந்தது:

- தகுதியுள்ள மாணவர்களுக்கான மிதிவண்டி (வரிசை எண் 6 மற்றும் 7) வாங்குவதற்கு வரவு செலவு திட்டத்தில் ₹ 65.40 கோடி வழங்கப்பட்டது ஆனால் மறுநிதியொதுக்கம் மூலம் திரும்பப் பெறப்பட்டது, ஜுலை 2021ல் நிர்வாக அனுமதிக்கான முன்மொழிவை பிற்படுத்தப்பட்டோர் மற்றும் நலத்துறை இயக்குனரகம் சமர்ப்பித்ததாக தணிக்கை கண்டறிந்தது. ஆனால் நிர்வாகத் தாமதம் காரணமாக 2021 நவம்பரில்தான் தமிழக அரசு ஒப்புதல் அளித்தது, கொள்முதல் குழு விவரக்குறிப்புகளை இறுதி செய்ய மூன்று மாதங்கள் எடுத்ததால் டெண்டர் அழைப்பதில் மேலும் தாமதம் ஏற்பட்டது. மார்ச் 2022ல் மட்டுமே டெண்டர் கோரப்பட்டது, இந்த தாமதங்களின் விளைவாக மறுநிதியொதுக்கம் மூலம் வரவு செலவு திட்ட ஒதுக்கீடு திரும்பப் பெறப்பட்டது.

- வரிசை எண் 14 மற்றும் 15 பொறுத்தவரையில், தமிழக அரசு பயன்பாட்டுச் சான்றிதழ்களைச் சமர்பபிக்காததாலும் இந்திய அரசாங்கத்தின் போர்ட்டலில் தரவைப் பதிவேற்றுவதில் தாமதம் ஏற்பட்டதாலும் வரவு செலவு திட்ட ஒதுக்கீடு ₹ 23.51 கோடி திரும்பப் பெறப்பட்டது. திட்டத்திற்கான நிதியை இந்திய அரசு விடுவிக்காததால் மறுநிதியொதுக்கம் மூலம் தமிழக அரசு வரவு செலவு திட்ட ஒதுக்கீட்டை திரும்பப் பெற்றதை தணிக்கை க்ணடறிந்தது,

- சமுதாயக் கூடம் கட்டுவற்கு ₹ 14.49 கோடி வழங்க்பபட்டது (வரிசை எண் 18). சமுதாயக் கூடம் கட்டுவதற்குத் தகுந்த இடத்தைக் கண்டறிவதில் தாமதம் ஏற்பட்டதால் வரவு செலவு திட்ட ஒதுக்கீடு திரும்பப் பெறப்பட்டது

### *3.7.1.6. பழங்குடியினர் நலத்துறையின் கீழ் விரைவு செலவினம்*

**இணைப்பு 3.13- விரைவு செலவினங்களி**ன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள வரிசை எண் 5 மற்றும் 6ஐ கூர்ந்தாய்வு செய்த போது பினவருவன தெரியவந்தது.

- வரிசை எண் 5 ஐ பொறுத்தவரை 2225.02.277.BH - கணக்குத் தலைப்பின் கழ் அக்டோபர் 2021ல் நிதியை வடுவிப்பதற்கான

முன்மொழிவுகளை அனுப்பியது, அரசு மார்ச் 2022ல் தான் விடுவித்தது இதன் விளைவாக விரைவுச் செலவு ஏற்பட்டது,

- வரிசை எண் 6ஐ பொறுத்தவரை - கணக்குத் தலைப்பு 2225.02.277.SDன் கீழ் 31.03.2022 அன்று நிதி ஒப்படைப்பை தவிர்க்கும் பொருட்டு ₹ 19.67 கோடி ஒற்றை ஒருங்கிணைந்த முகமைக்கு (SNA) மாற்றப்பட்டது.

## 3.7.2 மானிய எண் 13 - உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)

மாநில அளவில் ஆணையர் தலைமையிலான குடிமைப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை மாநிலத்தில் பொது விநியோகமுறை தொடர்பான கொள்கைகளை உருவாக்கி செய்படுத்துவதில் முக்கியப் பங்காற்றி வருகிறது. இந்த துறை அத்தியாவசியப் பொருட்கள் சட்டம் 1955 மற்றும் அதன் கீழ் வழங்கப்பட்ட கட்டுப்பாட்டு ஆணைகளின் விதிகளயும் செயல்படுத்துகிறது. மேலும், நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 2019ன் கீழ் கிடைக்கும் நுகர்வோர் உரிமை மற்றும் சட்ட விதிகள் பற்றிய விழிப்புணர்வை பொதுமக்கள் மற்றும் மாணவர் சமூகத்தினரிடையே ஏற்படுத்துவதில் இது முக்கியப் பங்கு வகிக்கிறது.

தமிழ்நாடு அரசின் முதன்மைச் செயலாளர், உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பபுத் துறை நிர்வாகத் தலைவராக உள்ளார். கள அமைப்புகளுக்கு குடிமைப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையர் மற்றும் பதிவாளர், மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம் ஆகியோர் தலைமை வகிக்கின்றனர். இந்தத் துறையின் கீழுள்ள தலைமைக் கட்டுப்பாட்டு அதிகாரிகள் அதாவது ஆணையர் (குடிமைப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) மற்றும் பதிவாளர் (மாநில நுகர்வோர் குறைதீர்க்கும் ஆணையம்) ஆகியவை மதிப்பாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன. முக்கியமான காண்புரைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

### *3.7.2.1 ஒதுக்கீடு மற்றும் செலவு*

2021-22ம் ஆண்டில் மூல/துணை ஒதுக்கீடுகளுடன் ஒப்பிட்ட வகையில் உள்ளபடியான செலவின் சுருக்கம் **அட்டவணை 3.23**ல் தரப்பட்டுள்ளது.

**அட்டவணை 3.23: மானிய எண். 13ன் கீழ் நிதி ஒதுக்கீடு மற்றும் உள்ளபடியான செலவு**

*(₹ கோடியில்)*

| | செலவின் தன்மை | மூல ஒதுக்கீடு | துணை ஒதுக்கீடு | மொத்தம் | செலவு | சேமிப்புகள் (-) / மிகை (+) | சேமிப்புகளின் விழுக்காடு | ஒப்படைக்கப் பட்ட தொகை |
|---|---|---|---|---|---|---|---|---|
| அனுமதிக்கப்பட்டது | I வருவாய் வகை | 8,617.87 | 1,020.26 | 9,638.13 | 9,547.86 | (-) 90.27 | 0.94 | (-) 90.25 |
| | II மூலதன வகை | 867.64 | 0.00* | 867.64 | 93.58 | (-) 774.06 | 89.21 | (-) 774.05 |
| | III கடன்கள் | 0.00** | 0.00 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 |
| ***மொத்தம் அனுமதிக்கப்பட்டது (அ)*** | | **9,485.51** | **1,020.26** | **10,505.77** | **9,641.44** | **(-) 864.33** | **8.23** | **(-) 864.30** |
| சாட்டியது | IV வருவாய் | 0.00*** | 0.00 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 |
| ***மொத்தம் சாட்டியது (ஆ)*** | | **0.00** | **0.00** | **0.00** | **0.00** | **0.00** | **0.00** | **0.00** |
| **பெரு மொத்தம் (அ+ஆ)** | | **9,485.51** | **1,020.26** | **10,505.77** | **9,641.44** | **(-) 864.33** | **8.23** | **(-) 864.30** |

** ₹2,000 அடையாள ஒதுக்கீடு ** ₹1,000 அடையாள ஒதுக்கீடு *** ₹4,000 அடையாள ஒதுக்கீடு*

*(ஆதாரம்: நிதியொதுக்க கணக்குகள் 2021-22)*

நடப்பாண்டில் இந்த மானியத்தில் இறுதி சேமிப்பு ₹ 864.33 கோடி ஆக இருந்தபோதிலும், ₹ 864.30 கோடி மட்டுமே ஒப்புவிக்கப்பட்டது. ஒட்டுமொத்த சேமிப்பு ஒதுக்கீட்டில் 8.23 விழுக்காடு ஆகும். கடந்த ஐந்து ஆண்டுகளில் நேர்ந்த ஒட்டு மொத்த சேமிப்பு ஒதுக்கீட்டுடன் ஒப்பிட்டு **அட்டவணை 3.24**ல் காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை: 3.24: கடந்த ஐந்து வருட ஒதுக்கீடு மற்றும் சேமிப்பு**

*(₹ கோடியில்)*

| ஆண்டு | மொத்த மானியம் | செலவு | சேமிப்பு | சேமிப்பு விழுக்காடு |
|---|---|---|---|---|
| 2017-18 | 6,524.36 | 6,430.84 | (-) 93.52 | *1.43* |
| 2018-19 | 8,420.62 | 8,316.91 | (-) 103.71 | *1.23* |
| 2019-20 | 9,016.24 | 8,747.24 | (-) 269.01 | *2.98* |
| 2020-21 | 10,540.82 | 9,915.04 | (-) 625.78 | *5.94* |
| 2021-22 | 10,505.76 | 9,641.43 | (-) 864.33 | *8.23* |

*(ஆதாரம்: அந்தந்த ஆண்டுகளுக்கான நிதியொதுக்க கணக்குகள்)*

ஐந்தாண்டு காலக்கட்டத்தில் வரவு-செலவுத் திட்ட ஒதுக்கீட்டில் 1.23 முதல் 8.23 விழுக்காடு வரை துறையில் தொடர் சேமிப்பு உள்ளது என்பதை இது சுட்டிக்காட்டுகிறது.

### *3.7.2.2 தொடர் சேமிப்புகள்*

2021-22ல் மூலதனப் பிரிவின் கீழ் இந்த மானியத்தில 89.21 விழுக்காடு சேமிப்பு இருந்தது. 2017-22 வரையிலான ஐந்தாண்டு காலக்கட்டத்தில் கீழே உள்ள **அட்டவணை 3.25**ல் கொடுக்கப்பட்டுள்ளபடி மொத்த மானியத்தில் 32.16 விழுக்காடு முதல் 97.12 விழுக்காடு வரையிலான தொடர் சேமிப்பு இருந்தது.

**அட்டவணை 3.25: மூலதன பிரிவின் (அனுமதிக்கப்பட்டது) கீழ் தொடர் சேமிப்பு**

*(₹ கோடியில்)*

| ஆண்டு | மொத்த மானியம் | செலவு | சேமிப்பு | ஒப்படைப்பு தொகை | சேமிப்பின் விழுக்காடு |
|---|---|---|---|---|---|
| 2017-18 | 286.89 | 194.61 | (-) 92.28 | (-) 92.46 | *32.16* |
| 2018-19 | 214.80 | 145.30 | (-) 69.50 | (-) 69.63 | *32.36* |
| 2019-20 | 483.81 | 213.09 | (-) 270.72 | (-) 270.79 | *55.96* |
| 2020-21 | 361.40 | 10.41 | (-) 350.99 | (-) 351.04 | *97.12* |
| 2021-22 | 867.64 | 93.58 | (-) 774.06 | (-) 774.05 | *89.21* |

*(ஆதாரம்: அந்தந்த வருடத்திய நிதியொதுக்க கணக்குகள்)*

மூலதனச் சொத்துக்களை உருவாக்குவதற்கு மூலதன செலவு செய்யப்படுகிறது. மூலதனத் தலைப்புகள் மீதான தொடர் சேமிப்பு, மூலதனச் சொத்துக்களை உருவாக்குவதற்கு அரசு போதிய முக்கியத்துவம் கொடுக்கவில்லை என்பதையும், செலவினக் கட்டுப்பாடு இல்லாததையும் சுட்டிக் காட்டுகிறது.

மேலும் ஆய்வு செய்ததில், **அட்டவணை 3.26**ல் விவரிக்கப்பட்டுள்ளபடி, முக்கியமாக பின்வரும் வருவாய் மற்றும் மூலதனக் கணக்குத் தலைப்புகளின் கீழ் சேமிப்புகள் தொடர்ந்து நடந்திருப்பது கவனிக்கப்பட்டது.

அட்டவணை 3.26: கணக்குத் தலைப்புகளின் கீழ் தொடர் சேமிப்பு விவரங்கள்

| வ எண் | பெயருடன் கணக்கு தலைப்பு | சேமிப்புத் தொகை (₹ லட்சத்தில்) | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | 2017-18 | 2018-19 | 2019-20 | 2020-21 | 2021-22 |
| 1. | 2235.60.200.JO (V) - அன்னபூர்ணா திட்டத்தை செயல்படுத்துதல் | 394.55 (89.20) | 201.75 (82.71) | 8.87 (18.57) | 9.63 (20.16) | 14.63 (30.63) |
| 2. | 2235.60.789.JB (V) - சிறப்பு கூறு திட்டத்தின் கீழ் அன்னபூர்ணா திட்டத்தை செயல்படுத்துதல் | 92.72 (83.83) | 22.85 (66.31) | 3.46 (19.36) | 4.77 (26.68) | 5.72 (31.99) |
| 3. | 3456.00.001.AA (V) - தலைமையகம் | 121.29 (16.55) | 186.65 (23.94) | 192.52 (18.91) | 136.89 (17.56) | 228.75 (25.38) |
| 4. | 3456.00.102.AA (V) - மாநகர வழங்கல் அமைப்பு | 210.77 (13.40) | 376.65 (19.86) | 188.44 (10.14) | 248.36 (13.65) | 362.17 (17.09) |
| 5. | 4408.02.800.JA (V) - நபார்டு வங்கியின் கடன் உதவி மூலம் கிடங்குகள் கட்டுதல் | 8,525.00 (33.62) | 6,936.02 (38.43) | 23,660.01 (53.29) | 33,009.01 (97.06) | 75,826.01 (89.17) |
| 6. | 4408.02.800.JB (V) - நபார்டு வங்கியின் கடன் உதவி மூலம் எதிர்கால உபயோகத்திற்காக தானியங்கள் சேமித்து வைக்கும் காற்று புகாத அமைவு தொழில்நுட்பத்தை (சிலோ-டெக்னாலஜி) பயன்படுத்தி கிடங்குகள் கட்டுதல் | 1,462.00 (50.00) | .. | 3,200.00 (100.00) | 1,600.00 (100.00) | 1,600.00 (100.00) |

*(அடைப்புக்குறியில் உள்ள புள்ளிவிவரங்கள் மொத்த ஒதுக்கீட்டின் விழுக்காடாக சேமிப்பைக் குறிக்கின்றன)*
*(ஆதாரம்: அந்தந்த வருடத்திய நிதியொதுக்க கணக்குகள் )*

டெண்டரை முடிப்பதில்/வேலை தொடங்குவதில் தாமதம் மற்றும் நிலம் கையகப்படுத்துதல் தொடர்பான வழக்குகள் காரணமாக, கணக்குத் தலைப்பு - 4408.02.800.JA - 'நபார்டு வங்கியின் கடன் உதவியுடன் கிடங்குகள் கட்டுதல்' (வரிசை எண் 5)ன் கீழ் ₹ 758.26 கோடி (89.17 விழுக்காடு) திரும்பப் பெறப்பட்டது.

கணக்குத் தலைப்பு 4408.02.800.JB'ன் கீழ் சிலோ டெக்னாலஜியைப் பயன்படுத்தி கிடங்குகள் கட்டுவதற்காக வழங்கப்பட்ட தொகை கடந்த மூன்று ஆண்டுகளில் முழுமையாக திரும்பப் பெறப்பட்டது. இதை சுட்டிக்காட்டிய போது, இடம் மாற்றம், நிர்வாக ரீதியிலான மற்றும் தொழில்நுட்பக் காரணங்களால் திரும்பப் பெறப்பட்டதாக துறை தொிவித்துள்ளது, மேலும், இந்த திட்டம் 2022-23 ஆம் ஆண்டில் கைவிடப்பட்டது என்றும் கூறியது (செப்டம்பர் 2022). தேவைப்படும் நிதியை தகுந்த நேரத்தில் மறுநிதியொதுக்கம் மூலம் செய்ய முடியும் என்பதால் இத்திட்டத்திற்கு அடையாள ஒதுக்கீட்டை வழங்கியிருந்தால் ஒவ்வொரு ஆண்டும் பெரும் தொகை சேமிபபைத் தவிர்க்கலாம் என்று தணிக்கை கண்டறிந்தது.

இவ்வாறாக, முக்கியமாக, நிர்வாக அனுமதி வழங்குவதில் தாமதம், டெண்டரை இறுதி செய்வதில் தாமதம், நிலம் கிடைக்காதது மற்றும் சம்பளத்தின் துல்லியமான மதிப்பீட்டில் தளர்வு காரணமாக இந்த இரண்டு மானியங்களிலும் தொடர் சேமிப்பு, FMG மீதான சேமிப்பு, முழு ஒதுக்கீட்டையும் திரும்பப் பெறுதல் போன்றவை நிகழ்ந்தன. மேலே உள்ள மானியங்களில் சுட்டிக்காட்டப்பட்ட நேர்வுகள் உதாரண குறியீடுகளாகும். இதே போன்ற நிகழ்வுகளை பிற மானியங்களிலும் உள்ளதா என அரசு ஆராய்ந்து, மாநிலத்தின் நிதி விவேகத்தைக் கருத்தில் கொண்டு, உடனடி ஆக்கபூர்வ நவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

## 3.8 முடிவுரை மற்றும் பரிந்துரைகள்

### சட்டப்படியான அதிகாரம் இன்றி செலவு செய்யப்பட்டமை

இறுதி திருத்திய ஒதுக்கீடு இன்றி 15 நேர்வுகளில் மொத்தம் ₹ 37.93 கோடி செலவிடப்பட்டது. இவற்றுக்கு மூல அல்லது துணை ஒதுக்கீடுகளிலோ மறுநிதியொதுக்க நிலையிலோ நிதி ஒதுக்கப்படவில்லை. மூல ஒதுக்கீட்டிலோ அல்லது துணை ஒதுக்கீட்டிலோ சட்டமன்றத்தின் ஒப்புதலுடன் கூடிய ஒதுக்கீட்டை பெறாத 6 நேர்வுகளில் மொத்தம் ₹ 2.26 கோடி செலவிடப்பட்டது.

*பரிந்துரை: அரசு, இந்தக் குறைபாட்டிற்கான பொறுப்பை நிர்ணயித்து, IFHRMSல் வரவு செலவு திட்டத் தொகுதிக் கட்டுப்பாடுகளைச் செயல்படுத்த வேண்டும்*

***(பத்திகள் 3.3.1.1 மற்றும் 3.3.1.2)***

### தேவையற்ற துணை மானியம் / மறுநிதியொதுக்கங்கள்

2021-22 ஆண்டில், தலா ₹ 50 இலட்சம் அல்லது அதற்கும் மேற்பட்ட தொகை கொண்ட 59 நேர்வுகளில் அளிக்கப்பட்ட மூல ஒதுக்கீடு தொகையே பயன்படுத்தப்படாததால், அவற்றுக்கு அளிக்கப்பட்ட மொத்தம் ₹ 242.62 கோடி அளவிலான துணை மானியங்கள் தேவையற்றதாக ஆயின. மேலும், 26 கணக்கு தலைப்புகளில், மூல மற்றும் துணை ஒதுக்கீடுகளில் ₹ 1,366 கோடி பயன்பாட்டுக்கு இருந்தபோதிலும், மறுநிதியொதுக்க நிலையில் ₹ 53.00 கோடி கூடுதலாக ஒதுக்கப்பட்டது; இந்த நேர்வுகளில் நிகழ்ந்த மொத்த செலவான ₹ 1,253.15 கோடி ஏற்கனவே உள்ள ஒதுக்கீட்டிற்கு உட்பட்டே இருந்தது என்பதால் கூடுதல் ஒதுக்கீடு தேவையற்றதாக ஆனது. இது போன்ற ஏற்பாடுகளைச் செய்ய கட்டுப்பாட்டு அதிகாரிகளின் மெத்தனம் காட்டுவது மட்டுமல்லாமல், அரசாங்கத்தின் ஒட்டுமொத்த முறையற்ற வரவு-செலவு நிர்வாகத்தையும் இது குறிக்கிறது.

*பரிந்துரை: தேவையற்ற துணை ஒதுக்கீடுகள் தவிர்க்கப்படுவதை உறுதி செய்ய அரசாங்கம் ஒருங்கிணைந்த முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்*

***(பத்திகள் 3.3.4 மற்றும் 3.3.5)***

### செலவு செய்யப்படாத தொகை, நிதியொதுக்க ஒப்படைப்புகள் மற்றும் தொடர் சேமிப்புகள்

பல்வேறு மானியங்களின் கீழ் தலா ₹ 100 கோடி அளவிற்கு மேல் சேமிப்பு இருந்த 42 நேர்வுகளில் மொத்தம் ₹ 28,723.33 கோடி அளவுக்கு சேமிப்பு ஏற்பட்டது.

₹ 18,140.29 கோடி 24 மார்ச் 2022 அன்றும், ₹ 11,739.35 கோடி 31 மார்ச் 2022 அன்றும் ஒப்படைக்கப்பட்டன. 31 மார்ச் 2022 அன்று ஒப்படைக்கப்பட்ட ₹11,739.35 கோடி தொகையில், ₹ 12,387.29 கோடி மொத்த மதிப்புள்ள 92 நேர்வுகள் தலா ₹ 10 கோடி தொகைக்கு மேற்பட்ட மதிப்புடையவை ஆகும்; இது போதிய நிதி கட்டுப்பாடு இல்லாததை காட்டுகிறது.

கடந்த ஐந்தாண்டுகளில், மொத்த மானிய தொகையில் ஐந்து விழுக்காட்டிற்கும் மேலான தொடர்ந்த சேமிப்பு 24 மானியங்கள்/நிதியொதுக்கங்களில் ஏற்பட்டது. எண் 16 - நிதி என்ற மானியத்தின் மூலதன பிரிவின் கழ் கடந்த ஐந்தாண்டு காலம் முழுவதும் தொடர்ச்சியாக 92 விழுக்காட்டிற்கு மேலான சேமிப்பு இருந்தது.

*பரிந்துரை: சேமிப்பு உருவாவதை குறைத்தல், மானியம்/நிதியொதுக்கத்திற்குள் பெருமளவிலான சேமிப்பை கட்டுப்படுத்துதல், எதிர்நோக்கப்படும் சேமிப்பை உரிய நேரத்தில் கண்டறிந்து ஒப்புவித்தல் ஆகியவற்றை உறுதி செய்வதன் பொருட்டும், சேமிப்பு தொகை பிற வளர்ச்சி பணிகளுக்கு பயன்பட உதவும் பொருட்டும், தகுந்த ஒரு கட்டுப்பாட்டு முறைமையை அரசு உருவாக்க வேண்டும்.*

***(பத்திகள் 3.3.6.1, 3.3.6.2 மற்றும் 3.3.6.4)***

### மிகை செலவும் அதன் முறைப்படுத்துதலும்

நடப்பாண்டில், மானியங்கள்/நிதியொதுக்கங்களில் ஒப்புதல் அளிக்கப்பட்ட தொகைகளைவிட ₹ 5.24 கோடி கூடுதலாக செலவிடப்பட்டது. இச்செலவு முறைப்படுத்தப்பட வேண்டும். மேலும், 2014-22 தொடர்பான ₹ 2,848.83 கோடி மிகை செலவு இதுவரை முறைப்படுத்தப்படாமல் நிலுவையில் இருந்தது.

*பரிந்துரை: சட்டமன்ற ஒப்புதலுக்கு மேற்பட்ட அதிக செலவினங்களை அரசு தீவிரமாக கவனித்து, அதற்குப் பொறுப்பானவர்களை பொறுப்பேற்கவும் மற்றும் அதிகப்படியான செலவினங்களை உரிய செயல்முறை மூலம் முறைப்படுத்தவும் வேண்டும்.*

***(பத்திகள் 3.3.7.1 மற்றும் 3.3.7.2)***

### விரைவுபடுத்தப்பட்ட செலவு

மூல ஒதுக்கீட்டின்போது 124 துணை தலைப்புகளின் கீழ் ஒதுக்கப்பட்டு, பயன்பாட்டுக்குரியதாக ஆண்டு முழுவதும் இருந்த ₹ 14,247.45 கோடி தொகை மொத்தமாக மார்ச் 2022ல் செலவிடப்பட்டது; இது, நிதியாண்டின் இறுதி மாதத்தில் விரைவுபடுத்தப்பட்ட வகையில் செலவு செய்வது தவிர்க்கப்பட வேண்டும் என கூறும் தமிழ்நாடு நிதி விதித்தொகுப்பின் பிரிவு 39க்கு எதிரானதாகும்.

*பரிந்துரை: கடைசி நேர ஒப்படைப்பு மற்றும் விரைவு செலவினத்தை தவிர்க்க அரசு பொருத்தமான கட்டுப்பாட்டு முறையை ஏற்படுத்த வேண்டும். செலவினங்களின் முன்னேற்றத்தை தொடர்ந்து கண்காணிப்பதற்காக IFHRMSன் வர்த்தக நுண்ணறிவு தொகுதியை செயல்படுத்த வேண்டும்.*

***(பத்தி 3.4.2)***

# அத்தியாயம் 4

# கணக்குகள் மற்றும் நிதிநிலை அறிக்கை நடைமுறைகளின் தரம்

# அத்தியாயம் 4

## கணக்குகள் மற்றும் நிதிநிலை அறிக்கை நடைமுறைகளின் தரம்

நிதி சார்ந்த துறை அளவிலான அறிக்கைகளும், தொடர்புடைய விதிகள் மற்றும் நடைமுறைகளை பின்பற்றப்படுவதும் சிறப்பான நிர்வாகத்திற்கு கணிசமான அளவில் பங்களிக்கின்றன. இவ்வகையில், நிதி விதிகள், நடைமுறைகள் மற்றும் அறிவுறுத்தல்கள் ஆகியவற்றை பின்பற்றுவதும், அவ்வாறு பின்பற்றுதலின் நிலை குறித்து உரிய நேரத்தில் தரத்துடன் அறிக்கை அளித்தலும் சிறந்த நிர்வாகத்திற்கான தன்மைகளுள் ஒன்று. பின்பற்றுதல் மற்றும் கட்டுப்பாடுகள் மீதான அறிக்கைகள் பயனுள்ளவையாகவும் செயல்படுத்தும் வகையிலும் இருந்தால், நுணுக்கமான திட்டமிடல் மற்றும் முடிவெடுத்தல் உள்ளிட்ட அரசின் அடிப்படை தலைமை பொறுப்புகளை நிறைவேற்ற அரசுக்கு உதவும்.

மாநில அரசின் பல்வேறு அதிகார அமைப்புகளால் அளிக்கப்பட்ட கணக்குகளின் தரம் மற்றும் விதிக்கப்பட்ட நிதி விதிகள் மற்றும் ஒழுங்குமுறைமைகளை பல்வேறு துறை சார்ந்த அலுவலர்கள் பின்பற்றாதது ஆகியவை மீதான குறிப்புகளை இந்த அத்தியாயம் வழங்குகிறது.

### 4.1 மாநிலத்தின் தொகுநிதி அல்லது பொது கணக்கிற்கு வெளியில் உள்ள நிதி

மாநில அரசு பெறும் அனைத்து வருவாய்கள், அவ்வரசு கடன் பத்திரங்கள் வெளியீடு மூலம் பெற்ற கடன்கள், கடன்கள் அல்லது வழி-வகை முன்பணங்கள், அளித்த கடன்களை மீள பெறுவதன் மூலம் அவ்வரசு பெறும் தொகைகள் ஆகியன ‘மாநிலத்தின் தொகுநிதி’ என்ற பெயர் கொண்ட ஒரு திரள் நிதியாக இருக்க வேண்டும் என இந்திய அரசியலமைப்பு சட்டம், பிரிவு 266 (1)ல் கூறப்பட்டுள்ளது.

பத்தி 4.1.1ல் விளக்கப்பட்டுள்ளவாறு, மாநில தொகு நிதியில் வரவு வைக்கப்பட வேண்டிய நிதிகள், வெளியில் வைக்கப்பட்டிருந்தது தணிக்கையில் கண்டறியப்பட்டது.

#### 4.1.1. தொகு நிதிக்கு வெளியே வைக்கப்பட்டிருந்த மின்சார வரி

**மாநில அரசால் TANGEDCOவிடமிருந்து மின்சார வரி பெறப்படாமல் அல்லது குறைவாக பெறப்பட்டிருந்தது மற்றும் TANGEDCOவால் நான்கு வருட காலத்திற்கு தக்கவைத்துக்கொள்ளப்பட்ட தொகை தற்காலிகமாக தவறாக பயன்படுத்தப்படும் அபாயம் நிறைந்ததாக உள்ளது. அரசுக் கணக்கில் நிலுவைத் தொகையை வசூலிக்காதது மாநில அரசின் வருவாய் பற்றாக்குறைக்கு பங்களிக்கும் காரணிகளில் ஒன்றாகும்.**

தமிழ்நாடு மின்சார நுகர்வு அல்லது விற்பனை மீதான வரிச் சட்டம், 2003ன் பிரிவு 3ன் கீழ், TANGEDCO (சட்டத்தின் கீழ் உரிமம் பெற்றவர்) மின்சார வரியை எரிசக்தி கட்டணங்களுடன் வசூலித்து, வரியை அரசுக் கணக்கில் செலுத்த வேண்டும். 2018-22 ஆம் ஆண்டில், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் (TANGEDCO) நுகர்வோரிடமிருந்து மின்சார வரியாக ₹ 5,039.44 கோடி வசூலித்ததில், ₹ 740.30 கோடி மட்டுமே செலுத்தியது மற்றும் TANGEDCOவிற்கு செலுத்த வேண்டிய கட்டணத்தில் ₹ 772 கோடியை அரசு சரிகட்டியது. பணம் செலுத்தங்கள் மற்றும் சரிகட்டல்களுக்கு பிறகு, 31 மார்ச் 2022

நிலவரப்படி, தொகு நிதியில் செலுத்தப்படாத மின்சார வரி ₹ 3,527.13 கோடியாக (**அட்டவணை 4.1**) இருந்தது. குறிப்பிட்ட காலமுறையில் வரித் தொகையை செலுத்துவதை தமிழ்நாடு அரசு கட்டாயமாக்கவில்லை மற்றும் சரிகட்டுதல்களும் முறையாக மேற்கொள்ளப்படவில்லை. TANGEDCO மூலம் அரசு கணக்கில் செலுத்தப்பட்ட தொகை, கடன்களுக்கு எதிரான சரிக்கட்டுதல் ஆகும். 2021-22ஆம் ஆண்டில் ₹ 1,387.73 கோடி நிலுவைத் தொகை அரசுக் கணக்குகளில் வரவு வைக்கப்பட்டிருந்தால், அந்த அளவுக்கு வருவாய்ப் பற்றக்குறை குறைந்திருக்கும்.

**அட்டவணை 4.1: வசூலிக்கப்பட்டு அரசு கணக்கில் செலுத்தப்பட்ட மின்சார வரிகள் பற்றிய விவரங்கள்**

*(₹ கோடியில்)*

| ஆண்டு | வசூலிக்கப்பட்ட தொகை | அரசுக் கணக்கில் செலுத்தப்பட்ட தொகை | வரவு வைக்கப்பட வேண்டிய தொகை |
|---|---|---|---|
| 2018-19 | 1,283.52 | 1,283.52 | -- |
| 2019-20 | 1,266.10 | 228.79 | 1,037.31 |
| 2020-21 | 1,102.09 | -- | 1,102.09 |
| 2021-22 | 1,387.73 | -- | 1,387.73 |
| மொத்தம் | **5,039.44** | **1,512.31** | **3,527.13** |

(ஆதாரங்கள்: கணக்குத் தலைவர் (தணிக்கை - II)-ஆல் அளிக்கப்பட்ட விவரங்கள்)

மேலே உள்ள அட்டவணையில் இருந்து, 2018-22 காலகட்டத்தில் வசூலிக்கப்பட்ட வரியில் 70 விழுக்காடு அரசுக் கணக்குகளில் வரவு வைக்கப்படாமல் TANGEDCOவிடமே வைக்கப்பட்டிருந்தது என்பது தெளிவாகிறது. தனது சொந்த செயல்பாட்டு செலவினங்களுக்காக இத்தொகையை செலவழித்திருக்க முடியும் என்ற சாத்தியக்கூறை நிராகரிக்க முடியாது. இவ்வாறு அரசுக் கணக்கில் பணம் செலுத்தாமல் இருப்பதும், வசூலிக்கபட்ட வரியை இவ்வளவு நீண்ட காலத்திற்குத் தக்கவைத்துக்கொள்வது என்பதும் தற்காலிகமாக தவறாக பயன்படுத்தப்படும் அபாயம் நிறைந்ததாக உள்ளது. இது அரசு மற்றும் TANGEDCO ஆகிய இரண்டிலும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் மீது பொறுப்பை நிர்ணயிக்க வேண்டும் என்பதை குறிக்கிறது.

நிறைவு கூட்டத்தில், இதனை TNEBயிடம் எடுத்து செல்லப்படும் என்று ACS தெரிவித்தார்.

## 4.2 வட்டி பெறும் வைப்புத்தொகைகள் தொடர்பான வட்டி பொறுப்புகளை தீர்வு செய்யாமை

கணக்கு தலைப்புகள் 8338 (உள்ளாட்சி நிதிகளின் வைப்புத்தொகைகள்) மற்றும் 8342 (பிற வைப்புத்தொகைகள்) ஆகியவற்றின் கீழ் பொறுப்புகளை எதிர்கொள்ள 2049-60-101 (வைப்புத்தொகைகள் மீதான வட்டி) என்ற பெருந்தலைப்பின் கீழ் வட்டி பெறும் வைப்புத்தொகைகளுக்கு வட்டி வழங்க நிதி ஒதுக்கி, அதனை செலுத்தும் பொறுப்பு அரசுக்கு உள்ளது.

நிதி கணக்குகளின்படி, 2021-22ல் 8338 மற்றும் 8342 என்ற பெருந்தலைப்புகளின் கீழ் பொறுப்புகளை எதிர்கொள்ள, 2049-60-101 (வைப்புத்தொகைகள் மீதான வட்டி) என்ற கணக்குத் தலைப்பின் கீழ் ₹ 220.71 கோடி வட்டி செலுத்தப்பட்டது; இது, பெருந்தலைப்பு 8338 மற்றும் 8342களில் உள்ள வைப்புகளில் (₹ 55,956.42 கோடி) 0.39 விழுக்காடு ஆகும். மேலும், கணக்குத் தலைப்பு '2049-60-101'ன் கீழ் ஒதுக்கப்பட்ட ₹ 26.19 கோடி முழுவதும் மறுநிதியொதுக்கம் மூலம் திரும்பப் பெறப்பட்டது. இதன் மூலம் இந்த வைப்புத் தொகைகளின் மீதான வட்டிப் பொறுப்புகளை தீர்ப்பது தள்ளிப் போகிறது. (**இணைப்பு 3.6**).

## 4.3 மாநில திட்ட செயலாக்க முகமைகளுக்கு நேரடியாக நிதி விடுவிப்பு

பல்வேறு திட்டங்களை செயல்படுத்துவதற்காக மத்திய அரசு கணிசமான நிதியை மாநில திட்ட செயலாக்க முகமைகளுக்கு விடுவிக்கிறது. அவ்வாறான நிதி தொடர்பாக, கணக்குகளுக்கான தலைமை கட்டுப்பாட்டாளரின் பொது நிதி மேலாண்மை அமைப்பின் (PFMS) இணைய தளத்தில் உள்ள விவரங்கள் நிதி கணக்குகள் - பகுதி IIன் இணைப்பு VIல் தரப்பட்டுள்ளன. இந்நிதிகள் மாநில வரவு - செலவு திட்டம்/மாநில கருவூல அமைப்பிற்கு விடுவிக்கப்படாததால், இவை பெறப்படுவதும் செலவிடப்படுவதும் நிதி கணக்குகளில் சேராது.

பல்வேறு மத்திய திட்டங்களை செயல்படுத்துவதற்காக 2021-22ம் ஆண்டில் மத்திய அரசு ₹ 23,156.22 கோடி தொகையை நேரடியாக மாநில திட்ட செயலாக்க முகமைகளுக்கு மாற்றம் செய்தது.

மாநில திட்ட செயலாக்க முகமைகளுக்கு 2017-22 காலகட்டத்தில் நேரடியாக நிதி வழங்கப்பட்டதன் போக்கு **விளக்கப்படம் 4.1**ல் காட்டப்பட்டுள்ளது.

**விளக்கப்படம் 4.1: செயல்படுத்தும் முகமைகளுக்கு நேரடியாக நிதி விடுவித்தமை**
**(₹ கோடியில்)**




*(ஆதாரம்: நிதிக் கணக்குகள்)*

2021-22ம் ஆண்டில் தலா ₹ 100 கோடி அளவிற்கு மேலாக நிதி பெற்ற முகமைகளின் விவரங்கள் **அட்டவணை 4.2**ல் தரப்பட்டுள்ளன.

2021-22 ஆம் ஆண்டில், ₹ 23,156.22 கோடி இந்திய அரசால் நேரடியாக மாநில அமலாக்க முகமைகளுக்கு மாற்றப்பட்டது. இது, கடந்த ஐந்து ஆண்டுகளில்

அதிகரித்து வரும் போக்கில் இருந்தது. மேலும், முந்தைய ஆண்டை விட, 2021-22ல் ₹ 4,929.79 கோடி கணிசமான அதிகரிப்பைப் பதிவு செய்துள்ளது (27 விழுக்காடு).

**அட்டவணை 4.2: ₹ 100 கோடி அளவிற்கு மேலான நிதியை மத்திய அரசிடமிருந்து நேரடியாக பெற்ற முகமைகள்**

| வ. எண் | மத்திய அரசின் திட்டம் | செயல்படுத்தும் முகமை | 2021-22ல் மத்திய அரசு விடுவித்த தொகை (₹ கோடியில்) |
|---|---|---|---|
| 1 | மகாத்மா காந்தி தேசிய ஊரக உத்தரவாதத் திட்டம் | மாநில வேலை உறுதி நிதி, தமிழ்நாடு | 7,403.61 |
| 2 | தேசிய உணவு பாதுகாப்பு சட்டத்தின் கீழ் பரவலாக்கப்பட்ட உணவு தானியங்கள் கொள்முதலுக்கான உணவு மானியம் | தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம் | 6,250.93 |
| 3 | உள்நாட்டு யூரியாவிற்கான தொகை | சென்னை உர நிறுவனம் மற்றும் ஸ்பிக் | 2,877.96 |
| 4 | பிரதம மந்திரி கிசான் சம்மான் நிதி | வேளாண்மை துறை | 2,261.14 |
| 5 | உள்நாட்டு P மற்றும் K உரங்களுக்கான தொகை | பல்வேறு உர கம்பெனிகள் | 1,007.33 |
| 6 | மெட்ரோ திட்டங்கள் | சென்னை மெட் ரோவைப் பொறுத்தவரை ஈக்விட்டி கேபிடல் | 935.78 |
| 7 | பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் | பல்வேறு மாவட்டங்களின் மாவட்ட ஆட்சியர்கள் | 211.50 |
| 8 | யுனிவர்சல் சர்வீசஸ் ஒப்லிகேஷன் ஃபண்ட் (USOF) - டெலிகாம் உள்கட்டமைப்பை உருவாக்குவதற்கும் மேம்படுத்தற்கும் சேவை வழங்குநர்களுக்கு இழப்பீடு | பி.எஸ்.என்.எல்., எஸ்.டி.பி | 155.46 |
| 9 | சர்க்கரை ஆலைகளுக்கு உதவி வழங்கும் திட்டம் | பண்ணாரி அம்மன் சுகர்ஸ் லிமிடெட் E.I.D parry Ltd | 148.14 |
| 10 | NFSAன் கீழ் FPS வணிகர்களின் விளிம்புத்தொகை மற்றும் மாநிலத்திற்குள்ளேயே தானியங்கள் கொண்டு செல்வதற்கான உதவி தொகை | தமிழ்நாடு சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் லிமிடெட் | 131.65 |
| 11 | 2019-20 காலத்திற்கான சர்க்கரை ஆலைகளுக்கான உதவி திட்டம் | பண்ணாரி அம்மன் சுகர்ஸ் லிமிடெட் E.I.D parry Ltd | 130.02 |
| 12 | தேசிய எய்ட்ஸ் மற்றும் STD கட்டுப்பாட்டு திட்டங்கள் | தமிழ்நாடு எய்ட்ல் கட்டுப்பாட்டு சங்கம் (TNSACSPF) | 116.86 |
| 13 | இந்திய தோல் மேம்பாட்டு திட்டம் | மத்திய தோல் ஆராய்ச்சி நிறுவனம் | 106.83 |

(*ஆதாரம்: நிதிக் கணக்குகள்*)

இந்நிதிகள் மாநில வரவு - செலவு திட்டம்/மாநில கருவூல அமைப்பிற்கு விடுவிக்கப்படாததால், இவை பெறப்படுவதும் செலவிடப்படுவதும் வருடாந்திர நிதி கணக்குகளில் சேராது. மேலும், மாநிலத்தின் வரவு செலவுகள் மற்றும் அவற்றிலிருந்து பெறப்பட்ட பிற நிதி மாறுபாடுகள்/அளவுருக்கள் முழுமையாக காட்டாது.

## 4.4 பயன்பாட்டு சான்றிதழ்கள் வழங்குவதில் தாமதம்

நிலை ஆணைகளின் (கணக்குகள் மற்றும் பணிவரவுகள் (entitlement)) கையேடு, அத்தியாயம் 16ல் கொடுக்கப்பட்டுள்ள அறிவுரைகளின்படி, கடந்த நிதியாண்டில் மார்ச் வரையிலான காலகட்டத்தில் பெறப்பட்ட மானிய உதவிகளுக்கு, ஜூன் இறுதியில், மானிய உதவி பெற்ற நிறுவனங்கள் மானிய உதவி வழங்கிய அதிகாரிகளுக்கு பயனீட்டுச் சான்றிதழ்கள் வழங்க வேண்டும்.

எனினும், நிதி கணக்குகள் 2021-22ன்படி, ₹ 803.29 கோடி தொகைக்கான 34 பயன்பாட்டு சான்றிதழ்கள் நிலுவையில் உள்ளன என்பது கண்டறியப்பட்டது. நிலுவை குறித்த துறைவாரியான விவரங்கள் **இணைப்பு 4.1**ல் தரப்பட்டுள்ளன; பயன்பாட்டு சான்றிதழ்கள் அளிப்பதில் நிலுவை குறித்த ஆண்டுவாரியான சுருக்கம் **அட்டவணை 4.3**ல் தரப்பட்டுள்ளன.

**அட்டவணை 4.3: நிலுவையிலுள்ள பயன்பாட்டு சான்றிதழ்களின் ஆண்டுவாரியான விவரம்**

| ஆண்டு | பயன்பாட்டுச் சான்றிதழ்களின் எண்ணிக்கை | தொகை (₹ *கோடியில்*) | பயன்பாட்டுச் சான்றிதழ்கள் அளிக்க தவறிய துறைகள் |
|---|---|---|---|
| 2019-20 வரை | 9 | 72.62 | நகராட்சி நிர்வாக ஆணையரகம் *(1 எண்ணிக்கை ₹ 3.41 கோடி)*<br>தொழில்கள் மற்றும் வணிக ஆணையரகம் *(3 எண்ணிக்கை - ₹ 21.98 கோடி)*<br>*நகர் மற்றும் ஊரமைப்பு இயக்குனரகம் (1 எண்ணிக்கை - ₹ 21.00 கோடி)*<br>வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி இயக்குனரகம் *(3 எண்ணிக்கை - ₹ 20.00 கோடி)*<br>மருத்துவ கல்வி இயக்குனரகம் *(1 எண்ணிக்கை - ₹ 6.24 கோடி)* |
| 2020-21 வரை | 8 | 82.26 | ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குனரகம் *(2 எண்ணிக்கை - ₹ 7.50 கோடி)*<br>சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம் *(1 எண்ணிக்கை - ₹ 6.27 கோடி)*<br>நகராட்சி நிர்வாக ஆணையரகம் *(2 எண்ணிக்கை - ₹ 54.74 கோடி)*<br>தொழில்கள் மற்றும் வணிக ஆணையரகம் *(3 எண்ணிக்கை - ₹ 13.75 கோடி)* |
| 2021-22 வரை | 17 | 648.41 | ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் இயக்குனரகம் *(8 எண்ணிக்கை - ₹ 427.50 கோடி)*<br>சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம் *(1 எண்ணிக்கை - ₹ 172.89 கோடி)*<br>தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் *(1 எண்ணிக்கை - ₹ 40.98 கோடி)*<br>தொழில்கள் மற்றும் வணிக ஆணையரகம் *(2 எண்ணிக்கை - ₹ 3.08 கோடி)*<br>தமிழ்நாடு கால்நடை மற்றும் விலங்கு அறிவியல் பல்கலைக்கழகம் *(5 எண்ணிக்கை - ₹ 8.19 கோடி)*<br>கூட்டுறவு சங்கப் பதிவாளர் *(3 எண்ணிக்கை - ₹ 0.92 கோடி)*<br>வேளாண் இயக்குனரகம் *(1 எண்ணிக்கை - ₹ 0.72 கோடி)* |
| மொத்தம் | **4** | **803.29** | |

*(ஆதாரம்: கணக்குகள் மீதான குறிப்புகள்)*

2021-22 ஆம் ஆண்டிற்கான நிலுவையில் உள்ள பயன்பாட்டுச் சான்றிதழ்களில், சென்னை பெருநகர நீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் வாரியம் (CMWSSB) இன்னும் ₹ 172.89 கோடிக்கான "சென்னையில் உள்ள கடல்நீரை குடிநீராக்கும் திட்டம் - சாத்தியக்கூறு இடைவெளிக்கான நிதியுதவி" திட்டதிற்கான பயன்பாட்டுச் சான்றிதழ்களை சமர்ப்பிக்கவில்லை. CMWSSB-ல் தணிக்கை மூலம் இதை ஆய்வு செய்ததில், ஆகஸ்ட் 2022இல் ₹ 134.70 கோடிக்கான பயன்பாட்டுச் சான்றிதழ்கள் சமர்ப்பிக்கப்பட்டதாகக் கூறப்பட்டது. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குனரகத்தில், சூரிய சக்தி பசுமை வீடு திட்டத்திற்கு ₹ 420 கோடி ரூபாய்க்கான பயன்பாட்டுச் சான்றிதழ்கள் இன்னும் சமர்ப்பிக்கப்படவில்லை

என்றும், தணிக்கை மூலம் ஆய்வு செய்ததில் ₹ 210 கோடிக்கான பயன்பாட்டுச் சான்றிதழ்கள் ஜூன் 2022ல் சமர்ப்பிக்கப்பட்டதாகக் கூறப்பட்டது.

பயன்பாட்டு சான்றிதழ்கள் சமர்ப்பிக்காதது, பொறுப்புடைமையை உறுதி செய்வதற்கான விதிகளை துறை அலுவலர்கள் பின்பற்ற தவறியதை காட்டுகிறது. நிலுவையில் உள்ள பயன்பாட்டு சான்றிதழ்கள் மூலதன வகை செலவிற்கான மானிய உதவி தொடர்பானதாக இருந்தால், இப்பொருள் மேலும் முக்கியத்துவம் பெறும்.

பயன்பாட்டுச் சான்றிதழ்கள் நிலுவையில் இருப்பது, நிதியை தவறாகப் பயன்படுத்தும் அபாயம் நிறைந்ததாக இருந்தது. பயன்பாட்டுச் சான்றிதழ்கள் உரிய நேரத்தில் சமர்ப்பிப்பதை வலியுறுத்தப்படுவதோடு மட்டுமல்லாமல் உறுதி செய்யப்பட வேண்டும்.

## 4.5 மானிய உதவி பெறும் நிறுவனங்களை 'மற்றவை' என வகைப்படுத்தியமை

மாநில அரசு பல்வேறு அமைப்புகளுக்கு உதவி மானியம் வழங்குகின்றது. கணக்குகளின் வெளிப்படைத்தன்மையில் நிதி வழங்கப்பட்ட நிறுவனத்தின் தன்மை மற்றும் அதன் விவரங்களை அளிப்பது முக்கியமானதாகும்.

தமிழ்நாடு அரசின் 2021-22 நிதிக் கணக்குகளின் படி, உதவி மானியம், மாநிலத்தின் மொத்த செலவினத்தில் 28.03 விழுக்காடாக இருந்தது மற்றும் மொத்த உதவி மானியமான ₹ 82,585.60 கோடியில், உதவி பெறும் நிறுவனங்களை 'மற்றவை' என வகைப்படுத்தி, அதாவது உதவி மானியம பெறும் 'உள்ளாட்சி அமைப்புகள்' தவிர்த்து பல்வேறு அரசு துறைகள் 'மற்றவை' என, ₹ 66,856 கோடி (80.95 விழுக்காடு) விடுவிக்கப்பட்டுள்ளது.

2021-22ன் மொத்த உதவி மானியமான ₹ 82,585.60 கோடியில், ₹ 10,892.02 கோடி (13.19 விழுக்காடு) உதவி பெறும் நிறுவனங்களை 'மற்றவை' (விரிவான தலைப்பு குறியீடு – 090, என வகைப்படுத்தி துணை-விரிவான தலைப்பு – 009) என காட்டப்பட்டுள்ளது. இது, கணக்குகளின் வெளிப்படைத்தன்மை மற்றும் இந்த மானியத்திற்கு வழங்கப்படும் பயனீட்டுச் சான்றிதழ்களை கண்காணிப்பதை வெகுவாக பாதிக்கும். கோவிட்-19 காரணமாக ஊரடங்கை சமாளிக்க வாழ்வாதார ஆதரவு - அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்பட்ட பண உதவி மானியமான ₹ 8,392.76 கோடியும் 'மற்றவை' என வகைப்படுத்தப்பட்டுள்ளது. கடந்த மூன்றாண்டுகளில், அதாவது 2018-19 முதல் 2021-22 வரை, வழங்கப்பட்ட மொத்த உதவி மானியத்தில் 'மற்றவை' என வகைப்படுத்தி வழங்கப்பட்ட மானியத்தின் விழுக்காடு **அட்டவணை 4.4**லும் **விளக்கப்படம் 4.2**லும் கொடுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 4.4: 2018-22 காலகட்டத்தில் 'மற்றவை' என வகைப்படுத்தி விடுவிக்கப்பட்ட மானிய உதவி**

*(₹ கோடியில்)*

| வரிசை எண் | விவரம் | 2018-19 | 2019-20 | 2020-21 | 2021-22 |
|---|---|---|---|---|---|
| 1 | அந்தந்த ஆண்டிற்கான மொத்த மானியம் | 47,825.88 | 50,603.81 | 70,678.62 | 82,585.60 |
| 2 | நிதி கணக்குகளில் விவர அறிக்கை 10ன் படி உதவி பெறும் மானியங்களை 'மற்றவை' என வகைப்படுத்தியது [விரிவான தலைப்பு – 090] | 35,933.85 | 38,401.04 | 57,883.95 | 66,855.79 |
| 3 | உதவி பெறும் நிறுவனங்களை 'மற்றவை' (துணை விரிவான தலைப்பு - 09) என வகைப்படுத்தியது | 13,63.52 | 685.15 | 10,577.58 | 10,892.02 |
| 4 | மொத்த உதவி மானியத்தில் மற்றவைகளின் விழுக்காடு (துணை விரிவான தலைப்பு - 09) | 2.85 | 1.35 | 14.96 | 13.19 |

*(ஆதாரம்: நிதிக் கணக்குகள்)*

**விளக்கப்படம் 4.2: 'மற்றவை' என வகைப்படுத்தி விடுவிக்கப்பட்ட மானிய உதவி**




*(ஆதாரம்: நிதிக் கணக்குகள்)*

## 4.6 சரிக்கட்டப்படாத தற்காலிக முன்பணங்கள்

பிற மாநிலங்களில் நடைமுறையில் உள்ள, எதிர்பாராசெலவுக்கான சுருக்கப்பட்டி மூலம் நிதியை பெற்று, பின்னர் விரிவான செலவுப்பட்டிகள் மூலம் அதை சரிக்கட்டும் முறையை தமிழ்நாடு அரசு பின்பற்றுவதில்லை. மாறாக, தமிழ்நாடு நிதி விதித்தொகுப்பு, விதி 99ன் கீழ் தற்காலிக முன்பணங்களை பெற பணம் பெற்று வழங்கும் அலுவலர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது; விரிவான

செலவுப்பட்டிகள் மற்றும் செலவு சீட்டுகளை அவர்கள் கூடியவிரைவில் அளித்து முன்பணங்கள் சரிக்கட்டப்பட வேண்டும்.

31 மார்ச் 2022 நிலையில், தமிழ்நாடு நிதி விதித்தொகுப்பு - பகுதி I - விதி 99ன் கீழ் பல்வேறு பணம் பெற்று வழங்கும் அலுவலர்களால் பெறப்பட்ட ₹ 317.81 கோடி மதிப்புடைய 1,649 தற்காலிக முன்பணங்கள் சரிக்கட்டப்படாமல் நிலுவையில் இருந்தன என்பது காணப்பட்டது. இதில் 10 ஆண்டுகளுக்கும் மேலாக நிலுவையில் இருந்த தொகைகளும் அடங்கும். ₹ 162.93 கோடி மதிப்புடைய 278 இனங்கள் ஒரு ஆண்டுக்கு மேலாகியும் சரிகட்டப்படாமல் நிலுவையில் இருந்தன.

இந்த முன்பணங்கள், அவை எடுக்கப்பட்ட நாளிலிருந்து விதிக்கப்பட்ட மூன்று மாத காலத்திற்குள் சரிக்கட்டப்பட வேண்டும். சரிக்கட்டப்படாத முன்பணங்கள் ₹ 317.81 கோடி தொகையில், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மற்றும் சேவை இயக்குனர் ₹ 86.74 கோடி (27.29 விழுக்காடு) மற்றும் நீதித்துறை ₹ 63.87 கோடி (20.10 விழுக்காடு) தீர்வு செலவு சீட்டுகளை சமர்ப்பிக்கவில்லை.

தற்காலிக முன்பணங்கள் சரிக்கட்டப்படாதது பற்றி தொடர்ந்து மாநில நிதி நிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட போதிலும் அரசு இது குறித்து நடவடிக்கை எடுக்கவில்லை; சரிக்கட்டப்படாத தற்காலிக முன்பணங்களின் எண்ணிக்கை 2,076 என்பதிலிருந்து 1,649 ஆக குறைந்தது; அவற்றுக்குரிய தொகை ₹ 612.26 கோடி என்பதிலிருந்து 2021-22ல் ₹ 317.81 கோடி ஆக குறைந்தது.

சரிக்கட்டப்படாமல் நிலுவையில் இருந்த முன்பணங்களின் நிலுவைக்கால வாரியான விவரம் **அட்டவணை 4.5**ல் தரப்பட்டுள்ளது.

**அட்டவணை 4.5: நிலுவையில் இருந்த முன்பணங்களின் நிலுவைக்கால வாரியான விவரம்**

| வரிசை எண் | நிலுவை | முன்பணங்களின் எண்ணிக்கை | தொகை *(₹ கோடியில்)* |
|---|---|---|---|
| 1 | பத்து ஆண்டுகளுக்கு மேல் | 5 | 0.99 |
| 2 | ஐந்து ஆண்டுகளுக்கு மேல், பத்து ஆண்டுகளுக்குள் | 9 | 14.36 |
| 3 | ஒரு ஆண்டுக்கு மேல், ஐந்து ஆண்டுகளுக்குள் | 264 | 147.58 |
| 4 | ஒரு ஆண்டுக்குள் | 1,371 | 154.88 |
| மொத்தம் | | **1,649** | **317.81** |

*(ஆதாரம்: நிதி கணக்குகளில் கணக்குகள் மீதான குறிப்புகள்)*

கணிசமான தொகைகளை கொண்டிருந்த நிலுவை, முன்பணங்களை சரிக்கட்டுவது தொடர்பான விதிமுறைகளை முனைப்புடன் அமல்படுத்துவதில் துறை அலுவலர்களின் தரப்பில் இருந்த மெத்தனப்போக்கை காட்டுகிறது. இந்நேர்வுகளில், செலவு உரிய ஆண்டின் முடிவிற்குள் மேற்கொள்ளப்பட்டது என்பதற்கு எந்த உறுதியும் இல்லை. முன்பணங்கள் பெறப்பட்டு பின் சரிக்கட்டப்படாதது, பொது நிதியின் விரயம் / கையாடல் / தவறுகள் போன்றவற்றுக்கும் தவறான வழக்கங்களுக்குமான வாய்ப்பை அதிகமாக்குகின்றது. இது சம்பந்தமாக தவறு செய்யும் DDOக்கள் மீது பொறுப்பை நிர்ணயிக்க வேண்டும். நிலுவையில் உள்ள தற்காலிக முன்பணங்கள் குறித்த பிரச்சனையை ஆய்வு செய்வதாக அரசு, நிறைவு கூட்டத்தில் தெரிவித்தது.

## 4.7 தன்வைப்பு கணக்குகள்

தமிழ்நாடு நிதி விதித்தொகுப்பு - I, பிரிவு 269ன்படி, குறிப்பிட்ட நோக்கங்களுக்காக பயன்படுத்தும் பொருட்டு, அரசு தன்வைப்பு கணக்குகளை துவக்கி அவற்றில் தொகைகளை செலுத்தலாம். இக்கணக்குகளை அதிகாரம் பெற்ற அலுவலர்கள் கையாள்கின்றனர். மாநில அரசின் உத்தரவுகளின் அடிப்படையில் AG (A&E) தொகுநிதியிலிருந்து பகுதி III - பொது கணக்கின் கீழ் தொடர்புடைய தன்வைப்பு கணக்கிற்கு நிதி மாற்றம் செய்ய அனுமதி வழங்குகிறார். இக்கணக்குகள் அந்த ஆண்டின் இறுதியில் முடிக்கப்பட வேண்டும்.

இம்மாற்றங்கள் 8443-00-106-AA எனும் பெருந்தலைப்பின் கீழ் வரவு வைக்கப்படுகிறது மற்றும் இறுதி செலவானது, அவ்வாண்டில் AG (A&E) துவக்க அனுமதிக்கும் தன்வைப்பு கணக்குகளுக்கு தொடர்புடைய இறுதி கணக்கு பெருந்தலைப்புகளின் கீழ் பதிவு செய்யப்படுகின்றன.

மார்ச் 2021 நிலையில், பெருந்தலைப்பு 8443-வைப்புக் கணக்குகள், சிறு தலைப்பு 106 AA - தன்வைப்பு கணக்குகள் என்பதன் கீழ் ₹ 1,153.30 கோடி மதிப்பிலான 68 கணக்குகள் முடிக்கப்படாமல் இருந்தன. 2021-22ல் மாநில தொகுநிதியிலிருந்து ₹ 1,272.21 கோடி (46 கணக்குகள்) தன்வைப்பு கணக்குகளுக்கு மாற்றப்பட்டது. மொத்தமுள்ள 114 கணக்குகளுள் (முந்தைய ஆண்டில் முடிக்கப்படாத 68 கணக்குகள் உட்பட) ₹ 1,271.62 கோடி மதிப்பிலான 109 கணக்குகள் முடிக்கப்பட்டன. மார்ச் 31, 2022 நிலையில் 5 கணக்குகளில் ₹ 1,153.89 கோடி மீதம் இருந்தது.

நடப்பாண்டில் செயல்படாத தன்வைப்பு கணக்குகள் இல்லை என்ற போதிலும், இறுதி கணக்கு தலைப்புகளின் கீழ் செலவாக பதிவு செய்து உருவாக்கப்பட்ட தன்வைப்பு கணக்குகள் முடிக்கப்படாமல் இருந்தது. இதன் காரணமாக தொடர்புடைய இறுதி கணக்கு தலைப்பின் கீழ் செலவு தொகை கூடுதலாக காட்டப்பட்டது. ஒரு PD கணக்கைத் தவிர, அனைத்து கணக்குகளும் 31 மார்ச் 2022 அன்று மூடப்பட்டதாகவும், மீதமுள ஒரு PD கணக்கு நவம்பர் 2022ல் மூடப்பட்டதாகவும், இறுதி கலந்தாய்வில், அரசு கூறியது.

## 4.8 சிறுதலைப்பு ‘800’ன் வரைமுறையற்ற பயன்பாடு

கணக்குகளில் பொருத்தமான கணக்கு தலைப்புகள் கொடுக்கப்படாதபோது மட்டுமே, 800 - பிற செலவுகள்/பிற வரவுகள் என்ற சிறு தலைப்பு பயன்படுத்தப்பட வேண்டும். சிறு தலைப்பு 800ன் தொடர்ச்சியான பயன்பாடு கணக்குகளின் சரித் தன்மையை பாதிக்கும் என்பதால், அத்தகைய தொடர்ச்சியான பயன்பாடு தவிர்க்கப்பட வேண்டும்.

2021-22ம் ஆண்டில், வருவாய் மற்றும் மூலதன பிரிவுகளின் கீழ் ‘800 - பிற செலவு’ என்ற சிறுதலைப்பின் கீழ் ₹ 43,676.41 கோடி (மொத்த செலவான ₹ 2,91,041.20 கோடி தொகையில் 15.01 விழுக்காடு) கணக்கு வைக்கப்பட்டது.

12 கணக்கு தலைப்புகளின் சிறு தலைப்பு 800ன் கீழ் பதிவு செய்யப்பட்ட செலவினம், அந்தந்த கணக்கு தலைப்புகளின் மொத்த செலவில் 50 விழுக்காட்டை தாண்டியதாக தணிக்கை கூர்ந்தாய்வில் வெளிவந்தது **இணைப்பு 4.2**ல் விவரிக்கப்பட்டுள்ளது. மேலும், 4700-பெரும் பாசனம் குறித்த மூலதன செலவு என்ற கணக்குத் தலைப்பில் நேர்ந்த மொத்த செலவினமான ₹ 2,131.46 கோடியில்,

800 என்ற சிறு தலைப்பின் கீழ் ₹ 2,131.46 கோடி (100.00 விழுக்காடு) பதிவு செய்யப்பட்டது; 2425 - கூட்டுறவு என்ற கணக்குத் தலைப்பில் நேர்ந்த மொத்த செலவினமான ₹7,321.13 கோடியில், 800 என்ற சிறு தலைப்பின் கீழ் ₹ 6,151.46 கோடி (84.02 விழுக்காடு) பதிவு செய்யப்பட்டது; 2245- தேசிய பேரிடர் நிவாரணம் என்ற கணக்குத் தலைப்பில் நேர்ந்த மொத்த செலவினமான ₹ 9,704.44 கோடியில், 800 என்ற சிறு தலைப்பின் கீழ் ₹ 9,282.99 கோடி (95.66 விழுக்காடு) பதிவு செய்யப்பட்டது; 2017-22 ஆம் ஆண்டின் மொத்தச் செலவின் விழுக்காடாக, பிற செலவினங்களுக்கான சிறு தலைப்பு - 800ன் செயல்பாட்டின் அளவு கீழே உள்ள **அட்டவணை 4.3ல்** கொடுக்கப்பட்டுள்ளது.

**விளக்கப்படம் 4.3: சிறு தலைப்பு 800இன் செயல்பாடு - 2017-22ல் மற்ற செலவுகள்**




*(ஆதாரம்: அந்தந்த ஆண்டுகளின் நிதிக் கணக்குகள், தமிழ்நாடு அரசு)*

மேலே உள்ள **விளக்கப்படம் 4.3**ல் இருந்து, 2017-22 காலகட்டத்தில் மொத்த செலவினங்களில் சிறு தலைப்பு - 800ன் பங்கு 10 விழுக்காடு முதல் 15 விழுக்காடு வரையில் பெரிய அளவிலான செயல்பாடு உள்ளது.

மற்ற வருமானத்திற்கான சிறு தலைப்பு - 800ன் செயல்பாட்டின் அளவு, 2017-22ல் மொத்த வருமானத்தின் விழுக்காடாக கீழே உள்ள **விளக்கப்படம் 4.4**ல் கொடுக்கப்பட்டுள்ளது.

விளக்கப்படம் 4.4: சிறு தலைப்பு 800ன் செயல்பாடு - 2017-22ல் மற்ற வரவுகள்




*(ஆதாரம்: அந்தந்த ஆண்டுகளின் நிதிக் கணக்குகள், தமிழ்நாடு அரசு)*

மேலே உள்ள **விளக்கப்படம் 4.4**ல் இருந்து, சிறு தலைப்பு - 800 மற்ற வரவுகளின் செயல்பாடு, செலவினப் பக்கத்தில் இந்த தலைப்பு பயன்படுத்துவதை ஒப்பிடும் போது குறைவாகவே உள்ளது மற்றும் 2017-18ல் மொத்த வரவுகளில் 3.49 விழுக்காடு முதல் 2021-22ல் மொத்த வரவுகளில் 3.17 விழுக்காடு வரை இருந்தது. 2021-22 ஆம் ஆண்டில் பெறப்பட்ட ₹ 2,07,491.40 கோடியில், ₹ 6,575.06 கோடி வரவுகள் 800 - மற்ற வரவுகள் என்ற சிறு தலைப்பின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது, இது மொத்த வரவுகளில் 3.17 விழுக்காடு ஆகும்.

50 விழுக்காடு மற்றும் அதற்கு மேலும் அல்லது கணிசமான வருவாய்கள், '800' என்ற சிறுதலைப்பின் கீழ் நேர்ந்த நேர்வுகள் **இணைப்புகள் 4.3**ல் கூறப்பட்டுள்ளன.

முந்தைய மாநில நிதித் தணிக்கை அறிக்கைகளில் (SFAR) தொடர்ச்சியாகப் பதிவாகியிருந்தாலும், சிறு தலைப்பு - 800ன் பிற வரவுகள் / செலவுகள் - கீழ் வரவுகள் / செலவுகளின் வகைப்பாடுகளில் சிறிய முன்னேற்றம் உள்ளது. சம்பந்தப்பட்ட கணக்குத் தலைப்பு - 800ன் கீழ் வரவுகள் / செலவுகள் போன்ற கணிசமான விகிதங்கள் சிறு தலைப்பு - 800ன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன என்பது கவலைக்குரியது, ஏனெனில் இது நிதி அறிக்கையிடலில் வெளிப்படைத்தன்மையை மோசமாக பாதிக்கிறது.

## 4.9 அனாமத்து மற்றும் கடன்கள், வைப்புகள் மற்றும் செலுத்தங்கள் ஆகிய தலைப்புகளின் கீழ் இருந்த மீதங்கள்

நிதி கணக்குகளின் விவர அறிக்கை 21ன் இணைப்பு, அனாமத்து மற்றும் செலுத்தங்கள் என்ற தலைப்புகளின் கீழ் நிகர மீதங்களை காட்டுகிறது. இத்தலைப்புகளில் உள்ள மீதங்கள், பல்வேறு தலைப்புகளின் கீழ் உள்ள பற்று மற்றும் வரவு வகை மீதங்களை தனித்தனியாக கூட்டி, கணக்கிடப்படுகின்றன. மாநில கருவூலங்கள்/பொதுப் பணித்துறை மற்றும் வனத்துறை கோட்டங்கள் போன்றவை அளிக்கும் விவரங்களின் அடிப்படையில் அனாமத்து மற்றும் செலுத்தங்கள் கீழுள்ள இனங்கள் சரிக்கட்டப்படும்.

"8658-101-PAO-அனாமத்து" என்ற கணக்கு தலைப்பு AGக்கும் மற்றும் பல்வேறு தனித்தனியான சம்பள மற்றும் கணக்கு அலுவலர்களுக்கும் இடையே நிகழ்ந்த

நடவடிக்கைகளை தீர்வு செய்யும் நோக்கத்திற்காக உள்ளது. இவை முக்கியமாக மத்திய அரசு சிவில் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு மாநில அரசு செலுத்தும் பணம் தொடர்பான பரிவர்த்தனைகளை உள்ளடக்கியது. இதற்கு அனுமதி / தீர்வு கிடைத்தவுடன், மாநில அரசின் பண இருப்பு அதிகரிக்கும்.

முதலில் AG பதிவுருக்களில் பதியப்படும் இந்த நிதி நடவடிக்கைகள், சம்பள மற்றும் கணக்கு அலுவலர்களிடமிருந்து காசோலைகள்/வரைவோலைகள் பெறப்பட்டவுடனும், அவ்வலுவலர்கள் சார்பாக மாநில கருவூலங்களில் பெறப்படும் தொகைகளுக்கான காசோலை / வரைவோலை வழங்கப்பட்டவுடனும் சரிக்கட்டப்படும். இந்த தலைப்பின் கீழ் நிலுவையில் உள்ள பற்று மீதம் என்றால், சம்பள மற்றும் கணக்கு அலுவலரின் சார்பாக AG மூலம் பணம் செலுத்தப்பட்டது, இன்னும் திருப்பிச் செலுத்தப்பட வேண்டியுள்ளது. ₹ 181.98 கோடி (பற்று) அளவுக்கு செலவழிக்கப்பட்ட தொகை மாநில நிதிகளுக்கு மீள தரப்படாததால், நிலுவையில் உள்ள ரொக்க இருப்பு 31 மார்ச் 2022ல் இருப்பு குறைந்து காணப்படுகிறது.

## 4.10 துறையின் கணக்குகள் ஒத்திசைவு செய்யப்படாமை

துறைகளின் கட்டுப்பாட்டு அலுவலர்கள் செலவு நிதி ஒதுக்கீட்டுக்கு உட்பட்டு இருக்கும்படியாக அதன் மீது பயனுள்ள கட்டுப்பாட்டை வைத்திருக்கவும், தமது கணக்குகளின் துல்லியத்தன்மையை உறுதி செய்யவும் வேண்டும். தமிழ்நாடு வரவு - செலவு திட்ட நடைமுறை நூல், விதிகள் 124 மற்றும் 127ன்படி, தலைமை கட்டுப்பாட்டு அலுவலர்கள் பராமரிக்கும் கணக்குகள், கூட்டு மொத்தம் ஆகியன, AG (A&E)ன் பதிவுருக்களில் உள்ள கணக்குகளுடன் மாதந்தோறும் ஒத்திசைவு செய்யப்பட வேண்டும். மேற்படி நூலின் விதி 128ன்படி, தலைமை கட்டுப்பாட்டு அலுவலர், தனது கணக்குகளிலோ அல்லது AG (A&E)ன் பதிவுருக்களிலோ உரிய மாற்றங்கள் செய்யப்பட்ட பிறகு, ஒரு ஒத்திசைவு சான்றிதழை AG (A&E)க்கு அனுப்ப வேண்டும்.

எனினும் 2021-22 ஆண்டில், வரவுகள் / செலவுகள் தொடர்பான 155/213 தலைமை கட்டுப்பாட்டு அலுவலர்களுள் 76/104 அலுவலர்கள் மட்டுமே மேற்படியான ஒத்திசைவை முழுமையாக செய்திருந்தனர் என்பது கண்டறியப்பட்டது. மேலும், கடந்த மூன்று ஆண்டுகளில் இப்பொருளின் போக்கு குறித்த பகுப்பாய்வு, ஒத்திசைவு செய்யப்படாத நேர்வுகளின் விழுக்காடு **அட்டவணை 4.6**ல் காட்டப்பட்டுள்ளவாறு உயர்ந்து வருவதை காட்டியது.

**அட்டவணை 4.6: வரவு மற்றும் செலவு பற்றிய கணக்குகளை தலைமை கட்டுப்பாட்டு அலுவலர்கள் ஒத்திசைவு செய்யாதது பற்றிய நிலை**

| ஆண்டு | தலைமை கட்டுப்பாட்டு அலுவலர்களின் மொத்த எண்ணிக்கை | முழுமையாக ஒத்திசைவு செய்த தலைமை கட்டுப்பாட்டு அலுவலர்கள் | முழுமையாக ஒத்திசைவு செய்யாத தலைமை கட்டுப்பாட்டு அலுவலர்கள் | ஒத்திசைவு செய்யாமையின் விழுக்காடு |
|---|---|---|---|---|
| வரவுகள் | | | | |
| 2017-18 | 160 | 74 | 86 | 53.75 |
| 2018-19 | 153 | 78 | 75 | 49.02 |
| 2019-20 | 156 | 62 | 94 | 60.26 |
| 2020-21 | 151 | 105 | 46 | 31.79 |
| 2021-22 | 155 | 76 | 79 | 50.97 |

| ஆண்டு | தலைமை கட்டுப்பாட்டு அலுவலர்களின் மொத்த எண்ணிக்கை | முழுமையாக ஒத்திசைவு செய்த தலைமை கட்டுப்பாட்டு அலுவலர்கள் | முழுமையாக ஒத்திசைவு செய்யாத தலைமை கட்டுப்பாட்டு அலுவலர்கள் | ஒத்திசைவு செய்யாமையின் விழுக்காடு |
|---|---|---|---|---|
| **செலவுகள்** | | | | |
| 2017-18 | 212 | 129 | 83 | 39.15 |
| 2018-19 | 214 | 134 | 80 | 37.38 |
| 2019-20 | 210 | 99 | 111 | 52.86 |
| 2020-21 | 211 | 174 | 37 | 17.54 |
| 2021-22 | 213 | 104 | 109 | 51.17 |

*(ஆதாரம்: AG (A&E) தொகுத்த விவரங்கள்)*

மேலும், 2018-19ல் கடன்களை மறுசீரமைப்பு செய்ததில், பல எதிர்மறை மீதங்கள் உருவாயின. மேலும், 2018-19ல் செய்யப்பட்ட கடன்கள் மறுசீரமைப்பு குறித்து கடன் வாங்கிய நிறுவனங்களுக்கு 2021-22ல்தான் தெரியவந்தது என்பதால், அசல் தொகையை மீள செலுத்துதல் மற்றும் வட்டியை செலுத்துதல் ஆகியவை பழைய கடன் தலைப்புகளிலேயே பதியப்பட்டு வந்தது. இதன் விளைவாக, பழைய தலைப்புகளில் அதிகமான வரவுகள் பதிவாகி, புதிய தலைப்புகளில் வரவுகள் ஏதும் பதிவாகவில்லை. எனவே, அசல் தொகையை மீள செலுத்துதல் மற்றும் வட்டி செலுத்துதல் தொடர்பான நிலுவை விவரங்கள் ஒத்திசைவு செய்யப்பட வேண்டும்.

வதி தொகுப்புகளில் கூறப்பட்டவை மற்றும் நிர்வாக அறிவுறுத்தல்களை பின்பற்ற தவறுவது, வரவுகள் மற்றும் செலவுகளை தவறான வகைப்படுத்துதல் மற்றும் தவறாக கணக்குவைப்பு என்ற விளைவுகளை உருவாக்குவது மட்டுமன்றி, வரவு - செலவு திட்ட நடைமுறையின் நோக்கத்தையே சிதைக்கும்.

இறுதி கலந்தாய்வில், இப்பொருள் கவனிக்கப்படும் என்று ACS தெரிவித்தார்.

## 4.11 ரொக்க மீதங்கள் குறித்த ஒத்திசைவு

இந்திய ரிசர்வ் வங்கி சட்டம் 1934, பிரிவுகள் 20, 21 மற்றும் 21Aன் வழிவகைகளுக்கிணங்க, மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கான வங்கியாளராக இந்திய ரிசர்வ் வங்கி செயல்படுகிறது. மாநில அரசின் சார்பில் நடைபெறும் நிதி நடவடிக்கைகள், ரிசர்வ் வங்கியின் அலுவலகங்கள் மற்றும் அதன் சார்பில் அரசு நிதி நடவடிக்கைகளை மேற்கொள்ளஅனுமதிக்கப்பட்டுள்ள முகமை வங்கிகளின் அலுவலகங்கள் ஆகியவற்றில் மேற்கொள்ளப்படுகின்றன.

மாநில அரசுகளின் முதன்மை வைப்பு கணக்குகள் நாக்பூரில் உள்ள ரிசர்வ் வங்கியின் மத்திய கணக்குகள் பிரிவில் பராமரிக்கப்படுகின்றன; முகமை வங்கிகள் இணைப்பு அலுவலகங்கள் மூலம் தெரிவிக்கும் மாநில அரசின் நிதி நடவடிக்கைகளை ரிசர்வ் வங்கியின் மண்டல அலுவலகங்கள் கணக்கு வைத்து மத்திய கணக்குகள் பிரிவுக்கு தெரிவிக்கின்றன.

மாநில அரசின் நிதி நடவடிக்கைகளை கணக்கு வைத்தல் மற்றும் ஒத்திசைவு செய்தல் தொடர்பான ரிசர்வ் வங்கியின் அறிவுறுத்தல்களின்படி, முகமை கிளைகள் வரவுகள் / செலுத்தங்களின் பட்டியல்களை நாள் அடிப்படையில் தொடர்புடைய

துணை கருவூலம்/ கருவூலத்திற்கு இதற்கென கூறப்பட்ட படிவத்தில் தாமதமின்றி அனுப்ப வேண்டும். மேலும், இணைப்பு வங்கிகள் தயாரிக்கும் முகமை வங்கிகளின் தொகுப்பு மாதாந்திர அறிக்கைகள் ரிசர்வ் வங்கிக்கு அனுப்பப்பட வேண்டும்; ரிசர்வ் வங்கி அவற்றை மாநில கணக்காயருக்கு அனுப்ப வேண்டும்.

மேற்கூறிய நடைமுறை அமலில் இருக்கையில், பொதுவாக, மாநில கணக்காயரின் பதிவுருக்களின் படியான ரொக்க இருப்பு நிலைக்கும், மத்திய கணக்குகள் பிரிவின் படியான தொகைக்கும் வேறுபாடு எதுவும் இருக்கக்கூடாது. மாதவாரியான இருப்பில் வேறுபாடு இருப்பினும், ஆண்டுதோறும் ஏப்ரல் 25ம் நாள் வாக்கில் ஆண்டு கணக்குகள் முடிக்கப்படும்போது உள்ள ரொக்க இருப்பு நிலைகளில் வேறுபாடு இருக்கக்கூடாது.

எனினும், 2021-22 ஆண்டின் இறுதி இருப்பில், மாநில கணக்காயரின் பதிவுருக்களின் படியான ரொக்க இருப்புக்கும், ரிசர்வ் வங்கி தெரிவித்த ரொக்க இருப்புக்கும் இடையே கணிசமான நிகர வேறுபாடு (₹ 159.61 கோடி) இருந்தது. ரொக்க இருப்பில் இருந்த வேறுபாடு தொடர்பான விவரங்கள் **அட்டவணை 4.7**ல் தரப்பட்டுள்ளன.

**அட்டவணை 4.7: ரொக்க இருப்பில் வேறுபாடுகள்**

| காலம் | பற்று வேறுபாடு | | வரவு வேறுபாடு | |
|---|---|---|---|---|
| | இனங்களின் எண்ணிக்கை | ₹ கோடியில் | இனங்களின் எண்ணிக்கை | ₹ கோடியில் |
| 2016-17 வரை | 655 | 3,997.27 | 870 | 4,426.54 |
| 2017-18 | 171 | 479.49 | 193 | 326.81 |
| 2018-19 | 97 | 448.86 | 165 | 865.05 |
| 2019-20 | 69 | 290.31 | 150 | 887.98 |
| 2020-21 | 96 | 1,186.58 | 163 | 548.91 |
| 2021-22 | 114 | 1,503.21 | 111 | 1,190.04 |
| **மொத்தம்** | **1,202** | **7,905.72** | **1,652** | **8,065.33** |

*(ஆதாரம்: உரிய ஆண்டுக்கான நிதி கணக்குகளில் கணக்குகள் மீதான குறிப்புகள்)*

கடந்த ஐந்து ஆண்டுகளில் நேர்ந்த நிகழ்வுகள் மீதான பகுப்பாய்வு, ரொக்க இருப்புகளில் உள்ள வேறுபாடுகள் **அட்டவணை 4.8**ல் விளக்கப்பட்டுள்ளவாறு, 2019-20 முதல் 2021-22 வரையிலான காலகட்டத்தில் குறைந்திருப்பதை வெளிப்படுத்தியது.

**அட்டவணை 4.8: ரொக்க இருப்புகளில் இருந்த வேறுபாட்டின் போக்கு**

*(₹ கோடியில்)*

| ஆண்டு | மாநில கணக்காயரின் பதிவுருக்களின்படியான ரொக்க இருப்பு | ரிசர்வ் வங்கி தெரிவித்த ரொக்க இருப்பு | வேறுபாடு |
|---|---|---|---|
| 2016-17 | 305.55 (வ) | 89.53 (வ) | 395.08 (வ) |
| 2017-18 | 81.18 (வ) | 8.12 (வ) | 89.30 (வ) |
| 2018-19 | 459.88 (வ) | 37.49 (வ) | 497.37(வ) |
| 2019-20 | 923.33 (ப) | 2,067.49 (வ) | 1,144.16 (வ) |
| 2020-21 | 467.24 (வ) | 5.70 (வ) | 472.94 (வ) |
| 2021-22 | 266.95 (ப) | 426.56 (வ) | 159.61 (வ) |

*(ஆதாரம்: உரிய ஆண்டுக்கான நிதி கணக்குகளின் விவர அறிக்கை 2) ப: பற்று; வ: வரவு.*

மேற்கூறிய வேறுபாட்டிற்கு, அரசின் வரவுகளை வங்கிகள் கருவூலங்களுக்கு தெரிவிக்காததே முக்கிய காரணமாகும்.

### 4.12 கணக்கு தரங்களுக்கு இணங்குதல்

இந்திய அரசியல் சாசனம் 150வது விதிகளின் படி, இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின் (CAG) ஆலோசனைக்கிணங்க இந்திய குடியரசு தலைவர், இந்திய மற்றும் மாநில கணக்குகளின் படிவங்களை பரிந்துரைக்கிறார். பொறுப்புடைமை இயந்திரத்தை அதிகரிக்கும் பொருட்டு, அரசு கணக்குகள் மற்றும் நிதி அறிக்கைகளின் தரங்களை உருவாக்குவதற்காக CAG அரசு கணக்குகளின் தர ஆலோசனை வாரியத்தை (GASAB) 2002ல் ஏற்படுத்தினார். CAGன் ஆலோசனைக்கிணங்க குடியரசுத் தலைவர் இது வரை மூன்று இந்திய அரசு கணக்கு தரங்களை (IGAS) அறிவித்தார். 2021-22ம் ஆண்டில் தமிழக அரசு தமது நிதி அறிக்கைகளில் தரங்களுக்கு இணங்காத விவரங்கள் **அட்டவணை 4.9**ல் தரப்பட்டுள்ளன.

அட்டவணை 4.9: கணக்கு தரங்களுக்கு இணங்குதல்

| வ. எண் | கணக்குத் தரங்கள் | IGASன் சாராம்சம் | மாநில அரசால் இணங்கப்பட்டவை | குறைபாடுகளின் தாக்கம் |
|---|---|---|---|---|
| 1 | IGAS-1: அரசால் வழங்கப்படும் உத்தரவாதங்கள் - வெளிப்படுத்தும் தேவைகள் | நடப்பாண்டில் வழங்கப்பட்ட உத்தரவாதத்தின் தொகை (வகுப்பு மற்றும் பிரிவு வாரியாக) நிதி அறிக்கைகளில் வெளிப்படுத்த இந்த தரத்தின் தேவையாகும். | இணங்கப்பட்டது | -- |
| 2 | IGAS-2: மானிய உதவிகளின் கணக்குகளும் பிரிவுகளும் | சொத்துக்களை உருவாக்க மானிய உதவி வழங்கப்பட்டாலும், அது வருவாய் வகை செலவினமாக வகைப்படுத்தப்பட வேண்டும். மானிய உதவி பொருளாக வழங்கப்பட்டாலும் வெளிப்படுத்த வேண்டும். | இணங்கப்பட்டது | -- |
| 3 | IGAS-3: அரசால் வழங்கப்படும் கடன்களும் முன்பணங்களும் | அரசால் வழங்கப்படும் கடன்கள் மற்றும் முன்பணங்களை வெளிப்படுத்துதல் | பகுதியளவு இணங்கப்பட்டது. 2018-19ல் தமிழக அரசு வழங்கிய பழைய கடன்களை மறுசீரமைப்பு செய்தது. மாநில அரசால் வழங்கப்பட்ட கடன்கள் மற்றும் முன்பணங்கள் குறித்த அறிக்கை 7 மற்றும் 18, IGAS-3 படி தயாரிக்கப்பட்டாலும், 2021-22லும் கடன்களின் தலைப்புகளின் பதிவான இலக்கங்கள் முடிவுறவில்லை. எனவே, கடன் பெற்ற நிறுவனங்களின் நிலுவை திருப்பிச் செலுத்தல்கள் குறித்த விவரங்கள் உள்ளடக்கப்படவில்லை. | கடன்கள் மற்றும் முன் பணங்களின் வெளிப்படை தேவையை மாநில அரசால் எதிரேற்கப்படவில்லை. |

*(ஆதாரம்: நிதி கணக்குகளில் கணக்குகள் மீதான குறிப்புகள்)*

### 4.13 CAGயின் DPC சட்டத்தின் பிரிவு 19(3) மற்றும் 20(1) இன் கீழ் குழுமங்கள்/ஆணைக்குழுக்களின் தணிக்கை - கோரிக்கை விடுத்தும் தணிக்கைக்கு ஒப்படைக்கப்படாமை

CAGன் DPCன் 19(3)ன் படி, மாநில/யூனியன் பிரதேச சட்டசபையில் இயற்றப்பட்ட சட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்ட கழகங்களை, பொதுநலன் கருதி, ஆளுநர்/ஆட்சியாளர் CAGயிடம் தணிக்கைக்கு கோரினால், அந்த

கழகத்தின் கணக்குகளை CAG தணிக்கை செய்ய முடியும் மற்றும் அந்த தணிக்கைக்கு அந்த கழகத்தின் கணக்கு புத்தகங்களை அணுக முடியும்.

மேற்சொன்ன பிரிவு 19-ஐ தவிர்த்து, அமைப்புகள் மற்றும் ஆணைக்குழுக்களின் கணக்குகள் CAGன் தணிக்கைக்கு சட்டத்தின் மூலம் ஒப்படைக்கப்படாவிட்டாலும், குடியரசு தலைவரோ அல்லது மாநில ஆளுநரோ அல்லது சட்டசபை உடைய யூனியன் பிரதேசத்தின் ஆட்சியாளரோ கேட்டுக் கொண்டால், அந்த அமைப்புகள் மற்றும் ஆணைக்குழுக்களின் கணக்குகளை, CAG மற்றும் சம்பந்தப்பட்ட அரசால் ஒப்புக்கொள்ளப்பட்ட விதிகளுக்கும் கட்டுப்பாடுகளுக்கும் உட்பட்டு, CAGயால் தணிக்கை செய்ய முடியும் மற்றும் அந்த தணிக்கைக்கு அந்த அமைப்புகள் மற்றும் ஆணைக் குழுக்களின் கணக்கு புத்தகங்களை அணுக முடியும் (பிரிவு 20).

மேற்சொன்ன தன்னாட்சி குழுமங்கள்/ஆணைக்குழுக்களுக்கு தனித்த தணிக்கையாளராக தணிக்கை சான்றிதழ் வழங்கப்படுகிறது. இவ்வாறாக, இந்த அமைப்புகள் மற்றும் ஆணைக் குழுக்கள் ஆண்டு கணக்குகளை தயாரித்து மாநில கணக்காய்வுத் தலைவருக்கு (தணிக்கை) சமர்ப்பிக்க வேண்டும். தணிக்கை சான்றிதழ் தவிர்த்து, நிதி தணிக்கை முடிந்த உடன், தணிக்கை அலுவலகம் கணக்குகள் மீதான தனி தணிக்கை அறிக்கையை தணிக்கை சான்றிதளின் ஒரு பகுதியாக சமர்ப்பிக்கும். இந்த தனி தணிக்கை அறிக்கை சட்டப்பேரவையில் தாக்கல் செய்யப்படும்.

1) குழந்தை உரிமை பாதுகாப்பு குழுக்களின் மீதான சான்றிதழ்/இணைக்கத் தணிக்கை CAGயால் எடுத்துக் கொள்ளப்பட இருந்தது (ஏப்ரல் 2019). ஆயினும், இக்குழு 2012-13ம் ஆண்டிலிருந்து கட்டாயமாக்கப்பட்ட படிவத்தில் ஆண்டு கணக்குகளை தயாரிக்க தவறி விட்டது. ஆணைக்குழுவின் ஆண்டுக் கணக்குகளைத் தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தல் ஆகியவற்றின் நிலையைத் தெரிவிக்க மீண்டும் மீண்டும் நினைவூட்டல்கள் வழங்கப்பட்ட போதிலும், C&AG பரிந்துரைத்தபடி ஆண்டுக் கணக்குகளைத் தொகுக்காததால் தணிக்கையை மேற்கொள்ள முடியவில்லை. எனவே ஆண்டு கணக்குகளின், சான்றிதழ் தணிக்கையை மேற்கொள்ள முடியவில்லை.

2) தமிழ்நாட்டிலுள்ள தலைசீமியா மற்றும் இரத்த புற்றுநோய் குணப்படுத்த இரத்த மாதிரிகளை சேகரிக்க, பதப்படுத்த, சோதனை செய்ய மற்றும் 3,000 இரத்த நன்கொடைகளை பாதுகாக்க ஜீவன் இரத்த வங்கி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்திற்கு (JBBRS) ₹ 9 கோடி கடந்த மூன்றாண்டுகளாக வழங்கப்பட்டது என்பது பதிவுருக்களை ஆய்வு செய்ததில் தெரிய வந்தது. JBBRSஐ தணிக்கை செய்யலாம் என நிதி துறை செயலர் தெரிவித்தார் (ஜூலை 2013). C&AGயின் தணிக்கை அதிகார வரம்பிற்குள் இல்லாத ஒரு தனியார் அமைப்பான “பொது அறக்கட்டளையின்” கீழ் JBBRS பதிவு செய்யப்பட்டுள்ளதால், DPC சட்டம் 1971, பிரிவு 20(1)ன்படி, குடியரசு தலைவரோ அல்லது மாநில ஆளுநரோ அல்லது சட்டசபை உடைய யூனியன் பிரதேசத்தின் ஆட்சியாளரோ கேட்டுக் கொண்டால், அந்த அமைப்புகள் மற்றும் ஆணைக்குழுக்களின் கணக்குகளை, CAG மற்றும் சம்பந்தப்பட்ட அரசால் ஒப்புக்கொள்ளப்பட்ட விதிகளுக்கும் கட்டுப்பாடுகளுக்கும் உட்பட்டு, CAGயால் தணிக்கை செய்ய முடியும் மற்றும் அந்த தணிக்கைக்கு அந்த அமைப்புகள் மற்றும் ஆணைக் குழுக்களின் கணக்கு புத்தகங்களை அணுக முடியும். மேற்கூறியதை

அடிப்படையாக கொண்டு, தணிக்கை செய்ய அனுமதிக்குமாறு அரசு செயலர், சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை கேட்டுக்கொண்டார் (மார்ச் 2017, அக்டோபர் 2018, மே 2020). தணிக்கை கேட்டுக்கொண்டாலும்கூட, 31 மார்ச் 2022 வரை ஆளுநரின் அனுமதி பெறப்படவில்லை.

## 4.14 கணக்குகள் அளிக்கப்படாமை / அளிப்பதில் நேர்ந்த தாமதம்

இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின் (கடமைகள், அதிகாரங்கள் மற்றும் பணிமுறைமைகள்) சட்டம், 1971, பிரிவுகள் 14 மற்றும் 15ன்படி, அரசின் நிதியுதவியை பெறும் நிறுவனங்களின் கணக்குகள், பெறப்பட்ட உதவியின் அளவு போன்றவை தொடர்பாக கூறப்பட்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு, தணிக்கை செய்யப்பட வேண்டும். அச்சட்டத்தின் கீழ் தணிக்கை செய்யப்படுவதற்கு தகுதி பெறும் நிறுவனங்களை கண்டறியும் பொருட்டு, பல்வேறு நிறுவனங்களுக்கு அளிக்கப்பட்ட நிதியுதவி, அதன் நோக்கம், அந்நிறுவனங்களின் மொத்த செலவு ஆகிய விவரங்களை துறைத்தலைவர்கள் ஆண்டுதோறும் தணிக்கைக்கு அளிக்க வேண்டும்.

ஆகஸ்ட் 2022 நிலையில், 217 நிறுவனங்கள்/அமைப்புகளின் 2021-22 வரையிலான ஆண்டு கணக்குகளை அவற்றுக்கு நிதியுதவியை விடுவித்த துறைத்தலைவர்கள் தணிக்கைக்கு அளிக்கவில்லை. நிலுவை விவரங்கள் **இணைப்பு 4.4**ல் தரப்பட்டு, நிலுவைக்காலம் பற்றிய விவரங்கள் **அட்டவணை 4.10**ல் தரப்பட்டுள்ளன.

**அட்டவணை 4.10: நிறுவனங்கள்/ஆணைக் குழுக்கள் ஆண்டு கணக்குகளை அளிப்பதில் நிலுவை**

| வ. எண் | காலதாமதம் (ஆண்டுகள்) | நிறுவனங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | ஓராண்டு வரை | 68 |
| 2 | ஓராண்டிற்கு மேல் மூன்றாண்டுகள் வரை | 75 |
| 3 | மூன்றாண்டுகளுக்கு மேல் ஐந்தாண்டுகள் வரை | 18 |
| 4 | ஐந்தாண்டுகளுக்கு மேல் | 56 |
| | **மொத்தம்** | **217** |

*(ஆதாரம்: துறைத்தலைவர்கள் அளித்த விவரங்களிலிருந்து தொகுக்கப்பட்டவை)*

சம்பளம், பராமரிப்பு போன்றவற்றிற்காக அரசின் நிதியுதவியை பெறும் கல்வி நிறுவனங்களே ஆண்டு கணக்குகளை அளிக்காத நிறுவனங்களுள் முக்கியமானவை. கணக்குகளை அளிக்காமை என்பது, நிதியுதவி அது அளிக்கப்பட்ட நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டது என தணிக்கை தரப்பு சட்டமன்றத்திற்கு உறுதி அளிக்க தடையாக இருக்கும்.

குறிப்பிட்ட காலத்திற்குள் ஆண்டுக் கணக்குகளை வழங்குமாறு துறைத் தலைவர்களுக்கு (HODs) அறிவுறுத்தல்கள் வழங்கப்படும் என்று இறுதி கலந்தாய்வில், துணைச் செயலாளர் (நிதி) கூறினார்.

## 4.15 துறை சார்ந்த வணிக நிறுவனங்கள்/ கழகங்கள் / கம்பெனிகள்

கம்பெனிகள் சட்டம், 2013 பிரிவு 394 மற்றும் 395ன் படி, ஆண்டு பொதுக்குழு நடந்த மூன்று மாதத்திற்குள் அரசு கம்பெனியின் பணி மற்றும் நடவடிக்கை குறித்த ஆண்டு அறிக்கை தயாரிக்கப்பட வேண்டும். ஆண்டு அறிக்கை தயாரித்தவுடன், CAGன் தணிக்கை அறிக்கையுடன், மாநில சட்டசபையில் தாக்கல் செய்யப்பட வேண்டும்.

பொதுத்துறை நிறுவனங்களின் (PSUs) 2021-22 ஆம் ஆண்டிற்கான சான்றிதழ் தணிக்கை நவம்பர் 2022ல் தொடங்கப்படவில்லை. மார்ச் 2022ல் முடிவடைந்த ஆண்டிற்கான கணக்குகளின் நிலுவைத் தொகையில் விவரங்கள் கீழே உள்ள **அட்டவணை 4.11**ல் பட்டியலிடப்பட்டுள்ளன:

**அட்டவணை 4.11: பொதுத்துறை நிறுவனங்கள்/நிறுவனங்களின் நிலுவைத் தொகையின் விவரங்கள்**

| விவரம் | எண்ணிக்கை |
|---|---|
| பொதுத்துறை நிறுவனங்களின் மொத்த எண்ணிக்கை (மின்துறை உட்பட) | 85 |
| 2021-22 ஆம் ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் | 76 |
| 2021-22ல் முடிக்கப்பட்ட கணக்குகள் | 73 |
| 2021-22ல் இறுதி செய்யப்பட்ட முந்தைய ஆண்டு கணக்குகளின் எண்ணிக்கை | 9 |
| பெறப்படாத கணக்குகளின் எண்ணிக்கை | 15 |
| நிலுவையின் அளவு | 2 ஆண்டுகள் (2020-21 & 2021-22) |

*(ஆதாரம்: AG (தணிக்கை - I & II), தமிழ்நாடு, வணிகப் பிரிவால் தொகுக்கப்பட்ட தகவல்)*

மாநில அரசு, கணக்குகள் நிலுவையில் உள்ள பொதுத்துறை நிறுவனங்களில் பங்கு மூலதனம் மற்றும் கடன் வடிவில் முதலீடு செய்துள்ளதால், இந்த நிறுவனங்கள் கணக்குகளை இறுதி செய்யாததால், அரசு முதலீடுகள், தணிக்கை மற்றும் மாநில சட்டமன்ற மேற்பார்வைக்கு வெளியே இருக்கும். அதன் மூலம் மோசடி மற்றும் முறைகேடு நிகழ்வுகளுக்கு எளிதில் வழிவகை செய்யும். மேலும், நிறுவனங்களால் கணக்குகளை இறுதி செய்யாதது, நிறுவனங்கள் சட்டத்தின் 394 மற்றும் 395 பிரிவுகளை மீறுவதாகும்.

கணக்குகளை சரியான நேரத்தில் இறுதி செய்யாத நிலையில், அரசு முதலீட்டின் முடிவுகள் மாநில சட்டமன்றத்தில் வரம்புக்கு வெளியே இருக்கும் மற்றும் தணிக்கையில் ஆய்வில் இருந்து தப்பிக்கும். இதன் விளைவாக, பொறுப்புக்கூறலை உறுதி செய்வதற்கும் செயல்திறனை மேம்படுத்துவதற்கும் ஏதேனும் திருத்த நடவடிக்கைகள் தேவைப்பட்டால், சரியான நேரத்தில் எடுக்க முடியாது.

கணக்குகளை இறுதி செய்ய தவறிய நிறுவனங்கள் மற்றும் பெருநிறுவனங்களை தொடர்புடைய சட்டங்களுக்கு இணங்குவதை உறுதி செய்ய சம்பந்தப்பட்ட நிர்வாகத் துறைகள் மற்றும் குறிப்பாக நிதித் துறை தவறியதை மேலே சொன்னவைகளிலிருந்து அறிய முடிகிறது.கணக்குகளை நிலுவையில் வைத்துள்ள நிறுவனங்களின் தலைமை நிர்வாக அதிகாரிகளின் மீது பொறுப்பை நிர்ணயிக்க வேண்டும் என்று அரசுக்கு பரிந்துரைக்கப்படுகிறது.

## 4.16 கையாடல்கள், இழப்புகள் மற்றும் களவுகள்

தமிழ்நாடு நிதி விதித்தொகுப்பு, பிரிவு 294ன்படி, பொது பணம், பண்டங்கள், பிற அசையும் அல்லது அசையா சொத்துக்கள் ஆகியவற்றின் கையாடல் அல்லது இழப்புகள் தொடர்பான அனைத்து நேர்வுகளையும் அலுவலக தலைவர்கள் AG (A&E)க்கு தெரிவிக்க வேண்டும். மேலும், இழப்புகளுக்கான பொறுப்புடைமையை செயல்படுத்துதல் மற்றும் இத்தகைய நேர்வுகளை தீர்வு செய்தல் ஆகியவற்றிற்கான கோட்பாடுகளையும் வழிமுறைகளையும் அந்த விதித்தொகுப்பு வகுத்துள்ளது.

மார்ச் 31, 2022 நிலையில், மொத்தம் ₹ 14.53 கோடி மதிப்புள்ள கையாடல், குறைவு, மற்றும் களவு தொடர்பான 361 நேர்வுகள் தீர்வு செய்யப்படாமல் நிலுவையில் இருந்தன. நிலுவையிலுள்ள நேர்வுகளின் விவரங்கள் மற்றும் இவற்றின் துறைவாரியான விவரங்கள் **இணைப்பு 4.5**ல் தரப்பட்டுள்ளன. நிலுவை இனங்களின் நிலுவைக் காலம் பற்றிய விவரங்கள் மற்றும் நிலுவைக்கான காரணங்கள் முறையே **அட்டவணை 4.12** மற்றும் **அட்டவணை 4.13**ல் தரப்பட்டுள்ளன.

**அட்டவணை 4.12: நிலுவை இனங்களின் நிலுவைக் காலம்**

| நிலுவைக் காலம் (ஆண்டுகள்) | நேர்வுகளின் எண்ணிக்கை | மொத்த மதிப்பு (₹ இலட்சத்தில்) |
|---|---|---|
| 0 - 5 | 36 | 219.17 |
| 6-10 | 6 | 46.38 |
| 11-15 | 30 | 359.95 |
| 16 - 20 | 31 | 268.62 |
| 21 மற்றும் அதற்கு மேலும் | 258 | 558.58 |
| **மொத்தம்** | **361** | **1,452.70** |

*(ஆதாரம்: துறைத்தலைவர்கள் அளித்த விவரங்கள்)*

**அட்டவணை 4.13: நிலுவைக்கான காரணங்கள்**

| நிலுவைக்கான காரணம் | நேர்வுகளின் எண்ணிக்கை | தொகை *(₹ கோடியில்)* |
|---|---|---|
| துறை சார்ந்த மற்றும் குற்றவியல் புலனாய்வு நடத்தப்படவில்லை | 152 | 6.33 |
| தொடங்கப்பட்ட துறை சார்ந்த நடவடிக்கை நிறைவுறவில்லை | 115 | 4.71 |
| குற்றவியல் நடவடிக்கைகள் முடிவுற்றாலும் தொகை மீள பெறப்படவில்லை | 11 | 0.78 |
| தொகையை மீள பெறுவதற்கு அல்லது தள்ளுபடி செய்வதற்கான ஆணை பெறப்படவில்லை | 68 | 0.88 |
| நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ளவை | 15 | 1.83 |
| **மொத்தம்** | **361** | **14.53** |

*(ஆதாரம்: துறைத்தலைவர்கள் அளித்த விவரங்கள்)*

## 4.17 மாநில நிதிநிலை தணிக்கை அறிக்கை மீதான தொடர் நடவடிக்கை

பொது கணக்குகள் குழு 2013-14 முதல் 2021-22 வரையிலான காலகட்டத்தில் மாநில நிதி நிலை மீதான தணிக்கை அறிக்கைகளை விவாதிக்க 15 முறை கூடியது. செப்டம்பர் 2022 நிலையில், 2008-09 முதல் 2019-20 வரையிலான ஆண்டுகளுக்குரிய தணிக்கை அறிக்கைகளிலிருந்து விவாதிப்பதற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட 180 பத்திகள்/சீராய்வுகளுள் 19 பத்திகள்/சீராய்வுகள் விவாதிக்கப்பட்டன; 161 பத்திகள்/சீராய்வுகள் நிலுவையில் இருந்தன.

## 4.18 முடிவுரை மற்றும் பரிந்துரைகள்

2018-22 காலகட்டத்தில் வசூலிக்கப்பட்ட வரியில் 70 விழுக்காடு அரசுக் கணக்குகளில் வரவு வைக்கப்படாமல் TANGEDCOவிடமே வைக்கப்பட்டிருந்தது. தனது சொந்த செயல்பாட்டு செலவினங்களுக்காக இத்தொகையை செலவழித்திருக்க முடியும் என்ற சாத்தியக்கூறை நிராகரிக்க முடியாது. இவ்வாறு அரசுக் கணக்கில் பணம் செலுத்தாமல் இருப்பதும், வசூலிக்கபட்ட வரியை இவ்வளவு நீண்ட காலத்திற்குத் தக்கவைத்துக்கொள்வது என்பதும் தற்காலிகமாக தவறாக பயன்படுத்தப்படும் அபாயம் நிறைந்ததாக உள்ளது.

*பரிந்துரை: பெறப்படாத/குறைவாக பெறப்பட்ட அரசு வரிகளை அரசு கணக்கில் செலுத்தாததற்கான பொறுப்பை அரசு மற்றும் TANGEDCO மீது நிர்ணயிக்கப்பட வேண்டும். மின்சார வரியின் கடந்த கால நிலுவைத் தொகைகள் அனைத்தையும் செலுத்துமாறு TANGEDCOக்கு அரசாங்கம் உடனடியாக உத்தரவிட வேண்டும்.*

***(பத்தி 4.1.1)***

பயன்பாட்டு சான்றிதழ்களை (₹ 803.29 கோடி) அளிக்காதிருப்பது, பொறுப்புடைமையை உறுதி செய்யும் விதிகளை பின்பற்ற துறை அலுவலர்கள் தவறியதை காட்டுவது மட்டுமல்லாமல், மானிய உதவி வழங்கிய நோக்கத்தை சிதைப்பதாகவும் உள்ளது. நிலுவையில் உள்ள பயன்பாட்டு சான்றிதழ்கள் மூலதன வகை செலவிற்கான மானிய உதவி தொடர்பானதாக இருந்தால், இப்பொருள் மேலும் முக்கியத்துவம் பெறும்.

கணிசமான தொகை கொண்ட சரிக்கட்டப்படாத தற்காலிக முன்பணங்கள் (₹ 317.81 கோடி பெறப்பட்டு பல ஆண்டுகளாக நிலுவையில் இருப்பது), முன்பணங்களை சரிக்கட்டுவது தொடர்பான விதிமுறைகளை அமல்படுத்துவதில் துறை அலுவலர்களின் தரப்பில் இருந்த மெத்தனப்போக்கை காட்டியது.

*பரிந்துரை: கட்டுப்பாட்டு அலுவலர்கள் தற்காலிக முன்பணங்களைச் சரிசெய்து, உரிய நேரத்தில் பயன்பாட்டுச் சான்றிதழ்களைச் சமர்ப்பிப்பதையும், அவ்வாறு செய்யத் தவறியவர்கள் மீது பொறுப்பை நிர்ணயிப்பதையும் அரசாங்கம் உறுதிசெய்ய வேண்டும். முன்பணங்களை தகுந்த நேரத்தில் சரிசெய்யவும் பயன்பாட்டுச் சான்றிதழ்களை சமரிப்பிப்பதை உறுதி செய்வதற்கும், IFHRMSல் பொது நிதி மேலாண்மை அமைப்பின் (PFMS) செலவின முன்பண பரிமாற்றம் (EAT) தொகுதியை ஏற்றுக்கொள்வதை அரசாங்கம் பரிசீலிக்க வேண்டும்.*

***(பத்தி 4.4 மற்றும் 4.6)***

மார்ச் 2022 நிலவரப்படி, பொதுத்துறை நிறுவனங்கள்/அமைப்புகள்/அதிகாரிகள் தொடர்பான 232 கணக்குகள் இறுதி செய்யப்படுவதற்கு நிலுவையில் உள்ளன.

*பரிந்துரை: நிலுவையில் உள்ள கணக்குகளுக்கு சம்பந்தப்பட்ட தலைமை நிர்வாக அதிகாரிகள்* மீது *பொறுப்பை அரசு நிர்ணயிக்க வேண்டும்.*

***(பத்தி 4.14 மற்றும் 4.15)***

**(ச. நெடுஞ்செழியன்)**

சென்னை
நாள் 28 மார்ச் 2023

முதன்மை கணக்காய்வுத் தலைவர்(தணிக்கை-I),
தமிழ்நாடு

மேற்கையொப்பமிடப்பட்டது

**(கிரீஷ் சந்திர முர்மூ)**

புது தில்லி
நாள் 29 மார்ச் 2023

இந்திய தணிக்கைத் துறைத் தலைவர்

# இணைப்புகள்

# இணைப்பு 1.1
## (பார்வை: பத்தி 1.1)
## மாநிலம் பற்றிய விவரக்குறிப்புரை

| A. பொது விவரங்கள் | | | |
|---|---|---|---|
| வரிசை எண் | விவரங்கள் | | புள்ளி விவரங்கள் |
| 1 | பரப்பளவு | | 1,30,058 சதுர கிமீ |
| 2 | மக்கட்தொகை | | |
| | (அ) 2011 கணக்கெடுப்பின்படி | | 7.21 கோடி |
| | (ஆ) 2022ல் | | 7.66 கோடி |
| 3 | (அ) மக்கட்தொகையின் அடர்த்தி (2001 கணக்கெடுப்பின்படி) (அனைத்து இந்திய அடர்த்தி = ஒரு சதுர கிமீக்கு 325 நபர்கள்) | | ஒரு சதுர கிமீக்கு 480 நபர்கள் |
| | (ஆ) மக்கட்தொகையின் அடர்த்தி (2011 கணக்கெடுப்பின்படி) (அனைத்து இந்திய அடர்த்தி = ஒரு சதுர கிமீக்கு 382 நபர்கள்) | | ஒரு சதுர கிமீக்கு 555 நபர்கள் |
| 4 | வறுமைக் கோட்டிற்கு கீழுள்ள மக்கட்தொகை* (அனைத்து இந்திய சராசரி = 21.92 விழுக்காடு) | | 11.28 விழுக்காடு |
| 5 | (ஆ) படிப்பறிவு** (2011 கணக்கெடுப்பின்படி) (அனைத்து இந்திய சராசரி = 73.00 விழுக்காடு) | | 80.10 விழுக்காடு |
| 6 | இளம் சிறார் இறப்பு வீதம் *** (ஒவ்வொரு 1,000 உயிர் பிறப்பிற்கும்) (அனைத்து இந்திய சராசரி (2019) = ஒவ்வொரு 1,000 உயிர் பிறப்பிற்கும் 30) | | 13 |
| 7 | பிறப்பின் போது ஆயுளின் எதிர்நோக்கு **** (அனைத்து இந்திய சராசரி (2014-18) = 69.40 ஆண்டுகள்) | | 72.6 |
| 8 | மாநில மொத்த உற்பத்தி மதிப்பு (GSDP) 2021-22 நடப்பு விலைகளில் | | ₹ 20,65,436 கோடி |
| | தலா ஒருவருக்கான GSDP CAGR (2012-13 முதல் 2021-22 வரை) | | 9.71 விழுக்காடு |
| 9 | GSDP CAGR* (2012-13 முதல் 2021-22 வரை ) | தமிழ்நாடு | 10.30 விழுக்காடு |
| 10 | மக்கட்தொகை மற்றும் அதன் பத்தாண்டு வளர்ச்சி வீதம் (2012 to 2022*****) | தமிழ்நாடு | 5.49 விழுக்காடு |

| ஆ. நிதி பற்றிய விவரங்கள் | | | |
|---|---|---|---|
| விவரங்கள் | | | |
| CAGR@ | | 2020-21 முதல் 2021-22 வரை | |
| | | பொது மாநிலங்கள் | தமிழ்நாடு |
| | | (விழுக்காடு) | |
| a | வருவாய்வகை வரவினங்கள் | 25.60 | 19.20 |
| b | வரி வருவாய் | 25.62 | 15.74 |
| c | வரி அல்லாத வருவாய் | 45.46 | 16.26 |
| d | மொத்தச் செலவினம் | 13.96 | 7.82 |
| e | மூலதன வகை செலவினம் | 25.59 | 11.93 |
| f | கல்வி மீதான வருவாய் செலவினம் | 11.47 | 0.48 |
| g | மக்கள் நல்வாழ்வு மீதான வருவாய் செலவினம் | 19.71 | 10.95 |
| h | சம்பளங்கள் மற்றும் ஊதியங்கள் மீதான வருவாய் செலவினம் | 11.23 | 4.12 |
| i | ஓய்வூதியம் மீதான வருவாய் செலவினம் | 11.88 | (-) 2.95 |

* மத்திய புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்கத் துறை
** மக்கட்தொகை கணக்கெடுப்பு 2011
*** SRS அறிக்கை
**** SRSஐ அடிப்படையாக கொண்ட 2015-19க்கான ஆயுள் அட்டவணை சுருக்கம்.
***** மக்கள் தொகை குறித்த தேசிய ஆணையத்தின் மக்கள் தொகை கணிப்புகள், சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகம்
@ ஆண்டு கூட்டு வளர்ச்சி வீதம்
(ஆதாரம்: நிதி பற்றிய விவரங்கள் மாநில நிதிக்கணக்குகளில் உள்ள விவரங்களை சார்ந்தவை)

# இணைப்பு 1.2
## (பார்வை: பத்தி 1.4)

**பிரிவு அ: அரசுக் கணக்குகளின் அமைப்பு மற்றும் முறை**

**அரசுக் கணக்குகளின் அமைப்பு:** மாநில அரசின் கணக்குகள் (i) தொகுநிதி, (ii) எதிர்பாரா செலவு நிதி மற்றும் (iii) பொதுக்கணக்கு எனும் மூன்று பிரிவுகளைக் கொண்டதாகும்.

**பிரிவு I:** **தொகுநிதி:** வருவாய் மற்றும் மூலதனக் கணக்குகளின் கீழ் உள்ள அனைத்து வரவினங்கள் மற்றும் செலவினங்கள், பொதுக்கடன், கடன்கள் மற்றும் முன்பணங்கள் ஆகியவை சேர்ந்து உருவானதே மாநிலத்தின் தொகுநிதியாகும்.

**பிரிவு II:** **எதிர்பாரா செலவு நிதி:** சட்டப்பேரவையின் ஒப்புதல் உடனே பெறமுடியாத நிலையில், எதிர்பாரா அவசரச் செலவுகளை எதிர்கொள்வதற்கு, நிதி எடுத்தாள ஏதுவாக ஆளுநர்வசம் அலுவல் முன்பணம் என்பதான வகையில் 'எதிர்பாரா செலவு நிதி'யானது சட்டப்பேரவையால் நிறுவப்பட்டது. தொகுநிதியின்கீழ் உள்ள சம்பந்தப்பட்ட நடைமுறை சார்ந்த கணக்கு பெருந்தலைப்பிற்குப் பற்று வைப்பதன் மூலம் எதிர்பாரா செலவு நிதியிலிருந்து பெற்ற முன்பணம் அந்த நிதிக்கே மீட்சி செய்யப்படுகிறது.

**பிரிவு III:** **பொதுக்கணக்கு:** அரசால் அல்லது அதன் சார்பாக பெறப்பட்ட மற்ற பொதுப்பணங்கள் பொதுக்கணக்கில் வரவு வைக்கப்படுகிறது. இந்நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும் செலவினம் சட்டமன்றத்தின் ஒப்புதலுக்கு உட்பட்டதல்ல. இந்தக் கணக்கில் பெறப்படும் வரவுகளுக்கு அரசு ஒரு வங்கியாளர் அல்லது பொறுப்பாட்சியராகச் செயல்படுகிறது. கடன் (பிரிவு Iன் கீழ் உள்ள பொதுக்கடன் நீங்கலாக), வைப்புத் தொகைகள், முன்பணங்கள், சேமநிதிகள், செலுத்திய தொகைகள் மற்றும் அனாமத்து எனப்படும் நிச்சயமற்ற தன்மையுடையவை ஆகியவற்றிற்கு தொடர்புடைய நடவடிக்கைகள் சேர்ந்து உருவானதே பொதுக்கணக்காகும்.

**பிரிவு ஆ: நிதிக் கணக்குகளின் அமைப்பு**

| விவர அறிக்கை | தலைப்பு | விவரம் |
|---|---|---|
| | **பகுதி I** | |
| விவர அறிக்கை 1 | நிதிநிலை பற்றிய அறிக்கை | ஆண்டு இறுதியில் அரசின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளின் திரள்வடிவம், இந்த அறிக்கையில் விளக்கப்பட்டுள்ளது. சொத்துக்கள் அதன் வரலாற்று விலையில் மதிப்பிடப்படுகின்றன. நிதி சார்ந்த மற்றும் பௌதீக சொத்துக்கள் ஆகிய இரண்டும் சொத்துக்களில் அடங்கும். பௌதீக சொத்துக்கள், "(i) மூலதனச் செலவுகள் மற்றும் (ii) இதர மூலதனச் செலவுகள்" ஆகியவற்றின் கீழ் இந்த அறிக்கையில் காண்பிக்கப்படுகின்றன. |
| விவர அறிக்கை 2 | வரவு செலவுகளின் அறிக்கை | தொகுநிதி, எதிர்பாரா செலவு நிதி மற்றும் பொதுக்கணக்கு ஆகிய மூன்று தொகுதிகளாக வைக்கப்படும் அரசுக் கணக்குகளின்கீழ் பெறப்படும் அனைத்து வரவுகள் மற்றும் செலவுகளின் சுருக்கமான விவரத்தை இந்த அறிக்கை அளிக்கிறது. மேலும், தொகுநிதியில், வருவாய் மற்றும் மூலதன கணக்குகளின்கீழ் உள்ள அனைத்து வரவுகளும் செலவினங்களும் பகுத்துக் காண்பிக்கப்படுகின்றன. |
| விவர அறிக்கை 3 | வரவினங்கள் மீதான அறிக்கை (தொகுநிதி) | வருவாய் மற்றும் மூலதன வரவினங்கள், மத்திய அரசு மற்றும் இதர நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட கடன்கள், மாநில அரசால் வெளிச்சந்தையிலிருந்து பெறப்படும் கடன்கள், மீளப்பெற்ற கடன்கள், முன்பணங்கள் போன்றவை இவ்வறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன. |
| விவர அறிக்கை 4 | செலவினங்கள் மீதான அறிக்கை (தொகுநிதி) | இவ்வறிக்கை செலவினத்தை அதன் தன்மையோடு கொடுப்பதோடு அச்செயல்களின் குறிக்கோள்வாரியான செலவினச் சுருக்கத்தையும் அளிக்கிறது. |
| விவர அறிக்கை 5 | திரளாகச் சேர்ந்த மூலதனச் செலவினத்தின் மீதான அறிக்கை | திரளாகச் சேர்ந்த மூலதனச் செலவினத்தின் செயல்வாரியான விவரங்களை இவ்வறிக்கை அளிக்கிறது. இச்செலவினத்தின் பெரு மொத்தம் விவர அறிக்கை 1ல் காண்பிக்கப்பட்டுள்ளது. |
| விவர அறிக்கை 6 | கடன்கள் மற்றும் இதர பொறுப்புகள் மீதான அறிக்கை | வெளிச்சந்தைக் கடன்கள் மற்றும் மத்திய அரசிடமிருந்து பெறப்பட்ட கடன்களும் முன்பணங்களும், அரசு, கடனாக பெற்றதில் அடங்கும். இவ்விரண்டும் சேர்ந்து அரசின் பொதுக் கடனாக அமைகின்றன. மேலும், "பொதுக்கணக்கின்" பல்வேறு தொகுதிகளின் கீழ் உள்ள இருப்புத்தொகைகள் "இதர பொறுப்புகளாக" இந்த சுருக்க அறிக்கையில் காண்பிக்கப்படுகிறது. இதர பொறுப்புகளை பொருத்தமட்டில் அரசு, ஒரு வங்கியாளர் அல்லது பொறுப்பாட்சியராக செயல்படுவதால், இவை அரசின் பொறுப்புகளாக அமைகின்றன. வருவாய் வரவினங்களிலிருந்து எதிர்கொள்ளப்பட்ட நிகர வட்டிச் செலுத்தங்களின் பங்கு மீதான ஒரு விளக்கக் குறிப்புரையும் இவ்வறிக்கையில் அடங்கும். |

| விவர அறிக்கை | தலைப்பு | விவரம் |
|---|---|---|
| விவர அறிக்கை 7 | அரசு வழங்கிய கடன்கள் மற்றும் முன்பணங்கள் மீதான அறிக்கை | அரசு வழங்கிய கடன்களும் முன்பணங்களும் விவர அறிக்கை 1ல் இடம் பெறுகிறது. மீளப்பெறுதலும் செலுத்தங்களும் விவர அறிக்கைகள் 2, 3 மற்றும் 4ல் காண்பிக்கப்படுகிறது. கடன்களும் முன்பணங்களும் இவ்வறிக்கையில் தொகுதிவாரியாகவும் கடன் பெற்ற குழுக்கள்வாரியாகவும் சுருக்கமாக அளிக்கப்பட்டுள்ளது. இதன் தொடர்ச்சியாக மீளப் பெறப்படாமல் நிலுவையிலுள்ள கடன்கள் (இவற்றின் விவரங்கள் அரசுத் துறைகளால் பராமரிக்கப்படுகிறது) பற்றிய குறிப்புரையும் கொடுக்கப்பட்டுள்ளது. |
| விவர அறிக்கை 8 | அரசு மேற்கொண்ட முதலீடுகள் குறித்த விரிவான அறிக்கை | பல்வேறு நிறுவனங்களின் பங்கு முதலில், நடப்பாண்டிலும் மற்றும் முந்தைய ஆண்டிலும் அரசு மேற்கொண்ட முதலீடுகள் குறித்த விவரங்களை இவ்வறிக்கை தெரிவிக்கிறது. |
| விவர அறிக்கை 9 | அரசு வழங்கிய உத்தரவாதங்கள் மீதான அறிக்கை | நடப்பாண்டில் பெறப்பட்ட கடன்களின் திருப்பிச் செலுத்தப்பட்ட முதல் மற்றும் வட்டி, ஆண்டு இறுதியில் நிலுவையிலுள்ள உத்தரவாதங்களின் துறைவாரியான சுருக்கம் இவ்வறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ளது. |
| விவர அறிக்கை 10 | அரசு வழங்கிய உதவி மானியங்கள் மீதான அறிக்கை | உதவி மானியம் பெற்ற நிறுவனங்களின் குழுவாரியான விவரங்கள் இவ்வறிக்கையில் அளிக்கப்பட்டுள்ளன. நிதியாக அல்லாமல் பொருளாக அளிக்கப்பட்ட மானியங்கள் பற்றிய விளக்கக்குறிப்பும் இதில் அடங்கும். |
| விவர அறிக்கை 11 | அனுமதிக்கப்பட்ட மற்றும் சாட்டிய செலவினங்கள் மீதான அறிக்கை | அரசால் அனுமதிக்கப்பட்ட மற்றும் சாட்டிய செலவினங்களின் விவரங்களை இவ்வறிக்கை வழங்குகிறது. |
| விவர அறிக்கை 12 | வருவாய்வகை செலவினங்கள் அல்லாத மற்ற செலவினங்களின் நிதி ஆதாரங்களும் அதன் பயன்பாடும் குறித்த அறிக்கை | மூலதன மற்றும் இதர செலவினங்கள் (வருவாய் கணக்கு நீங்கலாக) மற்றும் இச்செலவினங்களை எதிர்கொள்வதற்கான நிதி ஆதாரங்களை இவ்வறிக்கை அளிக்கிறது. |
| விவர அறிக்கை 13 | தொகுநிதி, எதிர்பாரா செலவு நிதி மற்றும் பொதுக் கணக்குகளின் கீழ் இருப்பிலுள்ள தொகைகளின் விவர அறிக்கையின் சுருக்கம் | நிதிக்கணக்குகளின் துல்லியத்தன்மையை உறுதி செய்வதற்கு இவ்வறிக்கை உதவுகிறது. |
| | பகுதி II | |
| விவர அறிக்கை 14 | வருவாய் வகை மற்றும் மூலதன வகை வரவினங்களின் கணக்குகளை, கணக்குச் சிறுதலைப்புவாரியாக அளிக்கும் அறிக்கை | அரசின் வருவாய் மற்றும் மூலதன வரவினங்களின் விரிவான கணக்குகளை இவ்வறிக்கை வழங்குகிறது. |
| விவர அறிக்கை 15 | வருவாய் வகை செலவினங்களின் விரிவான கணக்குகளை, சிறுதலைப்புவாரியாக அளிக்கும் அறிக்கை | அரசின் வருவாய் செலவினங்களின் விரிவான கணக்குகளை இவ்வறிக்கை வழங்குகிறது. ஒப்பிட்டு நோக்குவதற்காக முந்தைய ஆண்டு எண் இலக்கங்களும் கொடுக்கப்பட்டுள்ளன. |
| விவர அறிக்கை 16 | மூலதன வகை செலவினங்களின் விவரங்களை சிறுதலைப்புவாரியாகவும் உட்தலைப்புகள் வாரியாகவும் அளிக்கும் விரிவான அறிக்கை | அரசின் மூலதனச் செலவினங்களின் விரிவான கணக்குகளை இவ்வறிக்கை வழங்குகிறது. ஒப்பிட்டு நோக்குவதற்காக முந்தைய ஆண்டு எண் இலக்கங்களும் கொடுக்கப்பட்டுள்ளன. ஆண்டு இறுதியில் திரளாக சேர்ந்த மூலதனச் செலவினத்தின் தொகைகளும் கொடுக்கப்பட்டுள்ளன. |
| விவர அறிக்கை 17 | கடன்கள் மற்றும் இதர பொறுப்புகள் மீதான விரிவான அறிக்கை | வெளிச்சந்தைக் கடன்கள் மற்றும் மத்திய அரசிடமிருந்து பெறப்பட்ட கடன்களின் கணக்கு சிறுதலைப்புவாரியான விவரங்கள், இக்கடன்களின் முதிர்வு மற்றும் திருப்பிச் செலுத்தும் விவரக்குறிப்புரையையும் இவ்வறிக்கை அளிக்கிறது. விவர அறிக்கை 6ன் விரிவான வடிவமே இவ்வறிக்கை. |
| விவர அறிக்கை 18 | அரசு வழங்கிய கடன்கள் மற்றும் முன்பணங்கள் மீதான விரிவான அறிக்கை | அரசு வழங்கிய கடன்கள் மற்றும் முன்பணங்கள், கடன் இருப்புத் தொகைகளில் நேர்ந்த மாற்றங்கள், கடன் தள்ளுபடி, கடன்கள் மீதான வட்டி வரவுகள் போன்றவை இவ்வறிக்கையில் அளிக்கப்பட்டுள்ளன. விவர அறிக்கை 7ன் விரிவான வடிவமே இவ்வறிக்கை. |
| விவர அறிக்கை 19 | அரசு மேற்கொண்ட முதலீடுகள் குறித்த விரிவான அறிக்கை | பல்வேறு நிறுவனங்களின் பங்கு முதலில், நடப்பாண்டிலும் மற்றும் முந்தைய ஆண்டிலும் அரசு மேற்கொண்ட முதலீடுகள் குறித்த விவரங்களை இவ்வறிக்கை தெரிவிக்கிறது. பங்கின் ரகம், அதன் முகமதிப்பு, பெறப்பட்ட ஆதாயப்பங்கு போன்ற இதர விவரங்களையும் இவ்வறிக்கை அளிக்கிறது. |

| விவர அறிக்கை | தலைப்பு | விவரம் |
|---|---|---|
| விவர அறிக்கை 20 | அரசு வழங்கிய உத்தரவாதங்கள் மீதான விரிவான அறிக்கை | தனிச் சட்டப்படி அமைந்த கழகங்கள், அரசு நிறுவனங்கள், உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் இதர நிறுவனங்கள் வாங்கிய கடன்களை திருப்பிச் செலுத்துவதற்கு நடப்பாண்டில் அரசு வழங்கிய உத்தரவாதங்கள் மற்றும் ஆண்டு இறுதியில் உத்தரவாதம் அளிக்கப்பட்டு நிலுவையிலுள்ள கடன்தொகை ஆகியவற்றை இவ்வறிக்கை வழங்குகிறது. |
| விவர அறிக்கை 21 | எதிர்பாரா செலவு நிதி மற்றும் பொதுக்கணக்கின்கீழ் நேர்ந்த நடவடிக்கைகளின் விரிவான அறிக்கை | எதிர்பாரா செலவு நிதியில் நடப்பாண்டில் நேர்ந்த மாறுதல்கள், இந்நிதிக்கு ஒதுக்கப்பட்டவை, செலவினம், நிதிக்கு மீட்சி செய்யப்பட்டவை போன்ற விவரங்களை இவ்வறிக்கை அளிக்கிறது. பொதுக்கணக்கின் கீழ் நேரும் நடவடிக்கைகளின் விவரமும் இவ்வறிக்கையில் கொடுக்கப் பட்டுள்ளன. |
| விவர அறிக்கை 22 | சேமநிதிகளில் முதலீடு செய்யப்பட்ட இருப்புகளின் விரிவான அறிக்கை | பொதுக்கணக்கிலுள்ள சேமநிதிகள்/வைப்புக் கணக்குகளில் இருந்து மேற்கொள்ளப்பட்ட முதலீடுகள் பற்றிய விவரங்களை இவ்வறிக்கை அளிக்கிறது. |

# இணைப்பு 1.3
## (பார்வை: பத்தி 1.4)

**பிரிவு அ: நிதிநிலையை மதிப்பிடுவதற்கு கையாளப்பட்டுள்ள வழிமுறைகள்**

